www.padippakam.com

# குழந்தையும் தேசமும்

## சிறுகதைகள்



சி. சிவசேகரம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# குழந்தையும் தேசமும்

சி. சிவசேகரம்

தேசிய கலை இலக்கியப் பேரவை

படிப்பகம்

www.padippakam.com

தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடு – 113

நூற் பெயர்: குழந்தையும் தேசமும் (*சிறுகதைகள்*)

பதிப்பு: நவெம்பர் 2011

வெளியீடு: தேசிய கலை இலக்கியப் பேரவை

வடிவமைப்பு, அச்சிடல்: வேள்ட் விஷன் கிற.ஃபிக்ஸ்

விலை: ரூபா 350.00

**ISBN : 978 - 955 - 8637 - 31 - 9**

---

Book Title: ***Kuzhanthaiyum Thesamum*** (short stories)

Publication: **November 2011**

Publisher: **Dhesiya Kalai Ilakkiyap Peravai**

Layout & Printing: **World Vision Graphics**

Price: **Rs. 350.00**

**ISBN : 978 - 955 - 8637 - 31 - 9**



படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

தேசிய கலை இலக்கியப் பேரவை இதுவரை கவிஞர் சிவசேகரத்தின் கவிதைகளையும் தமிழாக்கங்களையும் நாடகங்களையும் விமர்சனங்கலளயும் பல்வகையான பிற ஆக்கங்களையும் நூல்வடிவில் வெளியிட்டுள்ளது. அவர் சிறுகதைகளையும் எழுதியுள்ளார் எனப் பலரும் அறியமாட்டார் கள். கதைகளிற் பெரும்பாலானவை புனைபேர்களில் தாயகத்தில் வெளிவந்தவை.

இத் தொகுப்பில் அவர் இதுவரை எழுதிய சிறுகதைகளில் ஒருசில போக எல்லாமும் உள்ளன என நினைக்கிறோம். அவருடைய கவிதைகளையும் பிற ஆக்கங்களையும் போன்று அவருடைய சிறுகதைகளும் சமூகவிமர்சனப் பாங்கானவை.

கதைகளிற் பெரும்பாலானவை தமிழ் மக்களது இருப்புச் சார்ந்தே அமைந்துள்ளன. தமிழ் மக்களின் பிரச்சினைகள் பலவற்றைப் பற்றி அவை பேசும்போதும், மனத்தடையின்றிப் பிற சமூகங்களுடன் சமத்துவமாகவும் நட்புணர்வுடனும் பேசும் ஒரு போக்குக் கவனிக்கத்தக்கதும் உலகளாவிய ஒரு சிந்தனை மரபுக்கு உரியதுமாகும்.

தேசிய கலை இலக்கியப் பேரவையூடாக இத் தொகுப்பு வெளிவருவது பற்றி மகிழ்ச்சியடைகிறோம்.

நூல் வெளியீட்டில் உதவிய நண்பர் தெ.ஞா. மீநிலங்கோ, கணணிவடிவமைத்தலையும் அச்சீட்டையும் பொறுப்பேற்ற நண்பர் செ. நந்தமோகன் ஆகியோருக்கு எமது நன்றிகள் உரியன.

வழமைபோல விமர்சனங்களை வரவேற்கிறோம்.

*தேசிய கலை இலக்கியப் பேரவை*
571/15 *காலி வீதி*
*கொழும்பு 6*



படிப்பகம்

www.padippakam.com



கதை பக்கம்

| | | |
|---|---|---|
| 1. | சீருடை | 01 |
| 2. | ஒரு நாள் மத்தியானம் நடந்தது | 10 |
| 3. | சபிக்கப்பட்டவர்கள் | 20 |
| 4. | ஐயரும் அவதாரமும் | 30 |
| 5. | நீங்கும் நினைவுகள் | 37 |
| 6. | மீன்களுடன் ஒரு நடைப்பயணம் | 44 |
| 7. | தம்பரின் இரும்புப் பெட்டி | 56 |
| 8. | நிவாரணம் | 66 |
| 9. | சிறை மீட்புப் படலம் | 77 |
| 10. | குழந்தையும் தேசமும் | 87 |
| 11. | இக்கரையும் அக்கரையும் | 96 |
| 12. | செங்காய் | 108 |
| 13. | புல்லு வெட்டுவது யார்? கொழுந்தெடுக்கிறது யார்? | 118 |
| 14. | ஓடும் வண்டியில் ஒரு பாடல் | 126 |
| 15. | மீட்சி | 134 |
| 16. | பட்டுத் தெளிந்தது | 143 |
| 17. | மதமாற்றம் | 151 |
| 18. | ஆள் மாறாட்டம் | 162 |
| 19. | குமாரி | 169 |
| 20. | அனற்காற்று வீசிய ஒரு நாளில் | 179 |
| 21. | பாடசாலை வாங்கு | 187 |
| 22. | டோன்ற் மென்ஷன் | 193 |

*முன் அட்டை: இஸ்ரேலிய முற்றுகைக்குட்பட்ட காஸாவில் ஒரு சிறுவன்*

*பின் அட்டை: பலஸ்தீன 'மேற்குக்கரைப்' பகுதியில் ஒரு சுவரோவியம்*



படிப்பகம்

www.padippakam.com



# முன்னுரை

சிறுகதைகளுக்கு இப்போது நல்ல சந்தை வாய்ப்பு இருக்கிறது என்று கூறப்படுகிறது. மனித வாழ்வினைப் பாதிக்கும் பிரச்சி னைகளைப்பற்றி அலட்டிக்கொள்ளாது, சிரித்தும் அழுதும் உணர்ச்சிப் பிரவாகத்தில் நீந்தியும் பொழுதுபோக்க அவாவும் வாசகர்களை வெகுஜன ஊடகங்கள் ஏராளமாக வளர்த்துள் ளன. இத் தொகுதியிலுள்ள சிறுகதைகளை வாசிக்கும்போது சரளமான நடையில் கதைசொல்லும் ஆற்றல் சிவசேகரத்துக்கும் உண்டென்பது தெளிவாகிறது. ஆனால் மேற்சொன்ன சந்தை வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு சம்பவங்களையும் விபத்துக்களையும் தற்செயல் நிகழ்வுகளையும் வைத்துக் கதைபண்ணிப் பிரசித்தியும் இலாபமும் சம்பாதிப்பதில் சிவ சேகரத்துக்கு உடன்பாடில்லை. தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்கு உதவ ஏதாவது செய்ய வேண்டும் என்ற தோரணையில் பேசுகிறவர்களுடனும் அவர் ஒத்துப் போவதில்லை. ஆனால், புதிய புதிய சமகாலத்தொடர்புடைய பிரச்சினைகள், சமூகப் பிரக்ஞையுடனும் அர்த்தபுஷ்டியுடனும் அலசப்படும்போது சிறுகதை வளர்ச்சியடையும் என்பதை அவர் மறுக்க மாட்டார்.

எவ்வாறாயினும் சமகாலத்தில் தான் அவதானித்த அவலங்களையும் அநீதிகளையும் ஒவ்வாமைகளையும் அப்பாவித்தனங்களையும் அடாவடித்தனங்களையும் தன் உணர்வானுபவங்களையும் சிந்தனைகளையும் மற்றவர்க ளோடு, அவர்களின் கவனத்தை ஈர்க்கத்தக்க வகையில், பகிர்ந்துகொள்வதற்குச் சிவசேகரம் சிறுகதையை ஒரு ஊடகமாகத் தேர்ந்தெடுத்துள்ளார். அவர் விடுபட்டு ஒதுங்கி வாழும் தரவழியினர் அல்லர். சமூக வாழ்வில் அக்கறையுடன் பங்கெடுப்பவர். அனைவருடனும் நெருங்கி உறவாடுகிறவர். தன்னுடைய அபிப்பிராயங்களையும் கண்டனங்களையும் தயங்காது வெளிப்படுத்துபவர். எல்லாவற்றுக்கும் மேலாகச்,



படிப்பகம்

www.padippakam.com



சமூக மாற்றத்திலும் சமூக நலனிலும் ஆர்வமுடையவர். அதற்கு அவருடைய கவிதைகளும் நாடகங்களும் கட்டுரை களும் விமர்சனங்களும் இச் சிறுகதைகளும் சான்றாகும்.

இக் கதைகளில் வரும் பாத்திரங்களும் வலிந்து கற்பனை செய்யப்பட்டவையாக அன்றி வாழ்க்கையில் பார்த்தவையாக உள்ளன. மனிதர்களின் குணவியல்புகளையும் நடைக்கோலங் களையும் கூர்ந்து அவதானிப்பது சிவசேகரத்தின் சிறப்பு. நண்பர் யார் பகைவர் யார் என்பதை நிதானிக்க இயலாதவர் களாய், ஒடுங்கிய வேலிகளைத் தாமே போட்டுக்கொண்டு, அவற்றைத் தகர்க்கவியலாதவர்களாகவும் சிலவேளை தகர்க்க விரும்பாதவர்களாகவும் சிலர் சீவிக்கின்றனர். சிலர் பட்டுத் தெளிகின்றனர். சிலருக்குத் தெளியாமலே இருப்பது தோதாக இருக்கிறது.

சமுதாயத்தை அரிக்கிற பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சற்றேனும் கவனமின்றி, யாரையாவது அவ்வப்போது பிடித்துச் சொந்தப் பிரச்சினைக்கு மட்டும் நிவாரணம் தேடும் மனோபாவம் பலரிடத்தும் காணப்படுகிறது. தமக்குத் தேவையில்லாததைத் தவிர்த்துத் தாம் மட்டும் பாதிக்கப்படாதவாறு பார்த்துக் கொண்டால், 'போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்று கருதப்படுகிறது. பிரச்சினையுள்ள இடங்களிலிருந்து நழுவிமறைந்து பிழைக்க முயல்கிறவர்களையும் சிவசேகரம் அவதானிக்காமல் இல்லை.

அரசியலதிகார நிழலிலாயினும் சமய வழிபாட்டுத் துறையிலாயினும் செல்வாக்கைக் கெட்டித்தனமாகத் தேடிக்கொண்டவர்களின் அதிகார மிரட்டல்களும் அடாவடித் தனங்களும் சித்தரிக்கப்படுகின்றன. இனசன, சாதிசமய, மொழி உணர்வுகளனைத்தையும் மேவியது அதிகார வர்க்கத்துக்குரிய அந்தச் சகிப்பின்மை.

அதிகாரத்தில் உள்ளதை எதிர்க்கத் தயங்கும் ஒரு ஒட்டுமொத்தமான கோழைத்தனம் பெரும்பாலானவர்களிடம் காணப்படுகிறது. இதுகாறும் இருந்துவந்துள்ள நிலையை



படிப்பகம்

www.padippakam.com


மாற்றுவது குறித்து எண்ணிப்பார்க்கவே அஞ்சுகிறார்கள். 'இருக்கும் இடத்தில் இருந்துகொண்டால் எல்லாம் சௌக்கியமே' என்று இறுமாந்து கிடக்கிறார்கள்.

பிடித்துவைத்த மீன்களையும் பறவைகளையும் வழிபாடு செய்து விடுவிக்கும் கதை, உயர்வுள்ளிய மானசிக விழுமியங்கள் அமுங்கிப்போக, வெளிப்பாட்டுச் சின்னங்களும் சடங்குகளும் கோலோச்சுவதைக் காட்டுகிறது. இப் போக்குப் பல சமயங்களிலும் மற்றும் நிறுவனங்களிலும் காணப்படுவது. தேசப்பற்றுணர்வும், தம் கடமைகளில் கரிசனையற்றவர்களால், விடுப்புக்காகவோ வேறெவரையும் மட்டந்தட்டுவதற்காகவோ பாவிக்கப்படுவதும் ஏழைகளால் வயிற்றுப்பிழைப்புக்குப் பாவிக்கப்படுவதும் காட்டப்படுகிறது. முன்னைய செயல் எரிச்சலூட்டுவதாகவும் பின்னையது கழிவிரக்கம் தருவதாகவும் உள்ளது.

சுரண்டல் பல வடிவங்களில் இன, மத, மொழி பேதங்களையெல்லாம் கடந்து தொடர்வதைப் 'புல்லு வெட்டுவது யார்? கொழுந்தெடுக்கிறது யார்?' என்ற கதை துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது. சந்தைப் பொருளாதாரப் போட்டியில் முன்னோக்கிய பெரும் பாய்ச்சல்கள் சாதாரண மக்களுக்குக் கொண்டு வந்துள்ள துயரங்களை ஷென்ஜென்னில் கண்ட காட்சிகள் புலப்படுத்துகின்றன.

சட்டமும் அமைதியும் குலைந்த சூழ்நிலையில் படையினரிடம் அநியாயமாகப் பிடிபடுகின்ற நல்லவர்கள் கூட வன்முறையில் நாட்டங்கொள்ளத் தூண்டப்படுமளவுக்கு வதைகளுக்குட்படுத்தப்படல், கல்விமுறையிலும் பாடசாலை அனுமதியிலும் இடம்பெறும் குளறுபடிகள், பெண்களை அடக்க அவாவும் ஆணாதிக்கக் கோளாறுகள், சாதித் துவேஷம், விஸ்வ ஹிந்து பரிஷத்தின் பிரசாரங்கள் இன்னோரன்ன இன்றைய வாழ்வில் எதிர்நோக்கப்படும் பல்வேறு விவகாரங்களின்பால் வாசகர்களின் கவனம் குவிமையப்படுத்தப்படுகிறது.

இடர்கள் பலவற்றின் மத்தியிலும் சுயமரியாதையைப் பேணும் மனவலிமை கொண்டவர்களுக்கு உதாரணங்களாகக்



படிப்பகம்

www.padippakam.com



குமாரியும் பிழைத்திருப்பதற்காகத் தன் சுய அடையாளங்களை நீக்கியிருந்தபோதும் "எப்போது அவற்றைக் களைந்தேனோ, அன்றுமுதல் என்றும் நான் இருந்திராத அளவுக்குத் தீவிரமாக நான் ஒரு சீக்கியன் என்பதை உணர்ந்துகொண்டே இருக்கி றேன்" என்று கூறும் 'ஆட்டோ' சாரதி றொபினும், ஓரளவுக்கு, ராஜன் ஐயரும் விளங்குகின்றனர்.

அதிக பிரயத்தனமின்றி வாசிக்கக்கூடியதும் வெளிப்படை யாக மனங்கலந்து பேசுவது போன்றதுமான ஒரு நடையினை ஆசிரியர் கையாண்டுள்ளார். சிவசேகரத்தின் நாகரிகமான நகைச்சுவை நயக்கத்தக்கது. அவரது கிண்டலும் கேலியும், குறிப்பாகச் சில வேடிக்கை மாந்தரின் முட்டாள்தனமான நம்பிக்கைகள், வெகுளித்தனங்கள், நப்பாசைகள் போன்றவை எடுத்துரைக்கப்படும் சந்தர்ப்பங்களில் சிரிக்கமட்டுமன்றிச் சிந்திக்கவும் வைக்கின்றன.

சரியான விளக்கத்தையும் ஏனையவர்களின்பால் ஆர்வ முடைமையினையும் அநீதியானவையையும் அடுக்காதன வற்றையும் எதிர்க்கும் துணிவினையும் வளர்க்கும் சிவ சேகரத்தின் வேட்கை எல்லாக் கதைகளிலும் இழையோடிக் காணப்படுகிறது.

பேராசிரியர் சி. தில்லைநாதன்



படிப்பகம்

www.padippakam.com

*சிவசேகரம்*

# கைப்பிடியளவு கதைகள்

நாம் அன்றாடங் காணும் ஒவ்வொரு நிகழ்வும் ஒரு கதைக்கான கருவை உள்ளடக்கியிருக்கலாம். ஆனால் அதை ஒரு கதையாகச் சொல்லுமாறு நம்மைத் தூண்டுவது எது?

வெகு சாதாரண நிகழ்வுகள் நமது சிந்தனையிற் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. ஒரு நிகழ்வு, விடயங்களை வேறுபட்ட ஒரு கோணத்திற் காணவோ அதனையே மேலும் ஆழமாக நோக்கவோ தூண்டுமாயின், நம் அனுபவத்தைப் பிறருடன் பகிர நாம் விரும்புகிறோம். இவ்வாறான கதைகூறல் வெறும் பொழுதுபோக்கிற்காகவும் வணிகநோக்கிலும் உற்பத்தி யாகும் கதைகூறிலின்று வேறுபட்டது.

கதைகூறல் என்பது ஒரு செய்தியைப் பகிர்வதற்கான ஒரு வழி. அதன்மூலம் பிறரை மகிழ்விக்கலாமெனினும் கதை கூறுவதன் பயன் மகிழ்விப்பு மட்டுமல்ல. ஒரு செய்தியைக் கூறுகிற கதை அதைச் செவ்வனே கூறவேண்டும். எனவே கதைகூறல் தொடர்பாடல் ஆற்றல்களை வேண்டிநிற்கிறது.

வாசகரின் கவனத்தை ஈர்ப்பதும் அதைப் பெயராமற் பேணு வதும் ஒரு கதைக்குத் தேவையானவை. எனவே கதையை எவ்வாறு சொல்லுகிறோம் என்பது முக்கியமானது. ஆனாலும் எவருக்காக எதை ஏன் சொல்லுகிறோம் என்பவற்றினும் மேலாக எவ்வாறு சொல்லுகிறோம் என்பது அமையாது. பின்னையதன் மீதான மிகுதியான அழுத்தம் பகட்டான சொற்கோலங்கட்கு இட்டுச்செல்லலாம். கதை கூறுபவரின் அவதானிப்புக்கட்கும் அப்பால் தேடுமாறு வாசகரை ஒரு கதை தூண்டுமாயின் அதைக் கதையின் வெற்றி என்பேன்.

நமது பார்வையும் நமது கண்ணிற் படுவனவும் படத் தவறு வனவும் நமது சமூக நிலைப்பாட்டினால் முடிவாகின்றன. ஒரே செய்தி வெவ்வேறு நாளேடுகளில் வெவ்வேறு விதங்களிற் கூறப்படுவதை அறிவோம். புனைவுகட்கும் திரிப்புக்கட்கும் அப்பால், மனிதரின் அகச்சார்பு அவர்களது பார்வையை மட்டுப்படுத்தவும் விரிவுபடுத்தவும் பங்களிக்கிறது. அதனையுங் கருத்திற் கொண்டே கதைகளை எழுதியுள்ளேன்.

எல்லாரிடத்தும் போல என்னிடமும் சொல்லுவதற்குக் கதை



படிப்பகம்

www.padippakam.com



கள் பல உள்ளன. நான் எல்லாவற்றையும் சொல்ல நினைத்த தில்லை. நான் ஊக்கத்துடன் சிறுகதை எழுதிவந்தவனல்ல. எனவே நினைத்தன அனைத்தையும் சொல்ல வாய்த்ததுமில்லை. என்னுடைய எளிமையான கதை சொல்லும் முறை என்னுடைய நோக்கத்துக்குப் போதுமானதென நினைக்கிறேன்.

புனைகதைகள் முற்றிலும் புனைவுகளல்ல. "பேர்கள் நிகழ்வு கள் யாவுங் கற்பனையே" என்று பலருஞ் சொல்வது தற்காப்புக் கான ஒரு பொய்யே. அதேவேளை, கதை என்பது ஒரு நிகழ்வை அப்படியே எடுத்துரைப்பதாகிவிடாது.

மனித இருப்பின் சவால்களும் நெருக்கடிகளும் அவற்றை மனிதர் எதிர்கொள்ளும் விதங்களும் எனக்கு முக்கியமானவை. மனித நடத்தை எவ்வாறு மனிதரது சமூக இருப்பால் முடிவாகிறது என்பது எனக்கு முக்கியமானது. எவரது எழுத் திலும் அவரது உலக நோக்குத் தன்னை வெளிப்படுத்துவது தவிர்க்க இயலாதது என்பது என் கருத்து. வலிந்து எதையுங் கூறாதபோதும் நமது சொற்கள் நம்மைக் காட்டிக்கொடுக்கின் றன. எனவே, நான் பிரசாரஞ் செய்ய எண்ணாமலே என் கதைகள் பிரசாரஞ் செய்யும்.

சிறுகதைகளாக நான் இதுவரை எழுதிய இருபத்துநான்கு கதைகளில் இரண்டைத் தவிர யாவும் இத் தொகுப்பில் உள்ளன. அவை நானறிந்த மனிதர்களையும் அவர்களது சமூகச் செயற்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டவை. கதை மாந்தரில் எவரும் குறிப்பான தனிமனிதர் ஒருவரல்ல. எந்த வொரு நிகழ்வும் நான் கண்ட தனியொரு நிகழ்வுமல்ல. கதை ஒவ்வென்றிலும் வரும் ஒவ்வொரு மனிதரும் நிகழ்வும் ஒன்றுக்கு மேற்பட்ட மனிதரையும் நிகழ்வுகளையும் இணைத்து உருப்பெற் றுள்ளதால், எதுவுங் குறிப்பாக எவரையோ எதையோ பற்றிய தென எவரும் நினைத்தால் அதில் நியாயம் இருக்கலாம். அதேவேளை, ஒருவர் தனது உலக நோக்கின் வழியிலேயே இக் கதைகளையும் நோக்கலாமாதலால் அவர் அடையாளங் காணுகிற எதுவும் நான் அடையாளங்கண்டவாறோ அவ்வா றில்லாமலோ அமையலாம்.

இதற்குமேற் சிறுகதை பற்றிய என் நோக்கை இங்கு விவரிப்பது தேவையற்றது. சில கதைகள் எழுதப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com



சூழல்களைப் பற்றி மட்டுஞ் சிறிது கூற விரும்புகிறேன். முதலிரண்டு கதைகளும் இலங்கையிலிருந்து 1984இல் வெளியேறு முன் எழுத நினைத்தவை. எனினும் நான் லண்டனில் இருந்தபோதே அவற்றை எழுதிமுடித்தேன். "சபிக்கப் பட்டவர்கள்" "பனிமலர" சஞ்சிகையின் ஆசிரியர குழுவில் நான் இருந்தபோது (அதற்கு முன்பும் பயன்படுத்திய "சிறீ" என்ற புனைபேரில்) எழுதியது. அதை எழுதியவர் யாரென்று விசாரியாமலே, எஸ். பொன்னுத்துரை, பனிமலர ஆசிரியர குழுவின் இன்னொரு உறுப்பினரின் பேரில் அதனைத் தனது "பனியும் பனையும்" சிறுகதைத் தொகுப்பிற் சேர்த்திருந்தார். பொன்னுத்துரை அத் தவற்றைப் பின்னர் அறிந்திருக்க வேண்டும். எனினும் அவர் அதைத் திருத்த முயன்றதாகத் தெரியவில்லை.

பனிமலரில் வந்த சிறுகதைக்குப் பின்னர் எழுதிய "ஐயரும் அவதாரமும்" இலங்கையில் "புதிய பூமி"யில் "லயம்" எனும் இலக்கியப் பக்கத்தில் வெளிவந்தது.

இலங்கைக்குத் திரும்பி வந்து "தாயகம்" ஆசிரியர் குழுவிற் பொறுப்பேற்றுச் சிலகாலம் பின்பே எனது அடுத்த கதை அதே புனைபேரில் 2004ல் தாயகத்திற் பிரசுரமானது. 2008 வரை தாயகத்தில் அடுத்தடுத்துச் சிறுகதைகளை எழுதிவந்தேன். "நிவாரணம்" கதையின் பிற்பகுதி கவனப்பிசகால் அச்சேறத் தவறிவிட்டது. அதை அண்மையிலேயே நினைவிலிருந்து மீட்டு முழுமைப்படுத்தினேன். "தம்பரின் இரும்புப் பெட்டி" இப்போது அவுஸ்திரேலியாவில் வாழும் நண்பர் காசிநாதன் சொன்ன உண்மைக் கதை ஒன்றை மையப்படுத்தி எழுதப்பட்டது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் "புது வசந்தம்" சிறப்பிதழ்கட்கும் கதைகள் எழுதினேன். 2005ம் ஆண்டின் பிற் பகுதியில் "ஞாயிறு தினக்குரலுக்கு" எழுதிய "புகை நடுவில்" அன்று மும்முரமாக நடந்து கொண்டிருந்த மேல் கொத்மலைப் போராட்டத்தில் ஒரு போராளியின் தாயின் வீரத்தைப் பற்றியது. அதன் பிரதி கைவசமில்லாததாலும் பெறக் கடினமாயிருந்த தாலும் அக் கதை விடுபட்டுள்ளது. 1974 வாக்கில் நானெழுதிய ஒரு கதை போதிய செய்நேர்த்தியுடன் அமையவில்லை



படிப்பகம்

www.padippakam.com



என்பதால் அதுவும் விடுபட்டுள்ளது.

என்னுடைய சிறுகதைத் தொகுப்பு ஒன்றை வெளியிட வேண்டும் என 2008 முதல் நண்பர் தேவராஜா வற்புறுத்தி வந்தார். அதன்பின்பு அவரினுங் கடுமையாக மீநிலங்கோ வற்புறுத்தினார். பிற நண்பர்களும் அக் கருத்தை ஆதரித்த நிலையில் கதைகளின் பிரதிகளைச் சேகரிக்கத் தொடங்கினேன். 2010 வரை தாயகத்தைக் கணனியில் தட்டெழுதிப் பக்கங்களை யும் அமைத்துதவிவந்த மதுராளினி கொழும்பில் வெளிவந்த தாயகம் சுவடிகளின் அனைத்துப் படைப்புக்களையும் அக்கறை யுடன் வகைப்படுத்திக் கணினியிற் சேமித்து வைத்திருந்ததால் அவ் வேலை எளிதாயிற்று. இவ்வாண்டு தாயகத்தில் வெளிவந்த கதையின் மின்பிரதியைத் தனுஜன் தந்துதவினார். புது வசந்தத் தில் வந்தவற்றைச் சேமித்து வைத்திருந்த மீநிலங்கோ பிற கதைகளை "குளோபல் பிறின்ரேர்ஸ்" மூலம் மின்சுவடியாக்க ஆவன செய்தார். பனிமலரில் வந்த கதைக்குப் படம் வரைந்தவர் ஓவியர் கிருஷ்ணராஜா. கொழும்பிலிருந்து வந்த தாயகத்திற் கான கோட்டுப்படங்களை வரைந்துதவியவரான ஓவியர் சாமி யின் படங்களையும் ஆவணப்படுத்துமாறு மீநிலங்கோ பரிந் துரைத்தார். படங்களில்லாத ஒன்பது கதைகட்குப் புதிதாகப் படம் வரையும் தேவை இருந்தது. கேட்டவுடனேயே தயங்காமல் உடன்பட்ட ஓவியர் நிலா நான் நியாயமாக எதிர்பார்க்கக் கூடியதைவிடக் கடுஞ் சிரத்தையெடுத்துப் படங்களை வரைந் துதவினார்.

முற்குறிப்பிட் அனைவருக்கும் நான் நன்றியுடையவ னாகிறேன். மனமகிழ்வுடன் முன்னுரை வழங்க உடன்பட்ட பேராசிரியர் தில்லைநாதனுக்கும் என் நூல்களின் வெளியீட்டில் தொடர்ந்தும் அக்கறை காட்டிவரும் தேசிய கலை இலக்கியப் பேரவையினருக்கும் அச்சிடலைப் பொறுப்பேற்ற நந்தமோகனு க்கும் என்னைப் பலவாறும் ஊக்குவித்தும் எனக்கு உதவியும் வரும் நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரியன.

*சி சிவசேகரம்*
*கொழும்பு*
*25 10 2011*



படிப்பகம்

*சிவசேகரம்*

# சீருடை



*இந்த யூனிபோம் எத்தினை மனிசரை மிருகமாக்கிப் போட்டுது?*

www.padippakam.com



சைக்கிள் ஏற உயர்ந்த என் வலதுகாலை "கணேசன் மாஸ்ற்றர்!" என்ற குரல் மறுபடி தாழ்த்தியது. இந்த இடத்தில் ஒரு சிறு விளக்கம் அவசியம். நான் பள்ளிக்கூட ஆசிரியன் அல்ல. இந்த "மாஸ்ற்றர்" என்ற பேர் வந்த காரணம் நான் ஏ.எல். எடுத்துவிட்டுப் பல்கலைக்கழக அனுமதிக்குக் காத்திருந்த நீண்டகாலத்தில் பள்ளிக்கூடத்தில் எட்டு முதல் பத்தாம் வகுப்பு வரை சில விஞ்ஞான பாடங்களை (சம்பளம் இல்லாமல்) படிப்பித்தது மட்டுமே. அது நல்ல பொழுதுபோக்காகவும் என் ஊரின் ஒரே உயர் பாடசாலையில் அப்போது விஞ்ஞான ஆசிரியர்கள் போதாமை காரணமான கஷ்டங்களைக் குறைக்க வும் உதவியது. நான் படிக்கும் நாட்களிலும் இடைக்கிடை பழைய மாணவர்கள் இப்படி உதவியதுண்டு. என்னிடம் படித்த மாணவர்கள் கொஞ்சம் வளர்ந்த பிறகு "சேர்" என்பதை விட "மாஸ்ற்றர்" என்பது கொஞ்சம் உடன்பாடான பட்டமாகி நிலைத்துவிட்டது. அவ்வளவு தான்!

நான் சொல்லவந்த விஷயத்தைக் கிட்டத்தட்ட மறந்தே விட்டேன்! என்னைக் கூப்பிட்ட குரல் சண்முகசுந்தரத்தினுடை யது. மிகவும் புத்திசாலியான போதும் ஓ.எல்லுடன் படிப்பை நிறுத்திக்கொண்டான். ஒருவேளை புத்திசாலி என்றதால் தான் நிறுத்திக் கொண்டானோ என்றும் யோசித்திருக்கிறேன். அவனைக் கடைசியாகச் சந்தித்து ஆறேழு வருஷம் இருக்கும்.

"என்ன சண்முகசுந்தரம், நீ ஆள் மாறேல்லை. இன்னமும் தையற்கடை தானே? எப்பிடிப் போகுது.... தொழில்?"

"ஐயாவுக்குச் சுகமில்லாமல் போனதோட நான்தான் கடையில முழுப் பொறுப்பும். இப்ப நிறையத் துணிமணி வருகுது. ஸ்ற்ரைல்களும் தெரியாதா.... அதால வரும்படி பிழையில்ல எண்டாலுஞ் சிலவுகளுக்குக் காணாது.... நீங்க டொக்டருக்கெல்லோ படிச்சனீங்கள்?"

"இல்ல, அது கிடைக்கேல்ல. அப்போதிக்கரி. வெளி இடங் களுக்கு வேலைக்கு அனுப்பினதால வீட்டுக்கு மாதம் ஒரு தரம், இரண்டு தரம் வருவன், மற்ற அலுவல்களுக்கு எங்க



படிப்பகம்

www.padippakam.com



நேரம்? ஒரு மாதிரிப் போன கிழம தொட்டு இங்க. கரச்சல் எதிலையும் மாட்டிக் கொள்ளாட்டி இங்க மூண்டு வருசம் இருக்கேலும்''.

"கரைச்சலில மாட்டாமல் இருக்கிறது வரவரக் கஷ்டம் மாஸ்ற்றர். யூ.சியில பியோனா இருக்கிற ராசையா அண்ணன்ட தம்பி முருகையாவ நினைப்பிருக்குதா? சும்மா இருந்தவன். இப்ப பொலீஸ் தேடுதாம்''.

"உன்னோட முந்தி எப்பவும் திரியிறவன் எல்லா? ஒரு நாள் நீயும் அவனும் மற்னி ஷோ பார்க்கப்போய் கிளாஸ் மாஸ்ற்றரிட்ட அம்பிட்டது நல்லா நினைப்பிருக்குது''.

"அதெல்லாம் அப்ப.... கொஞ்சம் விளையாட்டுப் புத்தி.... அவன் நல்ல பெடியன். இப்பிடி வருமெண்டு நான் நினைக் கேல்ல''.

எனக்கு நேரமாகிக் கொண்டிருந்தது. பின்னர் சந்திப்பதாகச் சொல்லி விட்டுச் சைக்கிளை மிதிக்க ஆரம்பித்தேன்.

முருகையாவை எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. விளை யாட்டில் சூரன். படிப்பிலும் பிழையில்லை. மேற்படிப்புப் பற்றிய ஆசை பொதுவாகவே என் ஊரில் பலருக்கும் இல்லை. முருகை யாவை உற்சாகப்படுத்தக் கூடிய சூழ்நிலை ஊரில் இல்லாத தோடு தமையனின் குடும்பத்துக்குப் பாரமாக இருக்க விருப்பமில் லாததால் பள்ளிக்கூட விடுமுறை நாட்களில் மெல்லமெல்லக் கடைகளில் உதவிக்குப் போகப் பழகிவிட்டான். ஓ.எல். பரீட் சைக்கு ஒரு தவணை முந்திப் பள்ளிக்கூடத்திலிருந்து சொல்லா மல் விலகிவிட்டான். அவனுக்கு நிரந்தரமாக ஏதாவது வேலை அகப்பட்டதோ தெரியாது. என்றாலும் காற்பந்து விளையாட்டில் உள்ள அக்கறை மட்டும் நீடித்தது. போன வருடத்துக்கு முதல் வருடம் ஒரு நாள் நான் மாத்தளையில் வேலையாக இருந்த போது கண்டிக்குப் போன காற்பந்துக் குழுவுடன் வந்தவனைத் தற்செயலாகச் சந்திக்கமுடிந்தது. அவன் வீணான வம்பு தும்புக் குப் போவான் என்று நான் இன்னும் நம்பவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



அடுத்த சனிக்கிழமை பின்னேரம் சண்முகசுந்தரத்தின் தையற் கடையைத் தாண்டிப்போனபோது கொஞ்சநேரம் கடைக் குள் தலையை நீட்டலாம் என்ற யோசனை வந்தது. சைக்கி ளைத் திருப்பினேன்.

கடைக்குள், சண்முகசுந்தரம் மிஷினை மிதித்தபடி பக்கத்தி லிருந்த ஒரு மீசைக்காரப் பொலீஸ்காரனுடன் பேசிக் கொண் டிருந்தான். "சும்மா எட்டிப் பார்க்க நினைச்சன்" என்று விட்டுத் திரும்ப முனைந்த என்னை மறித்துப் பக்கத்துக் கதிரையில் கிடந்த உடுப்புகளைத் தூக்கி மேசைமேல் வைத்தான். "இந்தப் பொலீஸ்காரன் யாரெண்டு தெரியுமா?" என்று கேட்டான். என்னால் உடனடியாக அடையாளங்காண முடியவில்லை. பொலீஸ்காரன் தொப்பியைக் கழற்றிவிட்டுச் சிரித்தபோதுதான் தெரிய வந்தது.

"நவரத்தினம் எல்லோ...."

"மாஸ்ற்றர் இப்ப ஊரோட வந்திட்டீங்கள் எண்டு ஆஸ்பத்தி ரியிலை அறிஞ்சன். எப்பிடி உங்கட சுகங்கள் எல்லாம்..."

மீசைக்குப் பின்னாலிருந்து குரல் எழுந்தது.

முருகையாவைப் பற்றிக் கேட்போமா என்ற எண்ணம் எழுந் தது. ஆனால் ஏனோ கேட்காமல் விட்டு விட்டேன்.

பழைய கதைகள் பல அங்கும் இங்குமாகச் சில நிமிஷங் கள் உயிர்த்து உறங்கின. பிறகு பி.சி.17359க்குக் கடமை நினைவுக்கு வந்தது. தொப்பியை மாட்டிக் கொண்டு எழுந்தான்.

"இவன் பழைய சினேகிதன் எண்டு யூனிபோமைத் தைக்கக் குடுத்தன். கடத்திறான் மாஸ்ற்றர்.... டேய் சண்முகம் நாளைக்கு வேணும்".

"நேரம் போயிட்டு. நான் வாறன் மாஸ்ற்றர். கண்டது சந்தோசம்". போய்விட்டான்.

"முருகையாட விசயம் நவரத்தினமா சொன்னவன்?"

"என்ன மாஸ்ற்றர், அவன் இதெல்லாம் எங்களோட கதைப் பானா? பிறகு நாளைக்கு அவன்ட வேலை சரி. அதெல்லாம்

www.padippakam.com



வேறவிதமா அறியிறனாங்கள். யூனிபோம் போட்டா அவன் வேற ஆள். இவ்வளவு காலமாப் போட்டுப்போட்டு அது அவண்ட உடம்பில ஊறிப்போச்சு''.

பாதி பகிடியாகவும், பாதி உண்மையாகவும் சொன்னாலும் அவனுடைய நினைப்பில் அதிகம் பிழையில்லை என்றுதான் தெரிந்தது.

''முருகையா என்ன செய்தவன் எண்டு தேடுறாங்கள்?''

''இந்த நாள்ள ஒண்டுஞ் செய்யாட்டாலுங் காணும்''.

''அது தெரியும். எண்டாலும் ஏதெண்டாலும் ஞாயம் சொல்லாமலா தேடுவாங்கள்?''

''போன மாசம் இங்கை ஒரு ஆள வெட்டிப் போட்டாங்கள். அவன் பொலிசுக்குக் கதை சொல்லிறவன். அரசியல் விசயமா யிருக்கும். முருகையாவுக்குத் தொடசல் இருக்குமெண்டு நினைக்கிறாங்கள். பாவம் தமையன் ராசையாவுக்கும் சரியான யோசனை. முருகையா இப்ப இங்க இல்லையெண்டுதான் நினைக்கிறன்''.

நேரங்கடந்து இருளத் தொடங்கிவிட்டது. சைக்கிளில் விளக்கும் இல்லை என்பதால் வீட்டுக்குத் திரும்பினேன். பிறகு சில நாட்களாகச் சண்முகசுந்தரத்தைச் சந்திக்கக் கிடைக்கவில்லை. எதிர்பாராதவிதமாகத் திடீரென்று ஒரு நாள் ஆஸ்பத்திரிக்கு வந்தான்.

''என்ன, ஆருக்கும் ஏதாவது சுகவீனமோ?''

''சுகவீனமில்லை, முருகையா ஆஸ்பத்திரியில.... நல்லா அடிச்சுப் போட்டாங்கள்.... நீங்கள் ஏதாவது செய்யேலுமெண் டால்.... அதுதான் சொல்லிப் போட்டுப் போக யோசிச்சன்''.

''ஆள் எப்ப அம்பிட்டவன்?''

''மூண்டு நாலு நாள் இருக்கும். ஒரு கதையுந் தெரியாது.... விசாரிக்கவும் ஏலாது. உங்களுக்கு ஏலுமெண்டால்.... ராசையா அண்ணனுக்குப் பெரிய யோசனை. பாக்கப் போனவர். கதைக்கவும் விட மாட்டாங்கள். கன புறக்ற்றர்மார் காசு குடுத் தாலும் இப்ப இப்ப பஞ்சிப்படுகினம். ராசையா அண்ணன்



படிப்பகம்

www.padippakam.com



யூ.சியில பழைய மெம்பர்மாரிட்டயும் கேட்டவர். அவையளுக்கும் தங்கட தங்கட கரச்சல்கள்....''

“எந்த வோட்டில போட்டிருக்காம்?''

“ஏழாக்கும். காவல் போட்டிருக்கினம்....''

“நாளைக்குச் சிலநேரம் ஏலுமெண்டால் பாக்கிறன்''.

நான் எதிர்பார்த்ததைவிட எளிதாக என்னால் ஏழாம் வாட் டுக்குப் போய் முருகையாவைச் சந்திக்க முடிந்தது. ஆனாலும் அதிக நேரம் பேசி வீண் சிக்கல்களை உருவாக்கிக்கொள்ள நான் விரும்பவில்லை. றிமாண்ட் சிறையிலிருந்து அவனை அனேகமாக வெளியூர் முகாமுக்கு அனுப்புவார்கள் என்றுதான் எதிர்பார்த்தேன். ஆனாலும் முருகையா இருந்த நிலையில் அவனை எங்கேயும் இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்குக் கொண்டுபோக முடியாது. அவனுக்கும் குறிப்பிட்ட கொலைக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்பதை அவன் மிகவும் கஷ்டப்பட்டுத் தான் உணர்த்தினான்.

இந்த நாட்களிலும் வழமைக்கு மாறாகச் சில நேரங்களில் குற்றம் செய்யாதவர்கள் விடுதலையாகி விடுகிறார்கள். நான் அதிகம் உதவினேன் என்று சொல்ல முடியாது. எனினும் ஒரு சில தொடர்புகள் சிற்சில காரியங்களைத் துரிதப்படுத்த உதவு கின்றன. முருகையா இரண்டு வாரங்களில் விடுதலையாகிவிட்ட காரணம், கொலையுண்டவருக்கு வேறு தனிப்பட்ட எதிரிகள் இருந்தமை கொலையின் அரசியல் முக்கியத்துவத்தை இல்லா மற் செய்துவிட்டது தான்.

சில நாட்கள் கழிந்து ஒரு மாலை இருண்ட பிறகு சண்முக சுந்தரத்துடன் முருகையா என் வீட்டுக்கு வந்தான். வீட்டுக்குள் வர இருவருமே விரும்பாததால் தோட்டத்துச் சுவரோரம் நின்று பேசினோம். சண்முகசுந்தரம் நாங்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டு எங்கேயோ அண்ணாந்து பார்த்தபடி நின்றான்.

“நீங்க செய்த உதவிக்கு நன்றி சொல்லிப்போட்டுப் போகத் தான் வந்தனான்''.

“நான் பெரிசாக ஒன்றுமே செய்யேல்லையே! உன்னில



படிப்பகம்

www.padippakam.com



குற்றம் இல்லாததால விட்டுட்டாங்கள்...."

"ஆஸ்பத்திரியில என்னை வந்து பார்த்ததே பெரிய விசயம். அண்ணரும் நீங்கள் செய்த உதவிகளைப் பற்றிச் சொன்னவர்.... என்னைப் போக விட்டிருப்பாங்கள்.... இன்னம் மூண்டு மாசம் வதைச்சபிறகு...."

"ஒண்டு சொல்லிறன், கோவிச்சுக் கொள்ளாத. நீ ஒளிச்சு ஓடினது பேத்தனம்".

"இல்ல மாஸ்ற்றர், அம்பிட்டதுதான் பேத்தனம். எப்படியும் மற்ற உண்மைகள் வெளிக்கு வரமுதல் என்னைப் பிடிச்சிருந்தா நல்லா அடிச்சுத்தான் இருப்பாங்கள்".

என்னால் அதை முற்றாக மறுக்க முடியவில்லை.

"ஏன் உன்னிலை ஐமிச்சம் வந்தது?"

"வெட்டுப்பட்டவன் செல்வராசா அஞ்சாறு பேரைப் பொலிஸில மாட்டிவிட்டிருக்கிறான். என்னையும் முந்தி ஒருக்காப் பிடிச்சுக்கொண்டு போனவங்கள். ஒரு இரவு வச்சு அடிச்சுப் போட்டு அடுத்த நாள் விட்டவங்கள். கிட்டடியில தான் செல்வராசாட வேலை எண்டு தெரிஞ்சது. அவண்ட வீட்டை போய் நேரா ஏசிப்போட்டன். அவன்ட மச்சான்காரன் கேட்டுக்கொண்டு நிண்டவன். அவனுக்குக் கொஞ்சம் உத்தியோகப் பவறும் இருக்கு. நான் ஏசிப்போட்டுப் போன மறுநாள் இரவு ஆரோ இவன்ட சுவரில 'துரோகி' எண்டு என்னவோ எழுதிப் போட்டுப் போனாங்கள். பிறகு ரண்டு நாள்ள அம்மாள் கோயில் வளவுக்குக் கிட்ட வச்சு ஆரோ வெட்டிப் போட்டாங்கள்.... இவனுக்குக் கிட்டடியில கையில காசுபுழங்கத் துவங்கினபிறகு கன தொடசல்கள். கோயில் வளவிலயும் எங்கையோ இளம் பெட்டைகள் இருக்கிற வீட்டில பிறத்தி ஆக்களைக் கொண்டு போய்ச் சேட்டை விட்டிருக்கிறான்...."

எனக்கு நிலைமை கொஞ்சங் கொஞ்சமாகத் தெளிவாகியது. எனக்கே ஏனென்று தெரியாது, "நவரத்தினம் உன்ன ஸ்ற்றேசனில காணேல்லையா?" என்று கேட்டேன்.

"அவன் என்னைக் கண்ட மாதிரியே காட்டேல்ல".



படிப்பகம்

“கடமை!” என்று முதற் தடவையாகக் குறுக்கிட்டான் சண்முகசுந்தரம். அவனது குரலில் கேலி இழையோடியது.

“அவன் வேற ஒருத்தனை அடிச்சதைக் கண்டேன். என்னை அடிச்சவன் அவனோடை ஒப்பிட்டாச் சாது! கதறக்கதற வெளுத் தான். அதுக்குப் பிறகு தான் என்னைக் கண்டவன். காணாத மாதிரிப் போயிட்டான்” என்று முருகையா தொடர்ந்தான்.

முன் கேற்றை யாரோ திறந்த சத்தம் கேட்டது. முருகையா வும் சண்முகசுந்தரமும் அத்தோடு போய்விட்டார்கள்.

அடுத்த முறை சண்முகசுந்தரத்தைச் சந்திக்க முதல் நான்கு நாட்கள் கடந்து விட்டன. கடைவாசலில் எனக்காகவே காத்து நின்றவன் போல “மாஸ்ற்றர் ஒரு பெரிய விசயம் கதைக்க வேணும் உள்ளுக்கு வாறீங்களா?” என்று அழைத்தான். அவனது மனக் கலவரம் முகத்தில் அப்படியே தெரிந்தது.

“முருகையாவைக் காணேல்லை எண்டு தெரியுமா மாஸ்ற்றர்?”

“பொலிஸோ ராணுவமோ என்று நினைக்கிறியா?”

கொஞ்ச நேரம் யோசித்தான். “மாஸ்ற்றர் இதை உங்க ளுக்கு மட்டுந்தான் சொல்லுறன். நேத்து முருகையா ஊரை விட்டுப் போயிட்டான். அவன் அடுத்தமுறை அம்பிட்டுப்போக முதல் ஏதாவது செய்து போட்டுத்தான் போவான் எண்டு நினைக் கிறன்”.

“சொன்னவனா?”

“சொல்லத் தேவையில்லை.... பலமாதிரியும் புத்தி சொன்னன். இப்ப அவன் வேற ஆள். அவனுக்கு நிதானமும் இல்லை”.

“ஒரு விதமான முன்யோசனையும் இல்லை. ஒரு வெறி. எவனையாவது பலியெடுக்கிற வெறி.... மிருகம் மாதிரி....”

“அவனைச் சொல்லி என்ன! அநியாயமா ஒரு நல்ல பெடியன்....” நான் சொல்லிமுடிக்கு முன்னம் நவரத்தினத்தின் குரல் கேட்டது.

www.padippakam.com



"ஓ, மாஸ்ற்றரா? மாஸ்றரர், இவன் இன்னம் என்ட யூனி போமத் தைக்கேல்ல, கதையில மட்டும் வீரன்....

"ஏண்டாப்பா இன்னம் முடியேல்லையா?"

"இந்தா.... போன கிழமைக்கு முந்தின கிழமை தைச்சனான். நீ. தான் வரேல்லை".

"இந்தாப்பா நாப்பது ரூவா. மிச்சம் பிறகு தாறன்".

"அடுத்த யூனிபோமுக்கு வரேக்கதான் உன்ட மிச்சம் வரும்" என்று சண்முகசுந்தரம் சொல்லி முடிக்குமுன் நவரத்தினம் போய் விட்டான்.

சில நிமிஷ நேர மௌனத்தின் பின்பு "மாஸ்ற்றர் நான் தைச்ச இந்த யூனிபோம் எத்தினை மனிசரை மிருகமாக்கிப் போட்டுது?" என்று கேட்டான்.

என்னால் மறுமொழி சொல்லமுடியவில்லை.

*(தாயகம்-8, ஜூன்-ஜூலை 1985)*



படிப்பகம்

# ஒரு நாள் மத்தியானம் நடந்தது



*ஜீ.ஏயின் அலுவலகச் செயலாளர் பீரிஸ் கொஞ்சம் பதற்றமான நிலையில் இருந்தார்*

www.padippakam.com



அவனுடைய நினைவு இப்போது ஏன் மனதிற்கு வருகிறதோ தெரியாது. ஆனாலும் வருகிறது. அவனுடைய முழுப்பேர், குடாகமே பொடிராலஹாமிலாகே வில்சன் புஞ்சிபண்டா கருணா ரத்ன. கே.பி.வி.பி. கருணாரத்னவை யாருமே அவனுடைய நீண்ட பேரின் எந்தவொரு பகுதியாலும் அழைத்ததாக எனக்குத் தெரியாது. எல்லாருக்கும் அவன் கபரால் தான். (அதற்கான காரணம் பள்ளிக்கூட நாட்கள் தொட்டே அவன் ஆபிரிக்க விவகாரங்களில் காட்டிய அக்கறையே என்ற விடயம் ஒரு வரலாற்று நுணுக்கம் என்பதை விட, இங்கே அதற்கு ஒரு முக்கியத்துவமும் இல்லை).

கண்டி கச்சேரியில் நான் சில வருடங்கள் வேலை செய்த காலத்தில் தான் அவனை எனக்குத் தெரிய வந்தது. அவனுடைய சொந்த ஊர் கண்டிக்கு அதிக தூரமில்லை. குடும்ப நிலவரங்களை அனுசரித்து ஜீ.சி.ஈ.-ஏ.எல். முடிவுகட்குக் காத்திருக்காமல் அரசாங்க உத்தியோகத்தில் தொற்றிக் கொண் டான். முடிவுகள் வந்தபின்பு பல்கலைக்கழகம் போகும் வாய்ப்பு இருந்தபோதும் அது பற்றிய அக்கறை எதுவுமே காட்டவில்லை. நான் கண்டிக்கு வந்த நேரம் அவன் கச்சேரியில் மிகுந்த செல்வாக்குள்ள ஊழியர்களுள் ஒருவனாக இருந்த போதிலும், தொழிற்சங்க விவகாரங்களில் அவனுக்கு அக்கறை இருக்க வில்லை. அவனைச் சங்கத் தேர்தலில் இழுக்கப் பலரும் எடுத்த முயற்சிகள் பலிக்கவில்லை. என்னுடைய வயதுக்கும் அனுபவத் திற்கும் அவன் மதிப்புக் காட்டிய அதே சமயம், அவனுடைய, மிகவும் சுதந்திரமான நிலைப்பாடுகளை நான் எதிர்க்கும்போது கூசாமல் பதிலடி தருவான். ஆனாலும் அதிற்கூட அவனது நடத்தை கண்ணியமானது என்றே நினைக்கிறேன். 1977ம் ஆண்டுப் பொதுத்தேர்தலை அடுத்து எனக்கு வேலை இடமாற்ற மானது. கண்டியில் என்னால் அரசாங்கக் கட்சிக்கு விரோதமான நடவடிக்கையில் இறங்கமுடியாது என்ற எதிர்பார்ப்பில் தான் நான் மன்னாரிலிருந்து மாற்றப்பட்டேன்.

கண்டிக்கு வந்த நாட்களில் கபரால் போன்ற சில நண்பர்கள் என்னிடம் காட்டிய பரிவு எனது விவகாரங்களைச் சமாளிக்க



படிப்பகம்

மிகுந்த தெம்பை அளித்தது. அரசியல் விஷயங்களில் அவனது அக்கறை எவ்வளவுதான் இருந்தபோதும் அவனை மதிப்பிடுவது எனக்கு முடியாமலே இருந்தது. என்னுடைய உறுதியான கண்ணோட்டத்தின் பிடிப்புக்களுக்கும், எல்லாவற்றையுமே விமர்சிக்கத் துணியும் அதேசமயம் எதிலுமே ஒட்டாத அவனது நிலைப்பாட்டிற்கும் பெருத்த வேறுபாடு இருந்தது. அவனுடைய கருத்துக்கள் சுதந்திரமானவையாக இருந்த அளவுக்குச் சரியானவையாக இருக்கவில்லை என்பது என் அபிப்பிராயம். நான் ஒரு வரட்டு இடதுசாரி என்பது அவனது அபிப்பிராயம். அவை என்றைக்குமே மாறும் என்று இருவருமே எதிர்பார்த்ததும் இல்லை.

1980 நடுப்பகுதியில் ஒரு வியாழக்கிழமை. மத்தியானம் 2.30 மணி இருக்கும். ஜீ.ஏயின் அலுவலகத்திற்கு வருமாறு எனக்கு அழைப்பு வந்தது. அங்கே ஜீ.ஏயின் அலுவலகச் செயலாளர் பீரிஸ் கொஞ்சம் பதற்றமான நிலையில் இருந்தார். என்னுடைய பிரிவில் புஞ்சி பண்டா என்று யாராவது இருக்கிறார்களா என்று கேட்டார். எனக்குத் தெரிய யாரும் இல்லை என்றேன். நன்றாக விசாரித்து வரும்படி என்னைப் பணித்துவிட்டு மோட்டார் வாகனப் பகுதித் தலைமைக் கிளாக்கரைக் கூப்பிடுமாறு பியோனிடம் சொல்லி அனுப்பினார். கண்டிக் கச்சேரியில் ஒரு புஞ்சிபண்டா கூட இல்லை என்ற உண்மை எங்களுக்குக் கொஞ்சம் அதிசயமாகத் தான் இருந்தது.

மறுநாட் காலை பீரிஸ் என்னை அலுவலக வாசலிற் கண்டபோது "நேற்று என்ன விஷயம் தெரியுமோ?" என்று கேட்டார்.

"தெரியாது" என்றேன்.

"சீ.ஐ.டியிலிருந்து விசாரிக்கிறார்கள்".

"என்ன விஷயமாம்?"

"அதெல்லாம் சொல்ல முடியாதாம்".

"அப்படித்தானென்றால் அவர்களாகவே ஆளைக் கண்டு பிடிக்கட்டுமே".

"நான் அந்த விதமாகத் தான் ஏதோ சொன்னேன்.

www.padippakam.com



என்றாலும்....''

“என்றாலும் என்ன?''

“எனக்கு என்னவோ இது கொஞ்சம் சிக்கலான விஷயம் போல தெரிகிறது''

“ஏன்?''

“முந்தியும் சீ.ஐ.டி. எங்களிடம் விசாரித்திருக்கிறது. ஆனாலும் இந்த மாதிரியான ற்றெலிபோன் விசாரணை நடக்கவில்லை''.

“சீ.ஐ.டி. இல்லை என்று நினைக்கிறீரோ?''

“அப்படியும் இல்லை. இந்த நாட்களில் எதுவும் நடக்கலாம். ஆனால் விசாரித்த விதம் கொஞ்சம் முரட்டுத்தனமாக இருந்தது''.

அதற்குப் பிறகு வேறு விஷயங்களுக்குக் கதை தாவியது.

அலுவலகத்தில் கபராலைக் கண்டவுடன் அந்த விஷயம் பற்றிய பேச்சு இயல்பாகவே எழுந்தது.

“நேற்று நீ மத்தியானம் வரவில்லை. இங்கே யாரையோ சீ.ஐ.டி. தேடுகிறது தெரியுமோ?''

“என்னைத்தான் தேடுகிறது என்று சொல்கிறீர்களோ?'' என்று கேட்டுவிட்டு வழமையான உரத்த சிரிப்பை உதிர்த்தான்.

“இல்லை, இல்லை. உனக்குத் தெரியுமோ.... புஞ்சி பண்டா என்று யாராவது இங்கே வேலை செய்கிறார்களா?''

“புஞ்சி பண்டா? நான்தான் புஞ்சி பண்டா''. அவனுடைய சிரிப்பு திடீரென்று நின்றது. “சீ.ஐ.டி. புஞ்சி பண்டா என்று விசாரித்தார்களா அல்லது கருணாரத்ன என்று விசாரித்தார்களா?''

“புஞ்சி பண்டா என்று கேட்டார்களாம். மிகவும் கஷ்டப்பட்டு இங்கே ஒரு புஞ்சி பண்டாவும் இல்லை என்று கண்டு பிடித்தோம். இப்போது அதுவும் பொய்யாய் விட்டது''.

என்னுடைய பகிடிக்கு அவன் சிரிக்கவில்லை.

“யாரிடம் விசாரித்தார்கள்?''



படிப்பகம்

“மிஸ்றறர் பீரிஸ்....”

திடீரென்று எழுந்து போனான். பத்து நிமிடத்தில் திரும்பி வந்தான்.

“அது சீ.ஐ.டி. என்று நான் நினைக்கவில்லை!” அவனது குரல் வழமையான நிதானமான இயல்பைப் பிரதிபலித்தது.

நான் வேலையில் மும்மரமாக இருந்ததால் “அது ஒரு பெரிய ஆறுதல்” என்று விட்டு மறுபடி காகிதக் கட்டுக்களுள் அமிழ்ந்தேன்.

“எனக்கு அது அவ்வளவு நிச்சயமில்லை” என்று அவன் சிரித்தவாறே சொன்னது மெலிதாகக் காதில் விழுந்தது.

இரண்டு கிழமைக்கு பின்னர் ஒரு நாள் மத்தியானம் வேலை நேரத்துக்கு முன்பே அலுவலகத்துக்குப் போனபோது வாசலில் நின்ற பழைய பியோன் அரனோலிஸ் வெற்றிலை சப்பியவாறே “ஆ, மாத்தயா” என்று தன் பத்துப் பற்களும் தெரியச் சிரித்து விட்டுத் துப்புவதற்காக விறாந்தையைக் கடந்தார். அலுவலகத்தினுள் கபராலும் வேறொருவரும் மும்முரமாகப் பேசிக்கொண்டிருந்தனர். என்னைக் கண்டதும் கபரால் “இவரை உங்களுக்குத் தெரியாது. என் மைத்துனர் ஜயரத்ன பண்டா.... இவர் மிஸ்டர் நடராஜா. என்னுடைய நல்ல நண்பர்.... மிஸ்டர் நடா, நீங்கள் கார் வாங்க நினைத்தால் ஜயா தான் ஆள். அவர் 77க்குப் பிந்திய முதலாளி தான். என்றாலும் இன்னமும் அவரிடம் இருதயம் இருக்கிறது”. அவனுடைய பகிடிக்கு ஜயாவின் சிரிப்பு மிகவும் சங்கடமான ஒன்றாக இருந்தது.

“நான் உங்களைக் குழப்ப விரும்பவில்லை பிறகு வருகிறேன்....” என்று கழரப் பார்த்தேன்.

“இல்லை, அவசியமில்லை. நாங்கள் கதைத்து முடிந்து விட்டது, ஜயாவுக்கும் நேரமாகிவிட்டது”.

அதற்குப் பின்னர் ஓரிரு வார்த்தைகளுடன் ஜயா போய் விட்டார்.

கபரால், “வெட்கங் கெட்டவர்கள்” என்று சொல்லிக் கொண்டே ஒரு ஃபைல்கட்டை மேசை மேல் தூக்கிப் போட்டான்.

www.padippakam.com



“உம்முடைய மைத்துனர் அப்படி மோசமான ஆள் போலதெரியவில்லையே!”

“அவர் ஒன்றும் பெரிய மகாத்மா இல்லை. என்றாலும் நான் அவரை ஏசவில்லை!”

“அப்படியானால் என்னையா?” என்னுடைய கேள்வி அவனது கோபத்தைக் கொஞ்சம் தணித்து விட்டது.

“சீ.ஐ.டி. என்னைத் தேடி வந்த கதை நினைவிருக்கிறதா?”

“ஓம், இன்னமும் தேடுகிறார்களா?”

“அது சீ.ஐ.டி. இல்லை என்று எப்போதோ தெரியுமே. இது அவர்களைவிடப் பெரிய கைகள்”.

“அரசாங்கக் கட்சி ஆட்களா?”

“உங்களுக்கு எப்போதுமே அரசாங்கக் கட்சி நினைவு தான்! ஆனாலும் இந்தத் தடவை நீங்கள் சொல்வது சரி”.

“என்ன நடந்தது?”

“நான் ஒரு நாள் மத்தியானம் வரவில்லை. அந்த நாள் தானே அந்த சீ.ஐ.டி. விசாரணை நடந்தது மிஸ்டர் நடா?”

“ஓம்”

“அன்று நான் மத்தியானத்தோடு வீட்டுக்குப் போகும் வழியில் சுமித்திராவை பஸ்சில் கண்டேன். ஓ...! சுமியை உங்களுக்குத் தெரியாது. அவள் என் ஊர்க்காரி. அவளுடைய புருஷன் பேணாட் பெணான்டோ ஒரு கூட்டுத்தாபனத்தில் பெரும் புள்ளி. அதாவது 1977இல் அவனுடைய தமையன் மெல்வின் இங்கே கட்சி வட்டாரத்தில் உயர்ந்த தானம் அடைந்த பிறகு. அவர்கள் எல்லாம் வெளியூராட்கள். அவன் 1976க்குப் பிறகு கட்சி தாவின ஆள். இப்போது நல்ல வியாபாரம். பேணாட்டுக்கும் என்னுடைய மைத்துனர், இன்றைக்கு வந்தாரே, அவருக்கும் வியாபாரத் தொடர்புகள் சிறியதும் பெரியதும்.

“சுமித்ராவை பஸ்ஸில் நான் எதிர்பாக்கவில்லை. ‘தற்செய லாக பஸ் ஏற வேண்டி வந்துவிட்டது. கார் பழுது, ற்றாக்ஸி அகப்படவில்லை....’ ஏன் என்ன என்று நான் கேட்காமலே



படிப்பகம்

விளக்கம் தந்தாள். 'எங்கள் டாட்டா பென்ஸ்இல் போக நீங்கள் தரவழி அதிர்ஷ்டம் செய்யவேண்டும்!' என்று பகிடியாகச் சொன்னேன். பிடிக்கவில்லை. முன்னைய சுமித்ரா இல்லை அவள். ஒன்று மாறி ஒன்றாகக் கதை அரசியலில் வந்து முடிந்தது. அதோடு நான் சிங்களத்தில் கதைக்க அவள் ஆங்கிலத்தில் மறுமொழி சொல்ல.... என்னுடைய பிடிவாதம் தளரவில்லை. அரசாங்கத்தைப் பற்றியும் ஆளுகிறவர்களுடைய பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றியும் காரசாரமாகக் கொஞ்சம் சொல்லி விட்டேன். லஞ்ச ஊழல்களையும் எதிர்க் கட்சித் தலைவி மீது பழிவாங்கலைப் பற்றியும் சொன்னபோது அவளுடைய முகம் கோபத்தில் சிவந்து விட்டது, அதற்குப் பிறகு சில நிமிஷம் பேசாமல் இருந்து விட்டு இறங்கும் போது ஒரு திடீர்ப் புன்னகையுடன் கையை ஆட்டிவிட்டுப் போய் விட்டாள்".

"நீ என்ன செய்தாய்?"

"நினைவில்லை. பதிலுக்கு ஒரு வேளை கையை ஆட்டி யிருப்பேன். பெரும்பாலும் சிரித்திருக்க மாட்டேன்".

"என்னால் நினைத்துப் பார்க்க முடியும்" என்றேன் கேலியாக.

"உங்களால் நினைத்துப் பார்க்க முடியாதது என்ன?" என்று பதிலுக்குச் கேலியாகச் சொல்லிவிட்டுத் தொடர்ந்தான். "அன்றைக்கு அந்த சீ.ஐ.டி. விஷயம் யாரோ சேட்டைக்கு செய்ததாக நினைத்தேன் இன்று தான் விஷயம் தெரிய வந்தது".

"மைத்துனர் ஏதாவது சொன்னாரா?"

"ஓம். பேணாட் —சுமியின் புருஷன்— அவரிடம் சொன்னதைச் சொன்னார்".

"நான் சுமியுடன் உரக்க விவாதித்ததை யாரோ அவர்களது கட்சி ஆட்கள் கண்டார்களாம். அரசாங்கத்தைத் தாக்கி நான் பேசியதை எல்லாம் கேட்டார்களாம். என்னை பஸ்ஸிலேயே வைத்து அடித்திருப்பார்களாம். ஒருவேளை சுமிக்குத் தெரிந்த ஆள் என்று விட்டு விட்டார்களாம். பிறகு சுமி வீட்டுக்குப் போய் விசாரித்தார்களாம். சுமி என்னைப் பற்றிய முழு விவரங்களையும் கொடுக்காத காரணத்தால் அவள் சொன்ன அரை

குறை விஷயங்களை வைத்துக்கொண்டு என்னை ஒருதடவை மிரட்டினார்களாம். பேணாட் பிறகு அவர்களிடம் கதைத்துச் சரிக்கட்டி விட்டாராம்".

"அவ்வளவுந்தான் என்றால் பரவாயில்லையே!" என்றேன்.

"இன்றைக்கு வியாபாரத்தையும் விட்டுவிட்டு மைத்துனர் ஐயா இதை மட்டும்தான் சொல்ல வந்தார் என்று நினைக்கி றீர்களா?... பொது இடங்களில் கவனமாகக் கதைப்பது நல்லது என்றும் சொன்னார்". அவனுடைய குரல் கொஞ்சம் எரிச்சலைக் காட்டியது.

"அதில் ஒன்றும் பிழையில்லையே இப்போது நாட்டில் நிலவரங்கள் அந்த மாதிரித் தானே இருக்கின்றன" என்று அவனைக் கொஞ்சம் தணிக்கப்பார்த்தேன்.

"ஓம், சுமி சொன்னது உண்மை என்றால்!"

"உண்மையாக இராதா?"

"என்னுடைய பேர் புஞ்சி பண்டா என்று இங்கேயோ கண்டி யிலேயோ யாருக்கும் தெரியாது. சுமி என் ஊர்க்காரி"

"அதைக் கட்சித் தடியர்களிடம் சுமி சொல்லியிருக்கக் கூடும். என்றாலும் அதில் ஒன்றும் பெரிய பிழை இல்லையே. அவர்கள் எதையும் செய்வார்கள் என்று அவள் எதிர்பார்த் திருக்க மாட்டாள்" என்று சமாதானம் சொன்னேன்.

"உங்களுக்கு அவர்களது கட்சித் தடியர்களைப் பற்றித் தெரிகிற அளவுக்கு சுமிக்கும், பேணாட்டுக்கும் அவர்களது கட்டளைக்குட்பட்ட தடியர்களைத் தெரியாதா?"

என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

"சுமி இப்போது ராஜவம்சம். அவளோடு வாக்குவாதம் செய்ய எனக்குத் தகுதியில்லை. தன்னுடைய பேர் வெளிவராமல் எனக்குப் பாடம் படிப்பிக்க முயன்றாள். சூழ்நிலை எனக்கு வசதியாக இருந்ததால் தப்பி விட்டேன். அதோடு நான் இப்போது என் மனைவியின் ஊரில்தான் இருக்கிறேன்".

"அவள் தூண்டிவிட்டுத்தான் இது நடந்தது என்று நிரூபண மாகி விடாதே!" என்று குறுக்கிட்டேன்.

www.padippakam.com



"அந்தத் தடியர்கள் போன பிறகு அவள் என்னை எச்சரிக்க முயலவே இல்லை. அவளுக்கு நான் கச்சேரியில் வேலை பார்ப்பது மட்டும் தெரியும்".

"நேரம் இருந்திராது".

"அப்படியானால் அதைப்பற்றி இவ்வளவு நாளும் பேசாமல் இருந்த மாதிரியே இருந்திருக்கலாம். மைத்துனர் மூலம் வந்த எச்சரிக்கை?"

"நீ சொல்வதும் உண்மையாகவே இருக்கலாம். ஆனால் மற்றவிதமாகவும் இருக்க முடியும்".

"இருக்கலாம், ஆனால் ஒரு சிறு பிழை விட்டுவிட்டாள். நான் அலுவலகத்துக்குத் திரும்பிப்போக நேரம் இருக்குமோ என்று யோசியாமலே அவர்களிடம் மிரட்டும்படி சொல்லி விட்டாள். அவள் இறங்கினபோது நேரம் இரண்டு மணிக்கு நெருங்கிவிட்டது. அந்தத் தடியர்களும் பஸ்ஸில் இருந்து அவள் இறங்கிய இடத்தில் இறங்கியிருந்தாலொழிய 2.30க்கு ற்றெலிபோனில் மிரட்டியிருக்க முடியாது அவள் சொன்ன கதை வேறுவிதமாக இருந்தது. உண்மையில் அன்று சீ.ஐ.டி. என்று மிரட்டியது பஸ்ஸில் இருந்த யாருமில்லை. அவளுடைய புருஷனாகவே இருக்கலாம்".

"மற்றதும் முற்றாகவே அசாத்தியமில்லை!"

"சுமி பேணாட்டின் மனைவி இல்லையென்றால் அது ஒரு வேளை உண்மையாக இருக்கும். பேணாட்டைப் பற்றி உங்களுக்கும் தெரியும்".

"அப்படியானால் உன்னை இதுவரை விட்டு வைத்தார்களே!"

"என்னைப் பற்றி விசாரித்து அடிக்குமளவுக்கு நான் முக்கியமான ஆள் இல்லையோ தெரியாது. அதைவிட, அவர்கள் தங்கள் கை தெரியாமல் இயங்குகிறவர்கள், புதிய கனவான்கள். என் மைத்துனர் அன்றைக்கு மறுநாள் அல்லது மறுநாள் பேணாட்டைச் சந்தித்திருக்கலாம்".

"எல்லாம் முடிந்து விட்டது தானே!"



படிப்பகம்

www.padippakam.com



“இல்லை ஆரம்பித்துவிட்டது. மைத்துனர் வந்தது மிரட்ட மாத்திரம் தான்”.

“இருக்கலாம். ஆனால் உன்னால் நீ நினைப்பது உண்மை என்று நிச்சயப்படுத்த முடியுமா?” என்று கேட்டேன்.

“அதனால் பிரயோசனமில்லை. குடும்பத்திற்குள்ளும் சில பிரச்சனைகள் வரலாம்.... ஆனால் முடியும்.... இந்த மாதிரிக் குப்பைகூளங்களைப் பற்றி விசாரித்து என் நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. மிஸ்றடர் நடா, நீங்கள் முன்பு சொன்னது நினைவிருக்கிறதா?...”

“எது?”

“முழு அறிவுடன் சிந்திப்பவன். நடுநிலைமை வகிக்கக்கூடிய வசதி வரவரக் குறைந்து கொண்டே வருகிறது என்றீர்கள்....”

“இப்போது உடன்படுகிறாயா?”

“இல்லை.... எவனுமே நடுநிலைமை வகிக்கமுடியாத நிலைமை வந்துவிட்டது என்கிறேன்” என்று கண்ணைச் சிமிட்டினான்.

அதற்குமேல் கதையைத் தொடர வாய்ப்பு இருக்கவில்லை. அவனும் பிறகு அதைப்பற்றிப் பேச முயலவில்லை. வழக்கம் போல நிதானமாகவும் ஆறுதலாகவும் இயங்கினான்.

இரண்டு கிழமைகட்குப் பின்பு அவனுக்கு 24 மணி நேரத்தில் மொனராகலைக்கு வேலை மாற்ற ஆணை வந்தபோத நான் யாழ்ப்பாணத்தில் இருந்தேன். அதற்குப் பிறகு தொடர்தொடரான வேலைமாற்றங்கள். நானும் கண்டியிலிருந்து மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டேன். ஏனென்று தெரியவில்லை. அண்மைக்காலமாகக் கபராலின் நினைவுமட்டும் அடிக்கடி மனதிற்கு வருகிறது.

தொடர்பு விட்டு இப்போது நாலு வருஷம் இருக்குமா?

*(தாயகம்-9, ஒகஸ்ற்-செப்ற்றெம்பர் 1985)*




படிப்பகம்

www.padippakam.com



# சபிக்கப்பட்டவர்கள்



*கீரனுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் ஒன்றும் மற்றைய தமிழ் வாலிபர்கட்கு ஏற்பட்டவற்றை விட அதிகமானவையில்லை*

www.padippakam.com



சிவபெருமானால் தண்டிக்கப்பட்ட நக்கீரருக்குக் குளத்தில் முழுகி எழுந்தும் உடல் உபாதை தணியவில்லை. தான் மதுரை மா நகரை விட்டு அகற்றப்பட்டது நியாயமா என்று அவருக்குள் இருந்த ஐயம் இன்னுந் தீரவில்லை. குற்றங் குற்றமே என்று சொன்னது எவ்வகையிலுங் குற்றமென்று அவரால் இன்னும் ஏற்க முடியவில்லை. புலமை இல்லாத ஒருவன் தனக்கே விளங் காத இரவற் கவிதை வாசித்துப் பரிசு பெற்றதையிட்டுத் தன் மனதில் ஏற்பட்ட கொதிப்பு முதற்கண் தன் ஆணவத்தின் பாற்பட்டதா அல்லது நியாய உணர்வின்பாற்பட்டதா என்ற கேள்விக்கும் அவரால் முடிவுகாண இயலவில்லை. வீடுவாசல், மனைவி பிள்ளைகள், நண்பர்கள், அரச சபை எல்லாவற்றை யும், ஒரு வாக்குவாதத்திற்காக, சபையோர் நடுவே விட்டுக் கொடுக்கக்கூடாது என்ற வீம்புக்காக, வரட்டுக் கௌரவத்திற்காக இழந்து பரமசிவனாருடைய கோபத்துக்கு ஆளாகிய முதலா வது சாதாரண மனிதன் என்று வருந்துவதா இல்லைப் பெருமைப்படுவதா என்று கூட அவருக்கு நிச்சயமில்லை. நெற்றிக்கண் பட்ட அவரது தேகத்தின் தகிப்பு அதிகமா அல்லது அநியாயமாக அவமதிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டோமே என்ற மனத்தின் தகிப்பு அதிகமா என்றும் அவருக்குத் தெரியவில்லை. நெடுங்காலமாகத் தன்னை அறிந்த பாண்டியன் கூடத் தனக்காகப் பரிந்து பேசவில்லையே என்ற ஏமாற்றம் மனதைக் குடைந்தது. துதி கேட்டுப் பழகிவிட்ட செவிக்குத் தன் மனைவியின் கூந்தல் இயற்கை மணங் கொண்டது என்று சொன்னவனின் புகழுரையை விட இல்லையென்று நெற்றிப்பொட்டில் அடித்த மாதிரிச் சொல்கிறவனுடைய சத்திய வசனமா பிடிக்கும்? கற்புள்ள பெண்களின் கூந்தலில் எல்லாம் இயற்கை மணம் இருக்கு மென்றால், பாண்டியனின் பட்டதரசியை விட்டால் மற்ற எல்லாப் பெண்களும் கற்பில்லாதவர்களா?

பாண்டியனுக்காவது அதிகாரத்தால் வந்த அகந்தை நியாயத்தைக் காணாதவாறு கண்ணை மறைத்தது. மற்றப் புலவர்கள்? இப்படியும் ஒட்டுமொத்தமான கோழைத்தனமா? பாண்டியனின் பணமுடிச்சும் பரமசிவனாரின் கோபமும் ஒன்று



படிப்பகம்

www.padippakam.com



சேர்ந்து நிற்கையில் துணிந்து எதிர்க்கும் நெஞ்சுறுதி எத்தனை பேரிடம் உண்டு என்று நினைத்தபோது, நக்கீரரின் எரிமலை நெஞ்சுக்குள் விளைந்த கணநேரப் பெருமிதம் சில்லென்று குளிரூட்டிச் சிலிர்க்கவைத்து மறைந்தது.

என்ன பயனற்ற, நடைமுறைக்கு ஒவ்வாத யோசனைகள்! வாழ்நாள் முழுவதும் குற்றங் குற்றமே என்று சொன்ன வீம்பை மட்டுமே நினைத்துக் கொண்டு திருப்திப்பட முடியுமா? இதற்காக நாளை ஒருநாள் உலகம் பாராட்டவுங் கூடும். ஆனால் இன்றைக்குச் சோறு போடுவது யார்? சிவபெருமானே சீற்றந் தணிந்து நடந்தவை நடந்தவையாயிருக்கட்டும் என்று மன்னித்ததோடு மட்டுமன்றி விமோசனம் பெறப் பாதையுங் காட்டி விட்டார். அடுத்த காரியத்தைக் கவனிக்க வேண்டியது தான். சிவபெருமானே வந்து தன் துணிவை மெச்சினாலொழிய அரச சபையில் உள்ள பிச்சைக்காரப் பட்டாளம் தன்னுடன் உறவு கொண்டாடத் துணியாது. புகழ்பாடும் கும்பல் உள்ள வரைக்கும் பாண்டியனுக்குத் தன் அவையில் நக்கீரர் இருந்தாலென்ன, போனாலென்ன! அவனுடைய தேவியின் கூந்தலின் இயற்கை மணத்துக்கு ஈடாக ஊரில் ஒரு மலருக்கும் மணமில்லை என்று வாயுளையப் பாடப்போகிற கூட்டத்தின் நடுவே குற்றங் குற்றமே என்ற நிலையினின்று பின்வாங்கிய நக்கீரன் இருந்தாலும் வெற்றி தான். பாண்டியனுக்கு எந்த வகையான மகிழ்ச்சியை மறுப்பது என்று மனம் தடுமாறியது. மனைவி, குடும்பம், மதுரை மாநகர் என்று மாறிமாறி எழுந்த நினைவுகள் சாப விமோசனத்தை நோக்கி நக்கீரரை உந்தின. மனதை ஒருநிலைப்படுத்தித் தியானத்தில் ஆழ்வோம் என்ற முடிவுடன் நக்கீரர் குளத்தில் இறங்கி முழுகியெழுந்து ஈர வேட்டியுடன் குளக்கரை மரநிழலில் சப்பாணி கொட்டியவாறு மனதை ஒடுக்க முற்பட்டார். அப்போது....

***

இளங்கீரனுடைய தூக்கம் கலைந்தது. "மச்சான், கீரன் எழும்படா! ஊராலை கடிதம் வந்திருக்குது" என்ற பிரகடனத்துடன் கதவைத் தடதடவென்று தட்டினான் அடுத்த



படிப்பகம்

www.padippakam.com



அறையிலிருக்கும் சுரேன் எனப்படுகின்ற சுரேந்திரகுமார்.

“மூதேசியள்! சனிஞாயிறென்டாலும் ஆறுதலாய்ப் படுக்க விடாதுகள். ஒண்டில், ஆரேன் ஒருத்தன் மாறிமாறி மணியடிப் பான். இல்லாட்டில் அறைக்குள்ள வந்து குழப்புவான”. முனகிய வாறே தலையணையிலிருந்து தலையை வெகு சிரமப்பட்டுப் பிய்த்தெடுத்து நிமிரத்தி வைக்குமுன்னமே கதவைத் திறந்து கடிதத்தைக் கட்டிலில் வீசிய சுரேன் அறையை விட்டுப் போக மனமில்லாமல் நின்றான்.

கீரனுக்கும் அவனைப் போகச்சொல்ல மனம் வரவில்லை. மனம்வந்தாலும் சுரேன் இலேசில் போகப்போவதில்லை. 1990க்கு முதலே எவருக்கும் ஊரிலிருந்து கடிதங்கள் வருவது குறைவு. இப்போது கடிதம் வருவதே அபூர்வம். யாரிடமாவது கையிற் கொடுத்தனுப்பிக் கொழும்பிற் போட்டால் வந்து சேரும். அதுவும் நிச்சயமில்லை. ஒரு மாதம் இரண்டு மாதம் பிந்தி வருகிற கடிதத்தில் எதுவும் பெரிய புதினம் இராது. நீண்டகாலமாகவே இயக்கங்களுடைய செய்திப் பிரசாரங்களுக்குள்ளிருந்தும் வதந்திகளிலிருந்தும் கண் காது முளைத்து வரும் தகவல் களிலிருந்தும் ஊர்நடப்புக்களை ஒவ்வொருவரும் அவரவர் மனவிருப்புக்கேற்றபடி விளங்கி வியாக்கியானஞ் செய்யப் பழகிவிட்டாலும் ஊரிலிருந்து கைப்பட எழுதின கடிதத்துக்கு ஒரு மதிப்பு இருந்தே வந்தது. சுரேனும் கீரனும் அடுத்தடுத்த ஊர்க்காரர்கள். சுற்றிவளைத்துச் சொந்தமும் உண்டு. சுரேனுக் குக் கடிதம் வந்து ஆறேழு மாதமிருக்கும். மனத்துக்குள் இருக்கிற கவலையைப் பிறரறியாமல் ஆர்ப்பாட்டமான பேச்சா லும் அட்டகாசமான சிரிப்பாலும் மூடப் பழகிவிட்டான்.

“அம்மாவே எழுதியிருக்கிறா?” சுரேன் தன் ஆவலை அடக்க முயலவில்லை.

“ஓம்” என்று சொல்லியபடி உறையைத் திறந்து கடிதத்தை வாசிக்கத் தொடங்கிய கீரனுடைய மௌனத்தைக் குலைக்க வழி தெரியாத சுரேன், “மச்சான், கோப்பி ஒண்டு ஊத்தட்டா?” என்று கேட்டுவிட்டுக் கீரனுடைய மறுமொழிக்குக் காத்திராமல் அறையை விட்டுப் போனான்.



படிப்பகம்

www.padippakam.com



கீரன் கடிதத்தை வாசித்து முடித்தபோது அறையிலிருந்த மற்றக் கட்டிலில் கோப்பியை உறிஞ்சியபடி சுரேன் இருந்தான். கீரனுடைய கட்டிற் தலைமாட்டுக்கு அருகே கம்பளத்தின் மேல் கீரனுடைய கோப்பி வைக்கப்பட்டிருந்தது.

“கோப்பையைச் சரியாய்க் கழுவினியா?” என்ற கீரனுடைய கேள்விக்குப் பதில் சொல்லாமல் “அம்மா என்னவாம்?” என்று கேள்வி எழுப்பினான் சுரேன்.

“நீ ஒரு நாளுங் கோப்பை சரியாய்க் கழுவமாட்டாய்”.

“சோம்பேறித் தடியனுக்கு கோப்பி கொண்டந்ததுங் காணாமல்....”

“உன்னை ஊத்தச் சொன்னனானே?”

“பாவமெண்டு கொண்டுவந்தால் அறுவான்ட வாய்க் கொழுப்பு”

“பாவம் பார்த்தே கொண்டந்தனீ? கடிதம் பார்க்கவெல்லோ உன்ட இரக்கமெல்லாம்”.

“சரிசரி, என்னவாம் புதினம்?”

“எல்லாம் தெரிஞ்ச கதை தான், புதிசா ஒண்டுமில்லை” ஒரு நிமிட நேரத் தயக்கத்தின் பின், இந்தா வாசி” என்று கடிதத்தை நீட்டினான் கீரன்.

“எப்ப கோயிலுக்குப் போறாய்?”

“ஏன் போகவேணும்?”

“அம்மா என்னவோ கெஞ்சிமண்டாடிக் கோயிலுக்குப் போ எண்டு எழுதியிருக்கிறா. ஒருக்காப் போனா மூதேசியாருக்குத் தேஞ்சு போகுமோ?”

“இதுதான் உன்னட்டைக் கடிதத்தைக் காட்டினா வாற வினை. உங்கை கோயில் வழிய யாவாரமெல்லோ செய்யினம்”.

“ஊரில எண்டா யாவாரம் இல்லையோ?”

“இந்தளவு மோசமில்லை. எண்டாலும் அங்கையே போகாமல் விட்டிட்டன்”.

“ஓ! அதுதானே, அம்மா இவ்வளவு தெண்டிக்கிறா.



படிப்பகம்

www.padippakam.com



கும்பிடாட்டிலென்ன பகல் சாப்பிடவெண்டாலும் போகலாம்". பகுதி பகிடியாகவும் பகுதி உண்மையாகவும் சொல்லியபடி கடிதம் வாசித்த திருப்தியுடன் சுரேன் வெளியேறினான்.

***

கீரனுடைய அம்மாவுக்குக் கீரன் கோயிலுக்குப் போவதை நிறுத்திய காலந் தொடங்கிப் பெருங்கவலை. அரச படையினர் இளைஞர்களைச் சந்தேகத்தின் பேரில் பெருந்தொகையிற் பிடித்துச்சென்று விசாரணையின்றி மறிக்கவும் வதைக்கவும் தொடங்கிய பிறகு, கீரன் கடவுளைப் பகைத்துக்கொண்டு என்ன கஷ்டப்படப் போகிறானோ என்று அம்மாவுடைய மனக்கவலை மேலும் அதிகரித்தது. யார் யாரை ஏன் எப்போது எவ்வாறு கொல்வார்கள் என்றே தெரியாத காலம் வந்துங்கூடக், கீரன் நாட்டை விட்டு வெளியேற முயலவில்லை. 1987இல் அமைதி காக்கும் படையின் வருகைக்குப் பிறகு நடந்த சம்பவங்களை அடுத்து அவனாற் தொடர்ந்தும் ஊரில் இருக்கமுடியாது என்ற முடிவுக்கு வந்த அம்மா தாலிக்கொடி உட்படக் கையிலுங் கழுத்திலும் இருந்த சகலதையும் விற்று அவனை அனுப்பிவைக்க ஏற்பாடு செய்தார்.

கீரனுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் ஒன்றும் மற்றைய தமிழ் வாலிபர்கட்கு ஏற்பட்டவற்றை விட அதிகமானவையில்லை என்று அம்மாவுக்கு ஆறுதல் சொன்னாலும் அம்மாவுக்கு இவையெல் லாமே தெய்வத்தின் கோபம் காரணமானவை என்ற நம்பிக்கை கூடியதேயொழிக் குறையவில்லை. அவன் பத்திரமாக இங்கி லாந்து போய்ச் சேர்ந்தால் எப்படியும் பழனி என்று அம்மா தன் மனதிற்குள் வேண்டிக்கொண்டாள். அது எப்படிச் சாத்தியப் படும் என்றெல்லாம் அப்போது யோசிக்க அவகாசம் எது? கீரனுக்கு லண்டன் பிழைப்புப் பழகிவிட்டாலும் இயந்திரகதியில் நடக்கும் உழைப்பும் சாரமற்ற வாழ்க்கையும் மனதை வாட்டின. அதைப் பற்றி வீட்டிற்கு எழுதிய கடிதங்களிற் குறிப்பிட்டது அம்மாவின் அபிப்பிராயத்தை மேலும் உறுதிப்படுத்தியது. அப்பா வுக்கும் மெல்லமெல்ல அந்தக் கருத்துடன் உடன்பாடு ஏற்படத் தொடங்கிவிட்டது. அம்மாவுக்கோ முன்பின் யோசியாமல்



படிப்பகம்

www.padippakam.com


பழனிக்கு நேர்ந்து விட்டோமே என்ற புதிய கவலையும் சேர்ந்து கொண்டது. கீரன் வருஷத்துக்கு ஒரு முறையாவது கோயிலுக்குப் போய் முருகனுக்கு ஒரு அர்ச்சனை செய்தாலும் தெய்வம் பொறுத்துக்கொள்ளும் என்ற நப்பாசையை ஒவ்வொரு கடிதத்திலும் தவறாது தெரிவிப்பார். கீரனுக்கோ இன்னும் நிச்சயமின்மை, சந்தேகம். ஆனாலும் அம்மாவின் கடிதங்கள் பாதிப்பை ஏற்படுத்தாமலில்லை.

மொழிப் பிரச்சனை, இனக் கலவரம், அரச படைகளின் அட்டுழியம், இயக்கங்களின் மோதல், போர், கொலைகள், வதைகள் இவையெல்லாம் தெய்வச் செயலா? தமிழர் எல்லாருமே ஒருமுறை பழனிக்குப் படையெடுத்தால் நாட்டில் முழுப் பிரச்சனையும் தீர்ந்துவிடுமா? மூட நம்பிக்கைகளும் வரட்டு ஆசாரங்களும் அறியாமையும் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் மட்டுந் தானா இருக்கின்றன? கடவுளை நம்புகிறவன் முட்டாள் என்றால், முட்டாள்களின் உலகத்தில் அறிஞன் வாழ முடியுமா? தான் கடவுளை நம்பவில்லை என்பதை அறிஞன் முட்டாள்களுக்கு நிரூபிக்க என்ன அவசியம்? அம்மாவுக்காகக் கோயிலுக்கு ஒரு தடவை போனால் என்ன நட்டம்? போனால் அவனது கொள்கைப் பிடிப்பு எங்கே போவது? சிநேகிதர்கள் சிரிக்க மாட்டார்களா? சிநேகிதர்களின் சிரிப்புக்குப் பயந்தா அவன் நாத்திகத்தைக் கடைப்பிடிக்கிறான்? அம்மாவுக்கும் மேலாக ஒரு தெய்வம் இல்லையென்றால் அம்மாவுக்கும் மேலாக என்ன நாத்திகம்? நீண்டநேர மனக் குடைச்சலுக்குப் பிறகு கோயிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை செய்வது என்ற முடிவுக்கு வந்தான்.

***

மரத்திலிருந்து ஒரு இலை குளநீரில் விழுந்தது. விழுந்த இலை திடீரென்று ஒரு பாதி பறவையாகி மேலே பறக்க முற்பட்டது. மறுபாதி மீனாகி நீருள் முழுக முயன்றது. தியானத்தில் இறங்கு முன்னிருந்த நக்கீரரின் மனநிலையின் படிமந்தானோ அது? நிச்சயமின்மை, சஞ்சலம், சபலம், சலனம், முடிவின்மை, ஐயங்கள், கேள்விகள், மேலுங் கேள்விகள், மனதின் தத்தளிப்பு, தவிப்பு, பதற்றம், துடிப்பு, வேதனை, குமுறல், கொதிப்பு,


படிப்பகம்

www.padippakam.com



ஓய்வற்ற இயக்கம், இழுபறி....

அந்த இலை ஏன் மரத்திலிருந்தபடியே இருந்திருக்கக் கூடாது? விழுந்தாலும் ஏன் தரையில் விழுந்து சருகாகவோ நீரில் மிதந்து நாளடைவில் அழுகியோ போயிருக்கக்கூடாது? பாண்டியன் அவையில் மற்றப் புலவர்கள்மாதிரி மரத்தில் பாதுகாப்பாக இருக்கிற இலைகள் போலில்லாமல் இது மட்டும் ஏன் இப்படித் தவிக்கவேண்டும்? பறவையாகி இழுக்கிற பாதி மேலெழுந்து மரத்தில் அமர்ந்து ஏதோ வகையில் மரத்துடன் உறவுகொண்டாட முனையும் நக்கீரரின் நப்பாசையா? மீனென்ன அரச சபையுடன் உறவு துண்டிக்கப்பட்ட நிலையிலும் தான் தானாகவே இருக்க முனைகின்ற நக்கீரரின் ஆணவமா? நீரில் விழுந்தாலும் நீருக்குள்ளேயே ஒரு இருப்பைக் காணமுடியு மென்ற தைரியத்தின் வெளிப்பாடா?

நக்கீரர் கண்மூடித் தியானத்தில் ஆழ்வதற்கு முன்னமே இலையாக விழுந்து விளைந்த அந்த வினோத சிருஷ்டி நக்கீர ரின் பார்வையில் விழுந்தது. இது நிசமா அல்லது கற்பனையா? நீரில் இறங்கி அதை நெருங்கிப் பார்க்கலாமா? மீனையும் பறவையையும் பிரித்து அந்த அவஸ்தையை முடிவுக்குக் கொண்டுவரலாமா? பிரித்தால் இரண்டுமே அழிந்து அந்த இருப்பே முடிவுக்கு வந்து விடுமா? மதுரை மாநகரில் பாண்டிய னின் அவையில் நடந்தவை யாவும் மனதில் நிழலாடின. மரத் தோடு மரமாக மறுபடியும் ஒரு இலையாக ஒட்டிப்போய் மற்ற ஊமைப் புலவர்களைப்போல வாழ்க்கை வாழ்வதற்குத்தானா இந்தத் தியானம்?

நக்கீரரின் நெஞ்சுரத்தை மீண்டும் பரீட்சிப்பதற்குத் தான் அவரைத் தவற்றுக்கு வருந்தித் தியானத்தில் ஈடுபடுமாறு அந்தப் பரம்பொருள் கூறியதா? உணர்வு கடந்த அந்தப் பரம்பொரு ளுக்கு நக்கீரரைத் தண்டித்து என்ன பயன்? நக்கீரரை மன்னித்து என்ன பயன்? தன் நெஞ்சைப் பொய்த்து ஒரு தியானமா?

மேலும் ஐயங்கள், மேலும் நிச்சயமின்மை, மேலும் மனக் கொதிப்பு, மேலும் உடற்கொதிப்பு. இம்முறை தன்னிரக்கத் தாலோ துன்பத்தாலோ அல்ல. அறிவே சுடராக எழுந்து விரிந்து



படிப்பகம்

www.padippakam.com



நக்கீரரை உள்ளும் புறமும் தகித்தது.

***

கோயிலுக்குட் போனபோது பூசை தொடங்கிவிட்டது. கீரனுக்குக் கடைசியாக ஊர்க்கோயிலிற் பார்த்தவற்றினின்று பலவும் வித்தியாசமாக இருந்தன. பெண்கள் எல்லாருமே சேலையுடன் வரவில்லை. ஆண்கள் எவருமே வேட்டியுடன் காணப்படவில்லை. ஐயர் பூணூலுக்கு மேலே சட்டையும் ஸ்வெற்றரும் அணிந்திருந்தார். பூசையின் முடிவில் பஜனைப் பாடல்கள் கேட்டன. கஸெற் பெட்டி மேளவாத்தியம் ஒலித்தது. பிளாஸ்ற்றிக் போத்தல்களில் அபிஷேகத்திற்குப் பால் வந்தது. பூக்கள் இலையுந் தண்டுமாகப் பூச்சட்டிகளிலும் தட்டங்களிலும் கிடந்தன. ஆனை வாழைப்பழங்கள் நுனி வெட்டாமல் படைக்கப்பட்டன. காணேஷன் பூக்களும் சிவப்பு அப்பிள் பழங்களும் கண்ணைப் பறித்தன. இவையெல்லாம் காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ற மாற்றங்களா? நாம் செய்யும் மாற்றங்கள், பிரதியீடுகளுடனேயே நின்று விடுகின்றனவா? கோயிற் தரையை மூடிய கம்பளத்தைச் சுத்தமாக வைத்திருக்காமல் மனிதர் விழுந்து கும்பிடலாமா? கோயிற் சுவரில் கேளிக்கை நிகழ்ச்சி விளம்பரங்களும் அரசியல் விளம்பரங்களும் காணப்படலாமா? எல்லாமே மாற்றத்துக்கு உரியனவென்றால் சடங்குகளையும் ஏன் மாற்றக்கூடாது? மாட்டைப் போகவிட்டுக் கயிற்றைப் மேய்க்கிற காரியமா பார்க்கிறோம்?

கீரனுடைய மனதில் எழுந்த கேள்வி அலைகள் முடிவின்றி நீண்டு உயர்ந்தன. கீரனுக்கு அம்மா செய்யச் சொன்ன அர்ச்சனை நினைவுக்கு வந்தபோது, பூசை முடிந்துவிட்டது. ஐயரிடம் போய் அர்ச்சனைக்குக் காசை நீட்ட அவர் துண்டு வாங்கிக்கொண்டு வரும்படி சொன்னார். துண்டு வாங்குமிடத்தைக் கண்டுபிடித்துக் கணக்கப்பிள்ளை வரும்வரை காத்திருந்து வாங்கித் திரும்பி வந்தபோது ஐயர் வேறு அலுவலில் இறங்கிவிட்டார்.

அர்ச்சனைத் துண்டை மடித்துச் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு வெளியில் வந்து சப்பாத்தை மாட்டித்



படிப்பகம்

www.padippakam.com



தெருவில் இறங்கினான்.

"என்ன மச்சான் கீரன், கோவிலுக்கே வந்தனீ?" என்று கேட்ட குரல், பெற்றோல் ஷெட்டில் பழக்கம் பிடித்த தம்பிராசா வுடையது.

"இல்லை.... சும்மா...." என்று கீரன் இழுத்து முடிக்கு முன்னே, "கண்டு கனகாலம், வாடா "பப்புக்குப் போய் ஒரு பியர் அடிப்பம்" என்றவாறே தம்பிராசா கையைப் பிடித்து இழுத்துச் சென்றான்.

***

தியானங் குலைந்த நக்கீரரைப் பூதமென்று தன் குகைக்குட் சுமந்து சென்றது.

*(பனிமலர்-4, செப்ற்றெம்பர் 1993)*



படிப்பகம்

www.padippakam.com



# ஐயரும் அவதாரமும்



பகவான் பிரம்மாவுடைய பூலோக அவதாரம் எண்டு சொல்லுகினை



படிப்பகம்

www.padippakam.com



ராஜன் ஐயர் என்று பலராலும் அறியப்படும் சுந்தர ராஜேஸ்வர ஐயருக்கு மனம் என்றுமில்லாதவாறு நிலை கொள்ளாமற் தவித்தது.

ஊரில் பரம்பரைபரம்பரையாகச் சேவையாற்றிய கோயில் அலுவல்களையெல்லாம் தனது மைத்துனரிடம் ஒப்படைத்துவிட்டு லண்டனிற் புதிதாகக் கட்டப்பட்ட நடராசர் கோவிலுக்குப் பிரதம பூசகராகப் பொறுப்பேற்ற ராஜன் ஐயர் துறவியில்லை, கற்றுணர்ந்த ஞானியுமில்லை. அவருக்கும் மனைவி, பிள்ளைகள், உறவு இன்னும் வாழ்வின் தேவைகள், ஆசாபாசங்கள் எல்லாமே இருந்தன.

ஐயரை லண்டனுக்கு அனுப்பியது அவரது பொருளாதாரத் தேவைதான். மத்திய கிழக்குக்கோ ஆபிரிக்காவுக்கோ வேலை தேடிப்போக வழியும் இல்லை, குடும்பத்தார் அனுமதிக்கப்போவதும் இல்லை. காசுகொடுத்துக் களவாகக் கனடாவுக்கோ இங்கி லாந்துக்கோ போகவும் வசதி இல்லை. அங்கு போய் எப்படிப் பிழைப்பது என்பது பற்றிய யோசனைகளும் அவரை மறித்தன. இந்தவிதமான சூழ்நிலையிலே தான் லண்டனிற் பணியாற்றும்படி அவருக்கு அழைப்பு வந்தது.

சட்டரீதியாகக் கடல்கடந்து தன் குலத்தொழிலைச் செய்து கைநிறையச் சம்பாதிக்கும் வாய்ப்பு, தான் பதினைந்து வருடமாகப் பணிவிடை செய்த வந்த விஸ்வநாதப் பெருமானுடைய அருள் தான் என்று ஐயருக்குத் தோன்றியது. தன்னைவிடத் தகுதியுள்ள பலரையும் விட்டு ஏன் தன்னிடம் வந்தார்கள் என்ற கேள்விக்கு அவரைச் சந்திக்கவந்த கோயில் முகாமையாளர் ஒருவரே பதிலை யும் கூறிவிட்டார். தமிழ்நாட்டுப் பிராமணர்களுடன் தங்களாற் சமாளிக்க முடியாது என்பதாலும் சிவன் கோவில் அனுபவமுள்ள ஒரு ஐயர் தேவை என்பதாலும் முப்பது நாற்பது வயதுக்குள் அகப்பட்ட சிலருள் ராஜன் ஐயரையே தாங்கள் விரும்பியதாகக் கூறி, ஐயரைக் கெஞ்சாத குறையாக லண்டனுக்கு வருமாறு அழைத்தார்.

லண்டனில் போய் இறங்கிக் கொஞ்சக்காலம் ராஜ மரியாதை கிடைத்தது. அந்த மயக்கத்தில் குடும்பத்தையும் தன்னுடன் வாழ அழைத்துவிட்டார். மெல்ல மெல்ல லண்டன்வாழ் தமிழ்ப் பேசும் சைவப் பெருங்குடி மக்களது நிசருபங்கள் ஐயருக்கு



படிப்பகம்

www.padippakam.com



நிதர்சனமாயின. போட்டிபொறாமைகள், ஒருவரை ஒருவர் தூற்று வது, புதுப் பணக்கார ஆடம்பரம், பழைய பணக்கார அகம்பாவம் இப்படி எல்லா விஷயங்களும் ஊரில் இருந்ததை விட உக்கிர மாகக் கோயில் நிர்வாகத்தில் குறுக்கிட்டன.

கோயில் முகாமையாளர்களது உள்வீட்டுச் சண்டைகளை யெல்லாம் ஐயரிடமும் வந்து சொல்லி ஆதரவு தேடுவார்கள். தொடக்கத்தில் அவற்றைப் பற்றி விசாரித்துச் சமாதானம் பேச முற்பட்ட ஐயர் விரைவிலேயே நல்ல பாடம் படித்துவிட்டார். அதன் பின்பு, ஐயரைப் பொறுத்தவரை, கோயில் தகராறுகளில் அவரது காதுகளும், கண்களும் திறந்திருந்தன. வாய்மட்டும் மூடியே இருந்தது. இந்தச் சில வருடங்களில் அவர் கொஞ்சம் பணத்தையும் சேமித்துவிட்டார். அதுவும் ஒரு பிரச்சனையாகி விட்டது. 'தயவு செய்து அர்ச்சனைக்கான பணத்தை அலுவ லகத்திற் காசாளரிடங் கொடுத்துப் பற்றுச்சீட்டைப் பெறவும். வேறு எவரிடமும் கொடுப்பது தவறு' என்று தடித்த எழுத்தில் பொறித்த இரு மொழி விளம்பரம் கோவில் மண்டப முகப்பிற் பெரிதாகத் தொங்கியது. ஆனாலும், அர்ச்சனைச் சீட்டுடன் ஐய ருக்கும் ஒரு பவுனோ ஐம்பது பென்ஸ் காசோ சேர்த்துக் கொடுப்ப வர்களை யாராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஐயருடைய சம்பளத்தைக் குறைப்பதைப் பற்றி ஒரு தடவை முகாமையாளர் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அது சட்டவிரோதமானது என்று சட்டந்தெரிந்த ஒரு முகாமையாளர் சொன்னதால் அது நடக்க வில்லை. ஐயரை விலக்குவதுபற்றிச் சிலர் பேசியதாகவும் ஐயர் காதில் விழுந்தது. தகுந்த காரணம் இல்லாமல் விலக்க முடியாது என்றும் விலக்கினால் நட்டஈடு கொடுக்க வேண்டும் என்றும் ஐயருக்கு ஆதரவான ஒரு வழக்கறிஞர் அவரிடம் சொன்னார். இந்தத் தைரியத்துடன், தானுண்டு தன் வேலையுண்டு என்று இருந்த ஐயரைக் கலக்கிய விஷயம், பகவான் திரிகாலஞானி ஸ்வர்ணமயானந்த ஜோதி அடிகள் மறுநாள், ஞாயிற்றுக்கிழமை கோயிலுக்கு வருகிறார் என்ற செய்தி தான்.

அடிகளார் சமஸ்கிருதக் கடலைக் கரைத்துக் குடித்தவரும் வேதங்களையும் உபநிஷதங்களையும் சகல மந்திரங்களையும்

www.padippakam.com



மனப்பாடம் செய்தவரும் என்று பரவலாகக் கூறப்பட்டது. அது மெய்யோ பொய்யோ என்று ஐயருக்கு நிச்சயமில்லை. ஆனாலும் அடிகளார் பல கோவில்களுக்கும் போய்ப் பிராமணர்கள் மந்திரங் களையும் நாம அர்ச்சனைகளையும் ஓதும்போது குறுக்கிட்டுக் குற்றங்கண்டு அவமானப்படுத்தியிருக்கிறார் என்பது மட்டும் நிச்சய மாகத் தெரியும். அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் பக்தர் கள் பலரைக் கொண்ட அடிகளாரை லண்டனுக்கு வரவழைத்த வர்கள் யாரென்று ஐயருக்குத் தெரியாது. ஆனாலும் அவரைக் கோயிலுக்கு வரவழைக்கும் ஆலோசனையின் பின்னால் ஏதோ சூழ்ச்சி இருக்கும் என்று சிறு சந்தேகம். தன்னுடைய சமஸ்கிருத உச்சரிப்பில் கொஞ்சம் பிசகு இருக்கிறது பற்றி ஐயருக்கு நன்றா கத் தெரியும். தொழிலுக்காக ஊரிற் பாடமாக்கிய சமஸ்கிருத ஸ்லோகங்களை எல்லாம் அவர் அர்த்தம் விளங்கியா படித்தார்? இந்த நிலையில் அடிகளார் வந்து தன்னை அவமானப்படுத்தினால் அது அவரை வேலையால் நீக்க நினைக்கிறவர்களுக்கு ஒரு நல்ல ஆயுதமாகிவிடுமே என்ற கவலை ஒருபுறம் ஐயரை வாட்டி யது. வேலை போனாலென்ன, சம்பாதிக்க வேறுவழிகள் இல்லா மலா போகும்! ஞாயிற்றுக்கிழமை சனத்திரளின் முன்னே அடிகளார் தன்னைக் கேவலப்படுத்தினால் என்ன செய்வது என்ற கவலை தான் அவரைக் கூடுதலாக வாட்டியது. ஐயர் நிலை கொள்ளாமல் தவித்துக்கொண்டிருந்த போது, அவருடைய எட்டுவயதான மகள் சிவகாமி அவரிடம் ஓடிவந்து மடியில் அமர்ந்து "அப்பா அப்பா, ஒரு கதை சொல்லுங்கள்" என்று ஆங்கிலத்திற் கெஞ்சினாள்.

ஐயர் தன் பிள்ளைகளுக்குப் புராண இதிகாசக் கதைகள் சொல்லுவது வழக்கம். தொலைக்காட்சியில் வரும் குப்பைகளைப் பார்த்துப் பிள்ளைகள் புத்திகெட்டுப்போய்விடுவார்கள் என்பது அவரது அசையாத நம்பிக்கை. எனவே பிள்ளைகளுடன் பேசி விளையாடுவதில் நியாயமான பொழுதைச் செலவிடுவார். "என்ன கதை?" என்று மகளிடம் கேட்டார். "சிவபெருமான் கதை" என்று சிவகாமி பதில் சொன்னாள்.

பிட்டுக்கு மண் சுமந்த கதை சொல்லவா அல்லது விறகு தலையனாக வந்து பாண்டியன் அவைக்கு வந்த அகம்பாவம்



படிப்பகம்

www.padippakam.com



பிடித்த அயல்நாட்டு இசைஞனுடைய ஆணவத்தை அகற்றிப் பக்தனான பாணனுடைய துயர் தீர்த்த கதை சொல்லவா என்று யோசித்தார். பிறகு சிவபெருமான் விறகுதலையனாக வந்து அயல்நாட்டு இசைஞன் இருந்த விடுதி வாயிலில் பாடல் இசைத்து அந்த அகம்பாவக்காரனை ஊரைவிட்டே ஓட்டிய கதையைச் சொன்னார். கதைசொல்லும் போதே சிவபெருமான் ஏதாவது வடிவில் வந்து அந்த அடிகளாரை ஊரைவிட்டே விரட்ட மாட்டாரா என்ற நப்பாசை தோன்றியது.

குறைந்தபட்சம் சிவபெருமான் அடிகளாருக்கு வயிற்றோட்டத்தையாவது தரமாட்டாரா என்று ஐயர் ஏங்கினாலும், அப்படியெல்லாம் நினைப்பதே தவறு என்று தன்னையே கண்டித்தக் கொண்டார். ஊரிலே கோயிலைக் கைவிட்டு வந்த ஒருவனுக்கு அந்தச் சொக்கநாதன் ஏன் கைகொடுக்க வேண்டுமென்று மனம் உறுத்தியது. 'இங்கேயும் அதே தெய்வத்தைத், தில்லையிலே திருநடனம் செய்யும் சர்வேஸ்வரனான நடராசனைத்தானே பூசிக்கிறேன். என்ன குற்றத்துக்காக அந்தத் தெய்வம் என்னைச் சோதிக்கிறது?' என்று ஐயர் நொந்து கொண்டார். கதையைக் கேட்டுக் கொண்டிருந்த சிவகாமி அப்பொழுது கண்ணயர்ந்து ஐயரின் மடியில் நித்திரையாகி விட்டாள்.

ஐயருடைய சிந்தனை ஓட்டத்தில் மனைவி மங்களத்தின் குரல் குறுக்கிட்டது. "என்ன இண்டு கடுமையாக யோசிக்கிறியள்?" என்ற கேள்விக்கு "ஒண்டுமில்லை" என்று சொன்ன ஐயரால் தன் மனக்கவலையை மூடிமறைக்க முடியவில்லை. இரண்டு பேருமாக நாளை என்ன செய்யலாம் என்று நெடுநேரம் யோசித்தார்கள். சரியான சமஸ்கிருத உச்சரிப்பைப் பழக ஐயருக்கு ஆயுட்காலமே போதாது. எனவே அதை ஒரு இரவில் சாதிக்கிற அற்புதம் எப்படியும் நடக்காது என்பது பற்றி இரண்டு பேரும் உடன்பட்டார்கள். சுகயீனம் என்று சொல்லிக், கோயிலில் உதவிக்கு வரும் ஞானச்சந்திர சர்மாவைப் பூசைசெய்யச் சொல்லலாம் என்ற மங்களத்தின் யோசனையை ஐயர் நிராகரித்துவிட்டார். பயந்து போய்க் கோயிலுக்கு வரவில்லை என்று நிருபணமாகி



படிப்பகம்

www.padippakam.com



விடும்; பின்பு தன்பாடு மேலும் சங்கடமாகிவிடும் என்பது ஐயரின் வாதம். அடிகளாருக்கு ஏதாவது செய்யலாம் என்றால், ஐயருக்கு வன்முறையிலும் நம்பிக்கையில்லை. பில்லிசூனியத்திலும் நாட்டமில்லை. எனவே "தலைக்கு மேலே வெள்ளம்போனாற் சாணென்ன, முழமென்ன?" என்று சொல்லியவாறு ஐயர் எழுந்தார்.

ஐயருக்கு இரவு முழுவதும் சரியான நித்திரை இல்லை. மனைவியின் நித்திரையைக் குழப்பாமல் இருக்கக் கண்ணை மூடிக்கொண்டு படுத்துக்கிடந்தார். காலை விடிந்து விட்டதா என்று கூட நிச்சயமில்லாத அசதியுடன் எழுந்து கோயிலுக்குப்போக ஆயத்தமானார். காலைப்பூசை பத்து மணிக்கு ஆரம்பித்து ஒரு சிக்கலுமில்லாமல் முடிந்தது. பகற்பூசை நேரம் நெருங்க நெருங்க ஐயரது இருதயம் விலா எலும்பில் இடிக்குமாப் போல் இருந்தது. ஐயருக்கு வயிற்றைக் கலக்கியது.

"ஐயா, உங்களை மனேச்சர் ஒருக்கால் வாசலுக்கு வரட்டாம்" இது ஞானச்சந்திர சர்மாவின் குரல்.

"பூசைக்கு நேரமாப் போகுது".

"வரட்டாம்".

வேறு வழியில்லாமல் கோயில்வாசலுக்குப் போனார் ஐயர்.

வாசலில் பக்தபரிவாரங்கள்சூழ அடிகளார் நின்றார். மனேச்சர் ஐயரை நோக்கி "பகவானை உங்களுக்குத் தெரியுந்தானே?" என்றார். "பகவானை யாரும் கண்டதாகத் தெரியாது" என்று சொல்ல நினைத்த ஐயர் நாக்கைக் கடித்துக் கொண்டு "ஓம், வாருங்கோ" என்று மரியாதையாக வணக்கம் செலுத்தினார். அடிகளார் அசையவில்லை.

"பகவான் பிரம்மாவுடைய பூலோக அவதாரம் எண்டு சொல்லுகினை...." என்று மனேச்சர் இழுத்தார்.

"அவருடைய காலைக் கழுவிக் குடிச்சா எல்லாப் பாவமும் போகும் எண்டுஞ் சொல்லுகினை". இது பரிவாரங்களில் ஒன்று.

"ஐயா, குறை நினையாதையுங்கோ, நீங்கள் அவருடைய காலைக் கழுவி உள்ளுக்குக் கூட்டிக் கொண்டு போக வேணும் எண்டு தான் எல்லாரும் நினைக்கினை". மனேச்சர் குறுக்கிட்டார்.



படிப்பகம்

www.padippakam.com


ஐயருக்கு அழுகை வந்துவிட்டது. ஆனாலும் அடக்கிக் கொண்டார். அதற்குள் செம்பில் தண்ணீருடன் வந்த ஒருவர் ஐயரிடம் அதை நீட்டினார்.

"என்னுடைய சீவியத்திலை அந்த விசுவநாதன் தில்லைச் சபாபதியின்ரை காலைவிட எவற்ற காலையும் நான் கழுவின தில்லை. இனியுங் கழுவப்போறதில்லை". ஐயரின் குரல் தழதழத்தது. எச்சிலை விழுங்கிக்கொண்டு "பூசைக்கு நேரமாகுது" என்று சொல்லியவாறு ஐயர் உள்ளே நடந்தார்.

காலைக்கழுவ வசதியாகக் காவியுடையைச் சற்று உயர்த்திய வாறு நின்ற அவதாரத்தின் முகத்தில் அதிர்ச்சி தெளிவாகவே தெரிந்தது.

பரிவாரங்கள் சிலைகளாக நிற்கக், கோயிலுக்கு வெளியே நிறுத்தப்பட்ட றோல்ஸ் றோய்ஸ் காரை நோக்கி அடிகளார் திரும்பிப் பாராமலே விறுவிறுவென்று நடந்தார். "கள்ளப் பிராமணிக்குக் கண்டறியாத றாங்கி" என்று ஒரு பக்தர் கொதித்தார். "வடக்கத்தியானுக்கு ஒரு பாடம் படிப்பிக்காமல் விடக்கூடாது" என்று மனேச்சரிடம் குமுறினார் இன்னொருவர். "ஓமோம் ...." என்ற மனேச்சரைப் "பூசை துவங்கிவிட்டுது போல" என்று உள்ளேயிருந்து ஒரு குரல் அழைத்தது.

வீட்டுக்கு வந்த ஐயரிடம் "என்ன நடந்தது?" என்று பரபரப்புடன் மங்களம் கேட்டார். "கெட்டவையளை ஒழிக்க ஒரு அவதாரமும் தேவையில்லை. அவை தங்கட ஆணவத் தாலையே அழிஞ்சு போவினம்" என்றார் ஐயர்.

அன்றிரவு, தன் வாழ்வில் என்றுமில்லாத நிம்மதியுடன் ஐயர் உறங்கினார்.

*(புதிய பூமி 1994)*




படிப்பகம்

www.padippakam.com

சிவசேகரம்

# மீன்களுடன் ஒரு நடைப்பயணம



*கீழ்நோக்கிச் செல்லும் சரிவான கொங்கிறீற் பாதை வழியே எல்லாரும் நடந்து போனோம்*



படிப்பகம்

www.padippakam.com



இது பத்து வருடங்கட்கும் முன்பு நடந்த கதை.

நான் அதிகம் பயணஞ் செய்கிறவனல்ல. பயணஞ் செய்கிற உந்துதலும் குறைவு. என்றாலும் தொழிலுக்காக வெளிநாட்டுக்குச் சில தடவைகள் போய் வந்திருக்கிறேன். சீனாவில் ஷென்ஜென் நகருக்கு ஒரு வேலையாகப் போகவேண்டியிருந்தது. என் பழைய நண்பர் ஞானம், ஹொங்கொங் நகரில், நீண்டகாலமாக ஒரு நெடுமாடிக் கட்டடத்தில் ஒரு மனையில் தனியாக வாழ்ந்துவந்தார். அவருடன் கடிதத் தொடர்பு இருந்துவந்தது. ஷென்ஜென் ஹொங்கொங்கிற்கு அண்டிய நகரம் என்பதால், ஹொங்கொங் வழியாகச் செல்வது மிக வசதியாயிருந்தது.

என் பயணம் பற்றி ஞானத்துக்கு எழுதினேன். தன்னுடன் ஓரிரு நாட்களாவது தங்கிச் செல்லுமாறு கேட்டு மறுமொழி எழுதினார். எனவே திரும்பிவரும் வழியில் அவருடன் தங்குவதற்கு ஏற்றபடி என் பயண எற்பாடுகளைச் செய்துகொண்டேன்.

சீனா பற்றி எனக்கு இருந்த நல்லெண்ணமெல்லாம் ஷென் ஜென்னில் அடியெடுத்து வைத்த போதே குலைந்தவிட்டது. புகை யிரத நிலையத்திலிருந்து வெளியேறியதும் நான் கண்ட முதலா வது காட்சி, ஒரு பெண் குப்பைத் தொட்டிக்குள் கையைவிட்டு அதற்குள் வீசியெறியப்பட்ட உணவை எடுத்து உண்டது. அதன் பின்பு தெருவழியே பிச்சைக்காரர்களைப் கண்டபோது எனக்கு அதிர்ச்சி எற்படவில்லை.

அகலமான நடைபாதைகளின் முழு நீளத்திற்கும் சீனாவின் மறுகோடியிலிருந்து வந்த உய்குர் இனத்து வியாபாரிகள் கடை விரித்திருந்தார்கள். உலர் உணவுப் பொருட்கள் மட்டுமல்லா மல், தடைசெய்யப்பட்ட பொருட்களான விலங்குகளின் உடல் உறுப்புக்கள் பலவும் பரவி வைக்கப்பட்டிருந்தன. பொலிஸ்காரர் கள் அதைக் கண்டுகொண்டதாகவும் தெரியவில்லை.

புகையிரத நிலையத்துக்கு அருகிலிருந்த ஒரு ஹோட்டலில் தான் எனக்கு அறை ஒதுக்கப்பட்டிருந்தது. மாலை உணவுக்காக வெளியே போகவேண்டியிருந்தது. போகிற வழியில், ஆண்களும் பெண்களும் என்னை நெருங்கி வந்து, சத்தமாக ஏதோ சொன்னார்



படிப்பகம்

www.padippakam.com



கள். ஒன்றும் விளங்கவில்லை. அருகாக நடந்துகொண்டிருந்த ஒரு ஐரோப்பியரிடம் கேட்டேன். சிரித்துக்கொண்டு, "உமக்குப் பெண் துணை வேண்டுமா என்று கேட்கிறார்கள்" என்றார். இவ்வளவு பகிரங்கமாக விபசாரம் நடக்குமென எதிர்பாராத எனக்கு, ஒன்றுமட்டும் தெளிவாகியது. சீனா மிகவும் முன்னேறிவிட்டது— அடையாளந் தெரியாதளவுக்கு!

அதற்குப் பிறகு, எப்போது திரும்புவோம் என்ற நினைவு மட்டுமே மனதில் மிஞ்சியிருந்தது. உயர்ந்த கட்டங்களையும் அகலமான வீதிகளையும் விலையுயர்ந்த மோட்டார் வண்டிகளையும் விட, மனித இருப்பு எவ்வளவு தூரம் இழிந்து போய்விட்டது என்பதே என் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது.

ஹொங்கொங் வாழ்க்கை என்னவோ துரிதகதியில் ஓடிக் கொண்டிருந்தாலும், அது உயிரோட்டமுள்ள ஒரு பெருநகரமா யிருந்தது. சிங்கப்பூரின் இயந்திர வாழ்வையோ ஷென்ஜென்னின் சமூகச் சீரழிவையோ அங்கு வெளிவெளியாக அடையாளங் காணக்கூடியதாக இருக்கவில்லை. நான் ஒரு சனிக்கிழமை காலை அங்கு போனதால், நாள் முழுவதும் என்னுடன் சுற்றித்திரிந்த பிறகு, ஞாயிறு காலை, தன்னுடன் ஒரு நீண்ட நடைப்பயணத்தக்கு வருவேனா என்று ஞானம் கேட்டார். ஹொங்கொங்கில் செய்வதற்கு எனக்கு எதுவும் இருக்கவுமில்லை. ஷென்ஜென் அனுபவத்தின் தாக்கத்திலிருந்து என் மனதை ஆற்றுவதற்கு இந்த உலாத்துப் பயன்படும் போல தோன்றியது. தயங்காமல் ஓமென்றேன்.

மறுநாட் காலை சீனப் பெண் ஒருவர் வந்தார். "இவர் தான் என் சினேகிதி லெஸ்லி" என்று எனக்கு அவரை அறிமுகப் படுத்தினார். ஆளுக்காள் மிகவும் உதவுகிற ஒரு நெருக்கமான நட்பு அவர்களிடையே இருப்பதாகத் தோன்றியது. மாதத்தில் ஒரு ஞாயிறு லெஸ்லியுடன் இந்த நடைப்பயணம் போவதாகவும் இந்த ஞாயிறு அதற்குரிய நாளென்றும் ஞானம் விளக்கினார். லெஸ்லி தெளிவாக ஆங்கிலம் பேசியதால் நாம் உரையாடுவதிற் சிரமம் இருக்கவில்லை. நடைப்பயணம் முடிந்த பின்பு ஒரு பௌத்த மரக்கறி உணவு விடுதியிற் சாப்பிடுவோம் என்று ஞானம்



படிப்பகம்

www.padippakam.com



சொன்னார். எனவே ஒரு சிறியதுண்டுப் பாணை உண்டு தேநீரையும் பருகிவிட்டுப் பறப்பட்டேன். ஞானமும் லெஸ்லியும் எதையுமே உட்கொள்ளவில்லை.

பஸ் ஒன்றில் ஏறி ஒரு மலைப்பகுதிக்குச் சென்றோம். கொஞ்சம் உயர நடந்துசென்றபோது, அங்கே ஒரு சிறிய கட்டிடத்தருகே இருபது முப்பது பேரளவில் நின்றார்கள். “நாங்கள் நடப்போமா?” என்று கேட்டேன். “இன்னும் கொஞ்ச நேரத்தில்.... வேறு சிலரும் வர வேண்டும்” என்று லெஸ்லி விளக்கினார். “சரி” என்று சொல்லிவிட்டு அந்த அயலில் நடப்பதைக் கவனித்தேன். ஞானமும் லெஸ்லியும் தங்களுக்குட் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பெரிய வாளிகள் நிறைய நீருடன் நாலைந்து பேர் நின்றார்கள். குடிப்பதற்கான தண்ணீராக இராது என்பது மட்டும் நிச்சயமா யிருந்தது. வேறு சிலர் கூண்டுகளிற் பறவைகளை வைத்திருந் தார்கள். உலாத்தப் போகிறவர்கள் போலத் தெரியவில்லை.

சிறிது நேரத்தில் ஓரிருவர் அவர்களிடம் சென்று கூண்டுகளுடன் பறவைகளை வாங்கினார்கள். ஞானமும் லெஸ்லியும் என்னை வாளிகளை வைத்திருந்தவர்களிடம் அழைத்துச் சென்றார்கள். வாளிகள் நிரம்பச் சாம்பல் நிறத்தில் மூன்றுநாலங்குல நீள மீன்கள் கிடந்தன. ஞானம் மூன்று பொலித்தீன் பைகளில் மீன்களை வாங்கி, லெஸ்லியிடமும் என்னிடமும் ஒவ்வொன்றைத் தந்தார். மற்றவர்களும் மீன்களை வாங்கியபிறகு, குழுவின் தலைவர் போலத் தெரிந்த ஒருவர் முன்னே நடக்க, எல்லாரும் அவருக்குப் பின்னால் நடந்தோம்.

கீழ்நோக்கிச் செல்லும் சரிவான கொங்கிறீற் பாதை வழியே எல்லாரும் நடந்து போனோம். போகிற வழியில், “இந்த மீன்களை என்ன செய்கிறது?” என்று ஞானத்திடம் கேட்டேன். “நிச்சயமாகச் சாப்பிடமாட்டோம்” என்று வேடிக்கையாகச் சொன்னார். “இன்னுங் கொஞ்ச நேரத்தில் எல்லாம் தெரிய வரும்” என்று லெஸ்லி சொன்னார்.

ஒரு திகிலூட்டும் நாவலின் இறுதி அத்தியாயத்தை நோக்கி விரைகிற துடிப்புடன் இல்லாவிட்டாலும், ஏதோ அந்த மாதிரி



படிப்பகம்

www.padippakam.com



ஒரு உணர்வுடன், மீன்கள் இருந்த பையை இடையிடையே பார்த்துக் கொண்டு நடந்தேன். நிழல் மரங்கள் அடர்ந்த பாதை. இரண்டு மூன்று கிலோமீற்றர் நடந்திருப்போமென நினைக்கிறேன். பாதையோரமாகத் துப்புரவாக்கப்பட்ட சிறிய வெளியொன்று இருந்தது. கொஞ்சத்தூரத்தில் ஒரு நீரோடை சலசலத்தது. பாதை, அதற்குமேலாக ஒரு பாலத்தின்வழியே தொடர்ந்தது.

எங்களுக்கு முன்னாற் போனவர்கள் அந்த வெளியிற் போய் நின்றார்கள். என் கையிலிருந்த பையைப் பார்த்தேன். மீன்களில் அரைவாசி துடித்துக்கொண்டிருந்தன. மற்றவை அசைவின்றிக் கிடந்தன. எங்களுடன் வந்த எல்லாரும் அங்கு கூடியபிறகு, காவியுடுத்த ஒருவர் அங்கு வந்து சேர்ந்தார். அவருடன் வந்தவர்கள் சில புத்தகங்களை எங்களிடையே விநியோகித்தார்கள். அதில் எல்லாமே திபெத்திய எழுத்துக்களில் இருந்தன. வந்தவர் ஒரு திபெத்திய லாமா என்று தெரிந்தது. அவர் புத்தகத்தைப் பார்த்து ஓதத் தொடங்கினார். வந்தவர்களிற் சிலர் அவருடன் சேர்ந்து ஓதினார்கள். வேறு சிலர் வாயை மட்டும் அசைத்தார்கள். எனக்கு மீன்களைப் பற்றியே யோசனையாக இருந்தது. சுவாசிப்பதற்கு ஒக்சிஜன் இல்லாமல் எல்லாமே இறந்துவிட்டன என்று நினைத்துக் கொஞ்சம் மனவருத்தமாக இருந்தது.

அரைமணி நேரமாக ஓதியவற்றில் ஒருசில சொற்கள் மட்டும் விளங்கின. அதை வைத்து, அவை பௌத்த சூத்திரங்கள் என்று ஊகித்துக்கொண்டேன். மனம் மீன்களிடம் இருந்தது.

ஓதி முடிந்த பின்பு, ஒவ்வொருவரும் பௌத்தத் துறவியிடம் போனார்கள். ஒரு கமண்டலத்தில் வைத்திருந்த நீரை மீன்கள் இருந்த பைகள் மீதும் கூண்டுகளில் இருந்த பறவைகள் மீதும் தெளித்து ஆசீர்வதித்தார். என்னுடைய பையிலிருந்த மீன்களும் ஆசீர்வதிக்கப்பட்டன, ஆனால் அசையவில்லை. பின்பு எல்லாரும் பாதையருகே இருந்த படிக்கட்டின் வழியாக இறங்கி, நீரோடை வரை சென்று, மீன்களை நீரிற் கொட்டினார்கள். நானுங் கொட்டினேன். மீன்கள் கணப்பொழுதில் மயக்கந் தெளிந்து துள்ளி நீந்தத் தொடங்கின. ஒரு சில இறந்திருக்கலாம் என்று நினைத்தேன். ஆனால் அது பற்றி யாரிடமும் சொல்ல மனம் வரவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



மேலே பறவைக் கூண்டுகளுடன் நின்றவர்கள் கூண்டுகளைத் திறந்து பறவைகளைப் பறக்கவிட்டனர். அதன் பின்பு, எல்லாரு மாகப் பாலத்தைக் கடந்துசென்று, பௌத்த உணவு விடுதியை அடைந்தோம். மாமிசம் போல தயாரிக்கப்பட்ட சோயா உணவு உட்பட்ட பல்வேறு உணவு வகைகள் இருந்தன. ஞானமும் லெஸ்லியும் நானும் எங்களுக்கு விரும்பியவற்றை வாங்கிக் கொண்டுவந்து சாப்பிடத் தொடங்கினோம்.

சாப்பாட்டின் போது, நாம் கலந்துகொண்ட சடங்கு பற்றி ஞானம் எனக்கு விளக்கினார். ஞானம் ஏதாவது விவரத்தைப் பிழையாகச் சொன்னால், லெஸ்லி அதைத் திருத்தினார். விஷயம் என்னவென்றால், வளர்ப்புப் பிராணிகளாகப் பறவைகளையும் மீன்களையும் வைத்திருப்பது கிழக்காசியாவில் பரவலாக நடை முறையில் உள்ளது. இது விலங்குகட்குக் கொடுமையானது என்பதால், அதைத் திருத்துவதற்காகச், சிறைப்பட்ட வளர்ப்புப் பிராணிகளை விடுவிக்கும் ஒரு இயக்கம் ஒரு பௌத்தத் துறவி யால் தொடக்கப்பட்டது. அதை அடையாளப்படுத்தும் முறையில் இவ்வாறு மீன்களையும் பறவைகளையும் விடுவிக்கும் இச் சடங்கு நடக்கிறது. ஞானமும் லெஸ்லியும், என்னையும் இந்தப் புண்ணிய காரியத்தில் இணைத்த பெருமையுடன், ஆளுக்காள் முறுவலித்துக் கொண்டார்கள்.

முதலில் எனக்கு இது ஒரு மிக நல்ல காரியம் போலத் தெரிந்தது. பிறகு யோசித்தபோது, இவர்கள் விடுதலை செய்வதற் காக எவ்வளவு மீன்கள் பிடிக்கப்படுகின்றன, எத்தனை பறவைகள் பிடிக்கப்பட்டுக் கூட்டில் அடைக்கப்படுகின்றன என்ற எண்ணம் மனதில் எழுந்தது. மீன்களைப் பிடிக்கும்போதும் விடுவிக்கும் போதும் எத்தனை மீன்கள் இறக்கின்றன? பறவைகளைப் பிடிக்கும் முயற்சியில் எத்தனை பறவைகள் முடமாக்கப்படுகின்றன, அல்லது இறக்கின்றன?

விலங்குகளை விடுவிக்கிறவர்கள் தமது இரக்க உணர்வைக் காட்டுவதற்காகவே விலங்குகளைச் சிறைப்பிடிக்க நேருகிற தென்றால், அவர்கள் செய்கிற புண்ணியத்தைவிடப் பாவம் அதிக மில்லையா?



படிப்பகம்

www.padippakam.com



ஞானத்துடனும் லெஸ்லியுடனும் என் எண்ணங்களைப் பகிர மனம் வரவில்லை. அவர்களுக்கு மன நிறைவு தந்த ஒரு காலைப் பொழுதை அவர்களுடைய விருந்தாளியாகச் சென்ற நான் பழுதாக்குவது சரியென்று தோன்றவில்லை.

மனம் ஷென்ஜென்னுக்கு மீண்டது.

*(தாயகம்-51 ஒக்டோபர் 2004)*



படிப்பகம்

www.padippakam.com



# நீங்கும் நினைவுகள்



மறதி உங்களுக்கு மட்டுமில்லை, எல்லாருக்குந் தான். முருகேசுவை நினைப்பிருக்குதா?



படிப்பகம்

www.padippakam.com



பேராதனைச் சந்தியில் பஸ்ஸிலிருந்து இறங்கிக் கம்பளைக்குப் போகிற பஸ்தரிப்பை நோக்கி நடந்துகொண்டிருந்தபோது பின்னாலிருந்து ஒரு குரல் அழைத்தது: "ரவி சேர்!" என்னை இந்த மாதிரி யாரும் கடைசிப் பதினைந்து பதினாறு வருடமாக அழைத்த நினைவில்லை. திரும்பிப்பார்த்தேன். பாதி நரைத்த மீசைக்குப் பின்னாலிருந்த முகம் எங்கோ கண்டது போலத்தான், காணாதது போலவுந்தான். எப்போதென்றோ எங்கேயென்றோ எதுவும் நினைவுக்கு வரவில்லை. அதைவிட, கம்பளைக்குப் போகிற அவசரம். ஏலவே பிந்திவிட்டது.

"ஸேர் என்னை மறந்திருப்பீங்கள் எண்டுதான் நினைக்கிறன்". என்னை நெருங்கி வந்தவரிடம் "உண்மையா நினைப்பில்லை. இப்ப அவசரமா வேலைக்கு ஓடுறன். கம்பளைக்குப் போகவேணும்" என்று சொன்னபடி அவரிடமிருந்து விலகப் பார்த்தேன்.

"உங்கட அவசரம் இன்னும் மாறேல்லை. இருவது வருசம் முந்தி இதே சந்தி மூலையிலை ஒரு சுருட்டுக்கடை இருந்தது மறந்தீட்டீங்களோ?" என்றபடி என்னோடு கூட நடந்தது வந்தார். இப்போது சந்தியிலே ஒரு சுருட்டுக்கடையும் கிடையாது. நினைவுக் கிடங்கைக் கிளறிப் பார்த்தேன். சுருட்டுக்கடை நினைவுக்கு வந்தது. ஆனால் முகம் முதலாளியுடையதல்ல. அவர் இப்போது இறந் திருக்கலாம். அப்போதே அறுபது தாண்டிவிட்டது. நான் வாய் திறக்கு முன்பு, "மறதி உங்களுக்கு மட்டுமில்லை, எல்லாருக்குந் தான். முருகேசுவை நினைப்பிருக்குதா?" என்று கேட்டார். இப்போது எல்லாம் நினைவுக்கு வந்தன. முருகேசுவின் தோற்றம் மிகவும் மாறிவிட்டது. தலைமயிரும் நரைத்துவிட்டது. ஒடுங்கின முகம் இப்போது கொஞ்சம் பூசினாற்போற் கூட வட்டமாகத் தெரிந்தது. மெல்லிய கறுத்த மீசையின் இடத்தில் அகலமான மீசையின் நரைமயிர்கள் மேல் உதட்டை மூட முயன்று கொண்டிருந்தன. "ஐயோ! வெரி சொறி! மெய்யாவே மட்டுக்கட்ட ஏலாமற் போயிட் டுது. நீங்கள் எண்பத்துமூண்டோட ஒரேயடியா ஊரோட போயிட் டியள் எண்டு நினைச்சன்".

"உங்களைக் கண்டது, கடவுளின்ட சித்தம். உங்களை மினக்கெடுத்தேல்லை. பஸ் வருந்தனைக்கும் நிண்டு கதைக்கேலு



படிப்பகம்

www.padippakam.com



மெண்டா உங்களோடை வந்து நிற்கிறன்'' என்று சொன்னார். நான் மன்னிப்புக்கேட்கிற தோரணையில் தலையை அசைத்து ஒரு சிரிப்பை வரவழைத்தேன். முருகேசு என்னுடன் தெருவைக் கடந்து பஸ் தரிப்பில் வந்து நின்றார்.

"எப்ப தொட்டுத் திரும்பவும் பேராதனையில நிக்கிறீங்கள்?" என்று கேட்டேன்.

"மூண்டுநாலு மாசமிருக்கும். சொந்தக்கார ஆளொண்டுக்குச் சுகமில்லை. துணைக்கும் ஆளில்லை. எனக்கும் ஒரு மாறுதல் வேணும் போல இருந்தது. வந்து நிற்கிறன்".

"அப்ப என்ன தொழில்?"

"வவுனியாவில தான். கடை ஒண்டில பாட்னரா இருக்கிறன். நல்லாத் தெரிஞ்ச ஆள். சுத்திவளைச்சுச் சொந்தமும் தான். மூத்தவன் சோதினை எழுதிப்போட்டுச் சும்மா நிக்கிறான். கடையிலை விட்டுப்போட்டு வந்திட்டன்".

"எண்பத்தி மூண்டிலை நீங்கள் கலியாணங்கட்டியிருக் கேல்லை...."

"எண்பத்திமூண்டு எண்டா, இருவத்தொரு வருசம் முந்தி. நான் கலியாணம்முடிக்க மாட்டனெண்டு நினைச்சீங்களோ?" எனக்குப் பழக்கமாக இருந்த ஒரு உரத்த சிரிப்புத் தொடர்ந்தது. நான் வாய்திறக்கு முன்னமே, "அருணகுமாரை நினைப்பிருக்குதா?" என்று கேட்டார்.

"அருணகுமாரா? ஆள் எண்பத்து மூண்டோட லண்டனோ கனடாவோ போயிட்டானே. என்ன நடந்தது?"

"ஒண்டும் நடக்கேல்லை. ஆள் ஒஸ்றேலியாவில இருந்து வந்திருக்குது. சிலவேளை நாளைக்குப் பின்னேரம் இந்தப்பக்கம் வரும். உங்களையுங் கேட்டுது. வசதியெண்டால்...."

"வாறன். எவடத்த நிக்கிறியள்?"

"பேராதனை ஆஸ்பத்திரியடியில சந்திக்கிறதாப் பேச்சு. அஞ்சு அஞ்சரைக்குள்ள உங்களால் வர ஏலுமெண்டா...."

அவர் சொல்லி முடிக்கு முன்பே பஸ் வந்துவிட்டது. பஸ் நடத்துனரின் முரட்டுக் கரங்களின் அரவணைப்புடன் பஸ்ஸுக்குள



படிப்பகம்

www.padippakam.com



அடையுண்டேன்.

"மஹாத்தயா கொஹெத? (*ஐயா எவ்விடம்?*)"

"பேராதெனிய இஸ்பிரித்தால (*பேராதனை வைத்தியசாலை*)".

"மேக்க கம்பொலட்ட. பஹிண்ட, பஹிண்ட. (*இது கம்பளைக்கு. இறங்கு, இறங்கு*)".

என்னுடைய தவற்றைத் திருத்தி "னா னா, கம்பொலட்ட (*இல்லையில்லை கம்பளைக்கு*)" என்றேன்.

நடத்துனருக்கும் சிரிக்கத் தெரியும் என்று விளங்கியது. பணத்தை வாங்கிக்கொண்டு, "அயின்வென்ட அயின்வென்ட (*விலகு விலகு*)" என்று அலறியவாறே பஸ்ஸின் முன்பகுதியை நோக்கிப் போனார்.

அருணகுமாரை இரண்டு வருடங்கள் தான் தெரியும். அப்போது, நான் விஞ்ஞானபீடத்தில் போதனாசிரியராக இருந்தேன். நிரந்தர மான விரிவுரையாளர் பதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கழிந்த மூன்றரை வருடங்களின் நடுப்பகுதியில், 1982ம் ஆண்டு அருணகுமார் புதிய மாணவனாக வந்து சேர்ந்தான். கெட்டிக்காரன். மாவட்ட அடிப்படை காரணமாகத் தனக்கு மருத்துவ பீடத்தில் இடங் கிடைக்கவில்லை என்பது அவனுடைய மனக்குறை. யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தில் என்றாலுங் கிடைக்கும் என்று நம்பி யிருந்தான். இன்னொரு வருடத்தை வீணாக்க அவனுடைய குடும்பச் சூழல் அனுமதிக்கவில்லை. பேராதனையில் விஞ்ஞானப் பீடத்துக்கு அனுமதி கிடைத்தது. யாழ்ப்பாணத்தை விடப் பேரா தனைக்கு மரியாதை கூட என்று அவனுடைய சிற்றப்பா ஒருவர் அவனுடைய விடுதிச் செலவுகட்குப் பொறுப்பெடுத்துக் கொண்டார்.

விஞ்ஞான பீடத்தில் அதிகம் தமிழ் மாணவர்கள் இருக்க வில்லை. எனவே, இருந்த எல்லாரும் ஒன்றாகக் கூடிப்பழகுவார்கள். சிற்றூண்டிச்சாலையில் புதிதாகத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று எடுத்துவைத்திருந்தார்கள். வாரத்தில் ஒருநாள் தமிழர்கட்கு ஒரு சலுகையாக ஒரு தமிழ்ப் படம் காட்டப்படும். பெரும்பாலும் அவர்கள் பிறப்பதற்கு முன்பு தயாரிக்கப்பட்ட ஒரு படமாகத் தான் இருக்கும். புதன் இரவு, செய்திகட்குப் பின்பு காட்டுவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



தமிழ் மாணவர்கள் புதன் இரவைத் திரைப்படத்துக்காக ஒதுக்கி வைத்திருப்பார்கள்.

1982 பிற்பகுதியில், தமிழ்ப் பரீட்சகர்கள் தமிழ் மாணவர் களுக்கு அதிகம் புள்ளிகளை வழங்குகிறார்கள் என்று ஒரு சிங்கள இனவாதப் பேராசிரியர் பத்திரிகைக்கு அறிக்கை விட்டார். பல்கலைக்கழக அதிகாரத்துக்குச் சொல்லாமலும் விசாரணை எதையும் நடத்தாமலும் அவர் விடுத்த அறிக்கையைக் கண்டித்துச் சிங்கள, தமிழ் விரிவுரையாளர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்ட னர். பல்கலைக்கழகம் குற்றச்சாட்டை விசாரித்து அதற்கு ஆதாரமில்லை என்று முடிவுகட்டியபோதும் தமிழர் பற்றிய ஐயங்கள் சிங்கள மாணவர்களின் மனதில் ஆழப் பதிந்து விட்டன. விசாரணை நடத்திய சிலரும் அந்தரங்கமாக விஷமத்தனமான முறையில் தமிழருக்கு எதிரான கருத்துக்களைப் பரப்பியதாகக் கேள்விப்பட்டபோதும் யாராலும் எதையும் செய்ய இயலவில்லை. பகிரங்கமாக ஒன்றும் இரகசியமாக இன்னொன்றும் பேசுகிறவர் களை அம்பலப்படுத்துவது இலேசானதல்ல. அம்பலப்படுத்தி னாலும் அவர்களுக்கு மேலிடத்து ஆதரவு இருப்பதால் அவர்களை அசைக்கவும் முடியாது.

அருணகுமார் எந்த இயக்கத்திலும் இருக்கவில்லை. என்றாலும் அரசியல் விடயங்களில் தீவிரமாக விவாதிப்பான். தனிநாட்டுக் கோரிக்கையை நான் ஏற்கவில்லை என்று அவனுக்குத் தெரியும். நான் மாணவர்களுடன் அரசியல் பேசுவதில்லை என்று அவனுக் குத் தெரியாது. ஒரு நாள் என்னிடம் மிகவும் உணர்ச்சிவசப்பட்டுத் “தமிழீழக் கோரிக்கையை ஆதரிக்காதவர்கள் எல்லாரும் தமிழரின் எதிரிகள்” என்று சொன்னான். “ஆதரிக்கிறதும் ஆதரிக்காததும் அவரவர் விருப்பம். நான் நியாயமில்லாத எதையும் செய்யவும் மாட்டேன். அநியாயம் என்றால் கண்டிக்கத் தவறவும் மாட்டேன். இதற்கும் மேலாக நான் மாணவர்களுடன் அரசியல் கதைக்கிறது பிழை. வேறு யாராவது விரும்பினால் வீட்டுக்கு வந்து கதைக்க லாம்” என்றேன். “சேர், நீங்கள் நழுவப் பார்க்கிறீங்கள். எங்கட ஊருக்கு வந்தீங்களெண்டா உங்களால எங்கட பெடியள் கேக்கிற கேள்விக்கு மறுமொழி சொல்லேலாது” என்றான்.



படிப்பகம்

www.padippakam.com



“அதை அந்த நேரம் பாப்பம். இந்த இடத்தில அரசியல் பேசின லெக்சரர் புறொபெசர்மார் பலபேர் தங்கட வேலையையும் செய்யாமல் பந்தம்பிடிக்கிற ஆக்களைத்தான் உண்டாக்கிப் போட்டினம். தயவு செய்த அரசியலைவிட வேற கதையிருந்தாக் கதைப்பம்”.

“சொன்னன் ஸேர். நல்லா நழுவிறீங்கள்”. இப்போது பதற்றம் கொஞ்சம் அடங்கியிருந்தது. “வேறொரு பிரச்சினை. கதைக்க லாமோ?” என்று கேட்டான்.

“அரசியல் இல்லாட்டிக் கதைக்கலாம்”.

“அரசியல் மாதிரி அரசியல் இல்லை சேர். அரசியல் இல்லா மல் என்ன சேர் இருக்குது சொல்லுங்கோ? ஒரு மாணவன் எண்ட முறையிலை என்னைப் பாதிக்கிற ஒரு விசயம்....”

“இங்கத்தைப் படிப்போடையா?”

“ஓம்”.

“சரி”.

“லலித் ஜயசிங்க என்ட பச்மேற். கப்புட்டா எண்டு தான் சிங்களப் பெடியன்கள் கூப்பிடுவாங்களாம். லைபிறறியில எல்லாரும் பாவிக்கிற புத்தகங்களைத், தான் பாவிக்கிறதுக்காக இடம் மாறி ஒளிச்சு வைக்கிறவன். கண்ணால ரண்டுமூண்டு தரம் கண்டனான். நேற்றுஞ் செய்யேக்கை போய் லைபிறறி அஸிஸ்ற்றன்றிட்ட றிப்போட் பண்ணிப் போட்டன்”.

“என்ன நடந்தது?”

“விசாரிக்கிறன் எண்டார். ‘ஒளிச்சு வைச்ச இடத்தைக் காட் டட்டோ?’ எண்டன். ‘நீயே ஒளிச்சு வைச்சிருக்கேலாதோ?’ எண்டு திருப்பிக் கேட்டுப்போட்டுப், ‘பகிடிக்குச் சொன்னனான், பாக்கிறன்’ எண்டார்”.

“பிறகு?”

“கப்புட்டா என்னை இண்டைக்கு முளுசிப்பார்த்துக் கொண்டு போனான்”

“பயப்பிட்டுப் போனாய் போல!”



படிப்பகம்

www.padippakam.com



“பயம் இல்லை. ஒரு சிங்களவனையும் நம்பேலாது!”

“எல்லாத் தமிழனையும் நம்புவியோ?”

“அப்பிடியில்ல. எல்லாம் துவேசமாத்தான் நடக்கிறாங்கள்!”

“இல்லையெண்ணேல்லை. இங்க வந்து ரண்டு வருசமாய் போகுது. எப்பெண்டாலும் ஒரு சிங்களப் பெடியனோட சினேகிதம் பிடிக்கப் பாத்தியோ?”

“ஏன் பாக்க வேணும்? அவங்கள் எங்களிட்டைச் சினேகிதம் பிடிக்கப் பாத்தா என்ன?”

“அவங்கள் பேயன்களென்டா நீயும் பேயனா இருப்பியோ?”

“ஒரு சிங்களவனையும் நம்ப ஏலாது!”

“நம்பாதை. ஆனாப் பழகிறதில ஒரு நட்டமுமில்லையே!”

“எனக்குப் பாசை தெரியாது. ஏன் அவங்கள் தமிழ் கதைக்க மாட்டாங்கள்? கூட்டம்போட்டா முழுச் சிங்களம். யூனியன் இலெக்சனுக்கு மட்டும் தமிழ்க் கதைக்க ஒரு உலக்கையனைப் பிடிச்சு வைச்சிருக்கிறாங்கள்”.

“உன்ட லைப்பிறறிப் பிரச்சனை சிங்களப் பெடியங்களையும் பாதிக்கிறது தானே! பார், உனக்கு ஒரு சிங்களச் சினேகிதன் இருந்திருந்தா அவன் மூலமா முறைப்பட்டிருக்கேலும். உன்ட கப்புட்டாவுக்கும் தமிழ்-சிங்களம் எண்டு நாளைக்குப் பிரச்சனை எழுப்பேலாது....”

“ஒரு சிங்களவனையும் நம்பமாட்டன் சேர். நீங்கள் என்னவேன் செய்யேலுமா?”

“நீ முறைப்பட முதல் என்னட்ட வந்து சொல்லியிருந்தா ஏதேன் யோசிச்சுச் செய்திருக்கேலும். இப்ப தமிழனுக்குத் தமிழன் வக்காலத்து எண்டு வரும். பாப்பம்”.

அருணகுமார் என்னை நம்பினானோ இல்லையோ இந்த அலுவலில் மாணவர்களுடைய நலனுக்குக் கேடான ஒரு காரியம் நடப்பதைத் தடுக்கிறதென்றால் அது பற்றி மாணவர்களே கூட்டாக முறைப்பட வேண்டும். பொதுவாக ஊழியர் யாருமே இந்த மாதிரி விடயங்களில் மாணவர்களுடன் தாமாக மோதமாட்டார்கள். இதை அருணகுமாருக்கு விளங்கப்படுத்துவது லேசல்ல. அதே நேரம்



படிப்பகம்

www.padippakam.com



ஒரு மோசமான இனக் குரோதச் சூழ்நிலையும் உருவாகி வந்தது.

அருணகுமாரைச் சந்தித்து ஒரு கிழமை மட்டில் இருக்கும். அன்று புதன்கிழமை. படம் "ஓரிரவு". சின்னப் பையனாக இருந்த போது பார்த்தது. அப்போதே பழைய படம். பாட்டுக்களெல்லாம் இப்போதுகூட முணுமுணுக்க வரும். வழக்கம்போல என்னுடைய வீட்டுக்கு, அதாவது நான் இருக்கிற பகுதிக்குச், சொந்தக்காரர் களுடைய தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்தேன். படம் பாதி முடியுமுன்பே யாரோ தடதடவென்று கதவிற் தட்டினார் கள். உங்களை ஜே.பி. ஹோலுக்கு வரட்டாம்." நான்கு தமிழ் மாணவர்கள் அங்கு நின்றார்கள்.

"நான்...? ஏன்...? யார்...?" என்னுடைய குழப்பம் சொற்களாக விழுந்தது.

"அருணகுமாரைச் சிங்களப் பெடியங்கள் பிடித்துக் கொண்டு போய்ப் பொலிஸில பாரங்குடுக்கப் பாக்கிறாங்கள்".

"நான் என்ன செய்யேலும்? நான் சின்ன ஆள். யாராவது பெரிய...."

"அருணகுமாருக்கு உங்களை மட்டுந்தான் தெரியும். நீங்கள் தான் அவனுக்காகக் கதைக்க வேண்டும்".

வீட்டுக்காரர் சிங்களவர். வாசலடிக்கு வந்து என்ன பிரச்சனை என்று விசாரித்துவிட்டு, "ரவி, என்னுடைய ஸ்கூட்டரில கொண்டு போகிறேன்" என்றார். மாணவர்களை அனுப்பிவிட்டு அவருடன் எனக்குத் தெரிந்த ஒரு கலைப்பீட விரிவுரையாளரிடம் போனேன். வளாகத்துக்குப் போகும் வழியில் ஒரு கூட்டம் நின்றது. யாரோ ஒரு பையனைப் பிடித்துத் தெருவில் எழுதிய எதையோ அழிக்கச் செய்து கொண்டிருந்தார்கள். நண்பர் விசாரித்தபோது "புலிகள் தெருவில் ஈழம் சுலோகங்களை எழுதியிருக்கிறார்கள். இவன் ஒரு புலி. இவனை அழிக்கச் செய்கிறோம்". என்று சொன்னார்கள்.

"நம்புகிறீர்களா?" என்று கேட்டேன்.

"இது பிரச்சனையான காலம். வீணாகப் பேசினால் தொந்தரவு. நம்முடைய வேலையைப் பார்ப்போம்" என்றார்.

நான் தேடிப்போனவர் ஏற்கனவே ஒரு சிங்களப் பேராசிரிய

ருடன் ஜே.பி. விடுதியில் நிலைமைகளைச் சமாளிக்கப் போய் விட்டார். இதற்கு மேலும் வீட்டுக்காரருக்கு அலுப்புக்கொடுப்பது தவறு என்று அவரைக் திரும்பிப்போகும்படியும் நான் என் பாட்டில் போகிறேன் என்றும் சொன்னேன். அவர் பிடிவாதமாக என்னைத் தனியே அனுப்ப மறுத்தார். வேறுவழியில்லாமல் அவருடன் ஜே.பி. விடுதியை நோக்கிப் போகும்வழியில் சில சிங்கள மாணவர்கள் எங்களை மறித்தார்கள். ஒரு பையனை எனக்குத் தெரியும். அஜித் சில்வா. நல்லவன் என்று நினைத்திருந்தவன் எப்படி இதில் அகப்பட்டான் என்று யோசித்தேன்.

“ஸேர் யண்ட எப்பா. தத்வய ஹொந்த மதி. அபி பலாகன்னங் (*ஸேர் போகாதீர்கள். நிலைமை சரியாயில்லை. நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்*)” என்றான்.

நடந்த பல அசம்பாவிதங்களும் அவர்களுக்குத் தெரியும். சிற்றூண்டிச்சாலையில் படம் பார்த்துக் கொண்டிருந்தபோது தான் அருணகுமாரைப் பிடித்துப்போனார்கள். கப்புட்டாதான் அங்குபோன கும்பலுக்குத் தலைவன். அதன் பிறகு தமிழ் மாணவர்கள் சிலர் என்னைத் தேடி வந்திருக்கிறார்கள். பிறகு எஞ்சியிருந்த மாணவர் கள் தாக்கப்பட்டார்கள். அவர்களுள் ஒருவன் தான் விஷமிகள் தெருவில் எழுதியதை அழித்துக் கொண்டிருந்தான். மற்றவர்களைப் பிடித்து கலஹா வீதி வழியாக ஊர்வலமாகக் கொண்டுபோய்ப் “புலிகள் ஒழிக!” என்று கூக்குரலிடச் செய்தார்கள். பிறகு விடுதி விடுதியாகத் தமிழ் மாணவர்களின் அறைகள் சோதனையிடப் பட்டன. சில விடுதிகளின் சிங்கள மாணவர்கள் இந்தக் கும்பலை உள்ளே விடவில்லை.

அஜித் தன்னுடைய நண்பர்களுடன் போய் இந்தக் கும்பலுக்கு எதிரானவர்களைக் கொண்டு விடுதிகளில் ஒழுங்கை நிலைநாட்ட முயன்றுகொண்டிருந்தான். அஜித் தனக்குத் தெரிந்த ஒரு பேராசிரி யர் மூலம் அருணகுமாரைப் பொலிஸுக்கு அனுப்பாத விதமாகத் துணைவேந்தரை நடவடிக்கை எடுக்கச் செய்தான். என்றாலும் பல்கலைக்கழக நிருவாகிகள் பலருக்கு அருணகுமார் ஒரு புலி என்ற ஐயம் இருந்தது. எனவே மறுநாள் அருணகுமார் பொலிஸிடம் ஒப்படைக்கப்பட்டான்.

www.padippakam.com


அஜித்தும் நண்பர்களும் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கட்கு ஆதரவாக எடுத்த முயற்சிகள் சிறிது பயனளித்தன. என்றாலும் அதனால் பல்கலைக்கழக நிர்வாகிகளுடைய பேர் கெட்டுப்போகும் என்று ஆளுங்கட்சி மாணவர்கள் அவர்களது 'அத்துமீறிய முயற்சி கட்கெதிராக' மேலிடத்தில் முறையிட்டனர்.

வளாகம் சில நாட்களுக்கு மூடப்பட்டு மீண்டும் திறந்தது. அருணகுமார் அதிகம் உடற் சேதமில்லாமல் திரும்பி வந்தான். அஜித்துக்கும் வேறு சில சிங்கள மாணவர்களுக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை அறிவிக்கப்பட்டது. தனியே அவர்களைத் தண்டிப்பது கடினம் என்பதால் ஒரு சில தமிழ்ப் பேர்களும் சேர்க்கப்பட்டன. இவையெல்லாம் ஒரு முடிவுக்கு வருமுன்பு ஒரு ஆடிக் கலவரம் நிகழ்ந்து முடிந்தது.

அருணகுமார் பிடிவாதமாகப் பேராதனைக்குத் திரும்பிப்போக மாட்டேன் என்றதால் அவனுடைய சிற்றப்பா அவனை இந்தியா வுக்கு அனுப்பிவைத்தார். அங்கிருந்து வேறெங்கோ போய்விட்ட தாகச் சில ஆண்டுகளின் பின்பு கேள்விப்பட்டேன். இந்தியாவில் இருந்தபோது வந்த கடிதங்கள் ஓய்ந்துவிட்டன. நானும் கம்பளை யில் ஒரு அலுவலகத்தில் வேலைபெற்று இடம் மாறி விட்டேன். அஜித் மீதான தண்டனை மாணவர்களது வற்புறுத்தலால் நீக்கப் பட்டது. எனினும் சிலமாதங்களாகப் படிப்புக் குழம்பிய அஜித் மேற்கொண்டு படிக்க விரும்பவில்லை. கப்புட்டா மீதான ஒரு விசாரணையில் அவன் குற்றவாளி என்று காணப்பட்டது. எனினும் அவன் மன்னிக்கப்பட்டு விஞ்ஞான பீடத்தில் துணை விரிவுரை யாளராக இருந்து மேல்நாடு போனான். திரும்பி வரவில்லை என்றார்கள்.

முருகேசு சொன்னது போல, ஐந்து மணிக்கே பேராதனை மருத்துவமனைக்குப் போனேன். முருகேசு நின்றார். அருணகுமார் இன்னும் வரவில்லை.

"அருணகுமார் என்னோட பழைய கதையெல்லாங் கதைச்சுது. தான் அம்பிட்ட கதை, தப்பின கதை எல்லாஞ் சொல்லிச்சு. நீங்கள் வலும் உதவியாயிருந்தீங்கள் எண்டுஞ் சொன்னது".

"நானா? என்னாலை ஒண்டுமே செய்ய ஏலேல்லையே.



படிப்பகம்

www.padippakam.com


கொஞ்சச் சிங்களப் பெடியங்களும் ஒண்டு ரண்டு லெக்சரர் புறொபெசர்மாரும் தெண்டிச்சவை".

"சில பேர்களைச் சொல்லிச்சுது. எண்டாலும் சிங்களப் பேராண்டுமே சொல்லேல்லை".

"அஜித்திண்ட பேர்கூடச் சொல்லேல்லையா?"

"கலவரத்துக்கு முன்னஞ் சந்திச்சநேரம் என்னட்ட நீங்கள் என்னமோ சொன்னியளாக்கும். தெளிவாயில்ல. ஒருவேளை அதுக் குத் தெரியாம இருந்திருக்கும்".

"இந்தியாவுக்கு அவன் போன நேரம் கடிதம் எழுதினவன். நான் மறுமொழி எழுதேக்க அவனுக்காகச் சண்டைபிடித்த அஜித் துக்கு நடத்தையெல்லாம் விளம்பரமா எழுதினனான்".

"ஒரு சிங்களவனும் உதவேல்லை எண்டு தான் சொல்லிச்சுது".

"வரட்டும். கேக்கிறன்".

"இப்ப ஒஸ்ற்றேலியாவில நல்ல நிலையில இருக்குது".

"அரசியல் ஒண்டும்...."

"தெரியேல்லை. தானுண்டு தன்ட குடும்பமுண்டு எண்டுதான் சீவிக்கிறாப்போல. ஒரு வேளை அரசியல் கதைச்சாலும், எதிலை யும் இருக்கிறமாதிரித் தெரியேல்லை. இங்கை நல்ல ஹொட்டல் பீச் எதெண்டுதான் கதை. ஒஸ்ற்றேலியாச் சீவியம் நல்லாப் பிடிச்சுக்கொண்டுது போல. இங்க சண்டை முற்றாக நிண்டால் ஒருவேளை கொழும்பில ஒரு எப்பாட்மென்ற் வாங்கிற யோசனை எண்டு தெரிஞ்சுது".

"சிங்களவரோடை ஒரு பிரச்சனையும் இல்லை?"

"சிங்களச் சனத்தோட பிடிப்பெண்டில்லை. எண்டாலும் கொஞ்சம் பிசினஸ்காறரோட சினேகிதம். அவங்கள்தான் சண்டைய நிப்பாட்டுவாங்கள் எண்டு எண்ணுமாப்போல".

"நீங்கள் என்ன சொன்னீங்கள்?"

"என்னதைச் சேர் சொல்ல. கேட்டுப்போட்டு என்பாட்டில சிரிச் சன். படிச்ச பிள்ளை. கெட்டிக்காறன். நான் மறுப்புச் சொல்லே லுமா?"



படிப்பகம்

www.padippakam.com



"....."

"உங்களையும் ஒண்டிரண்டு தமிழ்ப் புறொபெசரையும் பற்றிச் சொன்னது. உங்களைச் சந்திக்க விருப்பம், எண்டாலும் வழி யில்லை எண்டுஞ் சொன்னது. அதுதான் கடவுளாப் பாத்து உங்களை என்னட்டைக் கொண்டுவந்து விட்டவர்".

நேரம் ஆறு மணிக்கும் மேலாகிவிட்டது. முருகேசு தனது உறவினரைப் பார்க்க உள்ளே போகவேண்டும். அருணகுமார் இன்னும் வரவில்லை.

வராததுதான் நல்லது என்று நினைத்துக்கொண்டு பஸ் தரிப்பை நோக்கி நடந்தேன்.

*(தாயகம்-52 ஜனவரி-மாச் 2005)*



படிப்பகம்

www.padippakam.com



# தம்பரின் இரும்புப்பெட்டி



*பெட்டி இரும்புப் பெட்டி எண்டதில பெட்டி பாரமா சாமான் பாரமா எண்டு ஆருஞ் சொல்லேலாது*



படிப்பகம்

www.padippakam.com



பொன்னுத்துரையை முன்பெல்லாம் அடிக்கடி சந்திப்பேன். நான் கொழும்பில் கோணமேந்தில் கோழிமேய்த்த பரம்பரை. ஒரு கிழமைக்கோ இரண்டு கிழமைக்கோ ஒருதடவை ஊருக்குப் போய் வருவேன். அது யாழ்தேவியின் காலம். அதற்குப் பிறகுங்கூட இன்ற்றர்சிற்றி பஸ் எறிப் போய்வந்தாலும் அதிக செலவு என்பதோடு கையில் அதிகங் கொண்டுபோக பஸ்ஸில் வசதிப் படாததாற் பயணங்கள் மாதம் ஒருமுறையாக அல்லது ஏதாவது விசேஷமென்றால் இரண்டு முறையாகக் குறைந்துவிட்டன. இந்தியப் படை அமைதிகாத்ததன் விளைவாக வெளியேறிக் கண்டி, கொழும்பு என்று இடம்பெயர்ந்த குடும்பத்தோடு கடைசியில் திருகோணமலையில் குடியேறினேன். பிள்ளைகள் வளர்ந்து சிறகு முளைத்த குருவிக்குஞ்சுகள் மாதிரி ஆளுக்கொரு திசை போய் விட்டார்கள். ஒரு மகள் கனடாவில், மற்ற மகள் பிரான்சில், மகன் இயக்கமொன்றில் சேர்ந்து போனவன் போனவன் தான். மகள்மார் தங்களுடன் இருக்கும்படி கூப்பிட்டார்கள் போய்ப் பார்த்த பிறகு, தெரியாத பேயைவிடத் தெரிந்த பேய் பிழையில்லை யென்று தொடர்ந்தும் திருகோணமலையில் இருக்கிறேன். இரண்டு பேரின் பென்சன் காசும் போதும். இடையிடையே என்.ஜி.ஓக்காரர் கேட்கிற மொழிபெயப்பு வேலைகளுக்குக் கிடைக்கிறது ஒரு மேலதிக வரும்படி. அதற்குள் முழுநேரமாக இறங்குகிற யோசனை வந்தது மெய்தான். பூரணிக்கு, அதாவது என் மனைவிக்கு, ஏனோ அது பிடிக்கவில்லை. “ஆறுதலாக வீட்டோட இருங்கோவன். உந்தக் கண்டநிண்ட கள்ளத் தரவழியளிட்டக் கைநீட்டி நிக்கப் போறியளா?” என்ற அன்பான கட்டளை நன்மையாகத்தான் போனது.

திருகோணமலையின் சூழ்நிலை ஒருபக்கம் பொலிஸ், ராணுவம், கடற்படை நெருக்குவாரங்களையும் அவர்களோடு ஒத்துழைக்கிற இயக்கக்காரரையும் இன்னொரு பக்கம் புலிகளின் அமைப்புக்களையும் ஆதரவாளர்களையும் கொண்டது. வெளியிற் பாதுகாப்பாகத் தெரிந்தாலும் நிலைமைகள் சாம்பல் மூடின எரிமலை மாதிரித்தான். அதனால், தனிப்பட்ட முறையில் ஆளுக் காள் அரசியல் விஷயங்களைக் கதைத்துக் கொண்டாலும் வெளி



படிப்பகம்

www.padippakam.com



வெளியான விவாதங்களோ அரசியற் கருத்து மோதல்களோ இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அரசாங்கமோ என்.ஜி. ஓக்களோ விடுதலைப் புலிகளோ சம்பந்தப்பட்ட கலந்துரையாடல் களும் கருத்தரங்குகளும் இருந்தாலும் 1970களிலும் 1980களிற் கொஞ்சக் காலமும் இருந்த மாதிரிப் பகிரங்கமான விவாதங்களின் காலம் மலையேறிப் போய்விட்டது. இப்படிப்பட்ட ஒரு சூழலில் இப்போது பொன்னுத்துரை என்னைத் தேடி எப்போதாவது வரு வான். அவன் முன்பு பத்திரிகைச் செய்தியாளனாக வேலைபார்த்து இப்போது வடக்கிலும் கொழும்பிலும் செயற்படுகிற ஒரு பத்திரிகை நிறுவனத்தின் சிறப்புச் செய்தியாளனாக இருக்கிறான். வேறு வரும்படிகளும் உண்டு. திருகோணமலைக்கு ஆண்டுக்கு ஓரிரு தடவை வருவான். அதிக நேரங் கதைக்கக் கிடைப்பதில்லை. இம்முறை சில நாட்களுக்கு இங்கே நிற்க வேண்டியிருந்ததால் எங்களுடைய வீட்டில் ஒரு இரவு தங்குவதற்கு உடன்பட்டான்.

பொன்னுத்துரையோடு இரவிரவாகப் பழைய கதைகளை இரை மீட்பதுபோல ஆனந்தம் வேறு எத்தனை விடயங்களில் எனக்குக் கிட்டுமோ தெரியாது. பூரணி "ரண்டு பேரும் வேளைக்குச் சாப்பிட்டுப் போட்டு கதையைத் துவங்கினா, நான் எல்லாத்தையும் கழுவிக் காயப் போட்டிட்டுப் படுக்கப்போவன். பிறகு நீங்கள் உங்கட பாடு" என்று ஏழுமணிக்கே இராச் சாப்பாட்டைப் பரிமாறிவிட்டார். நாங்கள் வெளி விறாந்தையோடு வாங்கில் அமர்ந்து கதைத்து கொண்டிருந்தோம். உள்ளே புகைந்து கொண்டிருந்த நுளம்புச் சுருளின் மிரட்டலுக்கு வெருண்டு வந்த நுளம்புகளிற் சில எங்களிடம் தாகம் தீர்த்து, எங்கள் கைகளில் தங்கள் வாழ்வை முடித்துக் கொண்டன.

பொன்னுத்துரைக்கு 1961 சத்தியாக்கிரகக் காலம் தொடக்கம் வடக்கின் அரசியல் எல்லாம் தலைகீழ்ப்பாடம். பாடசாலை மாண வனாகவே யாழ்ப்பாணக் கச்சேரியடியில் நின்றவன். பொலிஸ் குண்டாந்தடி தமிழரசுத் தலைவர்கள்மீது பட்டபிறகு, வீட்டார் அவனைக் கச்சேரிப் பக்கமே போகவிடவில்லை. என்றாலும் அவ னுடைய அரசியல் ஈடுபாடு வளர்ந்ததே ஒழியக் குறையவில்லை. படிப்பிற் கவனம் போகாததால் பள்ளிப் படிப்பை இறுதிப் பரீட்சை



படிப்பகம்

www.padippakam.com



எழுதாமலே நிறுத்திவிட்டுப் பொழுதுபோக்காகத் தமிழ்ப் பத்திரிகைகட்குச் செய்திகளைச் சேர்த்து அனுப்பிவைத்தான். 1965க்குப் பிறகு யாழ்ப்பாணத்தில் உருவான பரபரப்பான அரசியற் சூழலும் சாதி ஒழிப்புப் போராட்டக்கால நெருக்கடியும் அவனுக்கு ஒரு நல்ல வாய்ப்பைத் தந்தன. முழுநேரச் செய்தியாளனாகும் அளவுக்கு அவனுடைய முயற்சியும் சமூக விவகாரங்கள் பற்றிய அக்கறையும் அவனைத் தள்ளிச்சென்றன. எந்த ஒரு அரசியற் கட்சியிலும் ஈடுபாடு இல்லாதவிதமாக நடந்து கொள்வான். அதே வேளை ஒவ்வொரு அரசியற் கட்சியையும் அரசியல்வாதியையும் பற்றிய கணிப்பீடுகளை மனதிற்குட் செய்துகொள்வான். அவன் யாரை ஆதரிக்கிறானென்று சொல்ல இயலாது. என்றாலும் அனேக மாக எல்லோரையும் பற்றி உங்களுக்குள் சிரித்துக்கொள்ளுகிறான் என்றுதான் நினைத்தேன்.

நான் தமிழரசுக் கட்சி ஆதரவாளனாக இருந்தவன். ஒரு காலத்தில், தமிழ் எழுதுவினைஞர் சங்கத்தில் முக்கிய பொறுப்புக் களில் பணியாற்றியவன். 1965ம் ஆண்டு தமிழரசுக் கட்சி அரசாங் கத்தில் கூட்டாளியாகச் சேர்ந்தபிறகு சங்கத்தில் ஊக்கமாக உழைத்த பலரும் சோர்ந்து போய்விட்டோம். என்றாலும், இன்றைக் கும் தமிழரசுக் கட்சியை யாரும் இழிவாகப் பேசினால் எனக்கு வேதனையாகத்தான் இருக்கும். எத்தனை பிழை செய்தாலும் அது மட்டுமே தமிழ் மக்களின் கட்சியாக இருந்தது என்பது என்னுடைய மதிப்பீடு. தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்பட்டபிறகு சில பிழைகள் நடந்ததால் தமிழ் மக்கள் இன்றைய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள் என்று சொல்லலாமே ஒழிய என்றுமே கூட்டணித் தலைவர்களை யாரும் துரோகிகள் என்று சொல்லுவதை என்னால் ஏற்க இயலாது.

பொன்னுத்துரையோடு ஒரு மணித்தியாலங் கதைத்துக் கொண் டிருந்ததால் நாலைந்து பத்தகங்களை வாசித்த மாதிரி ஒரு உணர்வுவரும். என்றாலும் தமிழரசுக் கட்சியையும் கூட்டணியையும் பற்றி அவன் நக்கலாக ஏதாவது சொன்னால், அப்போது போல இப்போதுங் கோபம் வரும்.

சமகால அரசியல் விஷயங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்த



படிப்பகம்

www.padippakam.com



போது, 1994ற் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொண்டு வந்த தீர்வுப் பொதியைப் பற்றிக் கதைதிரும்பியது. அந்த நேரம் பார்த்து வாசலடியில் ஒருவர் சயிக்கிளில் வந்து இறங்கினார். "அடேய் பொன்னா. உன்னைத் தேடி ஒவ்வொரு ஹொட்டலாத் திரிஞ்சா இங்கையெல்லாலோ வந்து நிற்கிறாய்" என்று நான் இருப்பதையுங் கவனியாமல் அவர் பொன்னுத்துரையுடன் உரிமை கொண்டாடினார்.

பொன்னுத்துரை, "இவன் தியாகமூர்த்தி. ஒருவேளை கேள்விப் பட்டிருப்பாய். முந்தி நிறையக் கதையெல்லாம் எழுதுவான்" என்று என்னிடம் சொல்லிவிட்டுத் தியாகமூர்த்தியிடம் "நீ எப்படா வந்தாய்? என்ன விசேஷம்?" என்று கேட்டான்.

"திடீரெண்டு ஒரு அலுவல். நீயும் கிளம்பிற்றாய் எண்டு உன்ட வீட்டில சொல்லிச்சினம்" என்றார் தியாகமூர்த்தி.

"இவன் எங்களோடை கொஞ்ச நேரம் இருந்தா உனக்கு மறுப்பில்லைத்தானே" என்று என்னிடஞ் சொன்ன பொன்னுத்துரை. என் அனுமதியைக் காத்திராமலே உள்ளேயிருந்து இன்னொரு வாங்கை எடுத்துப் பக்கமாக வைத்தான்.

"நான் உங்களின்ட கதையைக் குழப்பிப்போட்டன் போல" என்று மன்னிப்புக்கோரும் விதமாகத் தியாகமூர்த்தி பின்வாங்கினார். "இல்லை இல்லை, இருங்கோ" என்று அவரை அமரச் செய்தேன். "சந்திரிகாவினுடைய தீர்வுப்பொதியைப் பற்றிக் கதைச்சுக் கொண்டிருந்தம்" என்று பொன்னுத்துரை விளக்கினான். "எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகுது" என்றார் தியாகமூர்த்தி.

"எழுதின கதையா? எழுதாத கதையா?" என்று குறுக்கிட்டான் பொன்னுத்துரை.

"நடந்த கதை, ஆனா எழுத ஏலாமப் போன கதை" என்ற தியாகமூர்த்தியிடம் "சொல்லுங்கோ" என்றேன் நான்.

"இவனை விட்டால் ராவிடியக் கதை சொல்லுவான். முந்தி எழுதி அறுப்பான், இப்ப சொல்லி அறுக்கப் போறான்" என்று தியாகமூர்த்தியைச் சீண்டினான் பொன்னுத்துரை.

"இவனை விடுங்கோ, கேப்பம் உங்கட கதையை" என்றேன்.



படிப்பகம்

www.padippakam.com



பொன்னுத்துரை தியாகமூர்த்தியின் தோளில் இறுக்கித் தட்டி விட்டுச் "சரி, சொல்லடா உன்ட வேதாளம் முருக்கமரமேறின கதையை" என்று சிரித்தான். தியாகமூர்த்தி அவனுடைய நக்கலாற் பாதிக்கப்படாமற் கதையைத் தொடங்கினார்.

"அப்ப நான் இளந்தாரி. எங்கட ஊரில புதுசா ஒரு ஆள் வந்துசேர்ந்தது. ஆளின்ட ஊர்பேர் விளம்பரங்கள் ஒண்டும் தெளிவா ஆருக்குந் தெரியாது. ஒரு பழைய கோட்டும் சாறமும் தான் உடுப்பு. கையில் ஒரு பழையநாளைக் கப்பற்காரரின்ட தொப்பி. தலையிலை வைச்சு நான் காணேல்லை வெய்யில் நேரத்தில வைப்பரோ தெரியாது. அலுப்பில்லாத மனிசன். அதிகங் கதையார். ஏதாவது தொட்டாட்டு வேலை செய்து நாலுகாசு உழைச்சு யாரும் விரும்பித்தாறதைச் சாப்பிட்டுப்போட்டுத் தன் பாட்டில் கிடப்பார். அவரிட்ட ஒரு பழைய காலத்து இரும்பு றங்குப்பெட்டி இருந்தது. அதை ஒரு தேத்தண்ணிக் கடையில குடுத்து வைச்சி ருந்தர். பெட்டிக்குப் பாரமான இரும்பு ஆமைப்பூட்டுப் போட்டிருந் தது. கடை முதலாளி சுப்பிரமணியம் 'தம்பரின்ர பெட்டிய விடப் பூட்டுப் பாரம்' எண்டு சொல்லி அவரைப் பகிடி பண்ணுவார்.

"தம்பர் எண்டிறது தேத்தண்ணிக் கடையில அவருக்கு ஆரோ வைச்ச பேர். அது அப்ப 'சிரித்திரன்' சுந்தரின்ட 'சவாரித் தம்பர்' காட்டூனில இருந்து எடுத்த பேர் எண்டு நினைக்கிறன். உருவத்தில ஒரு ஒத்துமையும் இல்லையெண்டாலும் அந்தப் பேர் மட்டும் நிலைச்சுப் போச்சு. ஏதோ மரியாதைக்கு 'சவாரி' எண்டதை விட்டிட்டினம்".

"இப்ப நீ தம்பரைப் பற்றிக் கதைக்கப் போறியா, தேத்தண்ணிக் கடையைப் பற்றிக் கதைக்கப் போறியா?" என்று குறுக்கிட்டான் பொன்னுத்துரை.

"உன்ட பேப்பர்காறப் புத்தி போகாது. பொறுமையாக் கதையைக் கேட்டுப் பழகினாயெண்டாலெல்லோ ஆமானபடி எழுதேலும். உன் தரவழியள் தலைப்பை வைச்சுக் கொண்டுதானே ஒத்தாப்போல செய்திகளைச் சேர்க்கிறனீயள்" என்று பதிலடி கொடுத்து விட்டுக் கதையைத் தொடர்ந்தார் தியாகமூர்த்தி.



படிப்பகம்

www.padippakam.com



"தம்பரின்ட பெட்டிக்குள்ள என்ன இருக்குதெண்டு ஒருத்தருக்குந் தெரியாது. பெட்டி இரும்புப்பெட்டி எண்டதில பெட்டி பாரமா சாமான் பாரமா எண்டு ஆருஞ் சொல்லேலாது எண்டு கடையில வேலை செய்யிற பெடியன் என்னட்டைச் சொன்னான். நாங்கள் தம்பரைக் கேட்டுப்பார்த்தால் கேள்விக்கு மறுமொழி வராது. எண்டாலும் ஏதோ பெறுமதியான சாமான்களாக இருக்கும் எண்டு தான் தெரிஞ்சுது. தம்பர் இடையில சொன்ன ஒண்டுரண்டு கதைய ளிலயிருந்து அவர் கப்பலில் வேலை செய்து பல ஊர்களுக்குப் போய் வந்தவர் எண்டுந் தெரிஞ்சுது எண்டாலும் கப்பற்காரர் மாதிரித் தாங்கள் கண்ட ஊர்கள் சனங்கள் சாமான்கள் எண்டு ஒரு கதையும் கதையார். ஒரு நாள் தேத்தண்ணிக் கடைக்குள்ள ஆரோ கள்ளர் உள்ளிட்டுப் போட்டாங்கள்".

"பெட்டி காணாமப்போச்செண்டு சொல்லு!" என்றான் பொன்னுத்துரை.

"எட கெட்டிக்காறனா இருக்கிறியே! பேப்பர் வேலையை விட்டுப்போட்டுப் பொலிசில சேர்ந்திருந்தியெண்டா ஊரில களவு நல்லாக் குறைஞ்சிருக்கும்" என்று இன்னொரு தரம் மடக்கினார் தியாகமூர்த்தி.

"பாத்தியா பாத்தியா, உன்னை இங்கை இருக்கவைச்சுக் கதை சொல்லவிட்டா எண்ட தலைக்கு மேல ஏறுறாய்!" என்று பொன்னுத்துரை செல்லமாக ஆட்சேபித்தான்.

"சரி, நீ பேசாம இரு. நானும் பேசாம இருக்கிறன்" என்று மிகுதிக் கதையைத் தொடர்ந்தார் தியாகமூர்த்தி. "தேத்தண்ணிக் கடையில களவெடுக்க என்ன பெரிசா இருக்கும்? காசுப்பெட்டியை உடைச்சு அதில இருந்த கொஞ்சச் சில்லறையை அள்ளிப் போட்டாங்கள். சுப்பர் தாளெல்லாத்தையும் எடுத்திட்டுப் போயிடு வார். தன்ட பெட்டி காணாமப் போச்செண்டு கேள்விப் பட்டவுடன தம்பர் கொஞ்சந் திடுக்கிட்டுப் போனார். எண்டாலும் 'போற சாமான் போற காலம் வந்திட்டுது போல' எண்டு தன்னை ஆறுதற்படுத்திக் கொண்டார். எண்டாலும் முந்தியைக் காட்டிலும் கொஞ்சங் கதைக்கப் பழகிவிட்டார். பெட்டியைப் பற்றியும் அதுக் குள்ள இருந்த பதக்கங்கள் பாராட்டுப் பத்திரங்கள் எல்லாத்தைப்



படிப்பகம்

www.padippakam.com



பற்றியும் திரும்பத் திரும்பக் கதைக்கத் துவங்கிவிட்டார். நாள் போகப்போகப் பெட்டிக்குள் இருந்த சாமான்களின்ட தொகை கூடிக்கொண்டே போகுமாப் போல இருந்தது. சிலபேர் ‘அந்தாள் இட்டுக்கட்டிக் கதைக்குது எண்டும் ஆக மிஞ்சிப்போனா ஒண்டி ரண்டு பதக்கத்துக்கு மேல இராது’ எண்டுந் திட்டவட்டமாகச் சொன்னாங்கள். தம்பர் பொலிசில பெட்டியைப் பற்றி முறைப்பட மாட்டன் எண்டு பிடிவாதமா நிண்டதில அவங்களுக்கு ஐமிச்சம். வேற சிலபேர், ‘அந்தாளுக்குக் கொஞ்சங் கொஞ்சமாத்தான் இருந்த சாமானெல்லாம் நினைவில் வருகுது’ எண்டு பிடிவாதமாக நிண்டாங்கள்.

“கொஞ்சக்காலமாத் தம்பரின்ர பெட்டிக்குள்ள என்ன இருந்தது எண்டதுதான் எங்கட ஊரில முக்கியமான விவாதமா இருந்தது. இலெக்சனைப் பற்றிக்கூட நாங்கள் அப்பிடிக் கடுமையா விவாதிச் சிருக்க மாட்டம் இந்த விவாதத்துக்கு ஒரு முடிவுகட்டுகிற மாதிரி ஒருநாள் நானும் ராயப்புவும் றங்குப் பெட்டியைக் கண்டுபிடிச்சிட்டம்.

“ஆர், உன்னோட ஃபுட்போல் அடிக்க வாற ராயப்புவோ?” இது இன்னொரு முறை பொன்னுத்துரை.

“ஓம் அவன்தான். பெட்டி, கடைக்கு அங்கால இருந்த இடிஞ்ச கொட்டில் ஒண்டில கிடந்துது. எடுத்தவங்கள் அதைத் தூக்கிக் கொண்டு ஓடாமத் திறக்கப் பாத்திருக்கிறாங்கள். ஏலேல்லை, விட்டுப்போட்டு ஓடிற்றாங்கள்”.

“பெட்டி கிடைச்சது தம்பருக்குச் சந்தோசமா இருந்திருக்கும்”— இது என்னுடைய குறுக்கீடு

“‘குடுக்கமுன்னம் அதைத் திறந்து பாப்பம்’ எண்டான் ராயப்பு. எனக்குப் பிடிக்கேல்லை. எண்டாலும், ‘களவெடுக்கவா போறம்? சும்மா பாக்கத்தானே திறக்கிறம். தேடிக் குடுத்ததுக்குப் பரிசு மாதிரி எண்டு வைச்சுக்கொள்ளன்’ எண்டுபோட்டு, உடனையே ஒரு கம்பித்துண்டை வளைச்சுப் பூட்டை வலும் லேசாத் திறந்து போட்டான்”.

“பதக்கமெல்லாம் பத்திரமா இருந்துதோ?”— மறுபடியும் நான்.

“அதுக்குள்ள ஒரு இத்துப்போன ஒரு பழைய வேட்டி சால்வை



படிப்பகம்

www.padippakam.com



மட்டும் மடிச்சபடி கிடந்தது".

"களவெடுத்தவங்கள் மற்றதை எல்லாம் கொண்டு போயிருக்க மாட்டாங்களோ?"— மீண்டும் நான்.

"களவெடுத்தவன் பெட்டியை மினக்கெட்டுப் பூட்டிப் போட்டா போவான்? வேட்டிசால்வையை ஏன் திரும்ப மடிச்சு உள்ளுக்கு வைக்கப்போறான்? இப்ப ராயப்புவின்ட பிரச்சனை பெட்டியை என்ன செய்யிறது எண்டதுதான். 'பெட்டியைக் கொண்டுபோனா ஆக்கள் திறப்பினம். பிறகு தம்பரின்ர பதக்கங்கள் எங்கையெண்ட கேள்வி வரும். தம்பர் நாங்கள் களவெடுத்துப் போட்டமெண்டு சொல்லமாட்டார். அவர் அப்படியான ஆளில்லை. அப்ப, அவரின்ட புது உலகத்தை நாங்கள் ஏன் அழிக்க வேணும்?' எண்டு ரண்டு பேருமாப் பெட்டியைக் கடலுக்குள்ள வீசிப் போட்டம்".

"என்ன தம்பரின்ர பெட்டி மாதிரித்தான் சந்திரிகாவின்ட தீர்வுப்பொதியும் எண்டு சொல்லிறாயா?" பொன்னுத்துரையின் சிலநிமிட நீள மௌனம் கலைந்தது.

"தீர்வுப்பொதி இருக்கிற மட்டும் அதில என்ன இருக்கெண்டு ஆருக்குந் தெரியாது. ரண்டு சிங்களக் கட்சியுமாச் சேர்ந்து அதை அழிச்ச பிறகு அதுக்குள்ள என்னென்னெல்லாம் இருந்த தெண்டு கதைச்சினமெல்லோ!"— இது நான்.

"இன்னொரு றங்குப் பெட்டிக் கதை சொல்லட்டோ?" என்ற பொன்னுத்துரை, "1976ம் ஆண்டு ஒறேற்றர் சுப்பிரமணியம் தலைமையில சீனாக் கொம்யூனிஸ்ற் சண்முகதாசனுக்கும் தமிழரசுக் கட்சித் தருமலிங்கத்தாருக்கும் ஒரு விவாதம் நடந்தது நினைப்பிருக்கோ?" என்று சிரித்தான்.

"ஓ அது வெற்றி தோல்வியில்லாமத் தானே முடிஞ்சு போனது" என்றேன் நான்.

"என்ன? விழுந்தாலும் மீசையில மண் ஒட்டாத கதை கதைக்கிறாய்! உங்கட தமிழீழத்தை எப்பிடி வெண்டு தரப்போறியளெண்டு சண்முகதாசன் கேக்கத், தருமலிங்கத்தார் அது எங்கட ரகசியம் எண்டெல்லோ சமாளிச்சவர். கூடக் கெட்டித்தனமா வாதிச்சவர் சண்முகதாசன் எண்டுதானே ஒறேற்றரும் சொல்லிப்போட்டார்".



படிப்பகம்

www.padippakam.com



"ஒறேற்றர் எப்பவும் அவங்கட பக்கந்தானே".

"அதல்லப் பிரச்சினை. தருமலிங்கத்தாரின்ர றங்குப் பெட்டிக் குள்ள கந்தல் வேட்டி சால்வை கூட இருக்கேல்லை எண்டு ரண்டு வருசத்தில நல்லாத் தெரிஞ்சு போச்செல்லோ. அதைத்தான் சொன்னன்".

"நீ இப்ப முழுசா அவங்கட பக்கமோ?"

"பார். நான் அண்டைக்கும் கட்சி இல்லாத ஆள், இண்டைக்குங் கட்சி இல்லாத ஆள். நான் சொல்லிறது என்னெண்டா எந்தப் பெரிய பிரச்சினை எண்டாலும் சனத்திட்டைச் சொல்லி விளங்கப்படுத்த ஏலாத தீர்வு இல்லை. இது இப்போதைக்குச் சொல்லேலாத சிதம்பர ரகசியம் எண்டு சொல்லிற ஆக்களிட்டை உண்மையா அப்பிடி ஒரு ரகசியமுமில்லை. உருப்படியா ஒரு யோசனையுமில்லை இதுதான் என்ட அனுபவம்".

"சிதம்பர ரகசியமும் அந்த மாதிரி ரகசியம் தானே!" என்று தியாகமூர்த்தி சிரித்தார். "சரி, நான் வாறன் நாளைக்குச் சந்திக்கிறன்" என்று பொன்னுத்துரையிடம் சொல்லிவிட்டு எனக்குக் கையசைத்துவிட்டுத் தியாகமூர்த்தி சயிக்கிளில் ஏறினார்.

பொன்னுத்துரை சொன்னது சரிபோல இருப்பதாக என் அறிவு சொன்னது. அதை ஏற்கக்கூடாது எனது மனது மறுத்தது. எனக்கு நித்திரைவர நீண்டநேரமெடுத்தது. பொன்னுத்துரையின் மூச்சொலி மெல்லியதாகக் காதில் விழுந்தது.

*(தாயகம்-53 ஏப்ரல்-ஜூன் 2005)*



படிப்பகம்

www.padippakam.com


# நிவாரணம்



முத்துக்குமார் படுவேகமாகவே வேலையை முடித்து விட்டான்



படிப்பகம்

www.padippakam.com


சாப்பிட்டுப், படுக்கப்போவதற்குக் கொஞ்சம் முன்னதாகத்தான், ஈஸ்வரி "உங்கட சினேகிதர் றூப்பேட் பின்னேரம் ஃபோன் பண்ணிணவர். சொல்ல மறந்து போயிட்டன்" என்றார். "நல்ல மறதி தான்" என்று என் எரிச்சலைச் சாடையாகத் தெரிவித்தேன். ஈஸ்வரிக்கு என்னை எப்படிச் சமாளிப்பது என்று தெரியும். முப்பது சொச்ச வருஷ அனுபவமல்லவா! குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிற பாவனையில் ஒரு மெல்லிய முறுவலுடன் ஒரு வழக்குச் சமாதான மாகத் தீர்க்கப்பட்டுவிட்டது.

"ஏதேன் சொன்னாரா?"

"ஒண்டுஞ் சொல்லேல்லை"

"என்னை ஃபோன் பண்ணச் சொல்லி...."

"நீங்கள் திருப்பி எடுப்பீங்கள் எண்டு சொன்னன்".

"அது தான் இப்ப ஏலாமப் போச்சே!" என்று எனக்குள் முணுமுணுத்தேன். ஈஸ்வரி கண்டு கொள்ளவில்லை.

றூப்பேட் றொஸைரோ ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர். சேவை யில் இறுதிக் காலங்களில் அமைச்சர்களின் நிரந்தரச் செயலாள ராக இருந்தவர். நான் எங்கள் தொழிற்சங்கத்தின் செயற்குழுவில் இருந்ததால் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகட்கு இடைக்கிடை போக வேண்டியிருந்தது. தொழிற் சட்டம் பற்றிய என்னுடைய அறிவு காரணமாக, மேல் மட்டங்களிற் பேசவேண்டி வரும்போது என்னையும் இடையிடையே அழைத்துப் போவார்கள். அப்படித்தான் றூப்பேட்டுடன் பழக்கம் ஏற்பட்டது.

எளிமையான மனிதர். இடதுசாரிச் சிந்தனையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்பது அவர் ஓய்வுபெற்ற பிறகுதான் தெரியவந்தது. நானும் ஓய்வுபெற்று மாத்தளையில் குடியேறிய பிறகுதான் அவருடைய ஊரும் மாத்தளை என்று தெரியவந்தது. அவருடைய உறவினர்கள் எலலாரும் 1956க்குப் பிறகு கொஞ்சங் கொஞ்சமாக அவுஸ்திரேலியாவில் குடியேறப் போய்விட்டார்கள். பறங்கியருக்கு இலங்கையில் எதிர்காலம் இல்லை என்பது அவர்க ளுடைய எண்ணம். றூப்பேட்டை யாராலும் அசைக்க முடிய வில்லை: பிள்ளைகள் வளர்ந்து அவர்களும் அவுஸ்திரேலியா


படிப்பகம்

www.padippakam.com



வுக்குப் போனபோது அவருடைய மனைவி ஜனெற்றுக்குப் புலம் பெயரும் ஆவல் எற்பட்டது. றூப்பேட் ஓய்வுபெறும்வரை காத்திருந்து, அவஸ்திரேலியாவில் குடியேறுகிற யோசனையைச் சொன்னர். றூப்பேட் அசையவில்லை. 'ஜனெற் வேண்டுமானால் போய் மக்களுடன் இருந்து விட்டு வரலாம், தன்னுடைய நாடு இலங்கை தான்' என்று உறுதியாகச் சொல்லிவிட்டார். என்றாலும் பிள்ளைகளுடைய நச்சரிப்புத் தாங்காமல் இரண்டு மூன்று வருஷத்துக்கு ஒருமுறை லீவிற் போய் வருவார். அதுவும் ஆக மிஞ்சினால் நாலைந்து கிழமை தான். ஜனெற், வருடந்தவறாமல், சில மாதங்களாவது நின்றுவிட்டு வருவார்.

றூப்பேட் தனியாக இருக்கிற நாட்களில் நாங்கள் அடிக்கடி சந்திப்போம். தொழிற்சங்கங்கள் எவ்வளவு தூரம் சீர்குலைந்துவிட்டன என்பதைப்பற்றி அவர் முதலிற் சொல்லியபோது எனக்கு நம்பக் கடினமாக இருந்தது. ஒரு சில போராட்டங்களில் தலைமை தவறான முடிவுகளை எடுத்தது பற்றி உள்ளே சண்டை பிடித்திருக்கிறோம். என்றாலும் எவ்வளவு பெரிய காட்டிக்கொடுப்புக்களும் களவாணித்தனங்களும் இருந்தன என்பதை நம்பச் சிலகாலம் எடுத்தது.

தொழிற்சங்கப் போராட்டங்கள் பற்றி றூப்பேட் சற்று அனுதாபமான நிலைப்பாட்டை எடுத்தார் என்பதை அவர் சேவையிலிருந்தபோது சாடைமாடையாக மட்டுமே அறியமுடிந்தது. சேவைக் காலத்தில் மிகவும் பொறுப்புடன் யாருக்கும் பிடிகொடுக்காமலே பேசுவார். இப்போது சுதந்திரமான மனிதர். முக்கியமான சில இடதுசாரித் தலைவர்களுடன் அவர் வைத்திருந்த தொடர்புகள் எல்லாம் இனி இரகசியங்களில்லை. தொழிற்சங்கங்கள் தேவை என்பது இன்னமும் அவரது நிலைப்பாடு என்றாலும், தலைமைகளிடம் எல்லாப் பொறுப்பையும் விடாமல், கீழ்மட்டத்தில் உள்ள சங்க ஊழியர்கள் எல்லா விஷயங்களையும் பற்றிக் கேள்வி எழுப்ப வேண்டும் என்று வாதிப்பார். எனக்கு அதில் உடன்பாடில்லை. அறிவும் அனுபவமும் உள்ளவர்கள் தான் எல்லாப் பொறுப்பையும் எடுத்துச் செயற்பட வேண்டும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை.



படிப்பகம்

www.padippakam.com



காலையுணவை முடித்த கையோடு றூப்பேட்டுக்கு ∴போன் பண்ணினேன். மறுநாள் பின்னேரம் வசதிப்பட்டால் சந்திப்போமென்று சொன்னார். அதோடு “முத்துக்குமாரிடமிருந்து ஏதாவது புதினம் கிடைத்ததா?” என்று கேட்டார். இல்லையென்றேன். சந்திக்கும்போது கதைக்கலாம் என்றார்.

***

முத்துக்குமார் என்னுடைய பழைய தொழிற்சங்கத் தோழர் குமாரசுவாமியின் இளைய மகன். தனிப்பட்டமுறையில் எனக்குக் குமாரசுவாமியுடன் நெருக்கம் என்று சொல்லமாட்டேன். சங்க அலுவல்கள் தொடர்பாக இடையிடை சந்தித்துக் கொள்ளுவோம். மனைவி பிள்ளைகளையும் தெரியும். குமாரசுவாமி ஓய்வுபெற்ற பிறகு தொடர்பு பெருமளவும் விட்டுப்போய்விட்டது. 1995க்குப் பிறகு, குமாரசுவாமியின் ஊர் காணாமற் போய்விட்டது. ஊர் இருந்த இடத்தில் இருப்பது வெட்டைவெளி. கட்டிடங்களையெல்லாம் ராணுவத்தினர் புள்டோசரினால் தட்டித் தரைமட்டமாக்கி விட்டார்கள். நல்ல வேளைக்கு, அவருடைய மூத்தமகன் செல்வகுமார் கொழும்பில் தனியார் நிறுவனமொன்றில் வேலையில் இருந்தான். வருமானம் மட்டுமட்டாகத் தான் இருந்தது. குமாரசுவாமியுடைய ஓய்வூதியம் கொஞ்சந்தான் என்றாலும் செல்வகுமாருக்கு அதிகம் சுமையேற்றாமல் தாயும் தகப்பனும் அவனுடன் கல்கிஸ்ஸையில் ஒரு சின்ன அனெக்ஸில் இருக்க இயலுமாயிருந்தது. அவர்களுடைய எதிர்பார்ப்பு எல்லாம் முத்துக்குமார் எஞ்சினியர் பட்டம் பெற்று உத்தியோகம் பெறுவதின் மீது தங்கியிருந்தது.

முத்துக்குமார் கெட்டிக்காரன். இலக்ற்றிக்கல் எஞ்சினியரிங் செய்து திறமையாகச் சித்தி பெற்றவன். என்றாலும் எட்டு மாதம் தற்காலிகமாகப் பல்கலைக்கழகத்தில் போதனாசிரியராக வேலை பார்த்த பின்பு நிரந்தரமாக வேலை எதுவுங் கிடைக்கவில்லை. இரண்டு மாதங்கள் வேலை இல்லாமல் இருந்ததோடு குமாரசுவாமிக்குப் பெரிய கவலையாகி விட்டது. அவருக்குப் பெரிய இடத்துத் தொடர்புகளும் இல்லை. உதவக்கூடியவர்கள் என்று கொழும்பில் யாருடைய அறிமுகமும் இல்லை. அதற்கும் மேலாக யாரிடமும் போய் வாய்விட்டு உதவி கேட்டு மரியாதை கெட அவருடைய



படிப்பகம்

மனநிலை இடங்கொடுக்கவில்லை.

கொழும்புக்கு ஒரு சிறிய அலுவலாகப் போனபோது தான் செல்வகுமாரைத் தற்செயலாகக் கண்டேன்.

"கணேஸ் அங்கிள்...." அவன் தான் முதலில் என்னை அடையாளங் கண்டான்.

"நீ குமாரசுவாமியின்ட மூத்த பெடியனெல்லோ!"

"ஓம்.... செல்வகுமார்". என்னுடைய சங்கடத்தை அவன் கெட்டித்தனமாகத் தீர்த்தான்.

"அப்பா எப்பிடி இருக்கிறார்?"

"என்னோட தான்...." கொஞ்சம் இழுத்தான்.

"எல்லாஞ் சரிதானே?"

"ஓ...."

"அம்மா, தம்பி...."

"எல்லாருஞ் சுகம், முத்து எஞ்சினியரிங் முடிச்சிட்டான்."

"எங்க வேலை?"

"கொஞ்சநாளா வேலையில்லை".

"வெளியூர் போற நோக்கமோ?"

"இல்லை, இங்கதான் தெண்டிக்கிறான். கொஞ்சம் கஷ்டம் போலத் தெரியுது...."

எஞ்சினியர்மாருக்கு வேலை எடுக்கிறது கஷ்டம் எண்டு நான் நினைத்திருக்கவில்லை. தரப்படுத்தல் பிரச்சனை துவங்கினதே எஞ்சினியரிங் பட்டப்படிப்புக்கு வந்த போட்டியாலென்பது நினைவுக்கு வந்தது இவ்வளவு சண்டையும் கடைசியில் வேலை நிச்சயமில்லாத பட்டப்படிப்புக்கா என்று நினைத்துக் கொண்டேன்.

குமாரசுவாமிக்காகவாவது என்னால் என்னவேனுஞ் செய்ய முடியுமா என்ற எண்ணம் மனதைக் குடைந்தது. நூப்பேட்டிடம் ஆலோசனை கேட்டுப் பார்ப்போம் என்ற முடிவுடன் செல்வகுமாரிடம் வீட்டு விலாசத்தையும் வேலைத்தலத் தொலைபேசி எண்ணையும் கேட்டுக் குறித்துக் கொண்டேன். குமாரசுவாமியை அடுத்த

முறை வரும்போது வந்துகாணுவதாகச் சொல்லிவிட்டு மாத்த ளைக்குத் திரும்பினேன்.

அடுத்தநாளே றூப்பேட்டைப் போய்ச்சந்தித்து ஆலோசனை கேட்டேன்.

“கணேஷ், இது வெறும் வேலையில்லாப் பிரச்சனையில்லை” என்றார்.

“முத்துக்குமாரின் தனிப்பட்ட குறைபாடு எண்டு நினைக்கி றீங்களா?”

“கணேஷ், நீங்கள் ஒரு தமிழர். என்னை விட உங்களுக்கு இது நல்லா விளங்கவேணும். சில அரசாங்கத் திணைக்களங் களில் திட்டமிட்டே தமிழர்களை ஒதுக்குகிறார்கள். தனியார்துறை யிலே கூடத் தமிழ் முதலாளிமாரே பாதுகாப்புப் பிரச்சனை போல பலவேறு காரணங்களால் தமிழர்களுக்கு அதிகம் வாய்ப்புத் தருகிறதில்லை. இலக்ற்றிக்கல் எஞ்சினியரிங் வேலை வாய்ப்புக்கள் பெருமளவும் ஒரு அமைச்சிலேயே இருக்கிறதால் நிலைமை கொஞ்சம் மோசமாக இருக்கிறது”.

“என்ன செய்யலாமென்று நினைக்கிறீர்கள்?”

“அமைச்சரவையில் எனக்கு ஒரு சினேகிதர் இருக்கிறார். சினேகிதர் என்கிறதை விட எனக்குக் கொஞ்சங் கடமைப்பட்டவர் என்று சொல்லலாம். அவர் மூலம் இரண்டு விதமாகத் தெண்டிக்க லாம்”.

“இரண்டு விதம்?”

“ஓம். ஒன்று, எனக்கு ஒரு தனிப்பட்ட உதவியாக முத்துக் குமாருக்கு ஒரு வேலைதரச் செய்யலாம். ஆனால் அது ஒருவேளை என்னைப் பற்றிய பிழையான எண்ணத்தை எற்படுத்தும். வேறு வழி இல்லாவிட்டால் அந்த வழியைத் தேடலாம்”.

“அது வேண்டாம். மற்றது?”

“இதை ஒரு அரசியல் பிரச்சினையாக முன்வைத்து நியாயம் தேடலாம். கொஞ்சங் கூடுதலான முயற்சி தேவை. ஆனாலுங் கூடுதலான நன்மை கிடைக்கும்”

www.padippakam.com



"நான் என்ன செய்யவேணும்?"

"நீங்களில்லை, முத்துக்குமார். அவன் தன்னோடு படித்த மாணவர்களில் எத்தனை தமிழ்ப் பட்டதாரிகளுக்கு வேலை இல்லை. எத்தனை சிங்களப் பட்டதாரிகளுக்கு வேலை இல்லை, வேலை இல்லாதவர்களின் தகுதிகள் போல விஷயங்களைத் தொகுத்துத் தர வேண்டும்".

"தனியாக அவனாலே முடியுமா?"

"அது அவனுடைய விருப்பம். நூற்றுக்கு நூறு முழுமையாகத் தேவையில்லை எவ்வளவு மோசமான பாரபட்சமென்று நான் தெளிவாகக் காட்டக்கூடிய மாதிரி இருந்தால் போதும்".

றுப்பேட்டுக்கு நன்றி சொல்லிவிட்டுப் புறப்படும் போது "இயலுமானால் ஒரு கிழமையில் ஆகமிஞ்சினாற் பத்து நாளிற் கிடைத்தால் வசதி" என்று சொன்ன றூப்பேட், நான் விளக்கம் கேட்க முன்னரே "இன்னும் இரண்டு கிழமையில் அவுஸ்திரேலியாவுக்குப் போய்த், திரும்பி வர ஒரு மாதமாகும்" என்றார்.

***

முத்துக்குமார் படுவேகமாகவே வேலையை முடித்து விட்டான். வெளியூர் போனவர்களைவிட மிஞ்சியிருந்தவர்களில் தொண்ணூறு சதவீதமானோரின் விவரங்களைச் சேர்த்துக்கொண்டு வந்தான். இரண்டுபேரும் றூப்பேட்டைப் போய்ப் பார்த்தோம். றுப்பேட் முத்துக்குமார் திரட்டிய விவரங்களைப் பார்த்தார்.

"இதையெல்லாம் கொஞ்சம் திருத்தி எழுத வேண்டியிருக்கிறது. அரசியல்வாதிகட்கு விளங்குகிற மாதிரி எழுதாவிட்டால் வேலை நடக்காது" என்று சொன்ன றூப்பேட் அவற்றை எப்படி மாற்றித் தொகுப்பது என்று எனக்கு விளங்கப்படுத்தினார். அமைச்சருடன் தொடர்புகொண்டு முத்துக்குமார் அவரைச் சந்திக்க ஏற்பாடு செய்கிறதாகவுஞ் சொன்னார்.

"அனேகமாக நான் திரும்பிவர முன்னம் எப்பிடியும் ஒரு முடிவு கிடைக்கும்" என்றுமட்டும் உறுதியாகச் சொன்னார். முடிவு நல்லதா இல்லையா என்று எப்படி அவருக்குச் சொல்ல முடியும்?"

"எங்களுடைய பிரச்சனைகளைப் பற்றிப் பேசினால் அமைச்ச



படிப்பகம்

www.padippakam.com



ருக்குப் பிடிக்குமா?" இது முத்துக்குமாரின் கவலை.

"நீங்கள் பேசாவிட்டால் யார் பேச இயலும்?" என்று றுப்பேட் உற்சாகப்படுத்தினார்.

"என்ன சொல்லுவது எப்படிச் சொல்லுவது என்கிறதை யெல்லாம் நான் விளங்கப்படுத்துகிறேன்" என்று நான் முன்வந்தேன்.

றூப்பேட்டை அதற்கு மேலும் மினக்கெடுத்துவது சரியில்லை என்பதால் இரண்டுபேரும் திரும்பி வீட்டுக்கு வந்தோம்.

***

அதன் பின்னர் சிலநாட்களாக முத்துக்குமாரின் பிரச்சனையைப் பற்றி நான் யோசிக்கவில்லை. அமைச்சருடனான சந்திப்பை ஏற்படுத்த எப்படியுஞ் சில நாட்கள் எடுக்கும் என்று நினைத்தேன். ஏதாவது பயனுள்ளவிதமாக நடந்திருந்தால் செல்வகுமாரோ முத்துக்குமாரோ எனக்குத் தெரிவித்திருப்பார்கள். றூப்பேட் வெளியூர் போய்த் திரும்பி வரும்வரை காத்திருந்தேன் என்றுஞ் சொல்லமுடியாது. அந்த விடயத்தை ஏறத்தாழ மறந்தேபோய் விட்டேன் என்பது தான் உண்மை.

றூப்பேட் திரும்பிவந்த பின்னர் தானாக என்னுடன் தொலை பேசியில் தொடர்புகொள்ள முயன்றார். மறுநாட்காலை நான் அவரைத் தொலைபேசியில் அழைத்தபோது "முத்துக்குமார் அமைச்சரைத் சந்தித்து விவரங்களைக் கொடுத்தானல்லவா?" என்று கேட்டார்".

"தெரியாது.... அவனும் சொல்லவில்லை.... நானும் விசாரிக்கவில்லை" என்றேன்.

"நான் போன மறுநாளே அவன் அமைச்சரைச் சந்தித்திருக்க வேண்டும். நாலு கிழமைகள் கடந்துவிட்டன.... விஷயம் பிழையா கப் போக நியாயமில்லை.... போகாமலே விட்டானோ தெரியாது".

"நானும் தொடர்ந்து விசாரித்திருக்க வேண்டும்.... தவறி விட்டேன்...."

"பரவாயில்லை. நானே அமைச்சரிடம் பேசிக் கொள்கிறேன்". உரையாடல் வேறு விடயங்களைப் பற்றித் தொடர்ந்தது.

***



படிப்பகம்

www.padippakam.com



சொன்னபடியே றூப்பேட் ஓரிரு நாட்களில் மீண்டும் என்னுடன் தொடர்புகொண்டு, மாலை என்னுடைய வீட்டுப் பக்கம் வருவதாக வும் முழுவிவரங்களையும் சொல்லுவதாகவும் கூறிவிட்டு, என்னு டைய மறுமொழிக்குக் காத்திராமல் தொடர்பைத் துண்டித்து விட்டாரோ தொடர்பு தானாகவே துண்டிக்கப்பட்டதோ தெரியாது.

றூப்பேட்டின் வருகைக்காக ஈஸ்வரி கொஞ்சம் பலகாரங்களை ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார். அவுஸ்திரேலியப் பயணம் பற்றிய என்னுடைய விசாரணைகட்குப் பதில் சொல்லியபடியே பலகாரங் களைச் சுவைத்த றூப்பேட் ஈஸ்வரியிடம் அவை மிக நன்றா யிருப்பதாகச் சொல்லிவிட்டுத் தான் சொல்லவந்த கதையை விவரித்தார்.

முத்துக்குமார், சொன்னபடியே அமைச்சரைப் போய்ச் சந்தித் திருந்தான். அமைச்சர் தேர்ந்த அரசியல்வாதி. முத்துக்குமாரின் முயற்சியை வெகுவாகப் பாராட்டினார். பிறகு அவனிடம், அவன் சொல்லுகிற விடயம் மிகமுக்கியமானது என்றும் அதைத் திணைக் கள மட்டத்திலும் அமைச்சரவை மட்டத்திலும் கவனத்திற்குக் கொண்டு செல்வதாகவும் பிரச்சனை தீரும் வரை அவன் வேலை இல்லாமல் இருப்பது சரியல்ல என்றும் சொல்லி, அவனுக்குத் தன்னுடைய அமைச்சின் கீழிருந்த திணைக்களம் ஒன்றில் நியமனத்திற்குப் பரிந்துரைப்பதாகவும் அவனிடம் சொல்லியிருக் கிறார் என்று றூப்பேட் விளக்கினார்.

“அமைச்சர் சொன்னபடியே செய்தாரா?” என்று கேட்டேன்.

“ஒரு பகுதியைச் செய்தார். மற்றதைப் பற்றி நிச்சயமில்லை”.

“எதைச் செய்தார்?”

“ஒரு அரசியல்வாதிக்குச் செய்ய லேசானதை” என்று கூறி விட்டு நடந்ததை விளக்கினார்.

“முத்துக்குமாரின் தேவை தமிழ்ப் பட்டதாரிகளின் பிரச்சனை யைத் தீர்ப்பதல்ல என்று மதிப்பிட அமைச்சருக்கு வெகுநேரம் எடுக்கவில்லை. தன்னுடைய திணைக்களம் ஒன்றில் வேலை என்று சொன்னவுடனேயே அவன் எந்தத் திணைக்களம், எப்போது வேலை தொடங்கமுடியும் என்ற விதமான விசாரணைகளில்



படிப்பகம்

www.padippakam.com



இறங்கிவிட்டான். அமைச்சருக்கு அந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதன் மூலம் பெரிய பிரச்சனையைப் பற்றி அமைச்சரவையிலும் திணைக் களத்திலும் பேசவும் தனது அரசியல் நம்பகத்தன்மையைக் கெடுத்துக் கொள்ளவும் தேவையில்லாமற் போய் விட்டது".

"எந்த விதமான நம்பகத்தன்மை?" என்று கேட்டேன்.

"அமைச்சர் ஒரு தமிழர் என்று நான் சொல்லவில்லையா?" என்று கூறிவிட்டு, "ஒரு தமிழ் அமைச்சர் சிறுபான்மையினரின் பிரச்சனைகளைப் பற்றிக் கொள்கையளவில் அல்லது பொதுவான நடைமுறையில் என்ன மாற்றத்தைக் கொண்டுவரமுடியும்? ஆனா லும், தனிப்பட்ட சிறு உதவிகளைப் பெற்றுத்தருவதில் ஒரு சிரமமும் இல்லை" என்று சொல்லிமுடித்தார்.

எனக்கு முத்துக்குமாரிடம் கோபம் வந்தது 'இப்படியும் ஒரு சுயநலமியா' என்று யோசித்தேன். அதனிடையே றூப்பேட் குறுக் கிட்டு "இந்த மாதிரியான பிரச்சனைகள் தமிழ்ப் பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அறியாதவையல்ல என்று நினைக் கிறேன். அவர்கள் ஏன் அவற்றைப்பற்றிப் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்புவதில்லை? அவற்றைப்பற்றிச் சிங்கள அரசியல் வாதிகளில் இனவாதிகளல்லாத யாரிடமும் பேச யாரும் ஏன் முயலுவதில்லை?" என்று கேள்விகளை எழுப்பினார்.

யோசித்துப் பார்த்தேன். பாதிக்கப்பட்ட தமிழ்ப் பட்டதாரிகள் எத்தனை பேர் இருந்திருப்பார்கள்! ஒன்றுசேர்ந்து தங்கள் பிரச்சனையைப் பற்றித் தங்கள் தலைவர்கள் எனப்படுவோரிடம் பேச அவர்களுக்கு ஏன் இயலவில்லை? ஒவ்வொருவரும் தன்னுடைய பிரச்சனைக்கு அப்பால் வேறெதையும் தீர்க்க அக்கறையில்லாமல் இருப்பது போலவே தெரிந்தது.

"வர்க்க அரசியல் என்கிறது அதைத்தான்" என்று றூப்பேட் மீண்டும் என் சிந்தனையோட்டத்திற் குறுக்கிட்டார்.

"அரசியல்வாதிகள் வசதிபடைத்தவர்களின் அரசியலை நடத்துகிறார்கள். பட்டதாரிகள் எல்லா நடுத்தர வர்க்கத்தினரைப் போலவும் தனிப்பட்ட முன்னேற்றத்தையும் பாதுகாப்பையும் பற்றி மட்டுமே கவனிக்கிறார்கள். வர்க்க உணர்வு என்கிறது தொழி



படிப்பகம்

www.padippakam.com



தொழிலாளிகளிடம் மட்டுமே வலுவாக இருக்கமுடியும்'' என்றார்.

அவர் சொல்லுவது சரிபோல இருந்தது ஆனால் எனக்கு ஐயங்களும் இருந்தன. றூப்பேட் பின்னர் வேறு விடயங்களைப் பற்றி என்னுடன் கொஞ்சநேரம் உரையாடிவிட்டுப் புறப்படும்போது, என்ன நினைப்பிலோ, என்னிடம் ''நடுத்தர வர்க்கம் என்பது நிலையான நிரந்தரமான ஒன்றல்ல. அதனுடைய இருப்பு மிரட்டலுக்கு உள்ளாகும்போது அது சமூகச்சார்பாக யோசிக்கு மாறு கட்டாயப்படுத்தப்படும்'' என்று சொல்லி விடைபெற்றார்.

முத்துக்குமாரிடம் ஏற்பட்ட கோபம் அடங்கி, அது இரக்கமாகி விட்டதை உணர்ந்தேன்.


*(தாயகம்-54, டிசம்பர் 2005)*



படிப்பகம்

*சிவசேகரம்*

# சிறை மீட்புப் படலம்



*காவல்துறைமீது ஸ்ரீராம் வேகமாக இழக்கத் தொடங்கிய நம்பிக்கை கொஞ்சங்கொஞ்சமாக மீளத் தொடங்கியது*

கலாநிதி ஸ்ரீராமுக்குச் சட்டத்திலும் நீதி நிருவாகத்திலும் உள்ள நம்பிக்கை அவருடைய கடவுள் நம்பிக்கைக்கு எந்த வகையிலும் சளைத்ததல்ல. எனவே சின்னத்தம்பியைப் பொலிஸ் பிடித்துக் கொண்டுபோய் றிமாண்டில் வைத்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டவுடன், சின்னத்தம்பியின் தாயாரான சரசுவதி சொன்ன விடயங்களை விசாரித்தறிந்து, தானே போய்ச் சின்னத் தம்பியை மீட்டுக்கொண்டு வருகிறேன் என்று புறப்பட்டு விட்டார். என்றாலும் அதிலே சில பிரச்சனைகள் இருந்தன. முதலாவது, சின்னத்தம்பியை ஸ்ரீராமுக்கு முன்னே பின்னே தெரியாது என்பது. இரண்டாவது, ஸ்ரீராமுக்கு இலங்கைப் பொலிஸைப் பற்றி எதுவும் தெரியாது என்பது. மூன்றாவது, ஸ்ரீராமுக்குச் சிங்களமோ தமிழோ பேசவே இயலாது என்பது.

ஸ்ரீராம் எப்படி இந்த ஊரில் வாழுகிறார் என்று கேட்கிறீர்களா? அவர் ஸ்கொட்டாந்தில் உள்ள அபர்டீன் நகரிலிருந்து முதல்நாள் இரவு தான் கொழும்புக்கு வந்திருந்தார். அவருக்கு இங்கே சொந்தம் உறவு என்று யாரும் இல்லை. அவர் பிறந்து வளர்ந்தது எல்லாம் லண்டனில். பிறகு வடக்கே பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பதினைந்து வருடங்களாக உத்தியோகம். ஸ்ரீராமின் தகப்பனார், 1958 கலவரத்தோடு, தன்னுடைய மனைவியோடும் மகளோடும் வெளியேறியவர். இரண்டுமுறை இலங்கைக்கு வந்து போனார். 1983க்குப் பிறகு, வருகிற எண்ணமே விட்டுப்போய்விட்டது. சராசரியான படித்த ஆங்கிலேயர் ஒருவருக்கு இலங்கையைப் பற்றி உள்ள அறிவிற்குக் கொஞ்சம் மேலாக ஸ்ரீராமுக்கு இலங்கையில் உள்ள பிரச்சனைகள் பற்றித் தெரியும். புண்ணியமூர்த்தி என்கிற கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளர் தன்னுடைய ஸபாற்றிக்கல் லீவை (அதாவது ஏழுவருடப் பணிக்குப் பிறகு கிடைக்கிற ஒருவருட விடுப்பை) அபர்டீனிஸ் செலவிட்டபோது அவருக்கு ஸ்ரீராமுடன் பழகக்கிடைத்தது. இரண்டுபேருக்கும் நன்றாக ஒத்துப்போனது. அதன் விளைவாக, ஸ்ரீராம் 2006ம் ஆண்டுத் தொடக்கத்தில் இரண்டு வாரங்களைப் புண்ணிய மூர்த்தியுடன் கழிப்பதற்கு ஏற்பாடானது.

www.padippakam.com



புண்ணியமூர்த்தி கொழும்பில் கொஞ்சம் வசதியானதும் கொஞ்சம் வசதியில்லாததும் என்று சொல்லக்கூடிய பகுதியான நாரஹேன்பிட்டவில் இடவசதியான ஒரு வீட்டில் வாழுகிறவர். மூத்தமகன் அவுஸ்ரேலியாவில் மேற்படிப்புக்குப் போய்விட்டார். மகள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டில். இளையமகன் பாபு என்கிற சுரேஷ்குமார் இன்னமும் பாட சாலையில். வீட்டில் மனைவி சந்திராவுக்கு உதவியாக இடையி டையே வேலைசெய்து போகிறவர் தான் சரசுவதி. சரசுவதியின் இளையமகன் குட்டியான் என்கிற சின்னத்தம்பி கொஞ்சம் செல்லம் கொடுத்து வளர்க்கப்பட்டதால் எட்டாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திவிட்டான். கொஞ்சம் விளையாட்டுப்புத்தி என்று சொல்லலாம். அவனுக்கு நல்ல சிநேகிதர்களும் இருந்தார்கள், அப்படியில்லாதவர்களும் இருந்தார்கள். என்றாலும் பொதுவாகத் தொந்தரவில் மாட்டிக்கொள்ளாமல் இருந்துவந்தான். வயது 15 என்றாலும் 17, 18 என்று மதிக்கக்கூடிய உயரமும் தோற்றமும்.

தொந்தரவில் மாட்டிக்கொள்ளாமல் என்றா சொன்னேன்? அது ஸ்ரீராம் இலங்கையில் காலடிவைத்த நாள் வரை. ஸ்ரீராம் அதில் எதற்கும் காரணம் என்று அவசரப்பட்டு யாரும் நினைத்து விடக்கூடாது. பொலிசில் அகப்பட்ட அன்றைக்குக்கூடக் குட்டி யான் ஒரு வம்புதும்புக்கும் போகவில்லை— இது பின்பு சரசுவதி யின் மூலம் தெளிவுபடுத்தப்பட்ட தகவல். எல்லாரையும் போல, சரசுவதியும் தேவையற்றுப் பொய்சொல்ல மாட்டார். அவரின்படி, ஒசாமா என்கிற பையனுடன் குட்டியான் கொழும்பு புறக் கோட்டையில் தெருவழியே போய்க்கொண்டிருந்தபோது பொலிஸ்காரரர் ஒருவர் விசில் ஊதி இரண்டு பேரையும் நிற்கச் சொன்னதும் குட்டியான் நின்றான். ஒசாமா கேட்காதமாதிரி நடந்தான். பொலிஸ்காரரர் அவனைத் துரத்திப்பிடித்து அடையாள அட்டையைக் கேட்டார். அவனிடம் அடையாள அட்டை இல்லை. எனவே ஒசமாவை வா என்று பொலிஸ் ஸ்ற்றேஷ னுக்கு இழுத்துக்கொண்டு போக, குட்டியான் தன் நட்பைப் பிரகடனம் செய்கிற நோக்கத்துடன் தானுங் கூடச்செல்ல



படிப்பகம்

www.padippakam.com



முற்பட்டான். பொலிஸ்காரர் அவனைப் "போடா" (உண்மையாக "உம்ப பளையாங்") என்று விரட்டியதையும் மீறி நண்பனுடன் போனதாக சரசுவதியின் வாக்குமூலம்.

*****

ஒசாமாவின் உண்மையான பேர் குட்டியானுக்குத் தெரியாது. ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரியும். ஒசாமா முஸ்லிமில்லை. அவனுடைய அப்பா கோட்டையில் ஒரு சிறிய கடை முதலாளி. அவருடைய உண்மை, நிச்சயமாக, குட்டியானுக்குத் துணை யாக ஒசாமா போய் அகப்பட்டான் என்றே அமையும் என்றும் பொலிஸ்காரருடைய உண்மை இரண்டுபேருமே சந்தேகத்துக்கு இடமளிக்கிறவிதமாக நடந்து கொண்டார்கள் என்றும் அவர்க ளிடம் அடையாள அட்டைகள் இல்லை என்றும் பொலிஸ் ஸ்டேஷனில் உள்ள பதிவுப்புத்தகத்தில் அமையுமென்றும் நாங்கள் நியாயமாக ஊகிக்கலாம்.

சரசுவதி பதறியபடி வந்து சந்திராவிடம் உதவி கேட்டபோது, புண்ணியமூர்த்தி வீட்டில் இல்லை. அதனாலேதான் ஸ்ரீராம் தானாகவே உதவ முன்வரநேர்ந்தது. சந்திரா நான் தொடக்கத் தில் சொன்ன மூன்று காரணங்களையும் அவரிடம் சொல்லி விளங்கப்படுத்தியும், அவர் அவற்றில் எதையுமே ஏற்க மறுத்து விட்டார். அவரும் போய் றிமாண்டில மாட்டிக் கொண்டால் என்ன செய்வது என்ற யோசனையில் சந்திரா, "நானும் வருகி றேன்" என்று வெளிக்கிட ஆயத்தமானார். ஆங்கில சிங்கள மொழிகளில் தனது புலமைபற்றிச் சந்திராவுக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லாவிட்டாலும், இதுவரை ஸ்ரீராமைச் சமாளிக்க உதவிய ஆங்கில அறிவும் கடைகளில் போய்ப் பேரம் பேசக் கூடியளவு சிங்கள அறிவும் இருந்த தைரியத்தில் புறப்பட்ட சந்திராவை இறுதிநேரத்தில் பாபு வந்து தனது ற்யூஷன் வகுப்பைத் தியாகஞ்செய்து தடுத்தாட்கொண்டான். பாபுவுக்குச் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் பேசமுடியும். கடைசியாக, சரசுவதியையும் பாபுவையும் ஸ்ரீராமையும் சந்திரா கோட்டைப் பொலிஸ் ஸ்ற்றேஷனுக்கு கூட்டிக் கொண்டு போய் விடுவதாக



படிப்பகம்

www.padippakam.com



வும் அலுவல் சுணங்கினால், புண்ணியமூர்த்தி வீடுதிரும்பிய பிறகு அவர் போய் பாபுவையும் ஸ்ரீராமையும் வீட்டுக்கு அழைத்துவருவதாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

போகிற வழியில், சரசுவதி, தான் வேலைசெய்கிற இன்னொரு வீட்டில் உள்ள பல் வைத்தியருக்குக் கோட்டைப் பொலிஸ் நிலையத்தின் மேலதிகாரியைத் தெரியும் என்பதால் பல் வைத்தியருடைய மனைவி ஒரு கடிதம் தந்து விட்டிருப்பதாகச் சொன்னார். அந்தக் கடிதத்தால் பயனில்லை என்பது சந்திராவின் மதிப்பீடு. அது தேவையில்லை என்பது ஸ்ரீராமின் மதிப்பீடு. பாபுவுக்கு அதைப் பற்றி ஒரு அபிப்பிராயமும் இல்லை. சரசுவதிக்கு ஒரு சுவீப் ற்றிக்கற் மீதுள்ள நம்பிக்கையிலும் சிறிது அதிகமான நம்பிக்கை அதன்மீது இருந்தது.

பொலிஸ் ஸ்ற்றேஷனுக்கு போனபோது மாலை 3.30 இருக்கும். பெரும்பாலான பொலிஸ்காரர்கள் தேனீர் அருந்தப் போய் விட்டார்கள். யாரிடம் விசாரிப்பது என்றே ஸ்ரீராமுக்குத் தெரியவில்லை. சரசுவதி ஒரு மாதிரியாகப் பொறுப்பான அலுவலர் (ஓ.ஐ.சி.) எங்கே இருப்பார் என்றும் அவர் எப்போது தேனீர் அருந்தி முடிப்பார் என்றும் விசாரித்து அறிந்து, பாபு மூலமாக ஸ்ரீராமுக்குத் தெரியப்படுத்தினார். ஸ்ரீராமுக்குக் குட்டியானை விடுவிப்பதைவிட முக்கியமான பிரச்சனையாகப் பொலிஸ் அலுவலர்களது நடத்தை தோன்றியது. பொலிஸ் மேலதிகாரியிடம் முறைப்படுவதற்கு அவரது அறையை நோக்கி நடந்தார். ஆனால் அவரும் அவருடைய அறையில் இருக்கவில்லை. எனவே வேறுவழியில்லாமல் திரும்பிவந்து பாபுவுக்கு அருகாக அமர்ந்து கொண்டார்.

கொஞ்சத் தொலைவிலிருந்த றிமான்ட் காம்பறையில் கம்பிக் கதவுகளுக்கு அப்பால் நின்ற குட்டியானை சரசுவதி அடையாளங்கண்டு பாபுவிடம் காட்டினார். அங்கே குட்டியானும் இன்னும் மூன்று பேரும் நின்றார்கள். அவனுக்கு அருகாக நின்றவன் ஒசாமாவாக இருக்க வேண்டும் என்று சரசுவதி ஊகித்தார். யாராவது பொலிஸ்காரருடைய அனுமதியில்லாமல்



படிப்பகம்

www.padippakam.com



பேசப்போவது நல்லதல்ல என்று சரசுவதிக்குத் தெரியும். தயக்கத்துடன் இங்குமங்கும் பார்த்துவிட்டுக் கையை உயர்த்தி மெல்ல அசைத்தார். குட்டியானும் தாயை அடையாளங்கண்டு, முறுவலிப்பதா இல்லையா என்று நிச்சயமில்லாமல் கையை அசைத்தான். அப்போது ஒரு நடுத்தரவயதுப் பொலிஸ்காரர் றிமாண்ட் காம்பறையைத் தாண்டி நடந்தார். குட்டியான் அவரை நோக்கிச் சுட்டுவிரலை நீட்டியபடி முன்னும்பின்னுமாக வலது கையை அசைத்தான். அவர் தான் அவனைப் பிடித்த பொலிஸ் காரர் என்று சரசுவதி ஊகித்து அவரிடம் போய்ப் பேசலாமா என்று பாபு மூலமாக ஸ்ரீராமைக் கேட்கிறதற்கிடையில், பொலிஸ் மேலதிகாரி தன் அறைக்குள் நுழைவதைக் கண்ட ஸ்ரீராம் அவருடைய அறையை நோக்கி நடந்தார். வேறுவழியில்லாமல், சரசுவதி பல்வைத்தியரின் மனைவி எழுதிக்கொடுத்த கடிதத்தை ஸ்ரீராமின் கையிற் கொடுத்து அதைக் காண்பிக்கும்படி கேட்டார். பாபுவின் மொழிபெயர்ப்பு இல்லாமலே ஸ்ரீராமுக்கு அது விளங்கி யிருக்க வேண்டும். அதை வாங்கிக்கொண்டு பொலிஸ் மேலதி காரியுடைய அறைக்குள் போனார்.

ஒரு பதினைந்து நிமிட நேர உரையாடல் நடந்தது. பொலிஸ் மேலதிகாரி சிரித்தமுகத்துடனேயே ஸ்ரீராமுடன் பேசினார். அந்த விவரம் எல்லாம் இந்தக் கதைக்கு முக்கியம் இல்லை. முடிவு இவ்வளவு தான்: றிமாண்டில் வைத்த ஒருவரை விடுப்பதானால் ஓ.ஐ.சி. வரவேண்டும். பொலிஸ் மேலதிகாரிக்கு அவசரமாக ஒரு அலுவல் இருந்தது. (அனேகமாக மகளைச் சங்கீத வகுப்புக்குக் கூட்டிக்கொண்டு போவது போல முக்கிய மான ஒரு கடமையாகத் தான் இருக்கும்). எனவே ஓ.ஐ.சிக்குத் தகவல் வைத்துவிட்டுப் போவதாகச் சொல்லி ஸ்ரீராமைச் சந்தித்ததில் தனது பெருமகிழ்ச்சியையும் அறிவித்துவிட்டுச் சிறிது நேரத்தில் போய்விட்டார். சரசுவதி கொண்டுபோன கடிதத் தை என்ன செய்தார் என்று சொல்ல முடியவில்லை. அநேகமாக மேசைமீதே விட்டுவிட்டுப் போயிருப்பார் என்று நினைக்கிறேன்.

இலங்கைக் காவல் துறை மீது ஸ்ரீராம் வேகமாக இழக்கத் தொடங்கிய நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக மீளத் தொடங்கி



படிப்பகம்

www.padippakam.com



யது. ஓ.ஐ.சி. வருவதற்கு இன்னுஞ் சிறிதுநேரம் போகும் போலத் தெரிந்தது. அதற்குள் புண்ணியமூர்த்தி வந்துவிட்டார். தானே மிகுதியை கவனிப்பதாகவும் பாபுவையும் ஸ்ரீராமையும் சரசுவதியையும் போகுமாறும் சொல்லிப் பார்த்ததில் அவருக்கு மூன்றிலொரு பங்கு வெற்றி கிட்டியது. ஸ்ரீராமும் சரசுவதியும் குட்டியானை விடுவிக்காமல் புறப்பட மறுத்துவிட்டனர். எனவே பாபுவின் இடத்துக்கு புண்ணியமூர்த்தி அவர்களுடன் சேர்ந்து கொண்டார். புண்ணியமூர்த்திக்கும் பொலிஸ் ஸ்ற்றேஷன் அனுப வம் குறைவு. இரண்டுதடவை ஆட்பதிவுப் படிவங்களைக் கொடுக்க நாரஹேன்பிட்ட பொலிஸ் ஸ்ற்றேஷனுக்குப் போயிருக் கிறார். அதுவே அவருக்கு அதிகம்.

ஓ.ஐ.சி. வரமுன்பு இன்னொன்றும் நடந்தது. இருபது இருபத் தைந்து இளைஞர்களைக் கூட்டிக்கொண்டு முப்பது வயது மதிக்கத்தக்க ஒருவன் வந்தான். அவனோடு கூடச் சில பொலிஸ் காரர்களும் வந்தார்கள். பொலிஸ்காரர்கள் அவனை மொஹமட் என்று அழைத்தார்கள். மொஹமட் இளைஞர்களுடன் பேசிய அசல் யாழ்ப்பாணத் தமிழ் உச்சரிப்பும் அவனுடைய சிங்கள உச்சரிப்பில் இருந்த தமிழ்ச்சாடையும் அவனுடைய முகச் சாயலும், நிச்சயமாக மொஹமட் ஒசாமாவைவிட எள்ளள வேனுங் கூடவோ குறையவோ முஸ்லிம் இல்லை என்றே புண்ணியமூர்த்திக்கு உணர்த்தியது. என்றாலும் அவனை மொஹமட், மொஹமட் என்று பொலிஸ்காரர்கள் கொஞ்சம் அதிகமாகவே உரத்த குரலில் அழைத்தார்கள்.

*****

ஓ.ஐ.சி. வந்ததும் அத்தனை இளைஞர்களதும் பெயர்களும் விபரங்களும் பதியப்பட்டு அவர்களில் ஒரு பகுதியினர் குட்டியா னும் ஒசாமாவும் இருந்த அறையில் அடைக்கப்பட்டனர். மற்ற வர்கள் இன்னொரு அறையில் அடைக்கப்பட்டனர். இப்பொழுது குட்டியானைப் பார்க்க முடியாமல் றிமாண்ட் அறைக்குள் அவனுக்கு முன்னால் ஆட்கள் நின்று கொண்டிருந்தனர். குட்டி யான் தன் கால்விரல் நுனிகளில் நின்றபடி இடையிடை தாயை எட்டிப்பார்த்தான். சரசுவதிக்கு கண்கள் கலங்கத் தொடங்கி



படிப்பகம்

www.padippakam.com



விட்டன. யாரும் பார்க்காதவிதமாக இடதுகைச் சுட்டுவிரல் நுனியால் கண்ணீரை வழித்துக் கொண்டார்.

அடுத்து ஓ.ஐ.சியோடு பேசுவதற்கு ஸ்ரீராமும் புண்ணிய மூர்த்தியும் எடுத்த முயற்சிகள் 'இவர்களைப் பதிந்ததைச் சரி பார்த்த பின்பு' என்றவிதமான ஓ.ஐ.சியின் கைச்சாடையால் முறியடிக்கப்பட்டன. அதற்கிடையில் வேட்டிசட்டையுடன் ஒரு வயது மூத்தவர் வந்து ஓ.ஐ.சியுடன் பேசத் தொடங்கினார். மொஹமடும் உரையாடலில் பங்குபற்றினான். மொஹமட் பொலிஸ் உதவியுடன் வளைத்துப்பிடித்தவர்கள் ஒரு லொட்ஜில் இருந்தவர்கள் என்றும் வயது மூத்தவர் அதன் சொந்தக்காரராக இருக்கலாம் என்றும் சரசுவதியும் புண்ணியமூர்த்தியும் ஊகித்துக் கொண்டார்கள். லொட்ஜ் சொந்தக்காரரின் தேவை இளைஞர் களை றிமான்ட்டில் இருந்து வெளியே அனுப்புவதா? லொட்ஜில் இருந்து வெளியே அனுப்புவதா என்று சரசுவதிக்கு நிச்சயமாக சொல்லமுடியவில்லை. ஏனென்றால் அவருக்கும் ஓ.ஐ.சிக்கு மிடையே நடந்த உரையாடலில் எந்த விதமான காரசாரமும் இருந்ததாகத் தெரியவில்லை. மாறாக மிகவும் நட்புரிமையே இருந்ததுபோலத் தெரிந்தது. பிடிக்கப்பட்ட ஓரிரு இளைஞர் களிடம் ஆறுதலாக ஏதோ சொல்லிவிட்டு அவர் போய்விட்டார். மொஹமடையும் அதன்பின்பு காணவில்லை.

புண்ணியமூர்த்தியும் ஸ்ரீராமும் இந்தப் பராக்கில் இருந்த போது, நேரம் மாலை 8.30ஐத் தாண்டிவிட்டது. அங்கே நின்ற பொலிஸ்காரிடம் விசாரித்தபோது ஓ.ஐ.சி. சாப்பிடப் போய் விட்டார் என்று சொன்னார்கள். குட்டியானை விடுவிக்கச் சொல்லி மேலதிகாரி தகவல் சொல்லியிருக்கிறார் என்று புண்ணியமூர்த்தி மூலம் ஸ்ரீராம் சொன்னபோது, பொலிஸ்காரர்கள் எப்படியும் ஓ.ஐ.சி. வந்துதான் எதுவும் நடக்கும் என்றார்கள். ஆனாலும் ஓ.ஐ.சி. கட்டாயம் வந்துவிடுவார் என்று அவர்கள் உறுதிப் படுத்தினார்கள். இப்பொழுது பொலிஸ் ஸ்ற்றேஷனில் நான்கு பொலிஸ்காரர்களையும், கம்பிக் கதவுகளுக்குப் பின்னால் நின்ற வர்களையும் விட்டால் இவர்கள் மூவரும் தலை சிறிது நரைத்த ஒல்லியான ஒருவரும் மட்டுமே இருந்தார்கள். அவர் அனேகமாக



படிப்பகம்

www.padippakam.com



ஒசாமாவின் தகப்பனாராக இருக்க வேண்டும் என்று சரசுவதி ஊகித்து அவருடன் போய் பேசத்தொடங்கினார்.

முதலிற் கொஞ்சம் முறுகலாகத் தொடங்கிய உரையாடல் பிறகு சிறிது நெகிழ்வாகியது. ஒசாமாவின் தகப்பன் பின்பு புண்ணியமூர்த்தியிடம் தன்னை ஆறுமுகம் என்று அறிமுகப் படுத்திக் கொண்டார்.

ஓ.ஐ.சி. இன்னும் வரவில்லை. மணி பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. ஆறுமுகம் கழிப்பறைக்கு போய்வருகிறேன் என்று வெளியேபோனார். வரச் சிறிதுநேரம் எடுத்தது. அதற்குள் ஓ.ஐ.சி. திரும்பி வந்துவிட்டார். அவருடன் புண்ணியமூர்த்தி போய்ப் பேசியபோது, மேலதிகாரி எந்தவிதமான தகவலும் தனக்குத் தரவில்லை என்றும் ஒருவேளை அங்கே யாரோ அதைத் தவறவிட்டிருக்கலாம் என்றும் நீண்ட நேரமாக விளக்கம் அளித்தார். அடையாள அட்டை, வயது என்றெல்லாம் திரும்பத் திரும்பச் சொன்னார். குட்டியானை வெளியே விடுகிற நோக்கம் மட்டும் இல்லைப் போலவே தெரிந்தது.

அதற்கிடையில் சந்திராவிடம் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. ஓ.ஐ.சி. மேலதிக வருமானத்தை எதிர்பார்ப் பார் என்று நினைக்கிறதாகச் சந்திரா சொன்னார். அதைப் புண்ணியமூர்த்தி ஸ்ரீராமிடம் சொல்ல, ஸ்ரீராம் இரவுமுழுவதும் இங்கேயே கழிக்க நேர்ந்தாலும் லஞ்சம் கொடுக்கமாட்டேன் என்றும் வேண்டுமானால் புண்ணியமூர்த்தியையும் சரசுவதியை யும் வீட்டுக்குப் போகும்படியும் சொன்னார். ஸ்ரீராமை அங்கே தனியே விட்டுச் செல்வதன் அபாயங்கள் அவர்கள் இருவருக்கும் தெரிந்ததால் அவருடைய சத்தியாக்கிரகத்தில் அவர்களும் வேறு வழியில்லாமல் இணைந்து கொண்டார்கள்.

*****

வெளியேபோன ஆறுமுகம் திரும்பிவந்து ஓ.ஐ.சியிடம் சிறிது பேசினார். ஓ.ஐ.சி. எழுந்து வெளியேபோய்த் திரும்பினார். பிறகு வேலைகள் சிறிது துரிதமாகின. ஒசாமாவும் குட்டியானும் புத்தகத்தில் ஒப்பமிட்ட பிறகு எல்லோரும் வெளியே வரும்போது நேரம் பதினொன்றை நெருங்கிவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com



ஸ்ரீராமுக்கு இந்த ஏழரை மணிநேரப் போராட்டத்தில் லஞ்சத்துக்கு இடமில்லாமல் வெற்றிபெற்றதில் ஒருவிதமான பெருமை. புண்ணியமூர்த்தி வந்தபோது கொண்டுவந்த குளிர்பானத்தை விட எதுவுமே வாயிற்படாமற் பசிகிடந்ததுகூட அவருக்கு ஒரு அற்ப விடயமாகத் தெரிந்தது. தன்னுடைய பெருமிதத்தைப் புண்ணியமூர்த்தியுடன் பகிர்ந்து கொண்டார்.

ஆறுமுகம் புண்ணிமூர்த்தியிடம் "ஐயா இங்கிலீஸில என்ன சொல்லறாங்க?" என்று கேட்டார். பதில் சொன்ன புண்ணியமூர்த்தி, தாங்கள் பிடிவாதமாக நின்று இரண்டுபேரையும் விடுவித்துவிட்ட பெருமையில் ஆறுமுகத்தையும் பங்காளியாக்கினார்.

"ஐயா நான் அறுநூறை அவங் கைமேல வெச்சிருக்காட்டி, நாளைக்குக்கூடப் பையனை வெளிய விட்டிருக்கமாட்டாங்க!" என்று ஏளனமாகச் சொன்னார். பின்னாலே குட்டியானை அணைத்தபடி வந்து கொண்டிருந்த சரசுவதிக்குக் கண்ணீரின் நடுவிலும் சிரிப்பு விரிந்தது. ஆனாலும் ஓசையை அடக்கிக் கொண்டார்.

ஆறுமுகம் கொடுத்த லஞ்சத்தில் தானும் தனது பங்கைச் செலுத்துவதா என்று புண்ணியமூர்த்தி முடிவுசெய்ய இயலாமல் இரண்டு தடங்கல்கள் ஏற்பட்டன. ஒன்று ஸ்ரீராமின் வெற்றிக் களிப்பைச் சிதைக்காமல் எப்படிப் பணத்தைக் கொடுப்பது என்ற பிரச்சினை. மற்றது, சந்திராவும் பாபுவும் அதற்கிடையில் அவர்களை அழைத்துச்செல்லக் கார் கொண்டுவந்துவிட்டார்கள். அவர்கள் காரில் ஏறிய கையோடு, ஆறுமுகம் ஒசாமாவின் முதுகில் ஓங்கி இரண்டுமுறை அறைந்த ஓசையும் பதிலுக்கு ஓசாமா "அப்பா, ஒன்னைவிடப் பொலிஸ்காரன் பரவாயில்லேப்பா" என்று சொன்னதும் தெருவைக் கடந்து கொண்டிருந்த சரசுவதியின் காதிற் கேட்டது. குட்டியானை இறுகத் தழுவியபடி பஸ் தரிப்பை நோக்கி நடந்தாள்.

*(தாயகம்-55, ஜூன் 2006)*



படிப்பகம்

www.padippakam.com

சிவசேகரம்

# குழந்தையும் தேசமும்



நிமல் தன்னிடமிருந்த விளையாட்டுப்பொருட்களை எல்லாம் விட்டுவிட்டு ஏன் ரஞ்ஜனியின் பொம்மைகளுக்காக அழவேண்டும் என்று ரஞ்ஜனிக்குத் தெரியாது



படிப்பகம்

www.padippakam.com



ரஞ்ஜனிக்கு இது பாடசாலையில் மூன்றாவது வருடம். பாட சாலைக்குப் போகிறவேளையும் பாடசாலையிலிருந்து திரும்பி வருகிறவேளையும் ரஞ்ஜனிக்கு மிகவும் விருப்பமான நேரங்கள். இரண்டிற்கும் இடையில் உள்ள நேரம் போல அலுப்புத் தட்டு கிற நேரம் கிடையாது. கண்டியிலுள்ள சிறுமியர்க்கான நல்ல பாடசாலைகளுள் ஒன்றில் அவளுக்கு இடம்பிடிப்பதற்கு அவளு டைய அம்மாவும் தகப்பனாரின் அம்மாவும் அம்மம்மாவும் ரஞ்ஜனியுடைய மாமியும் பெரியம்மாவும் அதே பாடசாலையில் தான் படித்தார்கள் என்றும் எல்லோரும் நல்ல மாணவியராக இருந்தார்கள் என்றும் பல்வேறு ஆதாரங்களுடன் பாடசாலைக் கட்டிட நிதிக்காகப் பெற்றோர் தாமாக விரும்பியளித்த ஆனா லும் யாருக்குந் தெரியக்கூடாத அன்பளிப்பும் வழங்க வேண்டி யிருந்தது. அதைவிட ரஞ்ஜனியுடைய பெரியம்மாவுடன் படித்துப் பாடசாலையில் ஆசிரியையாயிருந்த வஸந்தியையும் இரண்டு தடவை வீட்டுக்கு விருந்துக்கழைத்துப், பல்வேறு உபசாரங்களின் நடுவே, குழந்தையைப் பாடசாலையிற் சேர்க்கிற வித்தையில் சிறப்புப்பயிற்சி பெற்றதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

குழந்தைகளைச் சின்னஞ்சிறு வயதிலிருந்தே அவர்களது பிற்கால வாழ்க்கைக்குப் பழக்கவேண்டும் என்ற கோட்பாட்டுக் கிணங்கவோ என்னவோ ஐந்து வயதுக் குழந்தைகட்கும் அனுமதிப் பரீட்சையும் நேர்காணலும் வைத்தார்கள். ரஞ்ஜனி யின் அப்பா குமாரின் கருத்தில், தான் பல்கலைக்கழகத்திற்குப் போவதற்குப் பட்டபாட்டை விட ரஞ்ஜனி பாடசாலைக்குப் போவ தற்குப் பட்டபாடு அதிகம். பாடசாலையிற் சேருவதற்கான பரீட்சையில் தேறிய ஒரு குழந்தை அப் பரீட்சைக்குப் படித்த தற்கும் மேலாக எதைத்தான் பாடசாலையிற் படிக்க இருக்கிறது என்று குமார் நினைக்கிற அளவுக்குத் தீவிரமாக அப் பரீட்சைக் காக ரஞ்ஜனிக்கு கல்வி புகட்டப்பட்டது. என்றாலும் குமாரின் கருத்தைப் பொய்ப்பிக்கிற விதமாக ரஞ்ஜனி பாடசாலைக்குக் கொண்டு போகவேண்டிய புத்தகங்களின் சுமை ரஞ்ஜனியின் உடல்வளர்ச்சியைவிட வேகமாகக் கூடிக்கொண்டு போனதும் போதாமல், இரண்டாம் ஆண்டிலிருந்து நாளுக்கு ஒரு வீட்டுப்



படிப்பகம்

www.padippakam.com



பணியும் வாரத்துக்கு ஒரு செய்முறை ஒப்படையும் என்று வேலையும் கூடிக் கொண்டே போனது.

ரஞ்ஜனிக்கு இந்த வேலைச்சுமையால் ஒரு விதமான பிரச்சனையும் இருக்கவில்லை. ரஞ்ஜனிக்குத் தனது வேலைகளை வேகமாகவும் சிரமமில்லாமலும் செய்து முடிப்பதற்கான கெட்டித்தனம் இருந்தது. குமார் மாலையில் வீட்டுக்கு வந்தவுடன் "அப்பச்சி, இன்றைக்குப் புதிதாகக் கணக்கு ஒன்று சொல்லித் தந்திருக்கிறார்கள். பார்க்கப் போகிறீர்களா?" என்றோ "அம்மாவுக்கு இங்கிலீஷ் வடிவாகப் பேசவராது. அப்பச்சியிடம் தான் இங்கிலீஷ் படிக்கப்போகிறேன்" என்றோ ஏதோ விதமாகப் பேசி வீட்டுப் பணியின் சுமையைக் குறைத்துக் கொள்ளுகிற திறமை அவளிடம் நிறையவே இருந்தது. காமினி, அதாவது ரஞ்ஜனியின் அம்மா, மனம்வருந்தக் கூடாது என்று தாய்மொழிப் பாடங்களையும் பல்வேறு கைவினை ஒப்படைகளையும் காமினிமூலம் சாதித்துக் கொள்ளுவாள். பாருங்கள், நமது பாடசாலைகள், குழந்தைகள் பிற்காலத்திற் பிழைத்துக் கொள்ளச் சிறுவயதிலிருந்தே அவர்களுக்கு எப்படிக் கற்றுக்கொடுக்கின்றன!

வீட்டுப்பணிகளும் ஒப்படைகளும் பெற்றோருக்கானவை என்ற இரகசியம் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளையும் தேசிய கல்வி ஆலோசகர்களையும் விட்டால் மற்ற எல்லாருக்கும் தெரிந்த விடயமே. குழந்தைகளுக்குக் கட்டாயமாக இருக்க வேண்டிய திறமை அந்த வேலைகளைச் செய்துதரக் கூடிய பெற்றோரைக் கண்டுபிடிப்பது மட்டுமே. அந்த இரகசியம் எனக்குத் தெரியாது. ஆனால் ரஞ்ஜனிக்கு அந்த திறமை இருந்திருக்க வேண்டும். அதைவிட, மற்றக் குழந்தைகளின் வீட்டுவேலையும் ஒப்படையும் எவ்வளவு நன்றாக இருந்தன என்று இடையிடையே சொல்லிப் பெற்றோரிடையே போட்டி மனப்பான்மையை வளர்த்து அவர்களுடைய கல்வியை மேம்படுத்துவதிலும் குழந்தைகள் மிகவும் தேர்ச்சிபெற்றிருக்கிறார்கள் என்றே நினைக்கிறேன். (குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்பியதன் பின்பு கண்டியிலுள்ள பெற்றோருடைய கல்வித் தரத்தில் 67.1362 சதவீத வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக, இதுவரை



படிப்பகம்

www.padippakam.com



வெளியிடப்படாத ஒரு ஆய்வு கண்டறிந்துள்ளதாகத் தன்னுடைய பேரை வெளியிடவிரும்பாத ஒரு நிபுணர் என்னிடம் சொல்லி யிருக்கிறார்).

ரஞ்ஜனியைப் பொறுத்தவரை, அவளுடைய கல்வி அனுபவத் தின் மிக இனிமையான பகுதி பாடசாலைக்கு முந்திய காலமா கும். மொன்ட்டிஸோரி கல்விக்கூடத்திற் படித்தபோது மற்றக் குழந்தைகளுடன் சேர்ந்து ஓடிவிளையாடியும் படங்கள் வரைந் தும் கற்றபோது இருந்த மகிழ்ச்சியைப் புதிய பாடசாலை பறித்துவிட்டது.

அதைவிட, அவளுடன் மொன்ட்டிஸோரியில் சினேகிதமா யிருந்த ஒருத்தி அவளுடைய புதிய பாடசாலைக்கு வரவில்லை. எப்படியோ வாழ்வின் இந்த மாதிரியான ஏமாற்றங்களினூடு சமாளித்து வளர்ந்த ரஞ்ஜனி மெல்லமெல்லப் புதிய சினேகிதங் களைக் கண்டுபிடித்தாள். ஆனாற் பாடசாலை நேரத்தில் அவர்க ளுடன் விளையாட நேரங் கிடைக்காது. மதிய இடைவேளை யின் போதும் ஆசிரியர்கள் வகுப்பிற்கு வரப் பிந்துகிறபோதும் கொஞ்சம் கூடிப்பேசுவார்கள். மற்றப்படி, பாடசாலைக்கு வெளியே அந்த உறவு அதிகம் நெருக்கமாகத் தொடருவ தில்லை. பிறந்தநாள் என்று யாராவது வீட்டுக்கு அழைத்தால் பெற்றோர் வயது வந்தவர்கட்கான பானங்களைச் சுவைக்கிற போது குழந்தைகள் கூடிக் கும்மாளமடிக்கலாம். அதன் பிறகு ஒவ்வொருவரும் அவரவரது தனி உலகுக்கு மீண்டுவிடுவார்கள்.

ரஞ்ஜனிக்கு நான்கு வயதில் ஒரு தம்பி இருந்தான். ரஞ்ஜனி க்கு நிமல் மீது நல்ல அன்பு. ஆனாலும் ரஞ்ஜனி தனது சிறு வயதிலிருந்து சேர்த்து வைத்திருக்கிற பொம்மைகளை அவன் கேட்கிறபோது மட்டும் அந்த அன்புக்கு விடுமுறை கொடுத்து விடுவாள். நிமலுக்கும் ரஞ்ஜனியைச் சீண்ட வேண்டும் என்று தோன்றுகிறபோது அவளுடைய பொம்மைகளைக் கேட்டுப் பிடிவாதம்பிடிப்பான். அவளுடைய சிவப்பு நாய்க்குட்டியின் இடது கண்ணை அவன் கடித்து விழுங்கிய பிறகு அவளுடைய பொம்மைகளைத் அவன் தொடுவதற்குப் பூரணமான தடை விதிக்கப்பட்டிருந்தது. தாயாரின் ஆலோசனைப்படி நிமலுடைய



படிப்பகம்

www.padippakam.com



கண்ணிற்படாமல் பொம்மைகளை ஒளித்துவைத்தாலும் நிம லுக்குத் தெரியாமல் அவற்றுடன் விளையாடுவதில் அவளுக்கு அதிகம் மகிழ்ச்சி இருக்கவில்லை. எனவே, இடையிடையே, அவள் கையில் வைத்திருக்கிற பொம்மைகளை நிமல் கேட்பதும் அவள் மறுப்பதும் நாட்டின் பொதுவான போர்ச்சூழலுக்கு ஒரு சிறு பங்களிப்பை வழங்கியது.

நிமல் தன்னிடமிருந்த விளையாட்டுப் பொருட்களை எல்லாம் விட்டுவிட்டு ஏன் ரஞ்ஜனியின் பொம்மைகளுக்காக அழவேண்டும் என்று ரஞ்ஜனிக்குத் தெரியாது. என்றாலும் அவன் அவற்றுக்காக அழுவது தன்னுடைய உடைமைகளின் பெறுமதியை மிகவும் உயர்த்தியதை அவள் உணர்வாள். ரஞ்ஜனியிடம் இருந்த தலையில்லாக் குரங்கின்மீது நிமலுக்கு எப்போதுமே ஒரு கண். இடையிடையே தாயிடமும் தமக்கையிடமும் போய் "அக்கா.... மங்க்கி" என்று திரும்பத்திரும்பச் சொல்லுவான். அவன் அக்கா வைக் குரங்கு என்று அழைக்கவில்லை என்றும் அக்காவின் தலையில்லாக் குரங்கைத்தான் கேட்கிறானென்றும் என்னால் உத்தரவாதமளிக்க இயலும். ரஞ்ஜனிக்கு மிகவும் பிடித்த பொம்மைகளில் அது ஒன்றல்ல. ஆனாலும் அதை அவள் பிரியமறுத்ததற்கான முக்கியமான காரணம் நிமல் அதை மிகவும் விரும்புகிறான் என்பதுதான். அதனால் ரஞ்ஜனிக்கும் நிமலுக்கும் நடந்த போர்களில் மிக உக்கிரமானவற்றிற்கு மையமாக இருந்த பெருமை அந்தக் குரங்கிற்கே உரியது.

****

இவ்விதமான முரண்பாடுகளும் அவற்றின் துணைவிளைவாக நிகழும் பெற்றோரின் வன்முறையும் தவிர அமைதியாக நகர்ந்து சென்ற ரஞ்ஜனியின் வாழ்வில் ஒரு அதிர்ச்சியூட்டும் சம்பவம் நிகழ்ந்தது. பாடசாலைக்குள் குண்டுகள் வைக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததால் காலை ஒன்பதரை மணியளவில் பாடசாலையிலிருந்து மாணவர்களை வெளியேற் றும்படி அதிபருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகள் படிக்கிற பாடசாலையிலிருந்து எப்படி அவசரமாக வெளியேற்ற இயலும் என்று அதிபர் தெரிவித்த



படிப்பகம்

www.padippakam.com



மறுப்பைப் பொலிஸ் அதிகாரிகள் ஏற்கமறுத்தனர். நீண்ட விவாதத்தின் பின்பு "குண்டுவெடிப்பில் யாருக்காவது கெடுதல் நடந்தால் அதற்கான பொறுப்பை உங்கள்மீது தான் சுமத்து வோம்" என்ற இறுதி அஸ்திரத்தைத் தலைமைப் பொலிஸ் அதிகாரி பிரயோகித்ததோடு, அதிபர் வெள்ளைக்கொடியை உயர்த்தி ஒருமணிநேர அவகாசம் கேட்டார். இயலுமான அளவுக்குப் பெற்றோருடன் தொடர்புகொள்ள முயற்சிகள் எடுக் கப்பட்டன. செல் தொலைபேசிக் கம்பனிகள் அந்தச் சில நிமிடங்களிற் சம்பாதித்த தொகை புள்ளிவிபர முக்கியத்துவ முடையது என்று என்னாற் கூற இயலும்.

குமார் தனது கைத்தொலைபேசியை நிசப்தித்திருந்ததால் தகவல்போகத் தாமதமாகிவிட்டது. காமினியும் கடைக்குப் போயிருந்தார். எனவே ரஞ்ஜனி உட்பட நூற்றுக்கும் மேலான சிறுமியரை அதிபர் பாடசாலை விடுதிக்கு கூட்டிக்கொண்டு போனார். சிறுமியரின் பதற்றம் அடங்கவில்லை. ஆனாலும் ஆளுக்காள் ஆறுதல் சொல்லுகிற விதமாகப் பேசிக் கொண்டார் கள். பகல் பன்னிரண்டு மணியளவில் குமார் அங்கு போய்ச் சேர்ந்தபோது ரஞ்ஜனியுடன் படிக்கிற சேபாலிகா என்கிற சிறுமி யை அழைத்துச் செல்வதற்கு பெற்றோருக்குப் பிரச்சினை இருப்பதாக அதிபர் குமாரிடம் சொன்னார். குமார் சேபாலிகாவை ரஞ்ஜனியோடு வீட்டுக்குக் கொண்டுபோனால் சேபாலிகாவின் தகப்பன் வீரவர்தன அங்கு வந்து அழைத்துச்செல்ல ஏற்பாடு செய்வதாகவும் சொன்னார். குமாரும் மறுப்பில்லாமல் குழந்தை கள் இருவரையும் வீட்டிற்குக் கொண்டுபோய் விட்டுவிட்டு வேலைக்குத் திரும்பிப் போனார்.

குண்டுவைப்புப் பற்றிய தகவல் வெறும் புரளி என்பது காலை பதினொரு மணியளவில் தெளிவாகிவிட்டது. குமார் வந்து ரஞ்ஜனியையும் சேபாலிகாவையும் முச்சக்கரவண்டியிற் கூட்டிக்கொண்டு போகும் வழியில், குழந்தைகளிடம், வீணாகப் பயப்பட ஒன்றுமில்லை என்றும் குண்டு வைப்புக் கதை வெறும் புரளி என்றும் அவர்கட்கு ஆறுதலாக விளங்கப்படுத்தினார். ரஞ்ஜனி சேபாலிகாவின் காதில் "ஒவ்வொரு நாளும் பாடசாலை



படிப்பகம்

www.padippakam.com



யில் குண்டு வைக்கிறதாக பொலிஸுக்கு யாராவது சொன்னால் எவ்வளவு நன்றாக இருக்கும்!'' என்று சொன்னதைக் கேட்ட குமாருக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை.

காமினி நிமலையும் ரஞ்ஜனியையும் சேபாலிகாவையும் தங்கள்பாட்டில் விளையாடவிட்டுத் தன்னுடைய அலுவல்களைப் ப்ார்க்கத்தொடங்கினார். பின்னேரம் தேநீரை ஊற்றியபின் சேபாலி காவையும் நிமலையும் மேசைக்கு அழைப்பதற்காக ரஞ்ஜனி யைக் குசினிக்குள் அழைத்தார். தாயார் எதுவும் சொல்லுவதற்கு முன்னமே ரஞ்ஜனி அவரிடம் "அம்மா புலிகள் எங்களுடைய பாடசாலைக்கு குண்டு வீசுவார்களா?'' என்று கேட்டாள். காமினி என்ன பதில் சொல்லுவதென்று முடிவுசெய்ய முன்னமே, ரஞ்ஜனி, "எங்களுடைய பாடசாலையில் தமிழ்ப் பிள்ளைகளும் படிப்பதால் குண்டுவீச மாட்டார்கள் என்று நினைக்கிறேன்'' என்றாள். அவள் எங்கே தனது அரசியல் பாடங்களைப் படிக்கிறாள் என்று காமினிக்கு வியப்பாக இருந்தது. பொதுவாகக் குழந்தைகளின் முன்னால் குமாரோ காமினியோ நாட்டு நடப்புக்கள் பற்றிக் கதைப்பதில்லை. "இதை நீயே கண்டுபிடித்தாயா? அல்லது சேபாலிகா சொல்லித்தந்தாளா?'' என்று காமினி கேட்க, ரஞ்ஜனி "பாடசாலையில் அப்பாவுக்காகக் காத்திருக்கிறபோது மேல் வகுப்பு அக்காக்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள்'' என்றாள். காமினி அதைப்பற்றி மேற்கொண்டு பேசவிரும்பவில்லை. "அப்படியென்றால் நல்லது'' என்று அந்தக் கதையை முடித்து விட்டு "ஓடிப்போய், சேபாலிகாவையும் தம்பியையும் மேசைக்குக் கூட்டிக்கொண்டு போய், கேக்கும் கடலையும் எடுத்து வைத்தி ருக்கிறேன், எல்லாருமாகச் சாப்பிடுங்கள், நான் தேத்தண்ணி யைக் கொண்டு வருகிறேன்'' என்றார்.

குமார் அன்று கொஞ்சம் வேளைக்கே வீடுதிரும்பிவிட்டார். ரஞ்ஜனியின் பாடசாலையில் மட்டுமில்லாமல் வேறு பாடசாலை களிலும் குண்டுப் புரளி கிளப்பப்பட்டுப் பல அலுவலகங்களில் வேலை நடக்க முடியாதபடி பெற்றோர் வேலையை விட்டுவிட்டுப் பாடசாலைக்கு ஓடியதால் முழுநாளும் கண்டி நகரும் அயலும்



படிப்பகம்

கொஞ்சம் கலவரப்பட்ட நிலையிலே இருந்தன. பீதியைப் பரப்பிய விஷமிகள் யாரென்று பொலிஸார் ஆராய்ந்துவருவதாக வானொலியிற் பிற்பகற் செய்தி அறிக்கை கூறியது. இப்படி இன்னொருமுறை நடக்க இடமளிக்கப்போவதில்லை என்று பொலிஸார் உறுதியளித்துள்ளதாகவும் சொல்லப்பட்டது. குமார் தனக்குள் சிரித்தபடி குளியலறைக்குப் போனார்.

குமார் குளித்து உடுப்புமாற்றி வரும்போது வெளிவாசலோரம் ஒரு கார் வந்துநின்றது. காரின் சங்கொலி கேட்டு "அப்பச்சி" என்று கூவிக் கொண்டு சேபாலிகா வாசலுக்கு ஓடினாள். காரிலிருந்து இறங்கிவந்தவர் கதவடியில் நின்றபடி "மிஸ்ற்றர் குமார் விஜேசுந்தர இருக்கிறாரா?" என்று குரல் கொடுத்தார். "வாருங்கள் வாருங்கள்" என்று அழைத்தபடி முன் அறையை நோக்கி வந்த குமார் "நீங்கள் மிஸ்ற்றர் வீரவர்தன தானே?" என்று வீட்டுக்கு வந்தவரைக் கேட்டான். "ஓம். உபாலி வீரவர்த்தன. உபாலி என்றே கூப்பிடுங்கள்".

உபாலி உள்ளேவந்து அமர, காமினி தேநீர் கொண்டு வரலாமா என்று கேட்டார். உபாலி ஒரு கிளாஸ் தண்ணீர் போதும் என்றார். கொஞ்சநேரமாக மூன்று பேரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். பேச்சு அன்றைய நிகழ்விலிருந்து பின்நோக்கிச் சென்று கெபிதிகொல்லாவவில் சிறார்கள் பயணித்த பஸ்மீதான கிளேமோர் குண்டுத் தாக்குதலைப் பற்றியும் புலிகள், பிரிவினை என்றும் பலதிசைகளிலும் விரிந்தது. குமார் தமிழர் பற்றி அளவுக்கு அதிகம் இரக்கங் காட்டுவதாக உபாலி குற்றஞ் சாட்டினார். குமார் சிரித்தபடியே, "அந்தப் பிரச்சனை தீராமல் இந்தப் பிரச்சினை தீராது, என்றாலும் நானும் நீரும் என்ன செய்ய முடியும்?" என்று அக் கதைக்கு முற்றுப் புள்ளி வைத்தார். உபாலி, குமாருக்கு மீண்டும் நன்றி தெரிவித்துவிட்டு, சேபாலிகாவை அழைத்துக்கொண்டு போனார். கார் கண்ணிலிருந்து மறையும்வரை ரஞ்ஜனியும் நிமலும் கையசைத்தபடி வெளிவாசலோடு நின்றார்கள்.

நிமலுக்கு நேரத்தோடு உணவூட்டிப் படுக்கப்போட்டபின்பு காமினி குமாருக்கும் ரஞ்ஜனிக்கும் உணவு பரிமாறினார்.

www.padippakam.com



சாப்பிடும் போது "அப்பச்சி, புலிகள் ஏன் எங்களுக்குக் குண்டு வீசுகிறார்கள்?" என்று ரஞ்ஜனி குமாரிடம் கேட்டாள். குமாரிடம் அதற்கான எளிய மறுமொழி இருக்கவில்லை. என்றாலும் "தமிழரில் சிலபேர் எங்களுடைய நாட்டில் ஒரு பகுதியைத் தங்களுக்குப் பிரித்துத் தரும்படி கேட்கிறார்கள். அதனாலே தான் சண்டை நடக்கிறது" என்று விளக்கினார். ரஞ்ஜனி மேலும் இரண்டு வாய் சாப்பிட்டபிறகு "அப்பச்சி, அவர்கள் கேட்கிற பகுதி எங்களுக்குத் தேவையா?" என்றாள். கொஞ்சம் யோசித்தபிறகு குமார் "அப்படித் தேவை என்று இல்லை. எல்லாரும் ஒன்றாக இருந்தால் நல்லது தானே" என்றார். ரஞ்ஜனி அடுத்த வாய் சாப்பிடமுன்பு "அவர்கள் கேட்கிறதைக் கொடுத்தால் சண்டை இருக்காதே. நாங்களும் நம்பாட்டில், ஆறுதலாக இருக்கலாமே!" என்றாள். குமார் அதற்கு விளக்கம் தரமுன்னம் காமினி குறுக்கிட்டு "விளங்காத விஷயத்தையெல்லாம் சொல்லிப் பிள்ளையைக் குழப்பாதீர்கள்" என்று குமாரைக் கடிந்தார். ரஞ்ஜனி புத்திசாலிப் பெண் என்று சொன்னேனல்லவா. அவள் மேற்கொண்டு கதையைத் தொடரவில்லை.

****

கைகால் முகம் கழுவிப் படுக்கப்போவதற்கு முன்பு ரஞ்ஜனி தகப்பனின் காலில் விழுந்துகும்பிட்டாள். தகப்பன் அவளை முத்தமிட்டு ஆசீர்வதித்தார். பிறகு தாயின் காலில் விழுந்து எழுந்தாள். தாய் முத்தமிட்டபோது தாயின் காதோடு "அம்மா என்னுடைய குரங்குப்பொம்மையை நிமலுக்கு கொடுத்து விடுங்கள்" என்று சொல்லிவிட்டுத் தனது கட்டிலை நோக்கி நடந்து போனாள்.

காமினிக்கு மகள் சொன்னதன் உட்கிடை விளங்கக் கொஞ்ச நேரம் எடுத்தது.

*(தாயகம்-56, செப்ற்றெம்பர்-நவெம்பர் 2006)*



படிப்பகம்

www.padippakam.com



# இக்கரையும் அக்கரையும்



*காலி வீதியை அடைந்தவுடன் கமலம் தயங்கி நின்றார்*



படிப்பகம்

www.padippakam.com



அப்பர் என்று எல்லாராலும் அறியப்படும் திருநாவுக்கரசுக்கு அறுபது வயது தாண்டிவிட்டது. தனது அறுபது ஆண்டுகளில் அவர் இரண்டு மாநகரங்களை மட்டுமே பார்த்திருக்கிறார். முதலாவது மெல்பண், இரண்டாவது கொழும்பு. இந்த இரண் டையும் தவிர அவர் வேறெந்த மாநகரையும் அறியமாட்டார். யாராவது யாழ்ப்பாணத்தை ஒரு மாநகரம் என்று சொன்னால், அதையும் நீங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். ஆனால், யாழ்ப்பாண நகரத்தில் அப்பர் ஒருநாள்கூடத் தங்கியது கிடையாது. அவர் பிறந்தது வளர்ந்தது எல்லாம் மெல்பணில் என்று யாரும் நினைக்கவேண்டாம். அவருக்கு ஊர் வட்டுக் கோட்டை. போர் ஒன்று வந்திராது என்றால் அவர் வாழ்ந்த உலகம் முற்றாக வட்டுக்கோட்டைக்குள்ளேயே அடங்கியிருந் திருக்கும்.

அப்பருக்குச் சிறுவயதிலிருந்தே ஊர் பார்க்கிறது, நீண்ட பயணங்கள் என்று எதிலும் அக்கறை இருந்ததில்லை. சிறுவனாக இருந்தபோது, வீட்டார் ஒருமுறை நல்லூர்த் திருவிழாவுக்கு அவரையும் கொண்டு போனார்கள். அப்பருக்கு ஏனோ நல்லூர்க் கந்தசுவாமி கோவிலோ அதனுடைய சூழலோ திருவிழாக் கூட்டமோ ஒன்றுமே பிடிக்கவில்லை. கோவிலுக்குப் போக வேண்டும் என்று தோன்றினால் வெள்ளியையும் விசேட நாட்க ளையும் தவிர்த்து வேறேதாவது நாளில் போய்க் கும்பிட்டு வருவார். அவர் சிறுவனாக இருந்த போது "அவன் ஒரு தர வழி" என்று தான் எல்லாரும் அவரைப் பற்றிச் சொல்வார்கள். அவர் வளர்ந்த பிறகு, அதைத் திருத்தி, "அவர் ஒரு தரவழி" என்பார்கள்.

அவர் யாருக்கும் ஒரு கெடுதலும் செய்ததாகச் சொல்ல முடியாது. யாரும் அவருக்குக் கெடுதல் செய்ததாகவும் சொல்ல முடியாது. தானும் தன்பாடுமாக இருந்தார் என்று வேண்டுமா னாற் சொல்லலாம். ஆனாலும் கலியாணம் செய்து மூன்று பேருக்குத் தகப்பனானவர். பிள்ளைகள் எல்லாரும் 1990க்குப் பிறகு ஒவ்வொருவராக வெளியூர் போய் விட்டார்கள். பிள்ளை களில் இளையவரான மகள் சரோஜா மூன்று ஆண்டுகட்கு



படிப்பகம்

முன்பு, அதாவது 2003ல், தன்னுடன் வந்து தங்கும்படி கூப்பிட்டுப் பார்த்தார். ஆள் அசையவில்லை. அவருடைய மனைவி கமலத்துக்குப் போக விருப்பம். அவர் மறிக்கவில்லை. கமலம் சரோஜாவோடு மெல்பணில் இரண்டு மாதங்கள் தங்கியிருந்து விட்டு வந்தார்.

****

அப்பருக்குப் பாஸ்போட் விசா என்றெல்லாம் போய் அலைய விருப்பமில்லை. அவருடைய குணம் தெரிந்ததால் சரோஜா கமலத்தின் தமையன் சுந்தரத்தின் மூலம் தாயாரின் பயண ஏற்பாடுகளை எல்லாம் கவனித்துக் கொண்டார். கமலத்துக்கு மெல்பண் பிடித்திருந்தது. பெரிய நகரம் என்றாலும், பரவி விசாலமாக விரிந்து கிடந்ததால் நெரிசல் குறைவு. வீட்டைச் சூழவும் தோட்டமும் உலாவித்திரியக்கூடிய மாதிரிச் சிறு புல்வெளியும் இருந்தன. சனி ஞாயிறு என்றால் யாராவது தெரிந்தவர்கள் வந்து சாப்பிட்டுப் போவார்கள் அல்லது அவர்கள் யார் வீட்டுக்காவது சாப்பிடப் போவார்கள். அலுப்பில்லாத சீவியம். மருமகன் ராதாகிருஷ்ணன் மாமியாருக்கு மகா மரியாதை. பேரன் டினி என்று அழைக்கப்படுகிற தினேஷுக்கு ஆறு வயது. டினிக்குக் கொஞ்சங் கொஞ்சந் தமிழ் தெரியும். கமலத்துக்குக் கொங்சங் கொஞ்சம் ஆங்கிலம் தெரியும். ஒரு கலப்பு மொழியில் இருவரும் பேசிக் கொள்வார்கள். டினியை விட்டுவிட்டுத் திரும்பக் கமலத்துக்கு மனமில்லை. என்றாலும் அப்பரைத் தனியே விட்டுவிட்டு அவர் பயணமானது அதுதான் முதல்முறை. பாஸ்போட் விசாவுக்கு என்று போய்வந்ததையெல்லாம் நீங்கள் கணக்கில் எடுக்கக் கூடாது.

அடுத்தமுறை வருகிற போது பெத்தப்பாவையும் கூட்டிக் கொண்டு வந்து நீண்டகாலத்திற்கு நிற்பதாக டினிக்கு உறுதி மொழி வழங்கிய கமலத்தால் தன் வாக்கைக் காப்பாற்ற முடியவில்லை. இரண்டாவது பயணமும் அப்பர் இல்லாமலே மேற்கொள்ளப்பட்டது. தன்னை வழியனுப்ப அப்பர் விமான நிலையத்துக்காவது வந்திருக்கலாமே என்று கமலத்துக்கு இரண்டுமுறையும் மனவருத்தமாக இருந்தது. ஆனாலும் எல்லா

www.padippakam.com



வற்றையும்விட முக்கியமாக “அவர் ஒரு தரவழி” என்று கமலத்துக்குத் தெரியும். வழியனுப்பக் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குத் தான் போகிறதாக இருந்தால், துணைக்கு வருகிறவர்கள் தன்னை மறுபடியும் ஊருக்கு கொண்டு போய் விட வேண்டியிருக்கும். அது அவர்களுக்கு வீண் தொல்லை என்ற அவருடைய வாதத்தைக் கமலத்தால் முறியடிக்க இயல வில்லை.

கமலத்தின் மூன்றாவது பயணம் திடீரென்று கமலத்துக்கு ஏற்பட்ட நெஞ்சுநோவுக்கு யாழ்ப்பாணத்தில் வைத்து வைத்தியம் செய்ய வசதிப்படாது என்று சரோஜா கட்டாயப்படுத்தி அழைத்த தன் பேரில் நடந்தது. அப்பருக்கு மனைவியை வெளியூருக்கு வைத்தியத்துக்கு அனுப்பவும் விருப்பமில்லை. அனுப்பாமல் விட்டு வருத்தம் முற்றிப்போனால் என்ன செய்கிறது என்றும் யோசனை. குடாநாட்டில் வைத்தியவசதிகள் பற்றி நிச்சயமாக ஒன்றும் சொல்லிக்கொள்ளவும் முடியாத நிலை. அதை விடப் போர் மீண்டும் மூளக்கூடிய சாடைகளும் தெரியத் தொடங்கி விட்டன.

சுந்தரத்துக்கு மைத்துனருடன் பெரிய வாரப்பாடு இல்லா விட்டாலும், ஆளைப் பிடிக்கும். யாருக்கும் தொந்தரவுகொடுக்க விரும்பாத அப்பரது சுபாவங்காரணமாக அவர் மீது ஒரு மதிப்பு இருந்தது. எனவே, அப்பர் கொழும்புக்குப் போய் அலையாத விதமாகப் பாஸ்போட் விசா எல்லாவற்றுக்கும் ஏற்பாடு செய்துவிட்டார். கமலம் இரண்டு தடவைகள் போய்த் திரும்பியதும் அதற்கு ஒரு வசதியாக இருந்தது. கமலம் வைத்தி யத்திற்குப் போவதாகத் தெரிவிக்காமலே காலிமுகத்திடலுக்கு அருகே அமைந்திருந்த விசா முகவரகத்தில் விண்ணப்பித்ததால் சிக்கலின்றி இரண்டு பேருக்கும் விசா வழங்கப்பட்டது.

****

இப்போது உங்களுக்கு நான் தொடக்கத்திற் சொன்ன மாதிரி, அப்பர் அறிந்த முதலாவது மாநகரம் மெல்பண் என்பதன் உண்மை விளங்கியிருக்கும். 2006 பெப்ரவரியில் மெல்பணுக்கு பயணமான போது, இரண்டு மூன்று மாதங்களில்



படிப்பகம்

www.padippakam.com



திரும்பிவருகிற எதிர்பார்ப்புடன் தான் அப்பர் இருந்தார். கமலத்துக்குக் கவலைக்குரியவிதமான வருத்தம் எதுவும் இல்லாதபோதும் நீண்டகால ஓய்வு அவசியம் என்று வைத்தியர்கள் வற்புறுத்தியதால் துணைக்கு வீட்டில் நிற்க வேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது. எனவே ஐந்து மாதங்கட்குஞ் சிறிது கூடியகாலம் மெல்பணிலேயே தங்கவேண்டியதாகி விட்டது.

தொடக்கத்தில் மெல்பண் நகரம் பற்றி அப்பருக்குப் பிடிப்பிருக்கவில்லை. பிறகு மெல்ல மெல்ல ஊர் பழக்கப்பட்டுவிட்டது. வட்டுக்கோட்டையில் இருந்தபோது அவர் சைக்கிளில் தான் போய்வருவார். யாழ்ப்பாண நகரத்தில் போர் நிறுத்த உடன் படிக்கைக்குப் பிறகு இளவட்டங்கள் மோட்டார் சைக்கிள்களில் ஓடித்திரிகிறமாதிரி வட்டுக்கோட்டைப் பக்கம் அதிகங் கிடையாது. ராணுவ வாகனங்களின் போக்குவரத்தையும் பஸ் போக்குவரத்தையுந் தவிர நாலு சில்லு வாகனங்கள் போய்வருவது குறைவு. எனவே போக்குவரத்து நெரிசல், தெருவைக் கடத்தல் போன்ற பிரச்சனைகட்கு அவர் முகங்கொடுத்ததில்லை. அதைவிட, ராணுவ வாகனங்களை விட்டாற், பொதுவாகவே வாகனங்களை ஓட்டுகிறவர்களும் பாதசாரிகளும் கொஞ்சம் ஒழுங்காகவே வீதியைப் பயன்படுத்துவார்கள

மெல்பணில் தொடக்கத்திற் பெரும்பாலும் சரோஜாவோ ராதாகிருஷ்ணனோ விடுமுறை நாட்களிலும் பிற நாட்களிலும் மாலையிலும் வேண்டிய இடத்துக்குக் காரில் கொண்டு போவார்கள். வீட்டோடு நாள்முழுவதும் இருந்து அப்பருக்கு அலுத்து விட்டது. வீட்டாருக்கு அலுப்புக்கொடுக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக பஸ், மின்சார ரயில், ட்ராம் பயணங்களின் சூட்சுமங்களைப் பேரன் டினியிடமிருந்து கேட்டறிந்து முதற் தடவையாக மெல்பணில் உள்ள விக்றோரியா சந்தைக்குத் தனியேபோகத் துணிந்தபோது அவருக்கு மனதிற்குள் ஒரு நடுக்கம் இருந்தது, ஆனால் வாகனப் போக்குவரத்தின் சீரான தன்மையையும் சனநெரிசலான நேரத்திற்கூடப் பாதசாரிகளும் வாகனங்களின் சாரதிகளும் ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் நடந்துகொள்வதையுங் கண்ட பின்பு அவருக்குத் தன்னம்பிக்கை



படிப்பகம்

www.padippakam.com



வலுத்தது. அவரது முதலாவது சுயாதீனமான மெல்பண் சுற்றுலாவின் வெற்றியின் பின்பு, சரோஜாவோ ராதாகிருஷ்ணனோ அவர் தனியே போய்வருவதற்குத் தடை சொல்ல நியாயமிருக்கவில்லை. என்றாலும், கையில் ஒரு செல்தொலைபேசியையும் கொண்டு போகுமாறு மட்டும் நிபந்தனை விதித்தார்கள்.

பன்னிரண்டு ஆண்டுகளில் சரோஜாவோ ராதாகிருஷ்ணனோ கண்டிராத இடங்களையெல்லாம் பன்னிரண்டு வாரங்களில் அப்பர் போய்ப் பார்த்து அவர்களுக்குச் சொல்லுகிறபோது கமலத்துக்கு தன் கணவர்தானா கதைக்கிறார் என்று வியப்பாக இருந்தது. ஒரு நாள் கமலத்தை வற்புறுத்தித் தன்னுடன் அழைத்துக்கொண்டுபோய்க் “கமலம், சும்மா பயப்பிடாதையும். இங்கை எல்லாம் வடிவா அடையாளப்படுத்தி இருக்கும். வீதி ஒழுங்கை மீறாவிட்டால் ஒரு பயமும் இல்லை” என்று தைரியமூட்டினார். என்றாலும் கமலத்துக்கு மெல்பணின் மெல்லிய குளிர் அவ்வளவு ஒத்துக்கொள்ளவில்லை. எனவே அதன் பின்பு அப்பரின் மெல்பண் மாநகர வலம் தனிமையிலேயே நடந்தது.

மெல்பணில் பார்ப்பதற்கு மேலும் எதுவுமில்லை என்பதாலும் வாராவாரம் சந்திக்கிறவர்களுடனான உரையாடல்கள் கீறல் விழுந்த கிராமபோன் தட்டு மாதிரித் திரும்பத்திரும்ப ஒரே விதமாக அமைந்ததாலும் குளிர் கொஞ்சம் அதிகமாகி விட்டதாலும் ஊருக்குத் திரும்புவதாக முடிவெடுத்த அப்பரை யாராலும் மறிக்க முடியவில்லை. ஆறுமாத விசாவை புதுப்பிக்க அவர் ஒத்துழைக்காத நிலையில் அவர் ஊர் திரும்புவதற்கு சரோஜாவும் ராதாகிருஷ்ணனும் உடன்பட்டனர். எனினும் கமலம் இன்னும் சில மாதங்கள் தங்களுடன் இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளை அப்பரால் மறுக்க முடியவில்லை. கமலத்துக்கு உடலில் கோளாறு இல்லாத போதும், ஓய்வு தேவை என்பதாலும் யாழ் குடாநாட்டில் நிலைமைகள் மிகவும் நிச்சயமற்று இருந்ததாலும் கமலத்தைத் தன்னுடன் வருமாறு அவர் வற்புறுத்தவில்லை.

அதேவேளை, அவர் நேரடியாகவே கட்டுநாயக்காவிலிருந்து வட்டுக்கோட்டைக்குப் போவதை யாரும் விரும்பவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



எனவே கொஞ்சக்காலம் கொழும்பில் தங்கி நிலைமைகளை அவதானித்துப் போவது நல்லது என்றும், சுந்தரம் —கமலத்தின் தமையன் என்று சொன்னேன், அதற்குள் மறந்திருக்க மாட்டீர் கள்— அவர் கொழும்பில் தங்கியிருப்பதற்கு வசதி செய்து கொடுப்பாரெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சுந்தரத்துடன் அவர் தங்கியிருந்திருக்கலாம். ஆனாலும் மகளுடனும் மருமகனுடனும் தங்கியிருந்தது பற்றியே அவருக்குள் இருந்த சங்கடம் கமலத் துக்குத் தெரியும். கொழும்பில் எத்தனை நாட்கள் நிற்கவேண்டி வருமோ என்பதும் தெரியாத நிலையில் வாடகைக்கு அறை பிடித்து நிற்பது உத்தமம் என்றே கமலம் நினைத்தார். சுந்தரம் மற்ற வசதிகளை எப்படியும் கவனித்துக் கொள்ளுவார் என்றுங் கமலத்துக்குத் தெரியும்.

****

அப்பர் ஓகஸ்ற் மாதத்தில் கட்டுநாயக்க விமான நிலையத் தில் வந்திறங்கியபோது முகமாலையில் கடுமையான மோதல் தொடங்கி விட்டது. அதனால் தரைவழிப் பயணமும் வான்வழிப் பயணமும் தடைப்பட்டுப்போயின. அப்பர் நீண்டகாலக் கொழும்பு நகர வாழ்வுக்கு ஆயத்தமாக இருக்க வேண்டும் என்ற உண் மையைக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துச் சுந்தரத்தின்மூலம் அறிந்தார். நகரவாழ்வுக்கு மெல்பணில் ஆறுமாதப் பயிற்சி பெற்றிருந்ததால் அப்பர் அச் செய்தியால் ஒரேயடியாக மிரண்டு போகவில்லை. எனினும் தன்னந்தனியாகக் கொழும்பில் எத்தனை காலம் சீவிக்கவேண்டி வருமோ என்ற எண்ணம் அவரைக் கொஞ்சம் வருத்தியது. மற்றப்படி கொழும்பு மாநகரம் பற்றி அவருக்கு முன்பு இருந்திருக்கக் கூடிய அச்சங் கட்கோ அவநம்பிக்கைக்கோ மனதில் இடமில்லாதபடி அவரது மெல்பண் அனுபவங்கள் அவரைப் பண்படுத்தியிருந்தன.

விமான நிலையத்திலிருந்து வெளியேவருகிறபோது வழமையான இடிபாடுகள் இருக்கவில்லை. பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்ததாலும் வாடகை வாகனக் காரர்களின் செயற்பாடுகள் பாதுகாப்புக் காரணங்களால் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டு இருந்தாலும் அதிகநேரம் காத்திருக்கத்



படிப்பகம்

தேவையில்லாமலேயே சுந்தரத்தின் வண்டியில் ஏறமுடிந்தது. சுந்தரம் ஊர் நிலவரங்கள் பற்றிக் கொஞ்சஞ் சொன்னார். ஆனால் அப்பருக்கு விமானத்தில் நன்கு தூங்க இயலாது போனதால் வாகனம் கொழும்பு நகர எல்லைக்குள் வர வெகு தூரம் முன்பே கண்ணயர்ந்து விட்டார். காலி வீதியில் வாகனத்தை நிறுத்தி ராணுவத்தினர் சோதனையிட்ட போது கண்விழித்த அப்பருக்கு அப்போதுதான் கொழும்பு நகரப் போக்குவரத்துப் பற்றி முதன்முதலாகக் கொஞ்சந் தெரியவந்தது. வெள்ளவத்தையில் உள்ள உயர்மாடிக் கட்டிடமொன்றில் ஒரு வசதியான அறையைச் சுந்தரம் ஏற்பாடு செய்திருந்தார். அங்கு போய்ச் சேர்வதற்கிடையில் நெரிசலையும் மீறிப் பெரிய வாகனங்களின் இடையில் உள்ள இடைவெளிகளினூடு ஓட்டங்காட்டிய முச்சக்கர வண்டிகளும் வளைந்து வளைந்து பின்னிய மோட்டார் சைக்கிள்களும் அப்பருக்குப் பிரமிப்பூட்டின. அவரை அறியாமலே மெல்பண் விதிகளின் சீரான போக்குவரத்து மனத்திரையில் ஓடியது.

போக்குவரத்துச் சைகை விளக்குகள் நாட்டின் சட்டங்களை விட ஒருபடி கேவலமாக அவமதிக்கப்பட்டன. போக்குவரத்து நெரிசலிடையே நின்ற வாகனங்களின் ஊடாக மனிதர் வீதியைக் கடப்பதைப் பார்த்த போது, அப்பருக்குக் கடுமையான சினம் ஏற்பட்டது. ஆனால், கொஞ்சத்தூரம் தள்ளித், தெருவைக் கடப்பதற்கான இடத்தில் நின்றவர்களைக் கவனியாமல் வாகனங்கள் போவதைப் பார்த்த பின்னர், பாதசாரிகளுக்கு அனுதாபமானதாக அவரது நிலைப்பாடு மாறியது. அனைத்தினிடையிலும் வெள்ளவத்தையில் எப்படித் தனியே இருந்து சமாளிக்கப் போகிறோம் என்ற யோசனை மனதில் வலுக்கொண்டது. சுந்தரத்தோடு நிற்கமுடியுமா என்று கேட்கத்தோன்றியது. எனினும் அவரில் ஊறிப்போன பெருமித உணர்வு அதற்கு இடமளிக்கவில்லை. எனவே கொழும்பு வீதிகளை எப்படிச் சமாளிப்பது என்பதற்கான தற்காப்புத் தந்திரோபாயங்கள் பற்றி யோசிக்கலானார்.

“என்ன அத்தான் கடுமையாக யோசிக்கிறியள்?” என்று

www.padippakam.com



சுந்தரம் கேட்டபோது, "இப்படித்தான் எப்பவும் கொழும்பில போக்குவரத்தோ?" என்று மறுமொழி சொன்னார். "உண்மையில இண்டைக்குப் பறவாயில்லை. அதோட ரஷ் அவர் எண்டா இன்னும் பயங்கரம். ஓட்டோக்காரன்களும் பஸ்களும் ஒரு பக்கம் எண்டா ஆக்களும் றோட்டாலை எல்லோ கண்ட மாதிரியும் குறுக்கால பாய்கினம்" என்று சொந்த மோட்டார் கார் பாவனையாளர்களது கண்ணோட்டத்தில் கொழும்பு வீதி ஒழுங்கீனத்தை விளக்கினார். "வாகனக்காரர் குறொசிங்கிலை நிக்காட்டி ஆக்கள் என்ன செய்வினம்?" என்று பாதசாரிகளின் கண்ணோட்டத்தில் அப்பர் கேள்வி எழுப்பினார்.

"எங்கட சனத்துக்குக் கொஞ்சமும் டிசிப்பிளின் இல்லை அத்தான். நான் நிண்டனென்டு வையுங்கோ. றோட்டைக் கடக்காமல் ஏமிலாந்துங்கள். பின்னால வாறவன் ஹோண் அடிப்பான். ஓட்டோக்காரன் நடுவால பூருவான். அதாலை மற்றவை செய்யிற மாதிரித்தான் நாங்களுஞ் செய்ய வேணும்" என்று தன்னுடைய தரப்பு வாதத்தைச் சுந்தரம் தொகுத்துக்கூறியபடி ராமகிருஷ்ணா வீதியடியில் காலி வீதியைக் கடந்து வாகனத்தை எதிர்த் திசைக்குத் திரும்புமாறு வலதுபக்கம் திருப்பினார். வேகமாக வந்து கொண்டிருந்த கார் ஒன்று விளக்குகளை மின்னிமின்னி அணைத்தது. போகலாம் என்று வழிவிடப் போகிற சைகை என்று நினைத்த அப்பர், சுந்தரம் வாகனத்தை அசைக்காததை யிட்டு வியந்து "ஏன் திரும்பேல்லை?" என்று கேட்டார். சுந்தரத் திற்கு அவரது கேள்விக்கான காரணம் விளங்கியிருக்க வேண்டும். "ஒஸ்றேலியாப் பாஷையில விளக்கை மின்னினால் நான் ஒதுங்குகிறேன், நீர் போகலாம் எண்டு கருத்து. ஶ்ரீ லங்காப் பாஷையில நான் போக வழிவிடு, இல்லையெண்டா இடிப்பன் எண்டு கருத்து" என்று சொல்லிச் சிரித்தார்.

இரவு முழுவதும் கொழும்பில் தெருவைக் கடப்பதற்கு வசதியான நேரமும் இடமும் பற்றியே யோசனையாயிருந்த அப்பருக்கு நடு இரவு தான் சரியான நேரம் என்று தோன்றியது. என்றாலும் நடு இரவில் தெருவைக்கடந்து எங்கே போவது என்று தெரியாததால் காலி வீதியைக் கடக்காமலே எப்படிச்



படிப்பகம்

www.padippakam.com



சமாளிப்பது என்று வழிதேடும் முடிவுக்கு வந்தார். அதற்கேற்ற படி, அவர் தங்கியிருந்த கட்டிடத்தில் அவருக்குத் தேவையான வற்றையெல்லாம் எடுத்துத்தரச் சுந்தரம் தனக்குத் தெரிந்த விசு என்ற ஒரு இளம் பையனை ஏற்பாடு செய்திருந்தார்.

****

இப்படியே மூன்று நாட்களைக் கழித்த அப்பருக்கு அறைக் குள் அடைபட்டுக் கிடந்து அலுத்துவிட்டது. தைரியத்தை வர வழைத்துக் கொண்டு நான்காம்நாட் காலை காலி வீதி வரை நடந்து சென்றார். தெருவைக் கடக்கவேண்டிய இடத்தில் பதி னைந்து நிமிடங்கள் நின்றார். எந்த வாகனமும் வழிவிடுவதாகத் தெரியவில்லை. ஆனால் பாதசாரிகள் வாகனங்களைக் கவனிக் காமற் பல இடங்களிலும் தெருவைக் கடந்தார்கள். கொழும்பில் தெருவைக் கடப்பதை விட யாழ்ப்பாணப் போர்ச் சூழல் குறைய ஆபத்தானது என்ற முடிவுக்கு வந்த அப்பர் அன்று பின்னேரம் தன்னைக் காணவந்த சுந்தரத்திடம் தன்னை எப்படியென்றாலும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப வழி செய்யும்படி மன்றாடினார்.

அப்பர் ஒன்றை முடிவுசெய்தால் மாற்றுவது கடினம் என்று அறிந்த சுந்தரம் "அது லேசில்லை. எண்டாலும் திருகோண மலையிலிருந்து போகிற கப்பலிலை போக வழியிருக்கும். ஆனாலும் அங்கை போய் நீங்கள் சமாளிக்கமாட்டீங்கள். நாளைக்குக் காலையில ஒரு ஓட்டோ பிடிச்சுப் புறக்கோட்டை யில நான் சொல்லுகிற இடத்துக்கு வாங்கோ. அங்கை வந்து நான் உங்களையும் கூட்டிக் கொண்டு தெரிஞ்ச ஒருத்தரோடை போய்க் கதைச்சு ஏதேன் செய்வம்" என்றார். அதற்கும் மேலா கச் சுந்தரத்திடம் எதையும் எதிர்பார்க்க நியாயமில்லை என்று அப்பர் அறிவார். எனவே, மறுநாள் விசுவின் உதவியுடன் பேரம்பேசி முந்நூறு ரூபா செலவில் புறக்கோட்டையில் வெளி யூர் பஸ்தரிப்புக்குக் கொஞ்சத்தூரம் தள்ளியிருந்த ஒரு கடைக்குப் போய்ச் சேர்ந்தார்.

பதினொரு மணிக்கு முன்னம் வருவதாகச் சொன்ன சுந்தரம் பதினொன்றாகியும் வரவில்லை. அப்பருக்குக் கொஞ்சம் யோசனையாகி விட்டது. பதினொன்றரை அளவில் கடைக்காரர்



படிப்பகம்

www.padippakam.com



அவருக்கு தொலைபேசி அழைப்பு வந்திருப்பதாகச் சொன்னார். சுந்தரம் மறுமுனையிலிருந்து, தான் போக்குவரத்து நெரிசலில் மாட்டிக்கொண்டிருப்பதாகவும் தான் குறிப்பிட்ட இடத்துக்கு நடந்துவருவது சுலபம் என்றும் வருகிற வழியைக் கடைக்காரர் சொல்லுவார் என்றும் விளக்கினார்.

நடக்கவேண்டிய தூரம் அதிகமில்லை. ஆனால் தெருவை இரண்டு தடவை கடக்கவேண்டியிருந்தது. கடைக்காரர், உதவிக்கு ஒரு ஆளை அனுப்பலாம். ஆனாற் கொஞ்சங் காத்திருக்க வேண்டிவரும் என்று சொன்னார். அப்பருக்கோ அவசரம். "பரவாயில்லை, சமாளிக்கிறேன்" என்றுகூறிக் கடைக்காரர் சொன்ன விவரங்களைத் தாளொன்றிற் குறித்துக்கொண்டு தெருவில் இறங்கினார். சந்தியை அடைந்ததும் வாகனங்களும் தள்ளு வண்டிகளும் மூட்டை சுமப்போரும் பிறரும் வளைந்து நுழைந்து சுழியோடுவதைக் காணத் தலையைச்சுற்றியது. கடைக்குத் திரும்பிப்போவதா என்று ஒரு கணம் யோசித்தார். பிறகு வருவது வரட்டும் என்று தெருவைக் கடக்கத் தொடங்கினார்.

"மாத்தையோ பலாகண (*ஐயா, பார்த்து*)" "அஸ் பொட்டத? (*கண் குருடா?*)" என்ற பலவாறான விளிப்புக்களிடையும் ஒரு தள்ளுவண்டியில் சாடையான இடிப்புடனும் ஒரு மோட்டார் சைக்கிளில் மோதாதகுறையாகவும் ஒரு பெண்ணின் தோளில் முட்டியதால் ஒரு முறைப்பான பார்வைக்கு உட்பட்டும் உயிராபத்தில்லாமல் ஒருவாறு கரைசேர்ந்தார்.

இரண்டாவது கடப்பு முதலாவதைவிடக் கூடச் சிரமமாயிருந்தது. ஏனென்றால் வாகனங்கள் கொஞ்சம் வேகமாக ஓடிக் கொண்டிருந்தன. வெள்ளவத்தை காலி வீதி அனுபவம் நினைவுக்கு வந்தது, வேறு வழியில்லாமல் கண்ணை மூடிக் கொண்டும் பிள்ளையாரை வேண்டிக் கொண்டும் வேகமாகத் தெருவின் குறுக்காகப் பாய்ந்தார். வண்டிகளின் சங்குகளின் மங்கல ஒலியும் வாகனங்களின் பிறேக்குகளின் மேளச் சத்தமும் முழங்க வெற்றிகரமாகத் தெருவின் மறுகரையில் நின்றார். சுந்தரம் சிறிது தொலைவில் அவரை நோக்கி வந்துகொண்டிருந்தார். அப்பரின் நெஞ்சின் படபடப்பு ஓயவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



“வாறதிலை ஒரு கரைச்சலும் இருக்கேல்லையா?” என்ற சுந்தரத்தின் கேள்விக்கு “இதிலை என்ன கரைச்சல்!” என்ற மறுமொழி அவரை அறியாமலே வந்தது.

இரண்டு மூன்று நாட்களில் தகவல் கிடைக்கும் என்று சுந்தரம் சொல்லி ஒருவாரமாகியும் ஒருதகவலும் கிடைக்க வில்லை. அவுஸ்திரேலியாவில் விசாவை நீடிப்பதில் ஏதோ பிழையாகிப் போய்விட்டதால் கமலம் திரும்பிவந்து மறுபடியும் விண்ணப்பித்துப் போக இருப்பதாகத் தொலைபேசித் தகவல் வந்தது. “நல்லவேளை யாழ்ப்பாணம் போகமுடியாமற் போனது” என்று அப்பர் தன்னை ஆறுதற்படுத்திக் கொண்டார்.

*****

மறுநாளுக்கு மறுநாட்காலை சுந்தரம் விமானநிலையத்தி லிருந்து கமலத்தை அழைத்துவந்து அப்பர் இருந்த அறையிற் சேர்ப்பித்துவிட்டு மாலை வருவதாகச் சொல்லிப் போனார். அறையில் சமையல் வசதிகள் இருந்தாலும், அப்பர் தேநீர் கோப்பி ஊற்றுவதற்கு மேலாக எதையும் செய்ததில்லை. பதி னொருமணி போலக் கமலம் “மூண்டுநேரமும் கடைச் சாப் பாடோ?” என்று கேட்டார். “இண்டைக்கு சமைச்சுச் சாப்பிடு வம். நான் போய் ஏதேன் காய்கறி சாமான் வாங்கிட்டுவாறன்” என்று புறப்பட்ட அப்பரிடம் “நீங்கள் பிழையா ஏதேன் வாங்கிப் போடுவியள், நானும் வாறன்” என்று கிளம்பிய கமலத்தை அவர் மறிக்கவில்லை.

காலி வீதியை அடைந்தவுடன் கமலம் தயங்கி நின்றார். “பயப்பிடாதையும்” என்று கமலத்தின் கையைப் பிடித்தபடி அப்பர் தெருவைக் கடக்கத் தொடங்கினார். வாகனங்கள் யாவும் சடுதியாக நின்று சங்கு முழங்கி அவர்களுக்கு வழிவிட்டன.

*(தாயகம்-57, டிசெம்பர் 2006-ஜனவரி 2007)*




படிப்பகம்

www.padippakam.com



# செங்காய்



அறையை நோக்கி நடந்துபோகையில் வழியில்நின்ற அவரது சினேகிதர் சுமனசிரி அவரைத் தொட்டுக் கையை மேல்நோக்கிக் காட்டினார்



படிப்பகம்

www.padippakam.com



எனக்குக் கடுமையான தடிமன் காய்ச்சல் என்பதால் இரண்டு கிழமைகட்கு மேலாக நாங்கள் சந்திக்கவில்லை. வரதர் நேற்றுத் தான் வந்தார். சென்றவாரத்துக்கு முதல்வாரம் நடந்த —இல்லை, சென்றவாரத்துக்கு முதல்வாரந் தொட்டு நடந்து வந்த— ஒரு சம்பவம் அவரை மிகவும் பாதித்தது. அவர் என்னிடங் கதைத்தது ஆலோசனை கேட்பதற்காக என்று நான் நினைக்கவில்லை. யாரிடமாவது சொல்லவேண்டும் என்ற தவிப் பால் என்றுதான் நினைக்கிறேன்.

*****

அன்று புதன்கிழமை. முன்பு ஒரு நாளும் இல்லாதவாறு காலை எட்டுமணிக்குச் சிறிது முன்பதாகக் கல்லூரிவளவில் இருந்த பலவேறு பாதைகளிலும் மாணவர்களும் கல்லூரி அலுவலக ஊழியர்களும் ஆடாமல் அசையாமல் நின்றிருந்தார்கள். இதென்ன வினோதம் என்று யோசித்தபடி வரதர் தன்னுடைய பிரிவில் உள்ள போதானாசிரியர்களின் அறையை நோக்கி நடந்துபோகையில் வழியில்நின்ற அவரது சினேகிதர் சுமனசிரி அவரைத் தொட்டுக் கையை மேல்நோக்கிக் காட்டினார். அப் போதுதான் கல்லூரி வளவில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கி யிலிருந்து "ஸ்ரீஈஈ... லங்கா..." என்று தேசியகீதத்தை யாரோ இழுப்பது கேட்டது. "இன்றைக்கு ஏதோ விசேஷமாக்கும்'" என்று நினைத்த வரதருக்கு ஏன் என்றுமில்லாதபடி காலையில் இசைக்கிறார்கள் என்ற யோசனையும் மனதில் ஓடியது. தேசியக் கொடி எங்கேயும் பறக்கவிடப்பட்டதாகத் தெரியவில்லை. சில மாதங்கள் முன்பு பொஸொன் பண்டிகையை முன்னிட்டுக் கட்டப் பட்ட பஞ்சவர்ணப் பவுத்தமதப் பொலித்தீன் கொடிவரிசையின் மிச்சங்கள் சில ஒரு தூணோடு ஒட்டித் தொங்கிக்கிடந்ததை விட்டால் வேறெந்தக் கொடியுமே கண்ணிற் படவில்லை.

வரதரின் தீவிர சிந்தனையோட்டங் காரணமாகத், தேசிய கீதம் பாடிமுடிந்தபின்னும் நின்ற இடத்திலேயே நின்றார். முன்னால் இரண்டு அடியெடுத்து வைத்த சுமனசிரி, திரும்பி வந்து "வரதர் அய்யா, என்ன நத்த? (*வரதர் அண்ணை வரேல்லையா?*)" என்று அறைக்குப் போகும்படி நினைவூட்டிய



படிப்பகம்

www.padippakam.com



வுடன், "மொனவதோ கல்பனாவ (*என்னவோ நினைப்பு*)" என்று தன் உணர்வுகளை வெளிப்படுத்தாத தனது வழமையான நிதானமானகுரலில் சொல்லிவிட்டுப் போதனாசிரியர்களின் அறைக்குப் போய் அடுத்த ஆய்வுகூட வகுப்புக்காகத் தன்னை ஆயத்தப்படுத்தத் தொடங்கினார். வேலை மும்முரத்தில் அன்று யாரிடமும் தேசியகீதம் பற்றிக் கேட்கக் கிடைக்கவில்லை. அதைவிடச் சிலரிடம் அது பற்றி விசாரிப்பதும் புதிய பிரச்சனை களைத் தோற்றுவிக்கும் என்று அவர் அறிவார். எனவே ஆறுத லாகக் கேட்டறிவோம் என்று விட்டுவிட்டார்.

மறுநாளும் அதற்கடுத்த நாளும் வெளியிடத்தில் வேலை. மாணவர்களைக் கொழும்பிற்கு வெளியே உள்ள சில தொழிற் சாலைகட்குச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். வழமையாக அவருடன் வருகிற இருவரில் ஒருவர் கஹகொட. கஹகொடவுக்குத் தமிழரைப் பிடியாது. ஆனாலும் வேலை அலுவல்களில் அந்த உணர்வு குறுக்கிட அனுமதிப்பதில்லை. எனவே அவருடன் சேர்ந்து வேலை செய்வதில் வரதருக்குப் பிரச்சினையில்லை. மற்றவர் சத்யபால. வேலைக்குக் கொஞ்சம் கள்ளம் என்றாலும் இனத்துவேஷம் இல்லாத ஆள். பாடிச்சிரித்து பகிடியாகக் கதைக்கிறதென்றால் அவரைப் போல வேறொரு வரைக் காணுவது கஷ்டம். அன்றைக்கு அவருக்கு வரமுடிய வில்லை. இம்முறை ஏனோ சுற்றுலாவில் உற்சாகம் வழமையி லுங் கொஞ்சம் குறைவாகவே இருந்தது. மாணவர்கள் பஸ்ஸில் பாடிக்கொண்டு போன்போதும் ஏதோ ஒரு இறுக்கம் தென்பட்டது. சத்யபால வராததாலேதான் என்று வரதர் தன்னைச் சமாதானப் படுத்திக்கொண்டார். எனினும், நாட்டின் இடைக்காலச் சமாதா னச் சூழலின் சிதைவு தமிழ், சிங்கள மாணவர்களிடையில் இருந்து வந்த ஓரளவு சுமுகமான உறவிலுஞ் சிறிது தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததை அவரறிவார். இருந்துங் கல்லூரி மதில்கட் கிடையே எவ்விதமான அரசியற் கைகலப்பும் இதுவரை நிகழ்ந்த தில்லை.

திங்கட்கிழமை வரதர் வேலைக்குச் சென்றபோது கற்சிலை போல ஒவ்வோரிடத்தில் நின்ற மனிதர்களும் அவர்களைக்



படிப்பகம்

www.padippakam.com



கட்டிப்போட்ட தேசியகீதமும் அவரை வரவேற்றன. காலைத் தேநீர் வேளையில் சுமனசிரியிடம் அது பற்றிப் பேச்சுக் கொடுத் தார். வழமையாகச் சிரித்த முகத்துடன் இருக்கிற சுமனசிரியின் முகத்தில் எது பற்றியோ அன்று சாடையான சினம் தென்பட்டது, வரதரின் கேள்வி அவரது முகத்தை மேலும் வாடச் செய்தது. "பிஸ்ஸோ!" என்ற ஒரு, சொல்லுக்குமேல் அவரிடமிருந்து வர வில்லை. வரதரும் தனது கேள்வியைத் தொடரவில்லை. விசரர் என்று சுமனசிரி ஏசியது தேசியகீதத்தை ஒலிபரப்புகிறதற்குப் பொறுப்பானவர்களை என்று வரதருக்கு விளங்கியது.

மறுநாள், வரதர் வழமையிலும் முன்பதாக வேலைக்குக் கிளம்பித் தேசியகீதம் ஒலிப்பதற்கு முன்பதாகவே அறைக்குப் போய்விட்டார். வேறுயாரும் வந்திருக்கவில்லை. வெளியே ஒலித்த தேசியகீதம் சாடையாகக் காதிற் கேட்டாலும் வரதர் அதைக் கவனியாமல் தனது வேலையில் மூழ்கினார். தேசியகீதம் முடிந்தபின்பு சுமனசிரி அறைக்குள்வந்து வரதரைப்பார்த்து ஒரு மர்மமான ஆனால் நட்புணர்வான முறுவலை வீசினார். அம் முறுவல் 'நீர் கெட்டிக்காரன்' என்று சொல்லுகிறதென வரதர் ஊகித்துக் கொண்டார். சுமனசிரி தனது கோப்புகளையும் எடுத்துக்கொண்டு வகுப்புக்கு நடந்தார்.

தேநீர் வேளையின் போது தேசியகீதம் ஒலிபரப்பப்படுவதைப் பற்றி சுமனசிரி வரதரிடம் தானாகவே பேசத் தொடங்கினார். முகத்தில் இருந்த முதல் நாளைய சினம் நீங்கியிருந்தாலும் கோபம் முற்றாகத் தணிந்ததாகச் சொல்ல இயலாது. வியாழனும் வெள்ளியும் தேசியகீதத்திற்குத் தெருவில் நின்று மரியாதை செலுத்திய சுமனசிரி, திங்களன்று கையிற் பொதிகளுடன் வந்த தால், நிற்காமல் நடந்து போதனாசிரியர்களின் அறையை அடைந்தார். தேசியகீதத்தை அவமதித்து அவர் நடந்து சென்ற தாக யாரோ சொன்னதாகக் கஹகொட சக ஆசிரியர்களிடம் கதையைப் பரப்பி விட்டார். அவர்களில் யாரோ சுமனசிரியைத் தேசத்துரோகி என்று அவரது காதுபடச் சொல்லியதால் தான் திங்கட்கிழமை சுமனசிரிக்கு மனம் சரியாக இருக்கவில்லை.

அந்த வார நடுவிலேயே, சிற்றுண்டிச்சாலை உட்படப் பல



படிப்பகம்

இடங்களிலும் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டன. வகுப்பறை களிலும் ஆசிரியர்களது அறைகளிலும் அவர்களது தேநீர் அறையிலும் பொருத்தப்படவில்லை. தேசியகீதம் இசைக்கப் பட்டபோது சிற்றுண்டிச்சாலையில் காலை உணவு அருந்திக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் உண்பதை நிறுத்தி எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர். வாயிலிருந்த உணவை மென்றார் களா, மென்றதை விழுங்கினார்களா என்று இன்றுவரை யாருக் கும் தெரியாது. சுமனசிரி, "நல்லவேளை மலசலகூடத்திலும் ஒலிபெருக்கி வைக்கவில்லை" என்று வரதரிடம் ஆங்கிலத்தில் சொன்னதைக், கொஞ்சம் உரக்கவே, பிறர் காதுபடவே சொன் னார் என்று வரதர் நினைத்தார். சிலர் சிரித்தார்கள். சிலர் முறைத்தார்கள். எனினும் ஏடாகூடமாக எதுவும் நடக்கவில்லை.

தேசியகீதத்தைக் காலையில் ஒலிபரப்புகிற தீர்மானத்திற்குச் சிங்கள மாணவர்கள் சிலர்தான் காரணமாக இருந்தார்களென்று சொல்லப்பட்டது. கல்லூரித் தொழிற்சங்கங்கள் சில என்றுஞ் சொல்லப்பட்டது. எனினும் உறுதியாக எதையுஞ் சொல்ல இயலவில்லை. எந்த அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று கல்லூரி அதிபரிடம் கேட்டதற்கு வியாழனன்று சுமனசிரி போனவேளை அதிபர் தனது அலுவலகத்தில் இருக்கவில்லை. அதிபரின் செயலாளரும் தட்டெழுத்தாளரும் கடிதங்களை வரைப வரும் வரவேற்பாளருமாகப் பலவேறு பணிகள் நடுவிலும் முகக் கடுப்பின்றி எல்லாருடனும் பேசக்கூடிய சுனீதா என்கிற மூன்று குழந்தைகட்குத் தாயான பெண் மட்டும் அறையில் இருந்தார். அதிபரை வியாழனும் வெள்ளியும் பிடிப்பது கடினம் என்று சுனீதா சுமனசிரியிடம் விளக்கி, ஏதாவது செய்விக்கவேண்டுமா னால் தானே கவனித்துச் செய்விக்கவும் முன்வந்தார். சுமனசிரி சிறிது தயங்குவதைக் கவனித்த சுனீதா, "சேர், அந்தரங்கமான விஷயம் என்றால் நான் குறுக்கிடவில்லை" என்று சொல்லிச் சிரித்தார். சுமனசிரியின் தற்காப்புணர்வாலான தயக்கம் அத்துடன் தகர்ந்தது.

"தேசியகீதத்தை இப்படி இசைக்கிற முட்டாள்தனமான

www.padippakam.com



முடிவை எடுத்தது யார்?" என்று சட்டென்று கேட்டுவிட்டார். "எல்லா விஷயத்திலும் முடிவெடுக்கிறவர்...." என்று சொல்லத் தொடங்கிய சுனீதா பிறகு அதிபரை முட்டாளென்று தான் சொன்னதாக சுமனசிரி யோசிக்கக்கூடும் என்று நினைத்தோ என்னவோ "எனக்குச் சரியாகச் சொல்லத் தெரியாது. என்றா லும் தமிழ்ப் பெடியன்களுக்கு திமிர் அதிகம் என்பதால் அவர் களை வைக்கவேண்டிய இடத்தில் வைக்கவேண்டும்" என்றுதான் கதைக்கிறார்கள் என்று சொல்லிவிட்டுச் சொல்லக்கூடாத எதை யோ சொல்லிவிட்டதாகத் தனது நாக்கைக் கடித்துக் கொண்டார்.

சுனீதா இனவாதியல்ல என்று சுமனசிரிக்குத் தெரியும். எனவே அவர் சொன்னது அலுவலகத்தில் நடந்த உரையாடல் ஒன்றின் பகுதி என்று ஊகித்துக் கொண்டு, "தமிழரை மட்டந் தட்டுகிறதற்குத் தான் சிலபேருக்குத் தேசக்கொடியும் தேசப் பற்றும் தாய்மொழியும் சமயமும் தேவைப்படுகிறது போல" என்று சொல்லிவிட்டு, என்ன மறுமொழி சொல்லுவது என்று தெரியாமல் முழிசின சுனீதாவிடம் "அதிபரிடம் ஒன்றுங் கேட்க வேண்டாம். நானே தேவையானபோது கேட்டுக் கொள்ளு கிறேன்" என்றார். சுனீதாவும் ஒரு ஆறுதற்பெருமூச்சுடன் "அலுவ லகத்துக்கு வருகிறவழியில் கையிலே குடை, கைப்பை எல்லா வற்றையும் ஏந்திக் கொண்டு பஸ்ஸுக்கு நிற்கிற மாதிரி நிற்க எனக்குந்தான் விருப்பமில்லை. என்ன செய்ய!" என்றார்.

*****

சுமனசிரி மாதிரிச் சிந்தித்தவர்கள் பலர் இருந்தார்கள். விடுப்புக் காகத் தேசப்பற்றை வெளிப்படுத்துகிறது போல தேசத் துரோகம் எதுவும் இல்லை என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். மறுபுறம் தேசியகீதம் இசைப்பதன் மூலம் தேசப்பற்று வளரும் என்று வாதித்தவர்களும் இருந்தார்கள். எல்லாரும் தங்கள்தங்க ளது வேலைகளைப் பொறுப்புடனும் சமூக அக்கறையுடனும் செய்கிறதற்கு மேலாக எவரும் தேசப்பற்றை வெளிப்படுத்த முடியாது என்பது வரதரின் எண்ணம். அதை ஒரேயொருமுறை சுமனசிரியுடன் பகிர்ந்துகொண்டார். மற்றப்படி, இவ் விடயத்தில்



படிப்பகம்

www.padippakam.com



அவரது கருத்தை அறியத் தமிழ் மாணவர்கள் உட்பட யாருமே விரும்பப்போவதில்லை என்று அவருக்கு நன்றாகத் தெரியும். தேசியகீத விவகாரம்பற்றிச் செவ்வாயன்று ஒரு தமிழ்ப் பத்திரிகையில் இடங்குறிப்பிடாமல் ஒரு செய்தித்துணுக்கு வந்தது என்றும் ஒரு எ.ஃ.ப்.எம். வானொலியிலும் அதேநாள் யாரோ நக்கலாகக் குறிப்பிட்டுப் பேசினார்கள் என்றும் வரதர் கேள்விப் பட்டார். கல்லூரிக்கு வெளியே அது ஒரு பிரச்சனையாக வளரவுமில்லை. நாட்டின் பிற கல்லூரிகளில் அந்த நடைமுறை பின்பற்றப்படவுமில்லை.

கல்லூரிக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள் தனது நிர்வாகத்திற குச் சிக்கல்களை ஏற்படுத்தலாம் என்று நினைத்தோ, சுமனசிரி போன்றவர்களின் பிரசாரம் வலுத்தால் அரசாங்கத்திடம் தனக் கும் கல்லூரிக்கும் பேர் கெட்டுப்போய்விடும் என்று நினைத்தோ, ஆசிரியர்கட்கான விசேட கூட்டம் ஒன்றைக் கூட்டப்போவதாக அதிபர் வெள்ளியன்று அறிவித்தார். கூட்டத்திற்குப் போகாமல் விடுவது வரதரால் இயலாத காரியம். ஏனென்றால் அது கடமை. போன இடத்தில் அவருடைய கருத்தைக் கேட்டால் என்ன செய்வது என்பதில் அவருக்குச் சிறிது சங்கடம் இருந்தது. இப்போதைய சூழலில் அவரது மௌனமும் பலவிதமான வாசிப் புக்கட்கு உட்படும் என அவர் நினைத்தார்.

*****

வரதருக்கு ஆலோசனை சொல்லக்கூடிய அளவுக்கு நான் அறிவாளியல்ல. என்றாலும் எனக்கு உடனேயே மனதிற் பட்ட தைச் சொன்னேன். வரதர் "அடேயப்பா சங்கரலிங்கம், உமக்குள்ளை இப்படி ஒரு மேதாவி இருக்கிறது எனக்கு இண்டுதான் தெரிஞ்சுது" என்று இன்னமும் உளைவு மாறாத என்னுடைய தோளில் இறுக்கித் தட்டினார். அது நக்கல் என்று நான் நினைக்கவில்லை. வரதர் மேற்கொண்டு எதுவும் பேசாமல் "நாளைக்குக் காணுவம்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டார்.

*****

மறுநாள் வரதர் வரவில்லை. அடுத்த நாள் வந்தார். கூட்டம் முடியப் பொழுதுபட்டுவிட்டது என்றார். "கடைசியாக என்ன



படிப்பகம்

www.padippakam.com



நடந்தது?" என்று கேட்டேன். "கதையைக் கேளும்" என்று சொல்லிவிட்டுக் கூட்டத்தில் நடந்ததைச் சொன்னார்.

அதிபர், அமெரிக்காவில் பாடசாலைகளில் தேசியகீதம் பாடியபிறகுதான் வேலை தொடங்குகிறார்கள் என்றும் அதனாலேதான் அமெரிக்கர்கள் மிகுந்த தேசியஉணர்வுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்றுங் குறிப்பிட்டுவிட்டு, "நம் கல்லூரியில் எத்தனை மாணவர்கட்குத் தேசியகீத வரிகள் தெரியும்? எத்தனை ஆசிரியர்கட்குத் தெரியும்?" என்று கேட்டுவிட்டுக் குழுமியிருந்த ஆசிரியர்களை ஒருமுறை நோட்டம் விட்டார். சத்யபால, தான் பகிடிவிடுவதாக நினைத்து, "அதிபரைப் பாடச் சொல்லிக் கேட்போமா?" என்று கஹகொடவிடம் முணுமுணுத்தார். கஹகொட அவரை முறைப்பதைக் கவனித்த அதிபர் "அங்கே என்ன விஷயம்?" என்று கேட்க, சத்யபால "கஹகொடவுக்குத் தேசியகீதம் தெரியுமா என்று கேட்டேன்" என்று ஒரு தற்காப்புப் பொய்யை உதிர்த்தார். கஹகொடவால் மேலுங் கடுமையாக முறைப்பதைவிட எதுவுஞ்செய்ய இயலவில்லை.

"தேசியகீதத்தை ஒலிபெருக்கியில் கேட்டுப் பாடமானவர்கள் யாராவது இருந்தால் கையை உயர்த்துங்கள்" என்று சுமனசிரி எழுந்து சொல்ல அறைமுழுவதும் சிரிப்பலை எழுந்தது. அதிபரின் பொதுநிறமான முகம் கோபத்தாற் சூடேறிச் சிவந்தது.

"இங்கே எல்லா முடிவுகளையும் எடுக்கிறவன் நான்" என்று முழங்கினார். "உங்களுக்கு மரியாதை கொடுத்து இங்கே அழைத்து என்னுடைய நோக்கத்தைச் சொல்லவெளிக்கிட்டால் எல்லாவற்றையும் கேலியாக்கப் பார்க்கிறீர்கள்" என்று கண்டிப்பான குரலிற் சொல்லிவிட்டு அமர்ந்தார்.

அதற்குப்பிறகு கூட்டம் அமைதியாகிப் பின்பு மெல்லமெல்லச் சூடேறித் தேசியகீதம் இசைப்பதன் சாதகபாதகமான அம்சங்கள் கடுமையாக விவாதிக்கப்பட்டன. எனினும் ஒரு முடிவுமில்லாமற் கூட்டம் நீண்டுகொண்டேபோனது. அதிபர் மீண்டும் பொறுமை இழக்கத் தொடங்கியபோது, வரதர் கையையுயர்த்தி "நான் ஒரு ஆலோசனை சொல்லலாமா?" என்று கேட்டார். வரதர் பேசுவாரென யாருமே எதிர்பாராதநிலையில், "தேசியகீதம்



படிப்பகம்

www.padippakam.com



இசைப்பது பற்றி யாரும் எதிர்த்துப்பேசவில்லை என்றுதான் நினைக்கிறேன். தெருவழியேநின்று கேட்பதைப் பற்றித்தான் சிலருக்குப் பிரச்சனை போலத்தெரிகிறது. அப்படி இசைப்பது தேசியகீதத்தை அவமதிக்கிற காரியம் என்று அவர்கள் நினைக் கிறார்கள் என்று நம்புகிறேன்” என்று சொல்லிய வரதர், அறை யை ஒருமுறை நோட்டம்விட்டார். கஹகொட உட்பட எல்லோ ரும் வரதர் இனி என்ன சொல்லுவார் என்று எதிர்பார்த்திருப்பது போல மௌனமாயிருந்தனர்.

“தேசியகீதத்தை வகுப்பறைகளில் எட்டு மணிக்கு முதலாவது பாடம் தொடங்கமுதல் இசைத்தால் மேலதிகமாக ஒரு நன்மை யும் உண்டு என்று நினைக்கிறேன். அதனால் மாணவர் எல்லோ ரும் வேளைக்கே வகுப்புக்கு வரக் கட்டாயப்படுவார்கள். நாங்க ளுங்கூட நேரந்தவறாமல் வரப் பழகிவிடுவோம். அதனால் வேலை மேலும் ஒழுங்காக நடக்கும். அது நாட்டுக்கும் நல்லது” என்று சொல்லியபடி வரதர் அமர்ந்தார்.

எல்லோரும் கைதட்டி ஆரவாரஞ் செய்தார்கள். அதிபர் வரதரைப் பாராட்டி, வரதர் சொன்னதை ஆலோசனைக்கெடுப்ப தாகச் சொல்லியதுடன் கூட்டம் அமைதியாக முடிந்தது.

*****

“வரதர், அப்ப காரியம் பழந்தான்!” என்று என் ஆலோசனை பற்றிய பெருமையுடன் வரதரைப் பாராட்டினேன்.

“காயுமில்லைப் பழமுமில்லைச் சங்கரலிங்கம், வெம்பல் எண்டு தான் நினைக்கிறேன்” என்றார் வரதர்.

“ஏன் அப்பிடிச் சொல்லுகிறீர்?”

“எட்டு மணிக்கு, நேரந்தவறாமல், எங்களுடைய ஆசிரியர் மார் வரவிரும்புவினம் எண்டு நினைக்கிறீரா? ஆறுதலாகக் குளிச்சுமுழுகிச் சாப்பிட்டு ஆடியாடி எட்டேகால் எட்டரை எண்டு வகுப்புக்குப் பிந்தியும், ஏன் பத்து மணிக்கும், வாற ஆக்கள் அவை. இடாப்பிலை கையெழுத்தும் போடத் தேவையில்லை. வகுப்புநடந்தாச் சரி எண்டு பழகிப்போனவை, தேசிய கீதத்துக்கு எழும்பி நிக்கிறதுக்காக விடிய வெள்ளெண்ண ஓடோடி



படிப்பகம்

www.padippakam.com



வருவினமா? நீர் எந்த உலகத்திலை சீவிக்கிறீர்?" என்று ஒரே மூச்சில் வரதர் சொல்லி முடித்தார்.

எனக்கு ஏமாற்றமாக இருந்தது. நான் சொல்லிக்கொடுத்த அருமையான யோசனை பயனில்லாமற் போய்விட்டால் நானென்ன ஆனந்தக்கூத்தா ஆடுவேன்? என் முகத்தைக் கவனித்த வரதர், "நீர் சொன்ன யோசனையினுடைய பிரயோசனம் வேறை. தேசப்பற்றுக் கதைக்கிற பம்மாத்துக்காரரை அது தோலுரிச்சுக் காட்டிவிட்டுது. அவைக்கு உடனடியா விளங்கியிராது. விடிஞ்செழும்ப விளங்கியிருக்கும்".

"அப்ப என்ன நடக்கும்? தேசிய கீதத்தை நிப்பாட்டுவினமா, இல்லாவிட்டால்...."

"ஒண்டும் நடவாது. சிங்கள சிறீ வாகன இலக்கத்தகடுகளுக்கு நடந்தமாதிரி, அலுத்துப் போய், எப்போதேன் ஒலி பரப்புக் கருவி பழுதான சாட்டோடு நிண்டு போகலாம்!" என்று சொன்ன வரதர், "சங்கரலிங்கம், வெம்பல் எண்டா சொன்னனான்? அது பிழை. செங்காய் எண்டு வைச்சுக் கொள்ளுவமே. வாறதைப் பொறுத்திருந்து பாப்பம்" என்றார்.

*(தாயகம்-58, மாச்-மே 2007)*



படிப்பகம்

www.padippakam.com



# புல்லு வெட்டுவது யார்? கொழுந்தெடுக்கிறது யார்?



*தலைவரே, வெள்ளைக்காரன் போகாத ஊர் இருக்கா? நம்மளைக்கூட வெள்ளைக்காரந்தானே இங்கே கொண்ணாந்தான்*



படிப்பகம்

www.padippakam.com



“வாங்க வாங்க வாங்க வாங்க” என்று வாய்நிறைய வரவேற்றார் கருப்பையாபிள்ளை. “இப்பத்தான் நம்மளையெல்லாம் தம்பிக்கு ஞாபகம் வந்திருச்சா?” என்ற அவருடைய கேள்விக்கு நான் மறுமொழிசொல்ல முதலே தனது பேச்சின் சத்தத்தைக் குறைத்து இரகசியம்பேசுவது போல “யாரது, உங்ககூடப் பின்னால வந்தி ருக்கறாங்க?” என்று கேட்டார்.

“அவரு வந்து, நம்ம கம்பனியோட வெளியூரு ஏஜன்சிலே ருந்து வந்திருக்காரு. மலைநாடு தோட்டப்பக்கமெல்லாம் ஒரு வாட்டி கொண்டுபோய்க் காமிச்சுட்டு வான்னு மொதலாளி சொன்னாரு. அதான் போற வழிலே ஒங்களையும் பாத்துட்டுப் போவலாமுன்னு நெனச்சேன்” என்று நான் சொல்லிவாயெடுக்கு முன்னமே, பிள்ளை, “வெல்கம் சேர். கம் இன் சேர். பிளீஸ் கம் அன்டு சிட் சேர்” என்று கூட வந்தவர் மீது எக்கச்சக்கமாக சேர் இறைத்து அவர் “தாங்க்யூ” சொல்லி எங்கே அமருவது என்று முடிவுசெய்யமுதலே “சேர், கமிங் லண்டன்?” என்று ஆங்கிலத்தின் மீது சேறிறைக்கத் தொடங்கியபோது, அவரையும் ஆங்கிலத்தையும் காப்பாற்றுகிற முயற்சியில் நான் குறுக்கிட்டு “அவரு கென்யாலேருந்து வந்திருக்காரு. சொந்த ஊரு....” என்று முடிக்கமுதலே “கென்யான்னா லண்டன் பக்கத்துலேயா?” என்று எனது புவியியல் அறிவைக் கருப்பையாபிள்ளை சோதித் தார். “இல்லே தலைவர், அது ஆப்பிரிக்காவிலே” என்று பதில் சொல்ல “அது காப்பிரித் தேசமில்லியா.... ஆளு பளிச்சுன்னு மினுக்கிளடுத்தாப்பில இல்லே இருக்காரு!” என்று ஜோர்ஜின் நிறத்தை விமர்சித்தார்.

“தலைவரே, வெள்ளைக்காரன் போகாத ஊர் இருக்கா? நம்மளைக் கூட வெள்ளைக்காரந்தானே இங்கே கொண்ணாந் தான்” என்ற எனது விளக்கம் கருப்பையா பிள்ளைக்குப் பிடிக்க வில்லை. “தோட்டத்துல, ரயிலு ரோட்டுப்போட, கூலிவேலைக் குன்னு பஞ்சப்பட்டவன் எல்லாரையும் வெள்ளைக்காரந்தாங் கொண்டாந்தான். உம்மளையும் நம்மளையும் போல வசதியான வங்கள்ளாம் நாமாத்தான் வந்தோமில்லியா?” என்று என்னோடு வர்க்க உறவு கொண்டாடினார். அவரைத் திருத்த நான் முயல



படிப்பகம்

www.padippakam.com



வில்லை. ஏனென்றால் உண்மையில் நானோ அவரோ பெரிய பணக்காரப் பரம்பரையில் வந்தவர்கள் இல்லை. அவருடைய பாட்டனார் பெரிய கங்காணி. என்னுடைய பாட்டனார் கணக்கப் பிள்ளை.

கருப்பையாபிள்ளைக்குத் தொழிற்சங்கத்தில் பிரதேசத் தலைவர் பொறுப்பு. அதைவிட வேறு முதலீடுகளும் வருமானங் களும் உண்டு. நான் தோட்டச்சூழலிலிருந்து தப்பிக் கொழும் பில் ஒரு கம்பனியில் வேலை பார்க்கிறேன். கொழும்பில் வாழ்க் கைச்செலவு ஏறுகிற வேகத்தைப் பாரக்கிறபோது தோட்டத் தோடேயே ஒட்டினாற்போல ஏதாவது தொழில் பார்த்திருக்கலாம் என்று சிலசமயம் தோன்றுகிறது. தோட்டங்கள் அரசாங்கத்தின் கைக்குப் போனபிறகு தொழிலாளர் பட்ட கஷ்டம் பற்றி அப்பா சொல்லுவார். மறுபடி அவை தனியார்மயமானபின்பு தொழிலா ளர் படுகிறபாட்டை நான் அறிவேன். கருப்பையாபிள்ளைக்கும் என்னுடைய குடும்பத்தாருக்கும் நீண்டகாலமாகச் சிநேகிதம். பலவிதமான கொடுக்கல்வாங்கல்கள். எனவே எங்களுக்கு இடை யிலான தொடர்பு அறாமலே நீடித்தது. மலைநாட்டுக்குப் போகிறபோது தொப்பித்தோட்டத்தில் (ஹற்றன் என்றால் தான் உங்களுக்கெல்லாம் விளங்கும்) மல்லிகைப் பூ பஜார் வழியாகப் போனால் வருகிற அவரது வீட்டுக்குப் போகாமல் விடமாட்டேன். அவரும் சங்க வேலை, வியாபாரம் என்று கொழும்புக்கு வருகிற போது நேரமிருந்தால் என்னை எட்டிப்பார்க்காமல் போக மாட்டார். மாமா, அண்ணை என்று அழைக்கக்கூடிய நெருக்கம். என்றாலும், அப்பா அவரைச் செல்லமாகத் “தலைவரே” என்று அழைப்பது எனக்கும் பழகிவிட்டது.

என்னுடனான உரையாடலை முடித்துக் கொண்டு ஜோர்ஜின் பக்கமாக அவரது கவனம் மீண்டுந் திரும்பியது. “ட்றிங்க் டீ சேர்? ஸ்ரீலங்கா... நோநோ... சிலோன். கொ.ஃ.பி நொட் குட்?” என்று கேட்டுவிட்டு மறுமொழி வருமுன்பே எங்கள் இரண்டு பேருக்குமான முடிவைத் தானேஎடுத்துக்கொண்டு வீட்டின் உட் புறமாக நோக்கி “டேய், முனுசாமி ஐயாமாரு வந்திருக்காங்க. ஸ்ட்ராங்கா மூணு டீ போடு” என்று கட்டளை போட்டார்.



படிப்பகம்

www.padippakam.com



"தம்பி வேளைக்குச் சொல்லியிருந்தா சேரை நம்ம தோட்டத் துக்கே கொண்டுபோயி தோட்டம், பேக்டரி, பங்களா எல்லாமே காமிக்க எற்பாடு செஞ்சிருப்பேனே" என்று ஆதங்கப்பட்டார். இந்தவிதமாக முடிவெடுக்கிற அதிகாரம் எனக்கிருந்திருந்தால் நானேன் வருகிற ஒவ்வொரு வெள்ளைக்காரனோடும் தோட்ட மும் மலைநாடும் காட்ட அலையவேண்டும் என்பதை அவருக்கு விளக்க நான் வாய்திறக்குமுன்னமே, என்னுடைய பதிலை எதிர்பாராதவர்மாதிரி ஜோர்ஜுக்கு சிலோன் டீயின் மகிமை களை எல்லாம் இவர் சொல்லி அவருக்கு அலுப்புத்தாங்க முடியாமற் போகுமுன்னமே, வாசலிலிருந்து "மொதலாளி" என்று ஒரு குரல் அழைத்தது. "சும்மா இருக்க விடமாட்டானுங்க" என்று முணுமுணுத்தபடி "டேய் முனு..." என்று தொடங்கிய வருக்கு முனுசாமியைத் தேநீர் ஊற்ற அனுப்பியது நினைவுக்கு வரவே, "எக்ஸ்யூஸ்" என்று சொல்லிக்கொண்டே எழுந்து வாசல் வரை சென்றார்.

வாசலுக்குவெளியே நின்ற இருவரும் கருப்பையாபிள்ளை உள்ளே அழைக்கும்வரை அப்படியே நின்றார்கள். அவர்களை அழையாமல், வாசலில் நின்றபடியே "அடடே சம்முவம். என்ன வெசயம்? இப்பக் கொஞ்சம் பிஸியா...." என்று வந்தவர்களைக் கழற்றிவிட முயன்றவரிடம் "மொதலாளி, நேத்திக்கு போன்லே சொன்னேனுங்களே. இன்னிக்கு வான்னீங்களே. அதான். இவ ராமையன் நம்ம சங்கத்துல ஆளு. இவம் பொண்ணு வெசயமா ஒங்க கிட்ட லட்டர்...." என்று சண்முகம் விளக்கினான். அப்போது தான் சண்முகத்தை வீட்டுக்கு வருமாறு சொன்னது அவருக்குக் நினைவுக்கு வந்தது.

"யாருக்கு லட்டரு? மறந்து போயிடிச்சு, மறுவடி வெவரமா சொல்லு" என்று அவர் சண்முகத்தைப் பணித்தார். சண்முகம் சொன்னவையெல்லாம் என் காதிற் சரியாகவிழவில்லை. ஆனால் கூடவந்த ராமையாவுடைய மகள் விஷயமாக ஏதோ சொன்னார் என்று விளங்கியது. ராமையா அதிகம் பேசவில்லை. சண்முகம் சொல்லிமுடிந்ததும் "எல்லாத்தெயும் வெவரமா ஒரு கடதாசிலே நோட்பண்ணி நாளைக்கி ஆபிசில குடு. என்னால முடிஞ்சதப்



படிப்பகம்

பண்ணறேன்” என்று சொல்லிவிட்டு ராமையாவை நோக்கிக் கொஞ்சம் உரக்கவே “ஏய்யா, அறிவிருக்கா? பொண்ணு உருப் படுறதுக்கு வழியப் பாப்பியான்னா.... காலா காலத்துல ஒரு நல்ல பையனாப்பாத்துக் கண்ணாலம் பண்ணிவெக்கறத விட்டுப் பிட்டு பொண்ணே டவுனுக்கு அனுப்பி ஓடுகாலியாக்குவியா? யோசனையா நடந்துக்க!” என்று உபதேசித்தார்.

“மொதலாளி, பொண்ணு ரொம்பக் கெட்டிக்காரி. தோட்டத்து ஸ்கூல்லியே டீச்சரம்மால்லாம் படிச்சி முன்னுக்கு வாடின்னு சொல்லுவாங்கன்னு சொல்லும். ரொம்ப ஆசப்படுது மொத லாளி...” என்று ராமையா கெஞ்சுகிறகுரலில் விளக்கினார். ராமையாவோடு பேச்சைவளர்க்க விரும்பாதவர்போல கருப் பையாபிள்ளை “என்னமோ ஒன் நன்மைக்குச் சொன்னேன். அப்புறம் ஒம்பாடு” என்று கதையை நிறுத்திவிட்டு “சம்முவம், நம்ம மினிஸ்ட்டரு பூ கேட்டாரே. ஒழுங்கு பண்ணீட்டியா? மறந்துடாதே. வெலைய எல்லாம் பாக்காதே அழகா நல்லதாப் பாத்து அனுப்புவியா?” என்று சண்முகத்திடம் கேட்டார். சண் முகம் சொன்னது சரியாகக் கேட்கவில்லை. “சரி சரி. மறந்து டாதே!” என்றார். சண்முகம் ஒரு தாளை —ராமையாவின் மகள் தொடர்பான விவரங்கள் எழுதிய தாளாக இருக்க வேண்டும்— அவரிடம் நீட்டினான். கருப்பையாபிள்ளை அதை அலட்சியமாக அவனிடமிருந்து வாங்கிக் கொண்டார். சண்முக மும் ராமையாவும் ஆளுக்கு இரண்டு வணக்கமும் அதைவிடக் கூடுதலான எண்ணிக்கையில் ரொம்ப நன்றிங்கவும் சொல்லி விட்டுப் போனார்கள்.

வீடுதேடி வந்தவர்களை விட்டுவிட்டுப் போனதற்கு விளக்கம் சொல்லவேண்டிய தேவை அவருக்கு இருந்ததுபோலத் தெரிந் தது. அவர் வருவதற்குள் மூன்று கோப்பைகளில் தேனீரும் வேறாகச் சீனியும் பாலும் மேசையில் வைக்கப்பட்டுவிட்டன. “மில்க்கு, சுகரு” என்று விசாரித்துத் தனக்கும் எனக்கும் வழமையான மூன்று கரண்டி சீனியும் ஜோர்ஜுக்குச் சீனி இல்லாமலும் தேநீரில் பாலை ஊற்றிக் கலக்கிப் பரிமாறினார்.

தேநீரைப் பற்றி அபிப்பிராயம் என்ன அபிப்பிராயம், அருமை

www.padippakam.com



யான தேநீர் என்றுதானே ஜோர்ஜ் சொல்லுவார். அவர் அதைச் சொல்லமுன்னமே, "இந்தாப்பாருங்க தம்பி, நாளைக்கி ஆபிசில வந்து குடுன்னா கேக்கறானா? ஏங் கைமேல திணிச்சிட்டில்லா போயிட்டானுங்க" என்று தனது எரிச்சலை வெளிப்படுத்தினார். "தோட்டத்துப் புள்ளைங்க மேலே படிக்கறதுக்குன்னு பெரியாபீசில இருந்து பாரீன் என்.ஜீ.ஓ.கிட்ட பணம் எடுத்தாங்க. பணம் நம்ம சங்கத்துக் கணக்குக்கு வந்து மூணு வாரமாகல்லே. அதுக்குள்ள இவனுங்க என்னா மாதிரியோ மோப்பம் புடிச்சி வந்துட்டானுங்க".

"அந்தப் பணத்துக்கு வேறே பிளான் வெச்சிருந்தீங்களா?" என்று அப்பாவித்தனமாகக் கேட்டேன். தன்னுடைய திட்டங்களை நான் ஊகித்துக் கொண்டு தான் கேட்டேன் என்று நினைத்தோ என்னவோ, "சங்கம் வேறெ, தோட்டம் வேறே, தொழில் வேறே ன்னு நாம வேறேபாத்தா முடியுங்களா தம்பி. நாம நாலு காசு சம்பாதிச்சாத்தானே நம்ம சமூகத்துக்கு எதனாச்சும் பண்ணமுடியும்!" என்று கருப்பையாபிள்ளை தன்னை நியாயப் படுத்த முயன்றார். "அவங்களுக்கு என்னா வேணும்னாங்க?" என்று விசாரித்தேன்.

"அவம் பய ராமையன் பொண்ணு பத்தாம் வகுப்பு பரீட்சை யில நல்லாப் பண்ணியிருக்காளாம். தோட்டத்து ஸ்கூலுப் படிப்பு அதுக்குமேல போவாதாம். டவுணுக்கு அனுப்பி பெரிய ஸ்கூலுக்கு அனுப்பணுமாங்கறான். போய்யா, பொட்டச்சிக்கு என்னா படிப்பு, காலாகாலத்துல கண்ணாலத்தெப் பண்ணிவெய் யின்னு சொன்னேன். நல்லதுசொன்னாக் கேப்பானுகளா? தோட்டத்துப் புள்ளைங்கள்ளாம் ஸ்கூலு, படிப்பு, டவுனு, வேலைன்னு ஒவ்வொருத்தனாக் கௌம்பிட்டா நாளைக்கு தோட்டத்துல பில்லு வெட்டறது யாரு, கொழுந்து எடுக்கறது யாரு?" என்று உணர்ச்சிவேகத்தோடு சொல்லிமுடித்தார். சண் முகம் அவரிடம் கொடுத்த தாள் அவரது கை இறுக்கத்திற் சிறிது கசங்கியது.

அவரை நிதானப்படுத்தத், "தலைவரே, டீ ஆறுது!" என்றேன். அப்போதுதான் ஜோர்ஜ் நம்முடன் இருப்பது நினைவுவர "சேர்,



படிப்பகம்

www.padippakam.com



டீ யூ லைக்? மை எஸ்டேட். நொட் ஃபார்” என்று தேநீர் பற்றி ஜோர்ஜின் கருத்தைக் கேட்டார். “டிலைற்ஃபுல்!” என்று ஜோர்ஜ் சொல்ல, கருப்பையாபிள்ளையின் முகம் மலர்ந்தது.

கருப்பையாபிள்ளை தனது தோட்டத்தப்பற்றியும் யார் யாருக்குப் பங்கு இருக்கிறது என்பதைப்பற்றியும் முழுத் தோட்டத் தையும் ஒருநாள் தன் வசமாக்குவதற்கான தனது நீண்டநாள் ஆசை பற்றியும் விவரிக்கத் தொடங்கினார். ஜோர்ஜ் அக்கறை யுடன் கேட்டுக் கொண்டிருந்தார். அப்போது ஒரு இளம் பையன் வேர்த்துவழிய வீட்டுக்குள் வந்தான்.

“மை சன். ரமேஷ்” என்று அறிவித்தார். நான் ரமேஷை உடனே அடையாளங் காணவில்லை. கண்டியில் அவன் படித்துக் கொண்டிருந்ததால் அவனை இரண்டு மூன்று ஆண்டுகளாகவே காணக் கிடைக்கவில்லை. நன்றாக நெடுத்து, நீண்ட முடியுட னும் அரும்புமீசையுடனும் இருந்தான். “ரமேஷா? ஆளையே அடையாளந் தெரியல்லே!” என்றேன். “ஹலோ அன்கிள்” என்று என்னிடம் திரும்பினான்.

“படிப்பெல்லாம் நல்லாப் போகுதா?” என்று கேட்டேன். முகத்திலிருந்த முறுவல் மாறாமலே “ஓ லெவலோடே ஸ்கூ லுக்கு குட்பை” என்று பதிலளித்தான். “வேலை பார்க்கிறாயா?” என்று கேட்டேன். அதே முறுவலுடன் “நோ, நோ. என்ஜோயிங் மை செல்ஃப் அன்கிள்” என்றான். இந்த உரையாடல் தொடர்வ தைக் கருப்பையாபிள்ளை விரும்பவில்லை. “ரமேஷ், உள்ளே போயி ஒடம்பெக்கழுவி உடுப்பு மாத்திக்கிட்டு வா, ஒன் வேர்வை நாறுது” என்று அவனை விரட்டினார்.

ரமேஷ் உள்ளே போகும் போது ஜோர்ஜ் என் காதில் மட்டும் விழுகிறவிதமாக ஆங்கிலத்தில் “தோட்டத்தில் புல்லு வெட்ட ஆளில்லை என்றாரே” என்று சிரித்துக் கொண்டு சொன்னார். “என்னா சொல்றாரு?” என்று கருப்பையாபிள்ளை என்னிடம் திரும்பினார். “ஒங்க பையனேத் தோட்டத்துலே நிர்வாகம் பண்ண அனுப்பலாமேங்கறாரு” என்றேன். “நானும் அதையே தான் யோசிச்சிட்டுக்கேன். ஆனா வயசு பத்தாது”



படிப்பகம்

www.padippakam.com



என்று ஜோர்ஜ் சொல்லாத கருத்தை அங்கீகரித்தார்.

கென்யாவில் தேயிலைத்தோட்டத்தில் வேலைபார்க்கிற ஜோர்ஜ் தமிழ்நாட்டில் நீண்டகாலம் தங்கியிருந்தவர் என்றும் அவருக்கு நன்றாகத் தமிழ்ப்பேசத் தெரியும் என்றும் கருப்பையா பிள்ளை எங்களுக்கு விடைகூறிய பின்புதான் எனக்குத் தெரிய வந்தது.

*(தாயகம்-59, ஜுன்-ஒகஸ்ற் 2007)*



படிப்பகம்

www.padippakam.com



# ஓடும் வண்டியில் ஒரு பாடல்



*பொதுவாகவே புகையிரதப் பாடகர்கட்குப் பலர் பணங் கொடுப்பது அவர்கள் பாட்டை நிறுத்தியதற்காகத் தான் என்று நினைக்கிறேன்*



படிப்பகம்

www.padippakam.com



கம்பளைக்கும் வெயாங்கொடைக்குமிடையே சென்றவருட நடுவில் அடிக்கடி வேலை அலுவலாகப் போய்வரவேண்டியிருந் ததாற், காலையிற் பேராதனைச் சந்திக்கு வந்து கண்டியிலிருந்து புறப்படுகிற புகைவண்டியிற் பலமுறை பயணஞ்செய்ய நேர்ந் தது. வண்டியில் எந்த வகுப்புப் பெட்டியில் ஏறினாலும் இருக்கை கிடைப்பது நிச்சயமற்றது. வாழ்க்கை நிச்சயமற்றது என்று சொல்லுகிறவர்கள் எல்லாரும் புகைவண்டிப் பயணத்தின்மூலந் தான் அந்த முடிவுக்கு வந்திருக்க வேண்டும். இருக்கை பற்றிய நிச்சயமின்மை போக, ஒரு துண்டாகப் போய்ச்சேருவோமோ என்பதையும் ஐமிச்சத்திற்கு உரியதாக்குகிற விதமாக வண்டி நாம் கற்பனைசெய்யக்கூடிய அத்தனை விதங்களிலும் குலுக்கித் தள்ளும். அத்தனைக்குமிடையே பல்வகையான நடமாடும் உணவுச்சாலைகள் வண்டியின் ஒரு முனையிலிருந்து மறு முனைவரை அத்தனை இடிபாடுகளுக்கூடாகவும் சென்றுதிரும்பு வதைக் காணுகிறபோது, மனித இனத்தின் இருப்புப் பற்றிய பல்வேறு சமகால ஐயங்களையும் மீறி, மனிதர்கள் எப்படியும் பிழைத்துக் கொள்வார்கள் என்று ஒரு நம்பிக்கை மனதில் துளிர்விடும்.

இப்போதெல்லாம் புகைவண்டிகளில் பிச்சைக்காரர்கள் ஏறு வது குறைவு, பிச்சைக்காரர்கட்குப் புகைவண்டிகளில் இலவசப் பயணச் சலுகை இல்லை என்பது போகப் பயணச்சீட்டில்லாமல் அகப்பட்டவர்களிடம் பரிசோதகர்கள் சட்டரீதியாகவோ சட்ட விரோதமாகவோ வசூலிக்கிற தொகை அதிகம் என்பதாலோ என்னவோ, பேரூந்து நிலையங்களிலேதான் பிச்சைக்காரர் நட மாட்டம் அதிகமாயிருக்கிறது என்று நினைக்கிறேன். என்றாலும் பாட்டுப்பாடிப் பணம் சேர்க்கிறதற்கு ஒரு சிலர் ஏறுவதுண்டு. எனக்குப் பாட்டுக்கேட்கப் பிடிக்கும் என்றாலும், பாட்டுக்கேட்பதற் காக நான் பயணங்களை மேற்கொள்வதில்லை என்பது ஒருபுற மிருக்கப், பொதுவாகவே புகையிரதப்பாடகர்கட்குப் பலர் பணங் கொடுப்பது அவர்கள் பாட்டை நிறுத்தியதற்காகத் தான் என்று நினைக்கிறேன். அதற்குக் காரணம் இல்லாமலில்லை. ஒரு தடவை என் காதுக்கு அருகாக றபானத்தில் பத்து நிமிடமாக



படிப்பகம்

www.padippakam.com



—உண்மையில் அது ஒரு யுகம்போல இருந்தது— ஒரு பாடகர் அறை அறை என்று அறைந்தபிறகு புகையிரதத்தில் பாட்டுப் பாடுவது ஒரு மனித உரிமை மீறல் என்று சட்டமியற்றப் படவேண்டுமென்றும் அதை ஒரு தேர்தல் வாக்குறுதியாக முன்வைக்கிற எந்தக் கட்சிக்கும் வாக்களிப்பது என்றும் ஒரு தீர்மானத்துக்கு வந்தேன்.

இப்படியாகப் புகைவண்டிப் பாடகர்கள் மீதான என்னுடைய பகைமையுணர்வு வளர்ந்துசென்ற காலத்தில் ஒருநாள், கடுகண்ணாவைப் புகையிரத நிலையத்தில் வண்டி நின்றபோது, கணீரென்று சுருதிசுத்தமாக ஒரு பெண்ணின் வெண்கலக் குர லும் அதனோடு இணைந்து பாட்டுக்குக் களையூட்டுகிற விதமாக அதன் பின்னணியில் ஒரு ஆணின் கம்பிரமான குரலும் அவற் றுடன் இழைந்து கிற்றார் கருவியின் நரம்புகளின் இனிமையான அதிர்வும் காதில்விழுந்தன. அன்றைக்கு எனக்கு யன்னலோர மாக ஒரு இருக்கை கிடைத்துவிட்டது. யன்னல்வழியாக எட்டிப் பார்த்தேன். புகையிரதமேடையில் யாரும் பாடவில்லை. யாரா வது ஒலிநாடாப்பெட்டியையோ வானொலியையோ உரக்க ஒலிக்கிறார்களோ என்று நினைத்தேன். அப்படியும் தோன்ற வில்லை. வண்டி அசையத்தொடங்கியதும் பாட்டின் ஒலி கொஞ்சம் மங்கத் தொடங்கியது. சிறிதுநேரத்திற் பாட்டு ஓய்ந்து விட்டது.

ஓய்ந்த ஏமாற்றம் சில நிமிடங்களே நீடித்தது. அதே குரல் களும் அதே கிற்றாரும் இன்னொரு பாட்டும் மீண்டும் ஒலிக்கத் தொடங்கின. பாட்டின் ஓசை மெல்ல மெல்ல உரக்கத் தொடங்கி யது. இன்னமும் உரக்க ஒலித்தாற் கூட நன்றாயிருக்குமென்று தோன்றியது. ஆனாலும் பாடகர்களின் முகம் தெரியவில்லை.

எனக்குப் பாடல்வரிகள் முற்றாக விளங்காவிட்டாலும் அது மலையகத்தின் வளத்தைப் பற்றிய ஒரு பாட்டு என்று தான் நினைத்தேன். அந்தப் பாட்டு முடிய யாரோ வேறொரு பாட்டைப் பாடக் கேட்டிருக்க வேண்டும். அடுத்த பாட்டு நான் முன்பு கேட்டறிந்த ஒரு பழைய சிங்களக் காதற் பாட்டு. அது முடியப்



படிப்பகம்

www.padippakam.com



பாடிய ஆணும் பெண்ணும் ஒவ்வொரு பக்கமாகக் காசு பெறத் தொடங்கினார்கள். என்னிடம் சில்லறையாக நாணயங்கள் இல்லாததாலும் கையில் அகப்பட்டது ஒரு இருபதுருபாத்தாளாக இருந்ததாலும், அனேகமாக, எல்லாவற்றிலும் முக்கியமாக, எனக்கு ஒரு இருக்கை கிடைத்த திருப்தியின் விளைவாகவும், அந்த இருபதுருபாவை நீட்டினேன். ஒரு மூன்றாம் வகுப்புப் பயணியிடம் அதை எதிர்பார்க்காததாலோ என்னவோ, முகம் மலர அவன் அந்தநோட்டைக் கூடவந்த பெண்ணிடம் நீட்டினான். அப்போதுதான் பெண்ணின் இடுப்பில் ஒரு கைக்குழந்தை இருந்ததைக் கண்டேன். இருவரும் பகட்டாக இல்லாமல் நேர்த்தியாக உடுத்திருந்தார்கள். குழந்தையும் அழகான ஒரு சட்டை அணிந்திருந்தது. ஆணுடைய தலைமயிர் மட்டும் கொஞ்சம் பரட்டையாக வேண்டுமென்றே பரவிவிரித்தாற் போல் இருந்தது.

என்னுடைய இருபதுருபா நோட்டையடுத்து மற்றவர்களும் பத்துருபாத் தாள்களையும் ஐந்துருபா நாணயங்களையும் நீட்டத் தொடங்கினார்கள். பெட்டியின் மறுபாதிக்குப் போகுமுன் இரண்டுபேரும் நன்றிகலந்த ஒரு முறுவலுடன் என்னைப் பார்த்துவிட்டு நகர்ந்தனர்.

அதற்குப்பின், அவர்கள் பாடவருவார்களா என்ற எதிர்பார்ப்புடன் வண்டியேறுவது வழக்கமாகிவிட்டது. எனக்கு இருக்கை கிடைப்பது எவ்வளவு அரிதாக நிகழுமோ அதைவிட அரிதாகவே அவர்கள் நான் போகும் வண்டியில் வருவதும் நிகழ்ந்தது. ஒருதடவை, கைக்குழந்தையோடு ஐந்துவயதுச் சிறுமி ஒருத்தியையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள். சிறுமி பாடவில்லை.

அவர்களது குரல் வண்டியின் அடுத்த பெட்டியிற் கேட்கிற போதே ஒரு இருபது ரூபா நோட்டை ஆயத்தப்படுத்திக் கொள்வேன். பாடல்கள் ஒவ்வொருமுறையும் வித்தியாசமாயிருக்கும். ஆனால் எல்லாமே காட்சி வர்ணனைகளாக அல்லது காதற் பாட்டுக்களாக இருக்கும். ஒரு தடவை, கொஞ்சக்காலம் முன்னர் பிரபலமாக இருந்த சமாதானத்துக்கான பாடல் ஒன்றைப் பாடினார்கள். அது நான் தொலைக்காட்சியில் கேட்டதை விட



படிப்பகம்

www.padippakam.com



நன்றாக ஒலித்ததுபோல இருந்தது. ஒரு ஐம்பதுரூபா நோட்டை நீட்டுவோமா என்று நினைத்தேன். அது என்ன விதமான பாதிப் புக்களை ஏற்படுத்துமோ என்ற யோசனையால் வழமையான இருபதுடன் நிறுத்திக் கொண்டேன்.

ஒரு நீண்ட இடைவெளிக்குப்பிறகு அவர்கள் நானிருந்த வண்டியில் ஏறினார்கள். இம்முறை அவர்கள் அடுத்தபெட்டியில் தேசபக்திப்பாடல் ஒன்றைப் பாடினாற்போலிருந்தது. என்னுடைய பெட்டிக்கு வந்தபோது பாடியபாட்டு நாட்டைக்காக்கும் படை வீரர்களைப் பாராட்டுகிற ஒரு பாட்டு என்று விளங்கியது. சொற்களின் பொருள் எனக்கு முழுதாக விளங்காவிட்டாலும் பாட்டின் செய்தி விளங்கியது. பாட்டில் வெளிவெளியான இனத்துவேஷம் இல்லாத போதும், இந்த நாடு சிங்களவர்களின் நாடு என்ற கருத்துத் திரும்பத்திரும்ப ஒலித்தது.

இம்முறை பணங்கொடுப்பதா இல்லையா என்று மனம் தடுமாறியது. கைக்குழந்தையின் முகத்தைக் கண்டவுடன் என் கை தானாகவே பணத்தை நீட்டியது. எனினும் என் முகத்தை அவர்கள் பார்த்து முறுவலித்தபோது ஏதோ குற்ற உணர்வுடன் பார்க்கிறார்கள் என்று நினைத்தேன். அது என்னுடைய முக மாற்றத்தின் விளைவா அல்லது முற்றிலும் எனது கற்பனையா என்று சொல்லத் தெரியவில்லை.

*****

அதன் பின்பு, என்னுடைய பயணங்கள் கொஞ்சங் குறைந்து விட்டன. வேலை அலுவலாக எப்போதாவது மாத்தளைக்குப் போகவேண்டியிருந்தது. மற்றப்படி அனுப்புவதானால் ஹற்றன், நுவரெலியாப் பக்கங்களுக்குத் தான் என்னை அனுப்பினார்கள்.

ஒருநாள் மாத்தளைக்குப் போவதற்காகக் கண்டி புகையிரத நிலையத்தில் இறங்கியபோது மாத்தளைக்கான வண்டி அரை மணிநேரம் சுணங்கிப் புகையிரதமேடைக்கு வரும் என்று அறிவித் தார்கள். வெறுமையாகக் கிடந்த மேடையை நோட்டம் விட்டேன். சிறிது தூரத்தில் பரட்டையாக விரித்துவிட்ட ஒரு தலையும் ஒரு கிற்றாரும் தெரிந்தன. வேறு யார்? எனக்குப் பிடித்துப் பிடிக்காமற் போகத்தொடங்கிய புகைவண்டிப்பாடகன் தான்.



படிப்பகம்

www.padippakam.com



அவனுக்கு என்னை அடையாளந்தெரிந்தது. கிற்றாரையும் தூக்கிக்கொண்டு மெல்ல என்னைநோக்கி நடந்துவந்தான்.

"ஆயு போவான் சேர் (*வணக்கம் சேர்*)".

"ஆயு போவான் (*வணக்கம்*)".

"சேர் மாத்தலட்டத (*சேர் மாத்தளைக்கா?*)"

"ஓவ். மே மஹுாத்தயாத் மாத்தலட்டத? (*ஓம். நீங்களும் மாத்தளைக்கா?*)"

இப்படித் தொடங்கிய உரையாடலின் நடுவே அவனுடைய மனைவியும் இரண்டு குழந்தைகளும் வந்துசேர்ந்துவிட்டனர்.

இவ்வளவு அழகாகப் பாடத்தெரிந்தும் ஏன் புகையிரதத்தில் பாடிப் பணஞ்சம்பாதிக்கிறார்கள் என்ற கேள்வி நீண்டகாலமாக வே என்னுடைய மனதை அரித்துக் கொண்டிருந்தது. பேச்சுவாக்கில், ஏன் ஒரு இசைக்குழுவுடன் சேர்ந்து உழைக்க முடியாதா என்று கேட்டேன். என்னுடைய கேள்வி கொஞ்சம் முட்டாள்தனமானது என்று அவனுடைய விளக்கம் எனக்கு உணர்த்தியது.

அவர்கள் இருவரும் சுற்றுலாப்பயணிகள் மாலை உணவுக்கு வருகிற இரண்டு மூன்று ஹோட்டல்களில் பாடகர்களாக இருந்த வர்கள். அவர்களோடு வாத்தியக்காரர்கள் சிலரும் சேர்ந்து இசைநிகழ்ச்சிகளை நடத்திவந்தார்கள். கடந்த இரண்டு வருடங் களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மிகவும் குறைந்துவிட்ட தால் ஹோட்டல்களில் வாய்ப்புக்கள் வெகுவாகக் குறைந்து விட்டன. ஹோட்டல்களில் வாரம் ஒரு நாள் நிகழ்ச்சிக்கே பெரிய போட்டியாகிவிட்ட சூழ்நிலையில், ஒரு மாலை நிகழ்ச் சிக்கு நான்காயிரம் கொடுத்த இடங்களிலெல்லாம் ஆயிரம் ஆயிரத்தைநூற்றுக்கே பேரம்பேச வேண்டியதாகிவிட்டது.

"புகையிரதத்திற் பாடினால் என்ன கிடைக்கும்" என்று கேட்டேன். "ஒரு நாளைக்கு ஆறு பயணங்கள் போனால் நிச்சயமாக அறுநூறு, எழுநூறு கிடைக்கும். நல்ல நாளாக இருந்தால் ஆயிரத்திற்கு மேலுங் கிடைக்கலாம். சில சமயம் நாலு பயணங்களோடேயே நிறுத்திக் கொள்வோம்" என்றான்.



படிப்பகம்

www.padippakam.com



முன்பு ஹோட்டல்களில் கிடைத்ததுடன் ஒப்பிட்டால் அது போதாது என்பதோடு வீட்டில் மகளுடன் போதியநேரம் செலவிட முடிவதும் இல்லை. நல்லவேளை, மகளைப் பாடசாலைக்குக் கொண்டுபோகும் பொறுப்பை மாமியார் கவனித்துக்கொள்வார் என்றும் பாடசாலை விடுமுறைநாட்களில் மகளையும் தங்க ளுடன் அழைத்துச் செல்வார்கள்" என்றும் அவனுடைய மனைவி விளக்கினாள்.

"எவ்வளவு காலத்துக்கு இப்படிச் செய்ய முடியும்?" என்று கேட்டேன்.

"பலகாலத்துக்கு முடியாது தான். ஆனால் வேறுவழி யென்ன?" என்றான். என்ன சொல்லுவதென்று எனக்குத் தெரிய வில்லை. "சண்டைநின்றால் மறுபடியும் ஹோட்டல்களுக்கு விருந்தினர்கள் வருவார்கள். அது வரை...." என்றாள் அவன் மனைவி.

"சண்டைநின்றால் நல்லது என்கிறீர்கள். ஆனால் போருக்குத் தூண்டுகிற பாடல்களையல்லவா பாடுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"சேருக்கு கடைசி முறை கண்டபோது நான் பாடின பாட்டுப் பிடித்திருக்காது. சேர், நாங்கள் துவேஷம் பிடித்தவர்களில்லை.... ஆனால் அந்த மாதிரிப் பாட்டுப்பாடினால் அந்த நாட்களிற் பலர் கூடுதலாகப் பணம் தருவார்கள். சிலர் அப்படிப் பாட்டுக்களைப் பாடக் கேட்பார்கள். என்ன செய்ய...?" என்றான்.

"அது சரியா?" என்று கேட்டேன்.

"கிராமத்தில் இருக்கிற இளைஞர்கள் எல்லாம் ஏன் படையில் சேருகிறார்கள்? சரி பிழை என்று யோசித்தா செய்கிறார்கள்? அவர்களுக்குத் தமிழரையும் தெரியாது, புலிகளையும் தெரி யாது. சாக ஆயத்தமாகப் போகிறார்கள். தேசப்பற்று என்று நினைக்கிறீர்களா?" என்று அவன் கேட்டான். அவனுடைய குரலில் சோகத்தோடுசேர்ந்த ஒரு உறுதி தொனித்தது.

"கேட்டதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றேன்.

"ஒரு தமிழராக இருந்துகொண்டு நீங்கள் அப்படிக் கேட்காம



படிப்பகம்

www.padippakam.com



லிருந்தால்தான் மன்னிக்க வேண்டியிருந்திருக்கும்" என்று ஒரு ஞானியைப் போல சொன்னான்.

புகையிரதம் மேடையை நெருங்கியது. எல்லாரும் விழுந் தடித்துக்கொண்டு வசதியான இருக்கைகளைப் பிடிக்க ஓடினார் கள். அவனிடம் "வருகிறேன்" என்று சொல்லியபடி ஓடுகிற கூட்டத்தினருடன் நானும்போய் இணைந்துகொண்டேன். புகையிரத மேடையின் பின் தொங்கலை நோக்கி அவனும் மனைவியும் குழந்தையுடனும் கிற்றாருடனும் மெல்ல நடக்கத் தொடங்கினார்கள்.

*(தாயகம்-60 செப்ற்றெம்பர்-ஒக்ற்றோபர் 2007)*



படிப்பகம்

www.padippakam.com



# மீட்சி



*நாங் கொஞ்சங் கன்தோரு வேலெ பாக்க போறான். நீங்க ரெண்டு பேரும் மிஸ்டர் குரு, மிஸ்டர் சூரி கிட்ட பேசறான்*



படிப்பகம்

www.padippakam.com



பீற்றர் அல்.ஃ.பொன்ஸோ எங்களுக்காகக் காத்திருந்தார். கண்டிக் குக் கொஞ்சம் வெளியே இருந்த மலைப்பாங்கான பகுதியில் அவருடைய இருப்பிடமான "துக் நிவாரண" எங்கே என்று கண்டுபிடிப்பதில் எங்களுக்குக் கொஞ்சம் சிரமம் இருந்தது. என்னுடைய கைத்தொலைபேசியைக் கொண்டுசெல்ல இருந் தேன். தேவையில்லைத், தன்டையது இருக்கிறது என்று சூரியச் சந்திரன் மறித்ததால் கொண்டு செல்லவில்லை. பஸ்ஸில் இருந்து இறங்கிய நேரத்துக்குக், குறித்த வேளைக்கு முன்னரே போய்ச் சேர்ந்திருக்க வேண்டும். இறங்கியபிறகு பீற்றரைக் கேட்டு வழியறியச் சூரி தொலைபேசியை எடுத்தபோதுதான் பற்றரி ஓய்வெடுத்துவிட்டது என்று தெரியவந்தது. எங்கள் இருவருக்கும் சேர்த்துத் தெரிந்த சிங்கள அறிவின் போதாமையும் உச்சரிப்புப் பிரச்சனைகளுங் காரணமாக வழியைக் கேட்டறிவது கொஞ்சஞ் சிக்கலாகிவிட்டது.

'துக் நிவாரண' என்று கேட்டால் யாருக்குமே தெரிய வில்லை. அதைவிட, நாங்கள் இறங்கிய இடத்திலிருந்து முச் சக்கர வண்டி பிடிப்பதும் சிரமம். சிரமமாம் சிரமம், முடியாத காரியம். ஏனென்றால் நாம் இறங்கிய பகுதி அதிகஞ் சன நடமாட்டமில்லாத, வழி விசாரிக்க ஒரு தேனீர்க்கடை கூட இல்லாத இடம். நாங்கள் பீற்றரின் முகவரிக்குப் போய்ச் சேர்ந்த கதையைவைத்து ஒரு முழுநீள நகைச்சுவை நாடகம் போடலாம். இப்போதைக்கு அந்த மாதிரி ஒரு எண்ணமும் எனக்கில்லை. எங்களுக்குப் பீற்றருடன் கொஞ்சம் முக்கியமான வேலை இருக்கிறது, இல்லையா? முதலில் அதைக் கவனிப்போம்.

*****

உங்களிடம் நான் யார் என்று இன்னுஞ் சொல்லில்லை. பேர் குருசாமி. ஊர் மாத்தளை, இப்போது கொழும்பில் ஒரு பாட சாலையில் துணை அதிபராக இருக்கிறேன். சூரியச்சந்திரன் மாத்தளையில் என்னுடைய பாடசாலை முன்னாள் அதிபரின் மகன். இப்போது வித்தியோதய பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. பட்டத்துக்கு ஆராய்ச்சி என்று சொல்லி மலையகப் பெண்களின் கல்விவாய்ப்புக்கள் பற்றித் தகவல்திரட்ட என்னிடம் உதவி



படிப்பகம்

www.padippakam.com



கேட்டான். எனக்குப் பீற்றரின் நினைவு வந்தது. நீண்டகாலமாக மலையகத்தில் சமூகசேவையில் ஈடுபாட்டுடன் இருந்தவர். மனைவி இறந்தபிறகு முழுநேரமாக ஒரு தொண்டர் நிறுவனத்தில் முக்கியமான பொறுப்பில் இருக்கிறார். மலையக மக்கள் பற்றி நிறைய அக்கறையுள்ள ஒரு சிங்களக் கத்தோலிக்கர். அவருடைய தொலைபேசி இலக்கத்தைக் கண்டுபிடித்து என்னை ஞாபகப்படுத்தினேன். எழுபத்தைந்து வயதில் அவருடைய ஞாபக சக்தி என்னை வியக்கவைத்தது. எங்கே என்ன தொடர்பில் எப்போது சந்தித்தோம் என்பதையெல்லாம் அச்சொட்டாக அவராற் சொல்லமுடிந்தது. நான் சூரியினுடைய பிரச்சனையைச் சொன்னபோது மிக உற்சாகமாகத் தனக்கும் அவ்விடயத்தில் அக்கறை இருப்பதால் சூரியைச் சந்திக்க மிகவும் விரும்புவதாகச் சொன்னார். அவர் பணியாற்றுகிற தொண்டர் நிறுவனத்தில் மலையகப் பெண்கள் சிலர் பணியாற்றுவதாகவும் அவர்கள் மூலமும் உதவிகளைப் பெற இயலும் என்றும் சொன்னார்.

அது அவரது அலுவலகமா வீடா என்று சொல்வது கடினம். அது ஒரு முன்னாள் தோட்ட பங்களாவாக இருக்கலாம். எங்களைக் கண்டவுடன் சுறுசுறுப்பாக கேற்வரை வந்து வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார். “பீற்றர் ஸ்வாமி வஹன்ஸெ (*பீற்றர் சுவாமியானவர*)” என்று சொல்லியிருந்தால் உடனேயே யாராவது கொண்டுவந்து சேர்த்திருப்பார்கள் என்று தேனீரைப் பரிமாறியவாறே சொன்னார். அந்தளவுக்கு அவர் அந்த அயலிற் பிரசித்தமாகிவிட்டார். ஏன் ஸ்வாமி வஹன்ஸெ என்கிறார்கள் என்று கேட்டேன். எப்போதும் வெள்ளை உடுத்துத் தனியே இருக்கிறதால், யாரோ அவரை அப்படி அழைக்கத் தொடங்கிவிட்டனர். சிலர் அவர் ஒரு பாதிரியார் என்றே நினைக்கின்றனர். அவருடைய அலுவலகத்தில் எந்த விதமான மத அடையாளங்களும் இருக்கவில்லை. தன்னுடைய பணி மக்களுக்கானது என்பதால் மதமாற்றத்திலோ அரசியலிலோ தனக்கு ஈடுபாடு இல்லை என்று பெருமையாகச் சொன்னார். அதனாலேதான் அந்தப் பகுதியில் அவருக்கு எந்த விதமான பிரச்சனைகளும் இல்லாமல் வேலை செய்ய முடிந்தது என்று நினைக்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com



சூரிக்கு அரசியல் இல்லாத சமூகசேவை என்று ஒன்று இருக்க இயலாது என்ற நம்பிக்கை, அதைச் சாடையாகப் பீற்றரிடம் தெரிவித்தான். அதை அவர் ஏற்குமாப்போலத் தெரிய வில்லை. அவருடைய வயது கருதியும் அவரிடம் உதவிகேட்டு வந்திருப்பதாலும் அவரது பண்பான உபசரிப்பாலும் அது ஒரு விவாதமாக வளராமல் சூரி நிறுத்திக்கொண்டான். என்றா லும் தன்னுடைய பணியின் முக்கியத்துவம் பற்றிப் பேசுவதை நிறுத்தப் பீற்றரால் இயலவில்லை.

தன்னை யாரும் அரசியல் நோக்கங்கட்காகப் பயன்படுத்து வதை விரும்பாததால், எந்தவிதமான அரசியற் கருத்துக்களை யும் தெரிவிப்பதைத் தவிர்ப்பதாகவும் அதுபற்றித் தனக்கு நிதி வழங்குகிற அந்நிய அரசசார்பற்ற நிறுனங்கள் இரண்டும் நன்கு அறியும் என்றும் தனக்குக் கிடைக்கிற நிதி மூலம் கிராமத்தில் சில சமூகசேவைப் பணிகளைச் செய்ய முடிகிறதாகவும் அனைத் திலும் முக்கியமாக ஒவ்வொரு வருடமும் பத்துப்பதினைந்து ஏழைச் சிறுவர் சிறுமியருக்குப் பலவிதமான தொழிற்பயிற்சி வகுப்புக்கள் வழங்குவதன் மூலம் அவர்களுக்குப் புதிய வாழ் வொன்றை அமைத்துக் கொடுக்கத் தனக்கு வாய்ப்புக் கிடைத் திருப்பதற்காகவுங் கூறி ஆண்டவருக்குத் தனது நன்றியையும் தெரிவித்தார்.

“இதெல்லாம் அரசாங்கங்கள் கவனிக்க வேண்டிய பிரச்சனை களல்லவா!” என்று அவரை மறுக்காதவிதமாக நான் குறுக்கிட் டேன். “அரசாங்கம் என்ன செய்கிறது? முன்பு செய்ததில் கால்வாசிகூடச் செய்கிறதில்லை. அதைவிட, அரசாங்கம் ஒதுக் குகிற பணத்தில் பாதிக்குமேல் அரசியல்வாதிகளல்லவா அள்ளிக் கொள்ளுகிறார்கள்!” என்று குறைப்பட்டார். ‘என்.ஜி.ஓக்களுந் தானே அள்ளுகிறார்கள்’ என்று சொல்ல நினைத்தேன். ஆனால் அது அவரையுஞ்சேர்த்துச் சொல்லுகிறமாதிரி இருக்கும் என்று பேசாமல் இருந்தேன். பீற்றரின் முதுகுக்குப் பின்னால் என் னென்ன தில்லுமுல்லுகள் எல்லாம் நடக்கக்கூடும் என்று எனக் குக் கொஞ்சந் தெரியும். அயல்நாடுகளில் திரட்டப்படுகிற பணத்தில் நிருவாகச் செலவினம் என்று அங்கேயே பாதிக்கு



படிப்பகம்

www.padippakam.com



மேல் போய்விடுகிறது. கடைசியாக இங்கே வருகிறதிற்கு என் னென்ன விதமான கணக்குக்கள் காட்டப்படுகின்றன என்றெல் லாஞ்சொல்லி, வந்த காரியத்தைக் கெடுப்பானேன் என்று கதை யை மாற்றினேன். ஏனென்றாற் பீற்றரின் உலகம் சிறியது. அதற்குள் நடக்கிறவைபற்றி அவர் மிகவும் ஒழுங்காகவும் அக்கறையாகவும் நடந்துகொள்கிறார். ஊரார் அவரைக் கருது வதுபோல அவர் ஒரு துறவுவாழ்க்கை வாழ்கிறதாகக்கூடச் சொல்லலாம். ஆனால், அந்த வாழ்க்கையைப் பயனுள்ளதாக்கு கிற நோக்கில், தனது சிறிய உலகத்துக்கு வெளியே நடக்கி றவைபற்றி அவர் சிந்திக்க விரும்பவில்லை. அவரைப் பொறுத்த வரை, அவருடைய பணி புனிதமானது.

*****

சூரியுடனான நீண்ட உரையாடலின் பின்பு, அவனுடைய களப் பணிக்கு மாத்தளைப் பக்கம் ஒரு தோட்டப்பகுதியைத் தெரிந்து அங்குள்ள பாடசாலைகளைப் பற்றிய விரிவான ஆய்வையும் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் பொதுவான ஆய்வையும் நடத்தலாம் என்று முடிவானது. பீற்றருக்குக் கண்டி, மாத்தளை க்கும் அப்பால் நாவலப்பிட்டியிலும் தோட்டங்களுடன் தொடர்பு இருந்தது. அவர் வருடாந்தம் தெரிவுசெய்கிற மலையக ஏழைச் சிறுவர் சிறுமியர் அனைவரும் அந்தத் தோட்டங்களிலிருந்து தான் வந்தார்கள். இப்போது துக் நிவாரண அலுவலக விடுதியில் தங்கியிருக்கிற இரண்டு இளம் பெண்கள் மாத்தளைக்கு அருகே உள்ள ஒரு பெரிய தோட்டத்தில் அருகருகாக உள்ள டிவிசன் களில் இருந்து வந்தவர்கள். மூன்று நான்கு ஆண்டுகட்கு முன்பு வந்து அலுவலக உதவியாளர்களாக வேலைப்பயிற்சி பெற்று நல்ல வேலை கிடைக்கும்வரை துக் நிவாரணவில் பணியாற்றுகிறதாகவும் அவர்களுடன் பேசிக் களவேலைக்கான ஏற்பாட்டைச் செய்யலாம் என்றும் பீற்றர் சொன்னார்.

எங்களுக்குத் தேனீர் பரிமாறிய உக்குபண்டாவை அழைத்து "ருக்கி மிஸ்ஸிட்டத் வரா மிஸ்ஸிட்டத் பொட்டக் மெஹாட்ட என்ட கியன்ட (*ருக்கி மிஸ்ஸையும் வரா மிஸ்ஸையும் கொஞ்சம் வரச்சொல்லு*)" என்றார். ருக்கி என்கிற ருக்குமணியும்



படிப்பகம்

www.padippakam.com



வரா என்கிற வரலெச்சுமியும் வந்து ஒரேகுரலில் “சேர் கத்தா கறாத (*சேர் கூப்பிட்டீங்களா?*)” என்று கேட்டார்கள். தமிழில் அறிமுகங்களைச் செய்யத்தொடங்கினார். முதலில் என்னைக் காட்டி “இந்த தொரே மிஸ்டர் குரு. நம்மட மிச்சங் பழைய கூட்டாளி. மத்த தொரே மிஸ்டர் சூரி. தொரேக்கி ஓங்களோட ஹெல்ப் கொஞ்சங் வாணுங் சொல்லறது. நாங் கொஞ்சங் கன்தோரு வேலெ பாக்க போறான். நீங்க ரெண்டு பேரும் மிஸ்டர் குரு, மிஸ்டர் சூரி கிட்ட பேசறான்” என்று சொல்லி விட்டுத் தன்னுடைய அலுவல்களைக் கவனிக்கப் போய்விட்டார்.

ருக்குமணிக்குக் கொஞ்சம் ஆங்கிலம் பேசப் பழகிவிட்டது. சரளமாகச் சிங்களமும் பேசமுடியும். வரலெச்சுமிக்கு அவ்வ ளவாக ஆங்கிலம் வராது. சிங்களம் பரவாயில்லை. தோட்டத்தி லிருந்து மேலே படிக்க இயலாத சூழ்நிலையில் பீற்றருடைய நண்பர் ஒருவர் மூலம் தங்களுக்குத் தோட்டத்திலிருந்து வெளி யேறும் வாய்ப்புக் கிடைத்ததாக நன்றியுடனும் பெருமையுடனும் சொன்னார்கள். சூரி தன்னுடைய நோக்கத்தைச் சுற்றிவளைக் காமற் சொன்னான். அவனுக்கு மலையகத்தின் கல்விபற்றியும் தோட்டப்பகுதிப் பெண்களின் கல்விபற்றியும் உண்மையாகவே அக்கறை இருந்தது. அதோடு சூரியின் அப்பாவும் மாத்தளைப் பகுதியில் நீண்டகாலம் ஆசிரியராக இருந்தவர். எனவே சூரி யோடு அவர்களுடைய உரையாடல் எந்த விதமான தயக்கங் களும் இல்லாமலே தொடர்ந்தது. சூரி அவர்களோடும் சில வேளை தன்னுடைய ஆராய்சியை மேற்பார்வை செய்கிற கலாநிதி திருமதி பஹத்தும்புறவுடனும் சேர்ந்து இரண்டு நாட் கள் அவர்களுடைய தோட்டத்தில் உள்ள பதினைந்து வயதுக் குட்பட்ட சிறுமியரைச் சந்தித்து உரையாடுகிற திட்டத்தைச் சொன்னபோது இருவரும் மிகவும் தயங்கினார்கள்.

“என் சேர் மாத்தளைக்குப் போவணும்? கண்டிலேன்னா ரொம்ப வசதியா இருக்கும்” இது வராவுடைய கருத்து.

“நாவலப்பிட்டி பெட்டர் பிளேஸ் சேர்” இது ருக்கி.

“நான் ஏன் மாத்தளைக்குப் போறேன்னா அங்கே உங்க



படிப்பகம்

www.padippakam.com



ளுக்குத் தெரிஞ்சவங்க இருப்பாங்க. அப்போ கூச்சமில்லாமப் பேசுவாங்க. நாம வெளி ஆளுங்க. பயப்பிடுவாங்க இல்லியா?"

"ரைட் சேர். பட் டு மச் ட்றபிள் தற் பிளேஸ்" என்ற ருக்கியைத் தொடர்ந்து "வாணாம் சேர். ரொம்ப வம்புபுடிச்ச எடம் சேர்" என்றாள் வரா.

"ஐ ஆம் இன் குட் ஜொப் சேர். அங்கே ரொம்ப ஜெலஸ் புடிச்சவங்க...." என்று இழுத்தாள் ருக்கி.

அவர்களை மேலும் வற்புறுத்துவது நியாயமில்லை என்று "பீற்றருடனும் கலாநிதி திருமதி பஹத்கும்புறவுடனும் பேசிவிட்டு மறுபடியும் தொடர்பு கொள்கிறோம்" என்று சொல்லி அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டு, வீடுதிரும்புவதற்கு முன்பு பீற்றரிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்று அவருடைய அலுவல் அறைக்குப் போனோம். பீற்றர் எங்களுக்கும் சேர்த்துப் பகல் உணவுக்கு ஏற்பாடு செய்திருப்பதாகச் சொல்லிப் பகற் சாப்பாட்டுக்குப் பிறகு துக் நிவாரண வாகனத்தில் ஏற்றிக் கண்டியில் கொண்டு போய் இறக்கி விடுவதாகச் சொன்னார். நிறுவனத்தில் உள்ள எல்லாருடனும் ஒரே அறையில் அமர்ந்து சாப்பிட்டோம்.

பகல் உணவு எளிமையானதாக இருந்தாலும் நன்றாக இருந்தது. தோட்டத்தில் தானே விளைவித்த காய்கறிகளும் பழங்களும் என்று பீற்றர் பெருமையுடன் சொன்னார். அவருடைய எளிமையான நேர்மையான வாழ்க்கை பற்றிய எங்களது மதிப்பீடு மேலும் உயர்ந்தது. உணவின் போது, ருக்கியுடனும் வராவுடனும் எங்களுடைய உரையாடல் பயனுள்ளதாக இருந்ததா என்று விசாரித்தார். சூரி பட்டும்படாமலும் மறுபடி தொடர்பு கொள்கிறதாக மறுமொழி சொன்னான். பீற்றர் தன்னுடைய முயற்சியால் இதுவரை ஐம்பதுக்கும் மேற்பட்ட தோட்டப்பகுதி இளைஞர்கட்கும் யுவதிகட்கும் புதுவாழ்வு அளித்திருப்பதாகச் சொன்னார். ஒவ்வொருவர் ஒவ்வொரு தொழிலில், சிலர் கடைகளில் உதவியாளர்களாகவும் சிலர் ஹோட்டல்களில் வரவேற்பு ஊழியர்களாகவும் ஒரு சிலர் அலுவலகங்களிலும் கணனியைப் பயன்படுத்துகிற அளவுக்கு வளர்ந்தும் இருக்கிறார்கள் என்றும் பலருடன் தனக்கு இன்னமும் தொடர்புண்டு என்றுஞ் சொன்னார்.



படிப்பகம்

www.padippakam.com



ருக்கியும் வராவும் தங்கள் ஊருக்குப் போகத் தயங்கிய விஷயத்தை அப்போதுதான் சூரி சாடையாக அவரிடஞ் சொன்னான். பீற்றர் வெகு நிதானமாகவே "நகரவாழ்வு பழகிய பிறகு அவர்கள் தோட்டச் சூழலை நரகமாகத் தான் கருதுகி றார்கள். நகரத்தில் உள்ள சுதந்திரம், கையிற் பணப்புழக்கம் எல்லாமே புதிய விஷயங்கள். அவர்களைப் பொறுத்தவரை, இந்தப் புதிய வாழ்க்கை ஒரு விமோசனம்" என்றார்.

"தாய், தகப்பன், உறவு என்று யாரையும் தேடிப் போவ தில்லையா?" நான் கேட்டேன்.

"சிலபேர் இடையில் எப்போதாவது போய்வருவார்கள். நகரங்களில் செய்ய எவ்வளவோ இருப்பதால் பலருக்கு நேரம் இருக்காது. முடிந்தபோது கொஞ்சம் பணம் அனுப்புவார்கள். சிலர் தங்களுடைய சகோதரங்களை நகரத்துக்கு அழைத்துவர முயற்சி எடுக்கிறார்கள். தோட்டம் என்பது அவர்கள் கைவிட்டுத் தப்பி வெளியேறிய உலகம்".

பீற்றரைப் பொறுத்தவரை, அவருடைய பணி மூலம் அல்லற் படுகிற ஏழைத் தோட்டத் தொழிலாளர்களின் இளைய தலை முறையை விடுவிக்க முடியுமோ என்பதையோ விடுவிக்கப்பட்டு விடுதலை பெற்றவர்களது பிற்கால வாழ்க்கை என்ன என்ப தையோ அவர் பெற்றுக் கொடுப்பது விடுதலையா என்பதையோ பற்றிக் கவலைப்பட்டால், அவரால் ஒன்றுமே செய்ய இயலாது.

பீற்றர் செய்யாவிட்டால் வேறு யாராவது என்.ஜி.ஓ. பிரமுகர் மலையக மக்களின் அவலத்தைக் காட்டிப் பீற்றருக்குப் போகிற பணத்தைத் தானே பெற்று அதற்குக் கணக்குக் காட்டி விடுவார் என்று நினைத்துப் பேசாமல் இருந்தேன்.

*****

துக் நிவாரண வாகனத்தில் ஏறிக் கண்டி நோக்கிப் போய்க் கொண்டிருக்கையில், "மீட்கப்பட வேண்டியவர்கள் நிறைய இருக்கிறார்கள். ஆனால் இங்கே அவர்கட்குக் கிடைப்பது மீட்சியா?" என்று நான் உரக்க அங்கலாய்த்தேன்.

"முதலில் பீற்றர் போன்ற நல்ல மனிதர்கள் தங்களது



படிப்பகம்

www.padippakam.com



மனச் சிறைகளிலிருந்து மீட்கப்பட வேண்டும்'' என்றான் சூரி.

"அவருக்கு இப்போது எழுபத்தைந்து வயது'' என்றேன்.

சூரி ஒன்றுஞ் சொல்லவில்லை.

*(தாயகம்-61/68, நவெம்பர்-டிசெம்பர் 2007)*



படிப்பகம்

www.padippakam.com

*சிவசேகரம்*

# பட்டுத் தெளிந்தது



*மூர்த்திக்கு இந்து மதப்பற்றை விட இஸ்லாமியப் பகையே அதிகம் எனலாம்*



படிப்பகம்

www.padippakam.com



கருணாகரம் தான் வாங்கிய பத்திரிகைக்கான பணத்தைக் கடைக்காரரிடஞ் செலுத்திக்கொண்டிருந்தபோது தோளில் யாருடைய கையோ பட்டதுபோல இருந்தது. யாரோ தன்னுடைய காற்சட்டைப்பையில் உள்ள பணத்தை எடுக்கத் திட்டமிடுகிறார்களோ என்ற ஐயத்துடன் வலதுகையைக் காற்சட்டைப் பைக்குள் வைத்தபடி திரும்பினார். கொஞ்சம் வயதான தோற்றமுடைய, மெலிந்த ஆனாற் கொஞ்சம் தொந்தி விழுந்த, தலைமயிர் நரைத்துப் பாதி உதிர்ந்தும் தெரிந்த அந்த மனிதரை அடையாளங்காண இயலவில்லை. ஆனால் எங்கோ அறிந்த முகமாகத்தான் தோன்றியது. அவருடைய சிந்தனைக்கு அதிகம் வேலை வைக்காமல், "நீங்கள் கருணா தானே?" என்று கேட்டு விட்டு, அவருடைய விடைக்குக் காத்திராமல், அவர் தன்னை அடையாளங் கண்டாரா என்பதைப்பற்றிய அக்கறையும் இல்லாமல், அந்த மனிதர் "நான் மூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி" என்றார்.

கருணாகரத்துக்கு உடனேயே ஆளைத் தெரியவில்லை. பிறகு, 1988 வரை அவர் கொழும்பில் வேலைபார்த்த நிறுவனத்தின் பேரைச் சொன்னதுந்தான் கிருஷ்ணமூர்த்தியை நினைவு வந்தது. மூர்த்தியோடு அவருக்குப் பெரிய வாரப்பாடு இருந்ததில்லை. ஆனாலும் சுமுகமான உறவு என்று சொல்லலாம். கருணாகரத்தாருக்குக் கடவுள் நம்பிக்கை இருந்தது. விசேடமான நாட்கள் என்றால் மனைவியுடனும் சிலவேளை பிள்ளைகளுடனும் கோயிலுக்குப் போவார். மற்றப்படி, சமய போதனைக் காரர் பற்றியோ காவிச்சட்டை அணிந்த எவரைப் பற்றியுமோ, மதவேறுபாடின்றி, அவருக்கு நம்பிக்கை இல்லை எனலாம்.

மூர்த்திக்குத் திடீரென்று ஒருநாள் இந்துசமயப் பற்று ஏற்பட்டு விட்டது. 1984ன் நடுவில் கருணாகரத்திடம் வலியவந்து இந்தியாவில் இந்துசமய எழுச்சி ஒன்று ஏற்பட்டுவருகிறது என்றும் உலக இந்துக்கள் எல்லாரும் ஒன்றுதிரண்டால் மட்டுமே அவர்கள் பாதுகாப்பாக இருக்கலாம் என்றுஞ் சொல்லத் தொடங்கினார்.

இரண்டு பேருமே 1983 இனவாத வன்முறையால் பாதிக்கப் பட்டவர்கள் தான். கருணாகரம் ஒரு அனெக்சில் வாடகைக்கு



படிப்பகம்

www.padippakam.com



இருந்தவர். வன்முறைபரவிய வேளை, வீட்டுச் சொந்தக்கார ரிடம் தனது உடைமைகளை ஒப்படைத்துவிட்டு மனைவியோடும் பிள்ளைகளோடும் எப்படியோ தப்பிப் பிழைத்தவர். அவருக்குப் பொருள்நட்டங் குறைவு. ஆனாலும் பழைய அனெக்சில் மீண்டும்போய்க் குடியிருப்பதை வீட்டுக்காரர் விரும்பவில்லை. எனவே மனைவியைக் கொஞ்சக்காலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியிருந்தார்.

மூர்த்தியின் கதை வேறு. அவருக்கு அவருடைய தகப்பனார் சம்பாதித்து வாங்கிய வீடொன்று ரத்மலானைப் பகுதியில் இருந்தது. அது பெரிய வீடல்ல என்றாலும் அது அவருடைய ஒரே சொத்தாக இருந்தது. வீட்டின் பெரும்பகுதி வன்முறையால் அழிந்துவிட்டது. அதை மீளக்கட்டுகிற அளவுக்கு அவரிடம் கையிற் பொருள்வசதி இருக்கவில்லை. எனினும் அவசரப்பட்டு விற்பதில்லை என்ற முடிவுடன் இருந்தார். வீடு எரிந்தது போதா மல் மனைவியும் அதிர்ச்சியால் மனங் குழம்பியிருந்தார். இந்த விதமான நெருக்கடியான சூழ்நிலையில் அவரிருந்த வீட்டை அயலில் இருந்த முஸ்லிம் வணிகர் ஒருவர் விலைக்குவாங்கக் கேட்டார். மூர்த்திக்கு விலை மிகவுங் குறைவு போலவே தெரிந் தது. எரிகிறவீட்டில் பிடுங்கினது லாபம் என்கிற மாதிரி அந்த வணிகர் அடிமாட்டு விலைக்கு வீட்டைக் கேட்டது அவருக்கு அறவே பிடிக்கவில்லை. முஸ்லிம்கள்மீது அவருக்கு வெறுப்பு ஏற்பட, அவருடைய அந்த அனுபவத்திற்கும் மேலாக, முஸ்லிம் கள் கொழும்பில் பெரியஅளவில் வீடுகளைக் கட்டி ஆக்கிரமித்து வருவதாகப் பரவலாக இருந்துவந்த எண்ணமும் துணையா யிருந்தது. சிங்களவர்கள் மீது அவருக்கு ஏற்பட்ட வெறுப்பைவிட முஸ்லிம்கள் மீது ஏற்பட்ட வெறுப்பு ஒரு படி அதிகம் எனலாம்.

விஸ்வ ஹிந்து பரிஷத் என்கிற இந்துத்துவ அமைப்பின் முகவர்கள் 1970களிலிருந்தே இலங்கையிற் பரவலாகத் தமது பிரசாரத்தைத் தொடங்கியிருந்தாலும் அது பெரும் அளவில் எடுபடவில்லை. ஆனாலும் 1983க்குப் பிற்பட்ட சூழலில் உயிர்ச் சேதம் போக, வீடுகளையும் உடைமைகளையும் இழந்தவர்கள் நடுவே இருந்த ஆற்றாமை உணர்வின் காரணமாக முஸ்லிம்கள்



படிப்பகம்

www.padippakam.com



பற்றிய பொறாமை கலந்த ஒரு வெறுப்பு உருவாகத் தொடங்கி யிருந்தது.

மூர்த்திக்கு இந்து மதப்பற்றை விட இஸ்லாமியப் பகையே அதிகம் எனலாம். கருணாகரம் அவரிடம் சுருக்கமாக மத நம்பிக்கை என்பது தனிப்பட்ட விஷயமாக இருப்பது நல்லது என்று சொல்லிவிட்டார். மூர்த்தியை மறுக்கிறவிதமாக அவர் நேரடியாக எதையுமே சொல்லவில்லை. அவ்விடயத்தில் அவ ரோடு விவாதிப்பது எதிர்மாறான விளைவையே ஏற்படுத்தியிருக் கும் என்பது போகக், கருணாகரம் எதைப்பற்றியும் நீளமாக விவாதிக்கிற தரவழியல்ல. ஆகமிஞ்சினால் தன்னுடைய கருத் தைப் பொழிப்பாகச் சொல்லிவிடுவார். மேலுங் கதைவளர இடம்விடமாட்டார்.

1988ம் ஆண்டில் இருந்த கலவரமான சூழ்நிலையில் அவர் வேலைபார்த்த நிறுவனம் கலைக்கப்படும்வரை, இருவரும் ஆளையாள் கண்டால் மரியாதையாக முறுவலிப்பதற்கும் அப்பால், அவர்களிடையே வார்த்தைப் பரிமாறலுக்கு இடமிருந்த தில்லை. கருணாகரத்தார் பிறகு வெவ்வேறு இடங்களில் வேலை பார்த்தார். முடிவாக, யாழ்ப்பாணத்திற் போய் ஓய்வெடுக்கிற திட்டத்தில் மண்விழுந்த பிறகு, கொட்டாஞ்சேனைப் பகுதியில் மனைவியுடன் ஒரு சிறிய அனெக்சில் இருந்துவருகிறார். பிள்ளைகள் ஒவ்வொரு திசையில். மூர்த்தி எதிர்பாராத பல சிரமங்களுக்கு உள்ளாகி நொந்து மீண்டிருப்பதைக் கருணா கரத்தால் ஓரளவுக்கு ஊகிக்க முடிந்தது. எனவே மூர்த்தியைப் புறக்கணிக்க மனம் வரவில்லை. என்றாலும் வேறு அலுவல் களும் இருந்ததால், தன்னுடைய வீட்டு முகவரியைக் கொடுத்து விட்டு, விரும்பினால் என்றாவது மாலைநேரத்தில் வந்து காண லாம் என்று சொன்னார்.

மூர்த்தி அன்று பின்னேரமே கருணாகரம் வீட்டுக்குப் போனார். கருணாகரம் அவரிடம் குடும்பத்தைப் பற்றி விசாரித்த போது, மூர்த்தியால் அழுகையைக் கட்டுப்படுத்த இயலவில்லை. "கருணா, உங்களிடம் முன்பு முஸ்லிம்கள் பற்றிக் குறைப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com



போது நீங்கள் அதை ஏற்கவில்லையல்லவா. சொல்லுகிறேன், கேளுங்கள். அப்போது மூன்றுலட்சம் பெறுமதியாயிருந்த வீட்டை அயல் வீட்டு ஹனிபா ஒன்றரைக்கு வாங்கப்பார்த்தான். பிறகு இரண்டுவரை உயர்த்தினான். நான் உடன்படவில்லை. பிறகு கொஞ்சக்காலஞ் செல்ல நான் சம்பந்தப்பட்டிருந்த இந்து முன்னேற்றச் சபையில் இருந்த ஒரு முதலாளி தன்னால் மூன்று லட்சத்திற்கு வாங்க இயலும் என்றார். அவர் உடனடியாகத் தரத் தன்னிடம் காசுபோதாது என்றதால் தவணையில் தருவ தற்கு ஒத்துக் கொண்டேன். மாதாமாதம் பத்தாயிரமாக வட்டிக் குங் கணக்குப்பார்த்து நாற்பது தவணைக்கு உடன்பட்டு உடன்படிக்கை எழுதிக் கொண்டேன். காணி உறுதியைப் பதிந்து வேலை எல்லாம் முடிந்தபிறகு மூன்று மாதம் காசு ஒழுங்காக வந்தது. பிறகு இழுபடத் தொடங்கியது. மூன்று வருடத்தில் எல்லாமாக ஒரு லட்சம் கிடைத்திருக்கும். அதன்பிறகு ஒரு சதமும் கிடைக்கவில்லை. ஒருநாள் சபையில் கூட்டத்திற்குப் பிறகு பலர் முன்னிலையிலும்வைத்து மரியாதையாகத்தான் கேட்டேன். எல்லாருக்கும் முன்னிலையில் 'நான் ஒன்றும் தருமதி யில்லை. இதென்ன, என்னை மரியாதை கெடுக்கச் சொல்லி யாரேன் உனக்குச் சொல்லி அனுப்பினார்களா?' என்று கூசாமல் பொய்சொன்னார்".

"நீங்கள் யாரேன் பிறக்ற்றரிடங் கதைக்கவில்லையா?" என்று கருணாகரம் கேட்டார்.

"நீங்கள் என்ன உலகத்தில் ஐயா இருக்கிறீர்கள்? கோட்டு வழக்கென்று செலவு செய்ய என்ன காசை மடியில் கட்டிக் கொண்டா இருக்கிறேன்? வந்த கொஞ்சக் காசும் பல விதமாகச் செலவாகி விட்டது. அனுபவப்பட்ட ஒரு பிறக்ற்றர் சொன்னார். 'நீங்கள் துவக்கத்திலேயே பிழைவிட்டுவிட்டீர்கள். நீங்கள் முழுப் பணமும் கைக்கு வரமுன்னம் உறுதி எழுதியிருக்கக் கூடாது' என்றார். எனக்கு இதெல்லாம் தெரியுமா? பெரியமனிதர், சமய நம்பிக்கையுள்ளவர், பழிபாவந் தெரிந்தவர், நம்முடைய சமூகத்தவர், அவரை நம்பாமல் யாரை நம்புவது என்றுதான் அப்போது நினைத்தேன். ஏமாந்து போனேன்".



படிப்பகம்

www.padippakam.com



"வேறு வழியில் பணத்தில் ஒரு பகுதியையேனும் வாங்கத் தெண்டிக்கவில்லையா?"

"அதைத்தான் பிறக்ற்றரும் சொன்னார். நல்லமனிதர். முதல் முறைக்குப் பிறகு என்னிடம் காசு அதிகங் கேட்கவில்லை. நான் பலர் மூலமும் தெண்டித்தேன். பாவப்பட்டு எனக்கு உதவி செய்கிற நோக்கத்தில் இருந்தாராம். தன்னைப் பொது இடத்தில் வைத்து மரியாதைகெடுத்துவிட்டேன் என்கிறதால் எந்தவிதத் திலும் உதவமாட்டேன் என்று சொல்லிவிட்டார்".

"சபையில் யாருமே உங்களுடைய நியாயத்தைக் கேட்கவில்லையா?"

"கேட்டு என்ன? எல்லாரிடமும் தன்னைப் பற்றிக் கூடாத விதமாகக் கதைக்கிறேன் என்று இன்னுங் கோபம்வரும். கேட்கிற யாருக்குப் பெரியமனிதரை எதிர்த்துப் பேசத் துணிவு வரும்?"

"...."

"நான் முட்டாள்". என்று மூர்த்தி தன்னையே நொந்து கொண்டார்.

அதற்கு மேலும் அந்தக் கதையைத் தொடர விரும்பாத கருணாகரம் "பிறகு எப்படிச் சமாளித்தீர்கள்?" என்று கேட்டார்.

"தொண்ணூற்றெட்டில் வேலைபோன பிறகு, நோய்முற்றி மனைவி இறந்துவிட்டா. என்னுடன் துணைக்கு என்று வந்திருந்த மருமகன் எனக்குத் தெரியாமல் பல வேலைகளும் பார்த்தான். கட்டுப்படுத்த இயலவில்லை. தூள், இலை என்று பலதும் பாவிப்பான். பொலிசில் சொல்லுவேன் என்று வெருட்டிப்பார்த் தேன். அவன் என்னிடம் தூள் இருக்கிறதாகப் பொலிசுக்குத் தகவல் கொடுத்து விட்டு ஓடிப் போய் விட்டான்".

"நீங்கள் பொலிசுக்கு விளங்கப்படுத்த முடியவில்லையா?"

"தெரிந்தவுடனேயே சொல்லாததால் அவர்கள் என்னை அவ்வளவு நன்றாக நடத்தவில்லை".

"உங்களை அவர்கள் கடுமையாக நடத்தினர்களா?" என்று கருணாகரம் பரிவுடன் விசாரித்தார்.



படிப்பகம்

www.padippakam.com



“கம்பிக்கதவுக்கு அப்பால் போனால் காசில்லாத எல்லார் கதையும் ஒன்றுதான்” என்று மூர்த்தி விரக்தியுடன் சிரித்தார்.

“பிறகு....”

“பிறகென்ன பிறகு? அபராதம் செலுத்தவும் காசில்லாமல் ஆறுமாதம் உள்ளே இருந்து வந்தேன், சபையில் பழக்கப்பட்ட யாருமே என்னைக் காணவும் விரும்பவில்லை”.

“....”

“சிலகாலம் சாப்பிட எதுவும் இல்லாமல் தெருத்தெருவாக அலைந்தேன். அப்போது தான் முஸ்லிம்களைப்பற்றி நான் நினைத்தது எல்லாம் பிழையென்று விளங்கியது. எனக்கு இரக்கங்காட்டின எல்லாருமே முஸ்லிம்களாகத் தான் இருந்தார் கள். இப்போதுங்கூட மாளிகாவத்தைப் பக்கம் ஒரு முஸ்லிம் வீட்டில் வாரம் ஒரு நாள் சாப்பிடத் தருகிறார்கள். எடுபிடி வேலைகள்செய்து சமாளிக்கிறேன்”.

முஸ்லிம்கள் பற்றி மூர்த்தி வைத்திருந்த பொதுவான கருத்து மாறுவதற்கு இவ்வளவுதூரங் கஷ்டப்பட வேண்டியிருந்ததா என்று நினைத்த கருணாகரம், “நீங்கள் முஸ்லிமாக மதம் மாறப் போகிறீர்களா?” என்று அரைப்பகிடியாகக் கேட்டார்.

“முஸ்லிம்கள் எல்லாரும் பிழையான ஆட்களில்லை என்று தான் சொன்னேன்” என்று பகிடிவிளங்காதது போல மூர்த்தி மறுமொழி சொன்னார்.

“அப்படியானால் இந்துக்கள் எல்லாரும் சரியான ஆட்களு மில்லை” என்று கருணாகரம் தன்னுடைய பகிடியான தொனியி லேயே தொடர்ந்தார்.

“எல்லா மதங்களிலும் நல்லவர்களும் கெட்டவர்களும் இருக் கிறார்கள். அதனால் யாரதும் மதத்தைவைத்து அவரைப் பற்றி ஒரு முடிவுக்கு வரமுடியாது” என்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னார் மூர்த்தி.

“அது சரி. ஆனால் சில மனிதர்களைப் பிற மனிதர்களுக்குக் கொடுமைசெய்யப் பண்ணுவது எது?”

மூர்த்திக்குக் கேள்வி விளங்கினாற் போலத் தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



மூர்த்தி நின்ற அந்தத்திலிருந்து நியாயாமாக விலகி வந்து விட்டார். அதற்கும் மேலாக அவரிடமிருந்து எதையும் எதிர் பார்க்க இயலாது என்று நினைத்தோ என்னவோ கருணாகரம் அந்த விடயம் பற்றித் தொடர்ந்து பேசவில்லை.

பேசுவதற்கு அவர்கட்கு வேறு விஷயமில்லையா?

*(தாயகம்-69, ஜனவரி-மாச் 2008)*



படிப்பகம்

www.padippakam.com

*சிவசேகரம்*

# மதமாற்றம்



*லண்டன் போனாலென்ன! கனடா போனாலென்ன!*
*போனவையின்டை கொள்கையளைக் கேட்டுக்கொண்டு*
*இருக்கேலுமோ? இனஞ்சனம் சொன்னது தான் சட்டம்...*



படிப்பகம்

www.padippakam.com



“ஐயாவுக்கு ஊரு எங்கிட்டு?” என்று கேட்பவர்கட்குச் சிரித்த படியே அய்யாத்துரையார் சொல்வது “ஊர் இல்லை”. அவர் ‘யாதும் ஊரே’ என்கிற கருத்தில் அதைச் சொல்லவில்லை என்று பலருக்குத் தெரியாது. வழக்கமாகவே வேடிக்கையாகப் பேசுகிற மனிதர் ஏதோ நோக்கம் வைத்துத்தான் சொல்லுகிறார் என்று நினைத்துக் கொள்வார்கள். சிலர் ஊரைக் கேட்பதும் பிறகு வடக்கா மேற்கா என்றோ இன்னாரைத் தெரியுமோ என்றோ தொடர்வதும் மனிதரைப் பற்றித் தங்களுக்கு முக்கிய மான சில தகவல்களைத் திரட்டுவதற்காக என்பதால் இவர் பதிலைத் தவிர்க்கிறார் என்று நினைப்பவர்களும், ஆளைப் பார்த்தால் ‘பிழையான பகுதி’ மாதிரித் தெரியவில்லை என்று மேலும் துருவாமற் போய்விடுவார்கள்.

அய்யாத்துரையாருக்கு உண்மையாகவே ஊர் இல்லை. ஊருக்குப் பேர் ‘இல்லை’ என்று நினைக்க வேண்டாம். அவரு டைய ஊர் இப்போது இல்லாமலேபோய்விட்டது. ஐம்பது ஆண்டுகட்கும் மேலாக அவருக்கு இருந்துவந்த ஊரில் முதலில் மனிதர்கள் இல்லாமற் போனார்கள். பிறகு கொஞ்சங் கட்டாக் காலி மாடுகளும் நாய்களும் சேதப்பட்ட வீடுகளும் தெருக்களும் மரங்களும் இருந்தன. பிறகு அவை எல்லாமே இல்லாமலாகி விட்டன. இப்போது ஆள் நடமாட்டம் இல்லை என்று சொல்ல முடியாது. இருக்கிறது. ஆனால் ஒரு ஊருக்குரிய நடமாட்டம் இல்லை. இதற்கும் மேல் நான் சொல்லத் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

அய்யாத்துரையாருடைய ஒரு நல்லகுணம், போனதை நினைத்து வருத்தப்படமாட்டார். ‘நடந்தது நடந்துவிட்டது, அது தலைவிதி’’ என்கிற கொள்கையாலில்லை. ‘நடந்ததை நினைத் து வீணாக்குகிற நேரத்தில் உருப்படியாக எதையுஞ் செய்ய லாமே’ என்கிறது தான் அவருடைய கொள்கை. நடந்தது ஒரு படிப்பினை என்றால் அந்தப் பாடத்தை மட்டும் மனதிற் பதியவைத்துக் கொள்வதற்கு மேலாகக் காலத்தின் பிணங்களை அவர் நெஞ்சிற் சுமந்துசெல்வதில்லை. இனியுஞ் சுமந்து செல்ல மாட்டார் என்பது நிச்சயம். ஊர் இல்லாமற் போய்க் கிட்டத்தட்ட



படிப்பகம்

www.padippakam.com



இருபதாண்டுகள் இருக்கவேண்டும். இப்போது அவரும் தனது ஊரைப் போல ஆகிவிட்டார்.

இப்போது பிரச்சனை என்னவென்றால் மருத்துவமனையி லிருந்து கொண்டுவரவுள்ள அவருடைய உடலை என்னசெய்வது என்பது தான். அவர் கடைசியாக வாழ்ந்த இடம் நாவலப்பிட்டி. ஊரைவிட்டு வெளியேறியபிறகு பிள்ளைகள் ஒவ்வொருவருடன் ஒவ்வொரு ஊராக இருந்துபார்த்துக், கடைசியாக அவருடைய பென்ஷன்காசுடனும் மனைவியினுடைய பென்ஷன்காசுடனும் மட்டுமட்டாகச் சமாளிக்கலாம் என்ற தைரியத்தில் நாவலப் பிட்டியில் ஒரு வீடெடுத்துக் கடைசி ஐந்து வருடமாக இருவரும் இருந்து வருகிறார்கள். மகன் அன்புச்செல்வன் குடும்பத்துடன் வவுனியாவில். மூத்தமகள் வள்ளியம்மை கலியாணமாகி இப்போது ஹொங்கொங்கில். இளையமகள் தேன்மொழி குருநா கலில் தனியார் மருத்துவமனையொன்றில் தாதியாக வேலை. கணவரும் மருத்துவசேவையில். பிள்ளைகள் இல்லை.

கனகம்மா என்கிற கனகேசுவரியின் பிரச்சனை என்னவென் றால் கணவரின் விருப்பத்தை எப்படி நிறைவேற்றுவது என்பது தான். அய்யாத்துரையார் ஒரு அறிவுறுத்தல் போல அதை எவரிடமும் சொல்லவில்லை. ஆனால் அவருடன் நெருங்கிப் பழகிய எவருக்கும் அவரது விருப்புவெறுப்புக்கள் பற்றித் தெரியும். கனகம்மாவின் கவலை ஏதென்றால் அவர் உயிரோடு இருந்தபோது வந்துபோகாத உறவினர்கள் சிலபேர் வரப்போவ தாக அறிவித்திருந்தார்கள். எல்லாரும் வந்துசேரமுன்பே சில முடிவுகளை எடுத்தாக வேண்டும். அய்யாத்துரையாருடைய தம்பி ஒருவர் வரக்கூடும். அவர் எதிலுங் குறுக்கிடமாட்டார். தமையனில் நல்ல மரியாதை. வரப்பிந்தும் என்று சொல்லியிருந் தார். ஹொங்கொங்கில் இருந்த மகள், தான் கூடிய விரைவில் வருகிறேன் என்றும் தனக்காக எந்த ஏற்பாட்டையும் மாற்ற வேண்டாம் என்றும் தகவல் அறிந்தவுடனேயே சொல்லி விட்டாள். மகன் செல்வன் வேலை அலுவலாக வடக்கே போய் வரப்பிந்தும் என்று மருமகள் மேனகா தகவல் அனுப்பியிருந்தார். மருமக



படிப்பகம்

ளுக்குப் பிள்ளைகளுடன் வருவது சிரமம் என்று கனகம்மா மருமகளை மறித்துவிட்டார். செல்வன் தாயின் முடிவை ஏற்கக் கூடியவன். தேன்மொழியை இந்தியாவுக்குப் பயிற்சிக்காக அனுப்பியிருந்தார்கள். அவள் வருவதோ ஐமிச்சம். மருமகன் கூடியவிரைவில் வருவதாகத் தொலைபேசியிற் சொன்னார்.

கனகம்மாவின் உடனடியான தேவை தன்னுடைய தமையன் வந்து சேரமுதல் மருமகன் வந்துசேரவேண்டும் என்பதுதான். அய்யாத் துரையாருடன் முப்பத்தைந்து ஆண்டுகளாக வாழ்ந்த அவருக்குக் கடவுளிடம் கேட்டு எதுவுமே கிடைக்காது என்று நிச்சயமாகத் தெரியும். என்றாலும் ஒரு நப்பாசை. பலர் லொத்தர் சீட்டு வாங்குகிறோமே, அந்த மாதிரி ஒரு சின்ன எதிர்பார்ப்பு என்று வைத்துக்கொள்ளுங்கள். எந்தச் சாமியிடம் கேட்பது என்று நிச்சயமில்லை. ஏனென்றால் கடைசியாக எப்போது நேர்த்திக்கடன் வைத்தேன் என்றே அவருக்கு நினைவில்லை. அதைவிட, நல்லதோ கெட்டதோ நடப்பதுதான் நடக்கும் என்கிற விதமாக, விதி பற்றியது போல, ஒரு மனப் பழக்கம். இதுவரை எதையும் சமாளிக்க ஒரு துணை இருந்தது. இப்போது இல்லை. எனவே கடவுளே காப்பாற்று என்று வேண்டிக் கொண்டார்.

*****

கனகம்மா பயந்தவிதமாகவே தமையன் பொன்னம்பலம் வேளைக்கே வந்துவிட்டார். உண்மையில் அய்யாத்துரையாருக் கும் அவருக்குஞ் சரிவராது. ஆனாலும் பகைமையில்லாமல் நடந்து கொள்ளவார்கள். அய்யாத்துரையார் இரண்டு விஷயங் களில் மிகுந்த கண்டிப்பாயிருந்தார். ஒன்று நேர்மையீனம். மற்றது சமூகக் கேடான சடங்கு சம்பிரதாயங்கள். பொன்னர் அய்யாத்துரையாருக்கு எதிர்மாறு. எனவே இருவரும் தங்களது பாதைகள் வேறு என்று ஒருவர் வழியில் மற்றவர் குறுக்கிடாமற் சமாளித்து வந்தனர். அய்யாத்துரையார் இருந்தபோது அவரை யும் கனகம்மாவையும் தன் வழிக்குக் கொண்டு வர இயலாத பொன்னர், அவர் போனபிறகு தனக்குக் கிடைத்த முதல்

www.padippakam.com



வாய்ப்பைப் பயன்படுத்தத் தவறமாட்டார் என்பது கனகம்மாவின் மதிப்பீடு. அது பிழையாகவில்லை.

"சரி, கனகம். இனி அய்யாத்துரையை என்னசெய்யப் போறாய்?" என்ற பீடிகையுடன் தொடங்கிய பொன்னர், அய்யாத் துரையாருடைய விருப்பங்களைப் பற்றிக் கனகம்மா விளக்கிச் சொல்ல வாய்ப்பளிக்கவில்லை எனலாம். மிகுந்த சிரமத்தின் நடுவே கனகம்மாவாற் சொல்லமுடிந்ததெல்லாம், இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் தன்னை எரித்தாலுஞ்சரி புதைத் தாலுஞ்சரி அய்யாத்துரையாருக்கு எல்லாம் ஒன்றுதான் எனவும் ஒருவிதமான கிரியைகளையும் தான் இறந்தபிறகு எக்காலத் திலுஞ் செய்வதை அவர் விரும்பவில்லை எனவும் தனக்குத் தெரியும் என்பதுதான். "இருபத்திநாலு மணித்தியாலத்திலை புதைக்க அய்யாத்துரை என்ன சோனகனே? இப்பிடிச் செய் யெண்டு அய்யாத்துரை எங்கேன் எழுதிவைச்சானே?" என்ற அஸ்திரத்துடன் அந்த வாதங்களை முறியடித்ததாக நினைத்த பொன்னருக்குக் கனகம்மா மறுமொழி சொல்லவில்லை. மௌனம் என்றால் சம்மதம் என்று மட்டுமில்லை, சம்மதமின்மை என்றும் பொருள்கொள்ளலாம் என்று கனகம்மாவின் முகங் காட்டியது.

"சிலவைப் பற்றி யோசிக்கிறியோ? சகோதரஞ் சொந்தக்கார ரெண்டு நாங்கள் ஏன் இருக்கிறம்? யோசியாதை...." என்று இன்னொரு கோணத்திலிருந்து பொன்னம்மாவின் மனஉறுதி என்ற கோட்டையைத் தாக்கினார். 'உம்மட்டைக் கேட்டனானே?' என்று சொல்லப் பொன்னம்மாவின் நாக்குத் துடித்தது. வாக்கு வாதத்தை வளர்த்து அய்யாத்துரையாரின் இறுதி நிகழ்வைக் கேவலைப்படுத்த அவர் விரும்பவில்லை.

பொன்னர் பலவிதமான உபாயங்களைப் பாவித்தாலும் கன கம்மா அசைகிறதாகத் தெரியவில்லை. கனகம்மாவுடன் கோபித் தால் அது எதிர்மாறான விளைவுகளையே தரும் என்று நினைத்து அடுத்த தந்திரோபாயத்தைத் திட்டமிடத் தொடங் கினார். மருமகன் தேவநேசன் வரமுன்னம் வீட்டுக்கு வரக்கூடிய உறவினர்களது ஆதரவைத் திரட்டிக் கனகம்மாவைத் தன்



படிப்பகம்

www.padippakam.com



பக்கம் திருப்பலாம் என்று எண்ணம் எழுந்தது. தேவநேசன் வரமுன்னம் ஒரு நெருக்குவாரத்தை உண்டாக்கிவிட்டால், தேவ நேசனைச் சமாளிப்பது எளிது என்று அவரது சிந்தனை ஓடியது. ஏனென்றால், தேவநேசன் மருமகன். இரத்த உறவுமல்ல. அதை விட, அவன் கிறிஸ்துவ சமயத்தவன். "சரி கனகம். நான் சொல்லிறதைச் சொல்லிவிட்டன். யோசிச்சுப் பார். இருவத்திநாலு மணித்தியாலம் எண்டாலும் எங்களின்டை சமயச் சடங்குகளை எல்லாஞ் செய்யேலுந்தானே.... முந்தி இந்த எம்பாமிங் அது இதெல்லாம் வர முன்னம் நாங்களும் பொழுதுபடமுதலே சவ மெடுத்தனாங்கள் தானே!" என்று ஒரு சமரசக்கருத்தைச் சொல்லியபடி எழுந்துபோய் முன் விறாந்தையில் இருந்தவர் களிடம் பேச்சுக் கொடுக்கத் தொடங்கினார்.

*****

எடுத்த எடுப்பிலேயே சாவீட்டுப் பிரச்சனையைத் தூக்கிக் கனகம்மாவுடனான முரண்பாட்டை வெளிப்படுத்தப் பொன்னர் என்ன மடையரா? அதைவிடவும் உறவினர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் இன்னும் வரவில்லை. வந்திருந்தால் அவர்களுடன் தனியேபேசித் தன் கட்சிக்கு ஆதரவு திரட்டியிருக்கலாம். வந்தவர் களிற் பலர் மலையகத்தவர்கள். சிங்களவர்களும் முஸ்லிம் களும் ஓரிருவர் இருந்தனர். யாழ்ப்பாணத்தவர்கள் ஒருவேளை இருந்திருந்தாலும் பொன்னருக்குத் தெரிந்தவர்கள் இல்லை. எனவே பொதுப்படையாகவே சமயச் சடங்குகள் பற்றிப் பேசத் தொடங்கினார்.

சிலர் தங்களுடைய சடங்குமுறைகள் பற்றிக் கொஞ்சஞ் சொன்னார்கள். பொன்னருக்கு அதிற் பெரும்பகுதி புதினமாகவே இருந்தது. மலையகத் தமிழரிடையிலும் வேறுபட்ட நடைமுறை கள் பல இருப்பதுபற்றித் தெரியப் பொன்னருக்கு அதிசயமாக இருந்தது. அவருக்குத் தெரிந்த இந்துசமயம் சைவச் சாதிமான் களுடையது மட்டுந்தான். வடக்கில் மற்றவர்களுடையது பற்றித் தெரியும் என்றாலும் அவை 'எளியசனங்களுடையன' என்பதால் அவைபற்றி அவர் அக்கறைப்பட்டதில்லை.



படிப்பகம்

www.padippakam.com



கதை திசைமாறிக் கிறிஸ்துவ மதமாற்றப் பிரசாரகாரர் பற்றித் திரும்பியது. சனங்களுடைய அறியாமையைப் பயன் படுத்தி அவர்கள் மதம் மாற்றுவதாகவும் கஷ்டப்படுகிறவர்கள் இயலாமையால் மதம் மாறுகிறதாகவும் கருத்துக்கள் பரிமாறப் பட்டன. தமிழ் கொஞ்சந் தெரிந்த சிங்களவரான ஹேவாகம "சமயங் மாறுவாங்சுட்டி நாங் விரோதங் இல்லா. ஆனா, அந்தகொளு மனிசங் கண் சரிபண்ணறாங் காது சரிபண்ணறாங் சொல்லி கிறிஸ்தியானு ஆகமங்காரங் பொய்வேல பண்ணறாங். அதி தாங் நமக்கி கேன்தி!" என்றார். "உங்களைப் போலதான் எனக்கும் இந்த வேதக்காரர் எண்டாக் கண்ணில காட்டேலாது. எங்கடை சமயகாரரை எல்லாங் காசையும் படிப்பையுங் காட்டிப் பாழாகிப் போட்டாங்கள்" என்று பொன்னர் அதைத் தொடர்ந் தார். "கிறிஸ்து ஆகம சுட்டி நாங் விரோதங் இல்லா. பொய் வேல சுட்டி தாங் கேன்தி வராங்" என்று திருத்தினார் ஹேவாகம.

"ஓம், ஓம். நாங்களும் அப்பிடித்தான் என்று சொல்லிவிட்டுத் தனக்கு அருகில் இருந்த நாற்பது வயது மதிக்கத்தக்கவரைப் பார்த்து "என்ன சொல்லிறீர்?" என்று கேட்டார். அதுவரை வாயே திறக்காதிருந்த அந்த மனிதர் "நமக்கென்னாத் தெரியு முங்க.... அவுங்கவுங்க பிரச்செனை அவுங்க அவுங்களோடெ.... ஆளுங்களெ அவுங்கபாட்டுலெ விட்டுப்புட்டாத் தொந்தர வில்லே.... இவுங்க யாரோட பணத்தெ எடுத்தி யாருக்குக் குடுக்கிறாங்க ஏங் குடுக்கிறாங்கண்ணு புரியல்லே.... என்னம்மோ நம்ம அய்யத்தொரே ஐயா மாதிரி நாமல்லாம் மத்தவங்களுக்கு நல்லதெ மாத்திரம் நெனைக்கலாம்னா.... சாமி கும்புடக்கூடத் தேவல்லிங்க, சாமியே தேடிவந்து நம்ம ஏத்துக்கும்". ராமர் என்கிற ராமுப்பிள்ளை பேசுகிறபோதே அவரது நாத் தழ தழத்தது.

"ஆரென்ன சொன்னாலும், நான் சொல்லிறன்.... இந்த மதம் மாத்திற வேலைக்கு ஒரு முடிவுகட்டவேணும். நாங்கள் ஒத்துமையா நிண்டா, இந்த வேதக்காறரை ஓடஓடத் துரத் தேலும்" என்று சொல்லியபடி சுற்றும் முற்றும் நோட்டம் விட்டார். வாசலடியில் உறவினர்கள் இரண்டு மூன்றுபேர் தெரிந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com



மற்றவர்களிடம் "எக்ஸ்கியூஸ்" என்று சொல்லிவிட்டு, வந்தவர் களை உள்ளேபோகவிடாமல் அவர்களோடு போயிருந்து பேசத் தொடங்கினார். பொன்னருடைய கட்சி கொஞ்சம் பலப்பட்டிருக்க வேண்டும். மிகவும் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருந்தார்.

*****

வாசலில் ஒரு மோட்டர் சைக்கிள் வந்து நின்றது. அதிலிருந்து இளம் வயதினனான ஒல்லியான உயரமான ஒருவன் இறங்கி வந்தான். அவனைக் கண்டதும் சிறிதுமுன்பு பொன்னருடன் பேசிக்கொண்டிருந்த ராமர் ஓடிச்சென்று "வந்துட்டீங்களா தம்பி! அம்மா நீங்க வரணும்னுதான் உள்ளார பாத்துக்கிட்டிருக் காங்க.... வாங்க வாங்க...." என்று தேவநேசனின் கையைப் பற்றித் தோளில் அணைத்தபடி வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்.

அவர்கள் உள்ளே போனதுந்தான் பொன்னருக்கு வந்தவன் அய்யாத்துரையாருடைய மருமகன் தேவநேசன் என்றும் தன் னோடு கதைத்துக்கொண்டிருந்தவர் சகோதரிக்கும் மைத்துன ருக்கும் நெருக்கமான நண்பர் என்றும் விளங்கியது. தலைக்கு மேலே வெள்ளம் போகுமுன்பு தடுக்கிற வேகத்துடன், உள்ளே பாய்ந்துசென்றபடி, மற்ற உறவினர்களையும் துணைக்கழைத் தார். அவர்களும் தயங்கித் தயங்கிப் பின்தொடர்ந்தனர். "வடக் கத்தியானும் வேதக்காறனும் சேர்ந்து காரியத்தைக் குழப்பிப் போடப் போறாங்கள்" என்று புறுபுறுத்தபடி நுழைந்தவர், "தம்பி... தேவநேசன் எண்டு நினைக்கிறன்...." என்றார். தேவநேசன் 'நீங்கள் யார்' என்று கேட்கமுன்னமே, "நான் பொன்னம்பலம், ஐயாத்துரையின்டை மச்சான், கனகத்தின்டை அண்ணன்.... செத்த வீட்டுச் சடங்குகளை எல்லாம் எப்பிடிச் செய்யிறது எண்டு கொஞ்சம் முந்திக் கனகத்தோடை கதைச்சு இப்ப நாங்கள் முடிவெடுத்திட்டம். நீரும் நேரத்துக்கு வந்திட்டீர். இனிச் சட்டுப்புட்டெண்டு வேலையைத்துவங்கினாத் தான் நாளைக்குக் காலமை மச்சான் விரும்பின மாதிரி இருவத்திநாலு மணித்தியாலத்திலை எல்லாத்தையும் முடிக்கேலும்" என்று ஒரேமூச்சிற் சொல்லி முடித்தார்.



படிப்பகம்

www.padippakam.com



"அங்கிள், மாமி என்ன சொல்லிறா?" என்று தேவநேசன் கேட்கப், பொன்னர் "தம்பி, நீர் பிறத்தியாள். அதோடை வேதக்காறனும். உமக்கு எங்கட சைவப் பழக்கவழக்கங்கள் சடங்குசம்பிரதாயங்கள் விளங்காது. இந்த மாதிரி நேரங்களிலை சொந்தக்காறர், வயசிலை மூத்தவை, ஆம்பிளையள்தான் முன்னுக்குநிண்டு நடத்திறது எங்கடை வழக்கம். மருமேன் எண்ட மரியாதைக்காக நீர் வருமட்டும் பாத்துக் கொண்டிருந்தம். மாமியிட்டை நான் எல்லாங் கதைச்சுக் கொள்ளுறன்" என்றார். தேவநேசன் வாயடைத்துப் போனான். தேன்மொழி அல்லது செல்வன் வந்திருந்தாற் கதை வேறு. சமயத்தைச் சொல்லித் தேவநேசனைக் கட்டிப் போட்டாயிற்று. தேவநேசன் கனகம்மாவின் பக்கமாகப் பரிதாபமாகத் திரும்பிப் பார்த்தான்.

கனகம்மா நிதானமாகத் தமையனைப் பார்த்து "இருக்கும் வரையும் அவருடைய மனமறிஞ்சு அவருடைய விருப்பப்படியே ஆறுதலாக அவரைச் சீவிக்க விட்டனான். அவரும் என்னுடைய நம்பிக்கையளிலை குறுக்கிட்டுக் கோயிலுக்குப் போகாதை, திருவிழாவுக்குப் போகாதை, சாமி கும்பிடாதை, திருநீறு பூசாதை எண்டு ஒரு நாள்த்தன்னும் மறிச்சதுமில்லைத் துணைக் குவரச் சொல்லிக் கேட்டாக் கோயிலுக்குக் கூட்டிக் கொண்டு போகமாட்டன் எண்டதுமில்லை. அவர் என்டை உணர்வுகளை மதிச்சு நடந்தமாதிரி நானும் அவரின்டை உணர்வுகளை மதிக் காட்டி நானென்ன தரவழி...." என்று முடிக்கமுன்னே பொன்னர், "ஓம் கனகம். நீ சொல்லிறதெண்டா முற்றுமுழுதாச் சரி. நான் இல்லையெண்டா சொன்னனன். அய்யாத்துரை இருந்தமட்டுக்கும் அவன்டை மனங் கோணாமல் நடந்தனி. அப்பிடித் தான் தமிழ்ப் பெம்பிளையள் இருக்க வேணும். நான் உன்னைப் பெற்றிப் பெருமைப்படுறன்.... இனி ஆள் இல்லை.... என்ன செய்தாலும் மனங்கோண இடமில்லைக் கண்டியே.... அப்ப, இனஞ் சனத்தின்டை மனங்கோணாமைச் செய்யிறது தான் சரி.... என்ன சொல்லிறாய்?" என்று இன்னொரு திசையில் காய் நகர்த்தினார்.

கனகம்மாவுக்கு இந்த விவாதத்தைத் தொடர விருப்ப



படிப்பகம்

www.padippakam.com



மில்லை. திரும்பத்திரும்ப "அவரின்டை விருப்பத்துக்கு மாறா என்னாலை ஏலாது...." என்பதற்கு மேலாக அவரால் எதையுஞ் சொல்ல இயலவுமில்லை. பேச வந்தவர்களிடம் அவர்களுக்கு அய்யாத்துரையார் மீது இவ்வளவு காலமும் என்ன அக்கறை இருந்தது என்று கேட்டு அவர்களது மனதைப் புண்படுத்தவும் மனம் வரவில்லை.

பொன்னர் தனது கட்சியின் வெற்றியை உறுதிசெய்துவிட்ட இறுமாப்புடன், "பார் கனகம். நாங்கள் உன்டை மனிசனைக் கனம்பண்ணத்தான் இதையெல்லாஞ் செய்யப்பாக்கிறம். யோசியாதை, அவன் எங்களிலை ஒருத்தன். அனாதைமாதிரிப் போக விடேலுமா? அவன்ட சாதி என்ன! பரம்பரை என்ன! எல்லாம் பாத்துத்தானே அவ்னை உனக்குச் செய்துவைச்சம்! ஏதோ கெட்டகாலம் அய்யாத்துரைக்கு இந்தக் கொம்யூனிஸ்ட் கொள்கையளிலை புத்தி பிழைச்சுப்போச்சுது.... நாங்கள் அவனை மீட்டெடுத்திடுவம்.... சும்மா யோசியாதை.... ஆரந்தக் கொம்யூனிஸ்ற் கட்சி வாத்தி? அவன்டை ஊரில் ஆக்கள், அவன்ட செத்த வீட்டிலை போய்ப் பார்த்தவை, சொல்லிச்சினம். சொந்தக்காரரெல்லாஞ் சேர்ந்து ஆளுக்கு நெத்தியிலை நெஞ்சிலை தோளிலை கையிலை எல்லாந் திருநீறு பூசிச் சந்தனப் பொட்டும் வைச்சு மனிசியின்டை தாலியும் அறுத்து ஒழுங்கு மரியாதையாப் பூசாரி பரியாரி பறைமேளம் எல்லாம் வர வழைச்சு ஆளைச் சுடலைக்கு அனுப்பினவையாம். அது தான் எங்களின்டை மரபு. லண்டன் போனாலென்ன! கனடா போனாலென்ன! போனவையின்டை கொள்கையளைக் கேட்டுக்கொண்டு இருக்கேலுமோ? இனஞ்சனம் சொன்னது தான் சட்டம், மரியாதை!" என்று அருகாக நின்ற உறவினர்களைப் பார்த்தார். எல்லாரும் ஆமோதிப்பது போல நின்றனர். கனகம் வேதனையில் அழுதபடி தலைகுனிந்து நின்றார். தேவநேசனால் ஒன்றுமே பேசமுடியவில்லை.

அவர் பேசி ஓய்ந்து ஒரு நிமிடம் விட்டு ராமர், "ஐயா, கொஞ்சம் மின்னாடி நீங்கதானே சொல்லிக்கிட்டிருந்தீங்க யாரையும் ஏமாத்தி மதம்மாத்தறது தப்புன்னு.... இப்போ மோசம்



படிப்பகம்

www.padippakam.com



போனவங்க பேச்சுமூச்சில்லாமக் கெடக்கறப்ப அவுங்களை ஒங்க மதத்துக்கு மாத்தப்பாக்கிறீங்களே, இது என்னாங்கையா நாயம்? அய்யாத்தொரெ ஐயா கடவுளெ நம்பல்லே, மனுசனை நம்பினாரு. பணத்தெ மதிக்கல்லே, மனுசனோட கொணத்தே மதிச்சாரு. அது அவரோட மதம்னு வெச்சுக்குங்க. அதெப் போயி நாம்ப மாத்தணும்னா, அது உசுரோட இருக்கிறவனெ மதம் மாத்தறதெயுங்காட்டி மோசமில்லிங்களா?''

பொன்னருக்கு ராமரை அறைய வேண்டும் போலத் தோன்றியது. அவர் வாய்திறக்கு முன்னமே கனகம்மா அவரைப் பார்த்தபார்வையில் இருந்த தெளிவுந் தீர்மானமும் எல்லோரதும் வாய்களைக் கட்டிப் போட்டு விட்டன.

*(தாயகம்-70, ஏப்ரல்-ஜூன் 2008)*



படிப்பகம்

www.padippakam.com



# ஆள் மாறாட்டம்



*சஞ்சீவனுக்கு நிலைமை சரிவர விளங்கியபோது அவன் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தான்.*



படிப்பகம்

www.padippakam.com



அந்தச் சிற்றுண்டிச்சாலையில் வழமையைவிடக் கொஞ்சங்கூடப் பேர் போலிருந்தது. ஒரு மேசையை விட்டு நாலுபேர் எழுந்து போவது தெரிந்தது. தாஸ் தன்னோடு கூடவந்த சஞ்சீவனை விட்டுவிட்டு வேகமாக ஓடிச்சென்று அம் மேசையை அண்டிய ஒரு கதிரையிற் குந்தியபடி சஞ்சீவனுக்குச் சைகை காட்டினான். பரிசாரகர் யாரும் வருகிற சாடை தெரியவில்லை. மேசை மீதிருந்த தட்டுக்களையும் கோப்பை பீரிஸ்களையும் ஒருபுறமாக ஒதுக்கினான். சஞ்சீவன் தன் கையிலிருந்த சிறிய பிரயாணப் பையைத் தாஸிடம் கொடுத்துவிட்டு உணவு பரிமாறும் இடத்தை நோக்கிப் போகிறபோக்கில் தாஸிடம் "கொ.்.பி?" என்று கேட்டான். "ஓ.கே." என்றான் தாஸ். உணவு பரிமாறும் இடத்தில் கொஞ்சம் சனக்கூட்டமாகத்தான் இருந்தது. மேசைக்குக் காவலாக இருந்தபடி மேசையிலிருந்த தட்டுக்களை அகற்ற யாரும் வருவார்களா என்று பார்த்தான். யாரும் வருகிற சாடை தெரியவில்லை. வலதுகையில் பலகையாலான ஒரு நீள்சதுரத் தட்டத்துடன் ஒருவன் பின்னே வந்துநின்றது தாசுக்குத் தெரியவில்லை. வந்தவனின் இடதுதோளில் ஒரு சிறிய பை இருந்தது. சில்லு வைத்த பெரிய ஒரு பெட்டியை இழுப்பதற்கான பட்டியைப் பற்றியபடி இடதுகை இருந்தது.

"எக்ஸ்கியூஸ் மீ. எனிபொடி ஹியர்?" என்று பின்னால் நின்றவன் கேட்டான். திரும்பிப் பார்த்த தாஸ் அவனிடம் தனது சொற்பச் சிங்கள அறிவைப் பிரயோகித்து "எக்கெனெக் எனவா (*ஒருவர் வருகிறார்*)" என்றான். நின்றவன் "ஸ்பீக் தமில்? " என்று கேட்டான். அதன் பிறகு, தாஸ் தமிழிலேயே தொடர்ந்தான். "பறவாயில்லை, இருங்க" என்று தானிருந்த மூலைக்கு எதிர் மூலையைக் காட்டினான். வந்தவன் ஒரு புன்முறுவலால் நன்றி தெரிவித்தபடி தன் சுமைகளை மேசைமேல் இறக்கினான். அதற்கிடையில் யாரோ மேசையைத் துடைத்து மேசையிலிருந்த தட்டுக்களைக் கொண்டுபோய்விட்டார்கள். சஞ்சீவன் வெறுங்கையுடன் திரும்பி வந்து "கிறெடிற்காட் வேலை செய்யாதாம், மிஷின் பழுதாம்" என்று சொன்னபடி தனது பயணப் பையைத் திறந்து பச்சைத்தாள் ஒன்றை எடுத்தான். "இனிச்



படிப்பகம்

www.padippakam.com



சில்லறை இல்லை என்று சொல்லாட்டிச் சரி" என்று சொல்லி விட்டுத் திரும்பினான். தனது வாகனத்தின் ட்றைவரிடம் தகரத்தில் அடைத்த பானம் ஒன்றைக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டுத் தட்டத்தில் இரண்டு காகிதக் குவளைகளில் கோப்பியுடனும் இரண்டு கேக் துண்டுகளுடனும் சஞ்சீவன் திரும்பிவரச் சில நிமிடங்கள் எடுத்தது.

தாஸூம் அவனுடன் மேசையைப் பகிர்ந்தவனும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. அவன் திடீரன்று பக்கவாட்டாகச் சரிந்து நிமிர்ந்தபடி "இது உங்கடதோ?" என்று கேட்டபடி ஒரு கடவுச் சீட்டை நீட்டினான். சஞ்சீவனுடையதாக இருக்கலாம் என்று ஊகித்த தாஸ் அதைத் திறந்துபார்த்து உறுதிப்படுத்திய பிறகு, "தாங்க்ஸ். கூட்டாளியின்டது" என்று சொல்லியபடி கையோடு வைத்துக் கொண்டான். "நான் சங்கரலிங்கம். ஷங்க் எண்டு கூப்பிடுவினம். நீங்கள்?" "தாஸ்". "போறவழியோ? வாற வழியோ?" "ரண்டுமில்லை. கூட்டாளி போறவழி". "நான் வாற வழி" என்ற ஷங்க் "பாஸ்போட், ஐடி கவனமாயிருக்க வேணும். இந்த ஊரிலை செக்பொயின்ற்றிலை நிக்கிறவனுக்குப் பாஸ்போட் விளங்காது. நிறங்குறைவா இருந்து ஃபொறின் பாஸ்போட்டைக் காட்டினா ஜமிச்சமாப் பார்ப்பான். அதனாலதான் நான் இங்கை வரேக்கை முப்பது வருசம் முந்தி எடுத்த ஐடியையுங் கொண்டு வாறனான். அதோடை போறவாற இடங்களிலை லோக்கல் றேற் குடுக்கேலும்" என்று உபதேசிக்கிற தோரணையில் சொன்னான். தாஸ் தன்னுடைய அடையாள அட்டை பத்திரமாக இருக்கிறதா என்று சட்டைப் பையில் இருந்த சிறிய பிளாஸ்ற்றிக் உறையை வெளியே எடுத்துப் பார்த்தான். "புதுசுபோல கிடக்குது" என்று சொன்னபடி, ஷங்க் தாஸின் கையிலிருந்த அடையாள அட்டையை உற்றுப் பார்த்தான். தாஸ் அதை அவனிடம் நீட்டினான். ஷங்க் தன்னுடைய சட்டைப் பையிலிருந்து தனது அட்டையை எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தான். "முப்பதுவருசத்திலை இன்னமுங் கனக்க மாறேல்லை. பாஸ்போட்டை ரண்டு மூண்டு தரம் மாத்தியிருக்கிறாங்கள்" என்று ஷங்க் விமர்சித்தான்.



படிப்பகம்

www.padippakam.com



தன்னிடம் மூன்று கடவுச் சீட்டுக்கள் இருப்பதாக ஷங்க் பெருமையுடன் சொல்லிக்கொண்டான். சிலபேரிடம் இரண்டு மூன்று கார், வீடுகள் மாதிரி இவனுக்கு இரண்டுமூன்று நாடுகள் என்று தாஸ் தனக்குள் நினைத்துக் கொண்டான். அதற்குள் சஞ்சீவன் திரும்பிவரப் பரஸ்பர அறிமுகங்களுடன் உரையாடல் தொடர்ந்தது. வாகனத்துக்கு ஏற்பாடுசெய்து, வருகிற வழி யிலேதான் விமானம் புறப்பட இரண்டு மணி நேரம் தாமதம் என்று தகவல் கிடைத்ததால் நெடுஞ்சாலையில் கட்டு நாயக்கவுக்குத் திரும்புமுன் இருந்த அந்த ஹோட்டலின் சிற்றுண்டிச்சாலைக்குப் போகச் சஞ்சீவன் யோசித்தான். விமான நிலையத்துக்குப் போனால் தாஸ் உடனேயே திரும்பவேண்டி யிருக்கும். எனவே ஆறுதலாகக் கொஞ்சநேரம் பேசலாம் என்பதுதான் நோக்கம். ஷங்க் ஏறிய வண்டியிற் சிறு பழுது. சரிப்படுத்தக் கொஞ்ச நேரமாகும் என்பதால், சாரதி அவனை அந்தச் சிற்றுண்டிச்சாலையில் இறக்கிவிட்டு வண்டியை அருகி லிருந்த ஒரு கராஜுக்குக் கொண்டு போயிருந்தார்.

ஷங்க் சொன்னவற்றியிலிருந்து, இலங்கையின் நெருக்கடி யான காலங்களில் அனுபவப்பட்டு வெளியூர் போய்ப் பிழைக்கச் கற்றுக்கொண்டான் என்று தெரிந்தது. அவனுடைய கடவுச்சீட்டுக் களில் அவனது அனுபவமுத்திரைகள் ஆழப் பதிந்திருக்க வேண்டும். பிழையான அடையாளம் ஒருவரை எப்படிச் சந்தேக நபராக்கும், அடையாளப்படுத்த இயலாமை எப்படிச் சிறைக் கம்பிகளின்பின்னால் ஒருவரைக் கொண்டுசேர்க்கும் என்பன முதலாக மறியலில் வைக்கப்படுகிறவர்கட்குக் கிடைக்கிற அரச மரியாதைகள்வரை பலவற்றையும் பற்றி எந்தவிதமான உணர்ச்சியும் இல்லாமல் அவனாற் பேச முடிந்தது. அந்தச் சந்திப்பு சஞ்சீவனுக்கு ஒரு புதிய உலகத்தைக் காட்டியது. ஏனென்றால் அவன் சிரமப்படாமற் புலம்பெயர்ந்தவன். தாஸுக் குக்கூடச் சிலகதைகளை நம்புவது கடினமாக இருந்தது. ஷங்க் கின் வண்டி எதிர்பார்த்தைவிட விரைவாக ஆயத்தமாகி விட்ட தால் அவன் கொழும்பு நோக்கிய தனது பயணத்தைத் தொடர்ந் தான். சஞ்சீவனும் தாஸும் இன்னுமாரு முறை கோப்பி குடித்து



படிப்பகம்

www.padippakam.com



விட்டு விமானநிலையத்துக்குப் போனார்கள். இப்போது சிற்றுண்டிச்சாலையிற் கூட்டம் குறைந்துவிட்டது. சஞ்சீவனை விமானநிலையத்தில் இறக்கிவிட்டகையோடு வாகனம் தாஸுடன் கொழும்புக்குத் திரும்பியது.

சஞ்சீவனின் விமானம் புறப்பட மேலுந் தாமதமாகும் என்ப தால், பயணிகட்கான "செக் இன்" அழைப்பு வரவில்லை கால் களை நீட்டியபடி ஒரு கதிரையில் அமர்ந்து ஒரு கதைப்புத்தகத் தை வாசிக்கத்தொடங்கிய சஞ்சீவன் கண்ணயர்ந்தபோது யாரோ அவனது தோளில் தட்டி எழுப்பினார்கள்.

முரட்டுத்தனமான தோற்றமுடைய இரண்டு பாதுகாப்பு அதி காரிகள் அவனது கடவுச்சீட்டைக் காட்டும்படி கேட்டார்கள். பின்பு அவனை ஏற இறங்கப் பார்த்தபடி அவனது பயணச் சீட்டைக் காட்டச் சொன்னார்கள். "இது உன்னுடைய கடவுச் சீட்டா?" "ஓம்.... ஏன் கேட்கிறீர்கள்?" "பயணச்சீட்டில் உள்ள பேர் வேறாக இருக்கிறது படமும் வித்தியாசமாக இருக்கிறது". "இருக்காது". பின்னர், உரையாடல் கொஞ்சம் கரடுமுரடான ஆங்கிலத்தில் தொடர்ந்தது.

சஞ்சீவனுக்கு என்ன நடக்கிறது என்று விளங்கமுன்னரே அவனை ஒரு விசாரணை அறைக்குக் கொண்டுபோனார்கள்.

சஞ்சீவனுக்கு நிலைமை சரிவரவிளங்கியபோது அவன் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய கடவுச் சீட்டு ஷங்கின் கடவுச் சீட்டுக்களில் ஒன்றுடன் மாறுண்டு போயி ருக்க வேண்டும். ஷங்க் வேண்டுமென்றே தன்னை வம்பில் மாட்டிவிட்டிருப்பானோ என்றும் யோசனை ஓடியது. அப்போது வறுத்த மிளகாய்த் தூளின் மணம் அவனது நாசியை மெல்ல வருடியது. அவனுக்குப் பசி எடுக்குமாப் போலிருக்கும் போது, அந்த மணம் மேலும் உக்கிரமாகி நாசி எல்லாம் எரியுமாப் போலிருந்தது. தும்மல் வரும்போலிருந்தது. ஆனாற் தும்ம இயலவில்லை. "ஐயோ" என்று கத்த முயன்றான் அவனுடைய வாய்க்குள் எதையோ திணித்தார்கள்.

இனி எந்தச் சிறைக்கூடமோ என்று யோசனை ஓடியது ஆனால் உடல்சோர்ந்து அறிவு மயங்குவதுபோல உணர்ந்தான்.



படிப்பகம்

www.padippakam.com



இந்த நிலையில் அவன் எவ்வளவு நேரம் இருந்தானோ தெரியாது.

யாரோ அவனது தோளில் லேசாகத் தட்டினாற்போலிருந்தது. "சேர், ஆர் யூ ட்ரவலிங் ஸ்ரீ லன்கன்?" என்று கேட்டார் அவன ருகே நின்ற விமானசேவையைச் சேர்ந்த அலுவலர். சஞ்சீவனின் உடம்புக்குள் இன்னமும் நடுங்கிக் கொண்டிருந்தது. அவன் கண்டது கனவா காண்பது கனவா என்று நிச்சயமாக இருக்க வில்லை. கையிலிருந்து வழுக்கி விழுந்த பிரயாணப் பையைத் திறந்து பார்த்தான். கடவுச்சீட்டு அவனுடையதாகவே இருந்தது. அதனோடு சேர்த்து தாஸின் அடையாள அட்டையுங் கிடந்தது. நெஞ்சத் துடிப்பு மெல்ல வழமைக்குத் திரும்பியது.

***

தாஸ் திரும்பிப்போன வழியில் வாகனத்தைக் களனிப்பாலத் தடியில் மறித்தார்கள். "ஐடி?" "மென்ன (*இந்தா*)". "ஐடி சேர் கெத? (*ஐடி சேரினுடையதா?*)" "ஓவ் (*ஓம்*)" "ஸெர்வகே னானே.... சேர்கே நம? (*சேரினுடையது போலில்லையே.... சேரினுடைய பேர்?*" "ராமதாஸ்". "சேர் பொட்டக் பஹின்ட (*சேர் கொஞ்சம் இறங்குங்கள்*)". மேற்கொண்டு உரையாடல் கொஞ்சம் முரட்டுத்தனமாகப் போகத்தொடங்கிவிட்டது. ஷெங்க்கின் அடையாள அட்டை அவனிடம் எப்படி வந்துசேர்ந் தது என்று ராணுவத்தினரிடம் எப்படி விளக்குவது? அந்தளவுக்கு அவனுக்குச் சிங்களம் ஓடாது.

சஞ்சீவன் தனது துர்ச்சொப்பனத்திற் கண்ட வௌவாற் தொங்குதலும் மிளகாய்ப் புகைக் குளிப்பாட்டலும் தாஸுக்கு நடந்தது என்று அஞ்சாதீர்கள். வாகனச் சாரதி அவனுடைய அடையாள அட்டைக்கு என்ன நடந்திருக்கக்கூடும் என்று விளங்கப்படுத்தியதாலும் தாஸ் தொடர்ந்து விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது ஒரு நல்ல பொலிஸ் அதிகாரி அங்கு வந்து சேர்ந்ததாலும் விசாரணை விரைவாக முடிந்தது. மறுநாள் பொலிஸ் நிலையத்திற்குப் போய் அடையாள அட்டை தொலைந்ததற்கு ஒரு விளக்கம் எழுதிப் பதியும்படி தாஸிடம்



படிப்பகம்

www.padippakam.com



சொல்லிவிட்டுப் பொலிஸ் அதிகாரி போய்விட்டார்.

***

சஞ்சீவனின் கனவில் நடந்தவிதமாக தாஸுக்கு நடக்க வில்லை என்பதால் யாருக்குமே நடக்காது என்று என்னாற் சொல்ல முடியுமா? தாஸ் ஒரு தோட்டத் தொழிலாளியாகவோ வன்னியிலிருந்து வந்த ஒரு விவசாயியாகவோ இருந்து அவன் இருக்கக்கூடாத ஒரு இடத்தில் தனது அடையாள அட்டை யுடனோ அடையாள அட்டை இல்லாமலோ சந்தேகத்தின் பேரில் மறிக்கப்பட்டால் எதுவும் நடக்கலாம்.

நிச வாழ்க்கை சில சமயம் தீய கனவுகளை விடப் பயங்கர மாயிருக்கலாம் என அஞ்சுகிறேன்.

*(புது வசந்தம் 2008)*



படிப்பகம்

www.padippakam.com



# குமாரி



குமாரிக்கு ஊரில் ஒரு மாப்பிள்ளை பார்த்திருப்பதாகச் சொன்னான். குமாரி தனக்குக் கலியாணத்தில் அக்கறையில்லை என்று சொல்லி விட்டாள்.



படிப்பகம்

www.padippakam.com



குமாரி எங்களுடைய வீட்டுக்கு வந்தபோது வயது பத்திற்கு மேல் இருக்காது. இரத்தினபுரிப்பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு ஒன்றின்போது முழுக்குடும்பத்தையும் இழந்துவிட்டதாகச் சொன் னாள். எப்படிக் கேகாலையில் நாங்கள் இருந்த வீட்டுக்கு வந்துசேர்ந்தாள் என்று இன்றுவரை அவளுக்குந் தெரியாது, எனக்குந் தெரியாது. எப்படியோ வந்துசேர்ந்தாள். அப்போது எங்களுக்கு நான்குவயதில் ஒரு ஆண்குழந்தையும் இரண்டு வயதில் ஒரு பெண்குழந்தையும் இருந்தார்கள். எங்கள் குடும்பம் பணக்காரக் குடும்பம் இல்லை. என்றாலும் ஊரிற் சிறிது காணி யும் அளவான ஒரு வீடும் இருந்தன. என் கணவர் அரசாங்க உத்தியோகத்தில் நல்ல பதவியில் இருந்தார். எனவே குறை யில்லாமல் வீடுநடத்தக் கூடியதாக இருந்தது. எனக்கு வீட்டில் வேலைக்காரரை வைத்திருக்க விருப்பமில்லை. அதனால் வரு கிற தொல்லைகளைத் தவிர்ப்பதை விட, எல்லா வேலைகளை யும் முடிந்தவரை நானே செய்து கொள்வது எனக்கு நல்லது. அவசியமானால் யாரையாவது கூலிக்குப் பிடித்துச் செய்விப் பேன். என் கணவருக்குத் தோட்டவேலை செய்ய விருப்பம் என்பதனால் அது அவருடைய பொறுப்பாயிருந்தது. எனக்கு நாற்பது வயதில் நாரிப்பிடிப்பு வரத்தொடங்கியபோது பகலில் வந்து பாரமான வேலைகளைச் செய்வதற்கு என் கணவர் யாரையாவது அமர்த்துவார். வருவோர் பெரும்பாலும் ஆண்க ளாகவே இருப்பார்கள். சிலசமயம் பெண்களும் உதவிக்கு வந்திருக்கிறார்கள்.

குமாரியின் குடும்பப் பின்னணி தெரியாமலே நாங்கள் அவளை வீட்டில் வைத்துக்கொண்டோம். என்றாலும் பதினான்கு வயதுக்குக் குறைந்தவர்களை வேலைக்கு அமர்த்துவது சட்டவிரோதம் என்பதால் அவளைப் பாடசாலைக்கு அனுப் பினோம். என் கணவருக்கு அரசாங்க உத்தியோகத் தொடர்பு கள் இருந்ததால், குமாரிக்குப் பாடசாலையில் இடம் எடுத்துக் கொடுப்பதும் பிறப்புச் சான்று ஒன்றைப் பெறுவதும் சிரமமாக இருக்கவில்லை. அவ்வளவு சிரமப்பட்டும் குமாரிக்குப் பாட சாலைக்குப் போக விருப்பமில்லை. மூன்று வருடங்கள் என்



படிப்பகம்

www.padippakam.com



வற்புறுத்தலுக்காக ஒருபடி போய்வந்தாள். பிறகு ஒரேயடியாகப் போகமாட்டேனென்று விட்டாள். பலவிதமாக மிரட்டிப்பார்த்தேன். எதுவுமே பலிக்கவில்லை.

குமாரியைப் பற்றி எங்களுக்கு அதிகம் தெரியாது என்பது போக, அவள் எங்களுடன் இப்போது பதினெட்டுவருடங்களாக இருந்துவருகிறாள் என்பதும் அனாதையான அவளை நாங்க்ள் வளர்த்துவருகிறோம் என்பதும் ஊரறிந்த விடயம். அவளுடைய உறவினர்கள் யாரென்று ஊரில் விசாரித்தபோது யாருமே உறவு கொண்டாட விரும்பவில்லை. அதற்கு என்ன காரணம் என்று தெரியாது. என்றாலும் ஏழெட்டு வருடங்கள் முன்பு என் கணவர் கேகாலையிலிருந்து வேலை மாற்றலாகி பதுளையில் நாங்கள் இருந்த போது, அவளுடைய சிறிய தகப்பன் முறை கொண்டாடிக் கொண்டு சுமனசேகர என்று ஒருவன் வந்தான். கண்டவுடனேயே எனக்கு ஆளைப் பிடிக்கவில்லை. என்றாலும் குமாரியை அழைத்து அவனுடன் பேசவிட்டேன். குமாரியைவிட ஏழெட்டு வயதுதான் அதிகம் இருக்கும். தாய்வழிச் சொந்தம் என்றானாம். குமாரியை அழைத்துக்கொண்டு போகிற நோக்க மாக இருந்திருக்கலாம். குமாரி அவனிடம் என்ன சொன்னா ளென்று நான் கேட்கவில்லை. அவனைப்பற்றிக் குமாரி என்னிடம் பேசவுமில்லை. போகுமுன் அவன் தன்னுடைய முகவரியை ஒரு சிறிய தாளில் எழுதி அவளிடம் கொடுத்தான். அதைமட்டும் அவள் என்னிடந்தந்தாள். ஒவ்வொரு முறையும் நாங்கள் ஊர் மாறும்போது அவனுக்குத் தெரிவிப்போம். இரண்டு வருடங்கள் முன்பு ஒரு முறை அவன் வந்து போனான். குமாரிக்கு ஊரில் ஒரு மாப்பிள்ளை பார்த்திருப்பதாகச் சொன்னான். குமாரி தனக் குக் கலியாணத்தில் அக்கறையில்லை என்று சொல்லி விட்டாள்.

போன ஏழெட்டு வருடங்களாக நான் குமாரிக்குக் கலியா ணம் பேசுவதற்குப் பலமுறை முயன்றிருக்கிறேன். குமாரி பெரிய அழகியில்லை. என்றாலும் பார்வைக்கு இனிமையான தோற்ற மும் பண்பான நடத்தையுங் கொண்டவள். சிலர் அவளைக் கேட்டு என்னிடம் வந்தார்கள். எப்போதுமே குமாரி ஏதாவது சொல்லி மறுத்துவிடுவாள்.



படிப்பகம்

www.padippakam.com



குமாரி பாடசாலைக்குப் போகமறுத்த காலந்தொட்டு வீட்டில் எதையாவது செய்துகொண்டிருப்பாள். சமையலைத் தயாரிப்ப திலும் வீட்டைத் துப்புரவாகவைத்திருப்பதிலும் எனக்கு உதவு வாள். அவளுக்குப் பதினேழு பதினெட்டு வயதானபோதுதான் எனக்கு நாரிப்பிடிப்பு வரத்தொடங்கியது. அப்போதுதொட்டு, உள்வீட்டு வேலைகளையெல்லாம் குமாரியே பொறுப்பேற்றாள். ஓய்வுநேரங்களிலே, தையல், பூவேலை என்று என்னிடம் பழகிய தையெல்லாம் என்னைவிடத் திறமையாகவே செய்வாள்.

அவளுக்குப் பதினெட்டுவயதான போது என் கணவர் அவ ளுக்குச் சேமிப்புக் கணக்கு ஒன்றைத் திறந்து வீட்டில் வேலைக் காரர்கட்குக் கொடுக்கக் கூடிய சம்பளத்துக்கு ஒப்பான தொகை யையும் அவள் செய்கிற தையல்வேலைகட்கு மேலதிகமாகவும் கணக்கிட்டு மாதாமாதம் வங்கியிற் செலுத்திவிடுவார். சேமிப்புப் புத்தகத்தை அவளே வைத்திருந்தாள். தனக்கு விருப்பமான எதையும் வாங்குவதற்கு விரும்பினால் என்னுடன்போய்ப் பண மெடுத்து வாங்குவாள். மகன் நளினுக்குப் பல்கலைக்கழகத்தில் இடங் கிடைத்தபோது அவனுக்கு ஒரு பெரிய இனிப்புப் பொட்ட லத்தைப் பரிசாகக் கொடுத்தாள். மகள் ரஜனியின் பதினெட்டா வது பிறந்தநாளுக்கு விலையுயர்ந்த ஒரு சட்டைத்துணியை வாங்கிப் பரிசளித்தாள்.

குமாரியின் பிறந்தநாள் எதுவென்று எங்களுக்கு நிச்சய மாகத் தெரியாது. பிறப்பத்தாட்சிக்கும் அடையாள அட்டைக்கும் கொடுத்த திகதிக்கு அவளுக்குப் பிறந்தநாள் கொண்டாடுவோம். எனவே அவள் பிள்ளைகளுக்குப் பரிசு தருகிற போது மறுப்பது இயலாததாகி விட்டது.

குமாரிக்கும் என் பிள்ளைகட்குமிருந்த உறவு நெருக்க மானது. ஒரு தமக்கையைப் போல அவர்களைக் கவனித்துக் கொள்ளுவாள். ஆனாலுந் தமக்கை என்கிற அதிகாரம் இருக் காது. அவர்களுடைய சிறு வயதில் எதையாவது காணவில்லை என்றால் 'குமாரி அக்கே' என்று கூப்பிட்டாற் போதும். குமாரி எங்கிருந்தாவது தேடியபொருளைக் கண்டுபிடித்துக் கொடுத்து விடுவாள். குமாரிக்குத் தெரிந்த கிராமத்து விளையாட்டுக்கள்

www.padippakam.com



எல்லாம் என் பிள்ளைகள் மூலம் அவர்களது நண்பர்கட்கும் பழக்கப்பட்டுவிட்டன. என்னுடைய பிள்ளைகள் வளர்ந்துவிட்டார் கள். குமாரிமட்டுமே எங்களுடன் இருக்கக்கூடிய ஒரு காலத் தைப் பற்றி யோசிப்பேன். எங்களுக்குப் பிறகு....

எனக்கு இருந்த கவலைகூட அவளுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. எனக்கு அவள் எங்களுடன் இருப்பது வசதி யானது. அதை அவளுக்கு எப்படியோ நான் உணர்த்தியதனா லேதான் அவள் கலியாணத்தைத் தவிர்க்கிறாளோ என்ற குற்ற உணர்வும் இடையிடையே ஏற்பட்டதுண்டு. குமாரி இல்லாமல் வீட்டைச் சமாளிக்க இயலாமல் இல்லை. ஏனென்றாற் பிள்ளை கள் வளர்ந்துவிட்டார்கள். என்றாலும் குமாரி என்னுடன் கூட இருப்பது எனக்கு வீட்டுவேலைகளில் உதவி என்பதை விட ஒரு மனத்தென்பாகவும் இருந்தது என்றுதான் நினைக்கிறேன்.

ஒருநாட் காலை. என்ன நடந்ததென்றே எனக்குத் தெரியாது. என்னுடைய கண்ணாடிப் பெட்டியின் கீழே ஒரு கடிதம் இருந்தது. விரித்து வாசித்தேன். "நான் போகிறேன். தயவு செய்து தேட வேண்டாம். எல்லாருடைய அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி" என்று சுருக்கமாக எழுதப்பட்டிருந்தது.

அன்றைய காலைநேரத்திற்குச் செய்யவேண்டிய எல்லா வேலைகளும் ஒழுங்காகச் செய்யப்பட்டிருந்தன. அவளுடைய அறையிலிருந்த அவளுடைய துணிகளும் சில்லரைப் பொருட் களும் அகற்றப்பட்டிருந்தன. மற்றப்படி எல்லாம் இருந்தபடியே இருந்தன.

அப்போது பல்கலைக்கழக விடுமுறை என்பதால் நளினும் வீட்டிலிருந்தான். பொலிஸ் நிலையத்தில் முறைப்படலாம் என்று அவன் சொன்னான். குமாரி சிலவேளை அன்றோ மறுநாளோ திரும்பிவரலாம் என்பதால் ஒரு நாளாவது பொறுத்திருப்போம் என்றார் என் கணவர். எனக்கோ எதிலும் மனஞ்செல்லவில்லை. எல்லாமே குழப்பமாக இருந்தது.

குமாரிக்கு நான் என்ன குறைவைத்தேன்? என் கணவர் என்ன பிழை செய்தார்? என் பிள்ளைகள் என்ன பிழை செய்தார்கள்?



படிப்பகம்

www.padippakam.com



எல்லாரும் அவளுடன் அன்பாக எங்களில் ஒருத்தி போலத்தானே நடத்தினோம்? குமாரிமீது கோபமாகவும் இருந்தது. புத்தி குழம்பிப்போய் விட்டாளோ என்று இரக்கமாகவும் இருந்தது.

தோட்டவேலை செய்யவருகிற சுனிலைக் கொண்டு விசாரிப்போமென்றால் அன்றைக்கென்று அவனும் வரவில்லை.

மறுநாள்; நானும் நளினும் பொலிஸ் நிலையத்துக்குப் போனோம். வீட்டிற் பொருட்கள் எதுவுங் காணாமற் போயினதா என்று கேட்டார்கள். இல்லையென்ற பிறகு, வீட்டில் அசம்பாவித மாக எதுவும் நடந்ததா என்று பொதுப்படக் கேட்டார்கள். இல்லையென்று சொல்லிக் குமாரி எழுதிய கடிதத்தைக் காட்டி னோம். யாராவது வெளியாட்களுடன் சினேகிதமுண்டா என்று கேட்டார்கள். அப்போது சுனில் பற்றி நினைவுக்கு வரவில்லை. இல்லை என்றோம். படம் ஒன்று கேட்டார்கள். கொடுத்தோம். காணவில்லை என்ற முறைப்பாட்டைப் புத்தகத்தில் எழுதி ஒப்பமிட்டுவிட்டு நளினுடன் வீட்டுக்குத் திரும்பினேன்.

வீட்டுக்குவந்த பிறகுதான் சுனிலின் நினைவு வந்தது. சுனிலுடன் ஓடிப்போயிருப்பாளோ என்று யோசனை ஓடியது. என்றாலும் யாரிடமுஞ் சொல்லவில்லை. ஆனாலும் மனதிலே அந்த நினைவு ஓடிக்கொண்டிருந்தது. இரவு கணவரிடஞ் சொன்னேன். "இருக்கலாம்" என்று சொன்னார். "விசரி! சொல்லி யிருந்தால் நாங்களே கலியாணஞ் செய்வித்திருப்போமே" என்றேன். "ம்" என்றார். அத்தோடு அந்தக் கதை ஓய்ந்து விட்டது.

மறுநாள் சுனில் வந்தான். இரண்டு நாட்களாகக் காய்ச்சல் என்பதனால் வர இயலவில்லை என்று விளங்கப்படுத்தினான். குமாரியைக் காணவில்லை என்று கேள்விப்பட்டதும் அவனுக்கு அதிர்ச்சியாயிருந்தது. ஊரிலிருந்து யாராவது வந்து கூட்டிச் சென்றிருப்பார்களா என்று கேட்டான். அப்போதுதான் சுமனசேகர வின் நினைவு வந்தது. ஆனால் சுமனசேகர நாங்கள் பதுளையி லிருந்து மாற்றலாகி நாவலப்பிட்டி போனபோது கடைசியாக வந்தான். களுத்துறைக்கு வந்த ஒன்றரை இரண்டு வருடங்களில்



படிப்பகம்

www.padippakam.com



ஆள் வரவேயில்லை. நேற்று முதல்நாள் வந்திருக்கலாம். ஆனால் இரகசியமாக வரவேண்டிய தேவை இல்லையே. அதை விட அவன் குமாரியுடன் தொடர்புகொண்டதற்கு எந்தவிதமான தடயமும் இல்லை. எதற்கும், சுமனசேகர மூலம் விசாரிப்போமா என்று யோசித்தேன். என் கணவரிடங் கேட்டபோது அவருக்கு அதில் அதிகம் நம்பிக்கையிருந்ததாகத் தெரியவில்லை. "பொலிசில் சொல்லியாயிற்று. அயலிலும் விசாரித்தாயிற்று. களுத்துறை பெரிய ஊர். கொஞ்சம் பார்த்துச் செய்யலாம்" என்றார். அவருடைய அசிரத்தை என் மனதிற்கு வருத்த மளித்தது.

குமாரி இல்லாத வீடு பழக்கப்பட்டுவிட்டது. என்றாலும் குமாரி எங்கே, ஏன் போனாள் என்ற கேள்விகள் மனதைக் குடைந்து கொண்டே இருந்தன. குமாரியை பற்றிப் பேசுவதை என் கணவர் தவிர்க்கிறார் என்ற எண்ணம் என் மனதினுள் வலுப்படத் தொடங்கியது. ரஜினி மட்டும் இடையிடையில் குமாரி இருந்தால் வீடு எவ்வளவு களையாக இருக்கும் என்று சொல்லு வாள். அவ்வளவோடு சரி. நான் மட்டுந்தான் குமாரியைப்பற்றி எப்போதும் நினைக்கிறேனா என்று யோசித்துக் கொள்வேன்.

வீட்டுவேலைக்கு வருகிற சிறுமிகளுடனும் இளம்பெண்க ளுடனும் ஆண்கள் தவறாக நடந்து கொள்ளுவது பற்றி இப்போ தெல்லாம் பத்திரிகைகளில் அடிக்கடி செய்திகள் வருகின்றன. முன்பும் தவறாக நடந்துகொண்டிருப்பார்கள். ஆனாற் செய்தி கள் மட்டும் வருவதில்லை. எனவே அந்தத் திசையிலும் மனம் ஓடியது.

வாசித்தவையும் கேள்விப்பட்டவையும் மனதிற் பலவேறு சாத்தியப்பாடுகளை எழுப்பினாலும் இப்போது எதையுமே உறுதிப்படுத்த வழியில்லை. குமாரியைச் சந்திக்க முடிந்தாலும் அவள் உண்மைக்குச் சாட்சியாவாளோ என்ற ஐயம் மனதில் எழுந்தது. கணவரிடம் எதையுமே கேட்க இயலாது. அவர் குமாரி போனதைப்பற்றிக் காட்டும் அக்கறையின்மை நடிப்பா அல்லது கோபத்தின் விளைவானதா? நானும் அவரிடம் எதை யுங் கேட்கத் துணியவில்லை. ரஜினி நான் பதற்றமாக இருப்ப



படிப்பகம்

www.padippakam.com



தைக்கண்டு மனத்துக்கு ஆறுதலாக ஏதாவது சொல்வாள். என்னால் மனதில் இருந்ததை வெளியேகொட்டுவதற்கு இயல வில்லை. எப்படியோ ஒரு சொல் வாய்தவறி வந்துவிட்டது. அவளும் ஒரு பெண் என்பதாலோ என்னவோ அவளுக்கு என் சிந்தனையோட்டம் விளங்கிவிட்டது.

ஆனால் அவள் சொன்ன மறுமொழி என்னை அதிரவைத் தது. "அம்மா, நீங்கள் நினைக்கிற மாதிரி ஒரு ஆணின் துன் புறுத்தலாலேதான் குமாரி ஓடிப்போனாள் என்றால், அது ஏன் அப்பாவாக இருக்கவேண்டும்? அண்ணாவாக இருக்கமுடியாதா?"

நளினுடன் அவளுக்கு ஒரு பகைமையும் இல்லை. ஆனால் அவள் எப்போதுமே அப்பாவின் கட்சி. அவளுக்கு அந்த நேரத்தில் அகப்பட்ட ஆயுதம் அது. அதுவுஞ் சாத்தியந்தான் என்று என் சிந்தனை ஓடியது. கணவரைக் குற்றவாளியாக்க ஆயத்தமான என்னால் மகன் குற்றவாளி என்று கற்பனை செய்யவும் இயலவில்லையே. குற்ற உணர்வு என்னைக் குறுக்கியது.

நாங்கள் பேசியதை நளின் கேட்டுக் கொண்டிருந்தான் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் அன்று இராச்சாப்பாட் டின்போது வேறெதையோ பற்றிப் பேசுவது போல "பெண்கள் மீதான பாலியற் துன்புறுத்தலுக்குப் பெண்களுங் காரணமாக இருக்கலாம்" என்று யார் முகத்தையும் பாராமற் கூறிவிட்டு, அதற்கு ஒரு முக்கியத்துவமும் இல்லாததுபோல "அம்மா இன்னும் இரண்டு இடியப்பம் போடுங்கள்" என்றான்.

வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் மற்ற மூன்று பேர் மீதும் சந்தேகப்பட முடியுமென்ற நிலையை அல்லவா அவன் எழுப்பி யிருக்கிறான். ஒவ்வொரு சாத்தியப்பாட்டையும் நான் நினைத்துப் பார்க்கலாம். ஆனால் உண்மை மட்டுங் கைக்கெட்டாது தூரத் தூரப் போய்க் கொண்டிருந்தது. குமாரியைப்பற்றி இனிமேல் யோசிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்தேன். முற்றாக இயலுமா யிருக்கவில்லை. ஏனெனில் வீட்டிலிருந்த பலவேறு பொருட்கள் அவளை நினைவூட்டின. ஆனாலும் மனம் எந்தவிதமான விசா ணைகளையும் மேற்கொள்ளாது தடுக்கப் பழகிவிட்டேன். குமாரி



படிப்பகம்

பற்றிய நல்ல நினைவுகள் மட்டுமே மனதிற் தோன்றிமறைந்தன.

குமாரி போய் மூன்றுமாதங்கள் இருக்கும். எனக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. வழக்கமாக யாரும் எனக்குக் கடிதம் எழுதுவதில்லை. உறவினர்கள் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளுகிறார்கள். பிறந்தநாள் திருமணநாள் நினைவு அட்டைகள் மட்டுமே தபாலில் வரும். அந்தக் கடிதம் குமாரி யிடமிருந்து வந்திருந்தது.

*என்றைக்கும் என்னுடைய நன்றிக்கும் அன்புக்கும்*
*உரிய நோனா,*

*நான் சொல்லாமற்போனது பற்றிக் கோபமாயிருப்பீர்கள். உங்களில் யார் முகத்தைப்பார்த்தும் நான் போகிறேன் என்று சொல்லமுடியாததாலேயே ஒரு கடிதம் வைத்து விட்டுப் போனேன். எங்கே போகிறேன் என்று சொன்னால் என்னைத்தேடி வந்துவிடுவீர்கள். என்னுடைய வாழ்க் கைக்கான திட்டத்தை எவருடைய உதவியுமில்லாமல் என்னுடைய சொந்தப்பலத்திலேயே கொண்டுசெல்ல எப்போதோ முடிவுசெய்துவிட்டேன். உங்கள் உதவி யுடன் சேமித்த பணம் புத்தகத்தில் ஒன்றரை லட்சத் துக்கும் மேல் இருந்தது. அதைவைத்து ஒரு சிறு தையற் தொழில் தொடங்கினேன். இப்போது தொழில் நன்றாகநடக்கிறது. தனியான ஒரு ஆச்சியுடைய வீட்டில் அவருக்குத் துணையாக இருக்கிறேன்.*

*இந்த ஞாயிற்றுக்கிழமை உங்களை வந்து பார்க்க யோசிக்கிறேன். என்னுடைய வாழ்க்கையில் நான் உங்கள் மனதை எப்போதாவது வருத்தப்படுத்தி யிருந்தால், தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள்.*

*உங்கள் உதவிகளை என்றைக்கும் மறவாத*
*குமாரி*

எல்லாவிதமான சாத்தியப்பாடுகளையும் யோசிக்க இயலுமா யிருந்த எனக்கு ஏன் குமாரி என்கிற பெண்ணுக்குள் சுய மரியாதையும் சுதந்திர உணர்வும் உள்ள ஒரு மனவலிமை

www.padippakam.com



யுள்ள சீவன் இருக்கிறது என்று விளங்கவில்லை? அவள் மட்டுமல்ல, எவருமே என் உடைமையல்ல என்பது மெல்ல மெல்ல மனதிற்பதியத் தொடங்கியது.

*(தாயகம்-75 ஜூலை-செப்ற்றெம்பர் 2009)*




படிப்பகம்

www.padippakam.com

*சிவசேகரம்*

# அனற்காற்று வீசிய ஒரு நாளில்



*டில்லியில் ஆட்டோவில் ஏறுவதில்லை என்ற முடிவுடன்தான் விமானமேறினேன். என்றாலும் வாழ்வின் யதார்த்தங்கள் நம்மைச் சில சமரசங்கட்குட் தள்ளிவிடுகின்றன.*



படிப்பகம்

www.padippakam.com



2005ஆம் ஆண்டு ஏப்ரல் பிற்பகுதி. டில்லிக்கு அதுதான் என் முதற் பயணம். தமிழ்நாட்டை நன்றாகத் தெரியும். கேரளமும் கர்நாடகமும் கொஞ்சம் பழக்கம். டில்லிக்கு வேலை அலுவலாக என்னை அனுப்பியிருந்தார்கள். என்னுடன் கூட, முஸ்லிம் அலுவலர் ஒருவர். சிங்கள அலுவலர்கள் மூவர். ஆட்களை முன்பின் தெரியாது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு அலுவலகம். விமானப்பயணத்துக்கு முன்னதாக அமைச்சின் அலுவலகத்தில் நமது பொறுப்புக்களை விளக்க ஒரு கலந்துரையாடல் நடந்தது. அதுதான் முதற் சந்திப்பு. அடுத்தது விமானநிலையத்தில். வெவ்வேறு நேரங்களில் விமானநிலையத்துக்குப் போய்ச் சேர்ந்த தால் ஆசனங்கள் அருகருகாகக் கிடைக்கவில்லை. விமானம் ஏறுவதற்கு முதற் கொஞ்சநேரம் ஆளையாள் அறிய நேரங் கிடைத்தது. பேர்களைச் சொல்ல மறந்துவிட்டேன். இக்ரம், டேவிட், நிமால், சரத். என்னுடைய பேர் ஸ்ரீ. நான் நினைத்ததற்கு மாறாக டேவிட் பவுத்தர். கையில் வெள்ளையாகப் பிரித் நூல் கட்டியிருந்தார். சரத் கத்தோலிக்கர்.

விமானத்தால் இறங்கியகையோடு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் எங்களை அழைத்துக்கொண்டு டில்லிப் புறநகரில் உள்ள ஒரு அரசினர் விடுதிக்குக் கூட்டிச்செல்ல வாகனங்களுடன் வந்திருந்தனர். விடுதி மூன்று தனித்தனிக் கட்டிடங்களாக அமைந்திருந்தது. என்னையும் டேவிடையும் ஒரு கட்டிடத்திலும் மற்ற மூவரையும் இன்னொன்றிலும் தங்கவைத்தார்கள். மூ வேளை உணவும் பொது உணவகம் ஒன்றில் என்று ஏற்பாடு. என்றாலும் அங்கு தங்கிய ஆறு நாட்களில் காலை உணவை விட எதையுமே அங்கு உண்ணும்படி நேரவில்லை. சந்திப்புக் களின் போது பகலுணவு பரிமாறப்பட்டது. மாலையில் மாறிமாறி எங்காவது விருந்துபசாரம். அல்லது, அங்கு பழக்கம்பிடித்த யாருடனாவது வெளியிற் சாப்பிடப்போவோம். ஐந்துபேரும் ஒவ்வொருநாளும் ஒன்றாக அமர்ந்து காலை உணவை உண் டோம் என்றுஞ் சொல்ல முடியாது. ஏனென்றால் நான் வேளைக் கே உண்ணப் போய்விடுவேன். இக்ரமும் நிமாலும் பெரும்பாலும் பிந்தமாட்டார்கள். சரத், டேவிட் இருவரும் இரவில் நிறையத்



படிப்பகம்

www.padippakam.com



'திரவ உணவு' உட்கொள்வதாற் காலையில் எழும்பப் பிந்தி விடும்.

டில்லியைச் சுற்றிப் பல்வேறு இடங்கட்கும் ஏற்பாட்டாளர்களே எங்களைக் கொண்டுசென்றார்கள். புகழ்பெற்ற செங்கோட்டைக்கு வெளியே நடக்கிற மாலைநேரக் கலைநிகழ்ச்சிக்கும் ஒருநாட் போனோம். என்றாலும் அவையெல்லாம் டில்லியைப் பார்த்த மாதிரி இருக்கவில்லை. நாங்களாகவே எங்காவது போய்ப் பார்ப்போம் என்று ஐந்து பேரும் மூன்றாம்நாள் மாலை முடிவெடுத்தோம். என்றாலும் கலந்துரையாடல்களும் உபசார நிகழ்ச்சி நிரல்களும் அதற்கு உடந்தையாக இருக்கவில்லை. அதைவிட, நம்மில் எவருக்குமே ஹிந்தி தெரியாது. அதுவும் போதாமல் ஹிந்தி தெரியாத தென்னிந்தியர்கள் என்றாலே டில்லிக்காரர்கட்கு ஒரு ஏளன உணர்வு என்றும் கேள்விப்பட்டிருந்தேன். எங்கள் ஐந்துபேரில் எவருமே வடநாட்டவர் போலத் தோன்ற நியாய மில்லை. அதனாற் கலந்துரையாடல்களிற் பங்குபற்றாமல் ஊரைச் சுற்றிப்பார்க்கிற நோக்கமே எழவில்லை.

நாங்கள் திரும்பிவருவதற்கு முதல் நாள், அது ஒரு வெள்ளிக்கிழமை, பிற்பகல் நிகழ்ச்சி எதுவும் இருக்கவில்லை. எனவே இக்ரமும் நிமாலும் நானும் பழைய டில்லியை நம்பாட்டிற் போய்ப் பார்ப்பதாக முடிவுசெய்தோம். கையிற் செலவுக்குப் பணம் மட்டுமட்டாகவே இருந்ததால் மூன்றுபேரும் ஒரு வாடகை வண்டியை அமர்த்த முடிவுசெய்தோம்.

'ஆட்டோ' வண்டிக்காரர்கள் பற்றிக் கவனமாக இருக்க வேண்டும் என்று டில்லி அனுபவம் பெற்ற எனது உறவினர் ஒருவர் சொல்லியிருந்தார். தன்னை ஒருநாள் டில்லி நகரின் மத்தியபகுதியிலுள்ள ஒரு வட்டப்பாதையில் நாலுமுறை சுற்றிச் சென்று, முப்பது ரூபாவுக்குப் போகவேண்டிய தூரத்துக்கு நூற்றி எழுபது ரூபா கறந்த சீக்கிய ஆட்டோக்காரனைப்பற்றி அவர் எனக்கு ஏழுதடவையாவது சொல்லியிருப்பார். 'நீங்கள் ஏற்கென வே சொன்னதுதான்' என்று நான் சொன்னது காதில் விழாமலே அந்தக் கதையை ஒருசொற்பிசகாமல் அவர் சொல்லுகிறபோது அவரை ஒரு ஆவேசம் குடிகொண்டுவிடும்.



படிப்பகம்

www.padippakam.com


அதன் விளைவாகவோ என்னவோ டில்லியில் ஆட்டோவில், அதுவும் ஒரு சீக்கியருடைய ஆட்டோவில், ஏறுவதில்லை என்ற தீர்மானமான முடிவுடன்தான் நான் விமானமேறினேன். என்றாலும் வாழ்வின் யதார்த்தங்கள் நம்மைச் சில சமரசங்கட்குட் தள்ளி விடுகின்றன.

பெரிய வாகனத்துக்குப் பணம் போதாது. பஸ்ஸில் போகிற தற்கு ஹந்தி தெரியாது. எனவே ஆட்டோவைவிட வேறு வழி யில்லை. சீக்கியரல்லாத ஆட்டோக்காரர் ஒருவரைப் பிடிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தேன். விடுதியின் உபசரிப்பாளராக இருந்த பானு என்கிற மிகவும் நட்பான நடுத்தரவயதுப் பெண்ணுக்கு நன்றாக ஆங்கிலம் விளங்கும். அவர்மூலம் ஒரு வாடகைவண்டி யை ஏற்பாடு செய்தோம். சீக்கியர் வேண்டாம் என்று சொல்லுவ தற்குக் கஷ்டமாக இருந்தது என்றாலும் நமது ஆட்டோச் சாரதியின் முகத்திற் தாடியும் இல்லை, தலையில் முண்டாசும் இல்லை என்பதைக் காண நிம்மதியாக இருந்தது. முகத்தை உற்றுப்பார்த்த இக்ரம் அவன் முஸ்லிம் போலத் தெரியவில்லை என்று என்னிடம் தமிழிற் சொன்னார்.

முஸ்லிமோ இந்துவோ நம்மை ஏமாற்றமாட்டான் என்பதற்கு என்ன உத்தரவாதம்? வண்டியில் ஏறமுன்னமே போகிறதூரமும் வண்டிச்செலவும் பற்றிய விசாரணைகளைப் பானுவிடம் நடத்தி ஆட்டோச் சாரதியுடன் உறுதிப்படுத்திக் கொண்டோம். ஏதாவது காரணங்காட்டி மேலதிகக் கட்டணம் வசூலிக்கமாட்டான் என்ப தற்கு உத்தரவாதமில்லை. என்றாலும், பானுமூலம் ஏற்பாடு செய்ததால் மனதில் ஓரளவு தைரியம் இருந்தது.

நாங்கள் போன காலம் அனற்காற்று வீசுகிற காலம். மேற்கிலிருந்து பாலை வெளிகளூடாகச் சிலநேரஞ் சிறுமணலை யும் அள்ளிக்கொண்டு சுடுகாற்று வீசும். சிலசமயம் தெருவில் இறங்கவே முடியாதிருக்கும். அன்றைக்கு நாள் அவ்வளவு மோசமில்லை என்றாலுங், காற்றின் வெக்கை நமக்கு மிகவுங் கடுமையாகவே இருந்தது. எனவே பழைய டில்லியின் அங்காடிக் குப் போய்ச்சேரும்வரை எங்கள் உரையாடலின் பெரும்பகுதி டில்லியின் பருவநிலை பற்றியதாகவே இருந்தது. இடையிடையே


படிப்பகம்

www.padippakam.com



ஆட்டோச் சாரதி —அவருடைய பேரை முதலில் நாங்கள் கேட்கவில்லை— நமது உரையாடலிற் பங்குபற்றினார். அங்காடி யில் இறக்கிவிடுகிற போதுதான், தனது பேர் றொபின் என்றார். அங்காடியில் ஒரு மணி நேரம் செலவிடத் திட்டமிட்டிருந்தோம். அதற்கான கட்டணத்தையும் றொபின் முன்னரே சொல்லியிருந் தார். அங்காடியைச் சுற்றிப்பார்த்த பிறகு எங்கே தன்னைக் காணலாம் என்று ஒரு கடைவாசலைக் காட்டினார். பிறகு என்ன யோசித்தாரோ தானுங் கூடவருவதாகச் சொன்னார். அவருடன்போனது மிகவும் வசதியாக இருந்தது. இருநூற்றி ஐம்பது ரூபா விலை சொல்லப்பட்ட ஒரு ஷல்வார் கமிஸை இக்ரமுக்கு எழுபத்தைந்து ரூபாவுக்குப் பேரம்பேசி வாங்கிக் கொடுத்தார். நான் எனக்கு ஒரு ஷேட் வாங்கப் போனபோது என்னை வாங்கவிடாமற் தடுத்து அதிலிருந்த பழுதை அடையா ளங் காட்டினார். இவ்வாறு அவருடைய உதவி இல்லாது போயிருந்தால் நாங்கள் மிகவுங் கஷ்டப்பட்டிருப்போம்.

வெய்யிலும் அங்காடி முழுவதும் அலைந்த களைப்புங் காரணமாக, எதையாவது சாப்பிட்டுவிட்டுத் தேநீர் அருந்தலாம் என்று நினைத்தோம். றொபின் எங்களிடம் அங்கே அவர் சாப்பிடுகிறவற்றை எங்களுக்குப் பரிந்துரைக்கமாட்டார் என்று சொல்லித் திரும்பிப்போகிற வழியில் ஒரு இடத்தில் ஏதாவது உண்ணலாம் என்றார். இந்தியாவில் போத்தலில் அடைக்காத தண்ணீரை அருந்தக்கூடாது என்று எமக்குப் புறப்படமுன்பே எச்சரிக்கப்பட்டபோதும் அங்காடியில் எல்லாரும் பானைகளிலி ருந்தும் குழாய்களிலிருந்தும் நீரருந்தினார்கள். டில்லிவாசிகளை டில்லிக் கிருமிகளால் எதுவுஞ் செய்யமுடியாது என்று நினைக் கிறேன்.

திரும்பிப்போகிற வழியில் றொபின் ஒரு சிற்றுண்டிச்சாலை யில் வண்டியை நிறுத்தினார். இடம் பொதுவாகத் துப்புரவாகவே இருந்தது. நாங்கள் ஆளுக்கு ஒரு பெரிய சமோசா வாங்கி னோம். றொபின் தனக்குத் தேநீர் மட்டும் போதும் என்றார். மேசையோரம் எங்களுடன் அமர்ந்திருந்தார். நிமால் றொபி னிடம் அவர் ஒரு கிறிஸ்தவரா என்று கேட்டார். றொபின்,



படிப்பகம்

www.padippakam.com



முறுவலுடன், இல்லை என்றார். இந்துவா என்று நான் கேட்டேன். அதற்கும் அவர் இல்லை என்றார். அவர் முஸ்லிமாக இருக்க லாமோ என்ற சந்தேகம் இக்ரமின் மனதிற் தோன்றியது. தயக்கத் துடன் கேட்டார். அதற்கும் இல்லையென்றே சொன்னார். நாத்தி கரோ என்று யோசித்தேன். என் எண்ணத்தை விளங்கிக்கொண்ட வர் மாதிரி "நான் ஒரு சீக்கியன்" என்றார்.

என்னாற் பேச முடியவில்லை. என் வலதுகை என் நாடியைத் தொட்டது. இடதுகை என் தலையைத் தொட்டது. றொபின் அதையெல்லாம் எப்போதே விட்டுவிட்டேன் என்றார். விடுதிக்குத் திரும்புகிற வழியில் சீக்கியர்களது மத அடையாளங்கள் காப்பு, குறுவாள், தாடி, தலைமயிரை உச்சியில் முடிந்துகட்டுகிற துணி, கோவணம் என்று விவரித்தார். "முண்டாசு?" என்று கேட்டேன். அது வெள்கைக்காரர்கள் உருவாக்கினது என்றும் உச்சிக்கொண்டைக்கு மேலாக ராணுவத்தொப்பி வைக்க இயலா ததால் சீக்கியருக்கான விசேட முண்டாசு உருவாக்கப்பட்டது என்றும் அதை அணிய அவசியமில்லை என்றும் விளங்கப் படுத்தினார்.

சீக்கிய மத நம்பிக்கைகளைப் பற்றி நிறைய விடயங்களைத் தெரிந்து கொண்டோம். என்றாலும் சீக்கிய மதத்தில் இவ்வளவு பற்றுடைய ஒருவர் எப்படித் தனது மத அடையாளங்களைக் கைவிட்டார் என்று நினைக்க முடியாமலிருந்தது. இக்ரமிடம் சாடையாக விசாரித்தேன். "எத்தனையோ முஸ்லிம்கள் தாடி வைத்துக் கொள்வதில்லை" என்றார். அப்போதுதான் இக்ரம் முகத்தை மழுங்க மழித்திருந்தது என் கவனத்துக்கு வந்தது.

றொபின் ஏன் தன்னைச் சீக்கியராகக் காட்டிக்கொள்ள வில்லை என்ற கேள்வி மனத்தினுட் குடைந்து கொண்டிருந்தது. ஒருவேளை சீக்கிய ஆட்டோக்காரர்கள் பற்றிய கெட்ட அபிப்பி ராயத்தாலோ என்றும் யோசனை ஓடியது. முடிவிற் கேட்டே விட்டேன்.

"ஒப்பறேஷன் புளு ஸ்ற்றார்" பற்றிச் சொல்லத் தொடங் கினார். சீக்கியத் தீவிரவாதியான பிந்ரன்வாலேயை அழிப்பதற் காக இந்திரா காந்தியின் ஆணையின் கீழ் சீக்கியரின் புனிதக்



படிப்பகம்

www.padippakam.com



கோயிலில் நடந்த இரத்தக்களரியைப் பற்றியும் அதற்குப் பழி வாங்கும்நோக்கில் இந்திரா காந்தியின் சீக்கிய மெய்க்காவலாளி இந்திரா காந்தியைச் சுட்டுக்கொன்றதையும் சற்று விளக்கமாகச் சொன்னார்.பிறகு சீக்கியர்கட்கு எதிராக டில்லியிற் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கர வன்முறையைப் பற்றிச் சொன்னபோது அவருடைய குரல் நடுங்கியது. "அன்றைக்கு அறுத்த உச்சிக் குடுமி, அன்றைக்கு வழித்த தாடி, அன்றைக்குக் கழற்றிய காப்பு" என்றார். "இனி என்றென்றைக்குமே அவை திரும்பி வரா" என்றார். பிறகு நிதானமாகச் "சீக்கியர்கள் பெரும் பாலோர் எப்போதிருந்தோ வாளைப் பொது இடங்களுக்குக் கொண்டு செல்வதில்லை. மிஞ்சி இருப்பது கோவணம் மட்டுமே. அதைக் கைவிடுவதிற்கூட ஒரு பிரச்சனையும் இல்லை" என்றார்.

"உங்கள் பிரதமர் சீக்கியர். பெரிய பதவிகளிலெல்லாம் சீக்கியர்கள் இ:ருந்திருக்கிறார்கள். நாங்கள் காணுகிற சீக்கியர கள் எல்லாரும் முண்டாசும் தாடியுமாகத் தானே இருக்கிறார்கள்" என்று இக்ரம் குறுக்கிட்டார். "இங்கே வசதியானவர்களுக்கும் பாதுகாப்பாக நடமாடக்கூடியவர்களுக்கும் ஒரு கவலையு மில்லை. பஞ்சாபில் என்றால் ஒரு தொல்லையுமில்லை. எங்களைப் போல நாலு இடத்தில் வேலை செய்து வயிற்றைக் கழுவுகிறவர்களை நம்பி முழுக் குடும்பங்கள் இருக்கின்றன. நான் சீக்கியனாகத் தெரிகிறதை விட உயிரோடு இருக்கிறது பெரிய விடயம்" என்றார் றொபின். கொஞ்ச நேரத்திற்கு யாரும் எதுவும் பேசவில்லை.

பிறகு, தானாகவே றொபின் "நீங்கள் எந்த ஊர்?" என்று கேட்டார். நாங்கள் இலங்கையர் என்று சொன்னபோது, "மதராஸிகள் என்று நினைத்தேன். ஆனால் நிச்சயமாக இருக்க வில்லை" என்றார். "உங்கள் நாட்டிற்கு விரைவில் அமைதி வருவதற்கு ஆண்டவன் உதவ வேண்டும்" என்றார். நாங்கள் ஆளையாள் பார்த்துக் கொண்டோம். எங்களால் ஒருமித்த முறையில் ஒரு பதிலைக் கூறியிருக்கமுடியாது.

விடுதி வாசலடியில் வண்டியை நிறுத்தினர். பேசிய தொகைக்கு மேலாக ஒரு பைசா கூடக் கேட்கவில்லை. வண்டி யைக் கிளப்புவதற்கு முன், என்ன நினைத்தாரோ, "என்னுடைய



படிப்பகம்

www.padippakam.com



சீக்கிய அடையாளம் ஒன்றும் தெரியும்படியாக இல்லை. என்றாலும் நான் எப்போது அவற்றைக் களைந்தேனோ, அன்றுமுதல் என்றும் நான் இருந்திராத அளவுக்குத் தீவிரமாக நான் ஒரு சீக்கியன் என்பதை உணர்ந்துகொண்டே இருக்கிறேன்" என்று எங்களை நோக்கிச் சொல்லிவிட்டு ஒரு உறுதியான கையசைப்புடன் வண்டியை நகர்த்தினார்.

*(புது வசந்தம் 2009)*



படிப்பகம்

*சிவசேகரம்*

# பாடசாலை வாங்கு



*வாங்கில் ஒன்றும் பழுதில்லை ஆசிரியர் ஐயா,*
*என் பையனுக்கு அருகில் அமர்த்தியிருக்கிறீர்களே*
*அந்தப் பையனால் தான் பிரச்சனை*

www.padippakam.com



குணசேகரவை எனக்குப் பல்கலைக்கழகக் காலத்திற் பழக்கம். நாங்கள் வெவ்வேறு பீடங்களிற் படித்தாலும் மெய்வல்லுநர் போட்டிகளிற் பங்குபற்றுவதற்காக ஒரே விளையாட்டுத் திடலுக்குத்தான் போவோம். மூன்று வருடப் பழக்கத்திற்குப் பிறகு குணசேகரவை இப்போது நாற்பது வருடங்கள் கழித்துச் சந்திக்கிறேன். இரண்டு பேரும் புஞ்சி பொரளையில் உள்ள கடவுச்சீட்டு அலுவலகத்துக்குப் போயிருந்தோம். என்னுடைய விண்ணப்பத்தைக் கொடுத்துவிட்டுப் பேரை அழைப்பதற்குக் காத்திருந்தேன். என்னுடைய பேரை அழைத்தார்கள். படிவத்தை நிரப்பிய போது ஒரு தகவலைத் தெளிவாக எழுதத் தவறிவிட்டேன். அதைத் திருத்திவிட்டு மீண்டும் நாற்காலியில் அமர்ந்தபோது, என் அருகில் அமர்ந்திருந்த ஒருவர் என்னிடம் ஆங்கிலத்தில் “நீங்கள் ஜே தானே?” என்று கேட்டார். இளமைக்காலத்தில் என்னுடைய பேரின் சுருக்கிய வடிவம் அது. இப்போது யாரும் அப்படிக் கூப்பிடுவதில்லை. ஒரு நிமிடத் தயக்கத்திற்குப் பிறகு, “ஓம்.... நீங்கள்....” என்று இழுத்தேன். “குணே. நினைவில்லையா? கொழும்பு? வளாகம்?” என்று முறுவலுடன் கேட்டார். தலைமயிர் கொஞ்சம் நரைத்துப் போயிருந்ததால் அது குணசேகர என்று மட்டுக்கட்டக் கொஞ்சம் நேரமெடுத்தது. பின்பு கொஞ்சநேரம் பழையகதைகளை எல்லாம் இரைமீட்டோம். பேச்சு, தயக்கங்களையெல்லாம் உடைத்துக்கொண்டு போரைப் பற்றியும் அகதி முகாங்களைப் பற்றியும் நகர்ந்தது.

அகதிமுகாங்களில் உள்ள நிலைமைகளைப்பற்றி நான் அறிந்ததை விடக் கொஞ்சம் விவரமாகவே குணசேகரவுக்குத் தெரியும். எனவே புதிதாக நான் எதையுஞ் சொல்லவேண்டியிருக்கவில்லை. பிறகு கதை மீண்டும் பழையபடி கடந்தகாலத்தை நோக்கிப் போனது. “எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் கோயிலுக்குள் போகிறதற்காகச் சண்டை நடந்த காலம். இப்போது சாதிச்சண்டை எல்லாம் முடிந்துவிட்டதா?” என்று குணசேகர கேட்டார். சாதிச் சண்டையில்லை, சாதி ஒடுக்குமுறை என்று சொல்லநினைத்தேன். சொல்லவில்லை. “அதையேன் கேட்கிறீர்கள்! அகதி முகாங்களுக்குள்



படிப்பகம்

www.padippakam.com



ளும் சாதிசொல்லி ஒதுக்குகிறார்கள்!" என்றேன். குணசேகரவால் நம்பமுடியவில்லை. "இந்த இருபத்தோராவது நூற்றாண்டிலுமா?" என்று கேட்டார். "எங்களுடைய சனம் இப்படியே இருந்தால் முப்பத்தோராவது நூற்றாண்டிலும் அதேகதையாகத் தான் இருக்கும்" என்றேன். குணசேகர ஒன்றுமே சொல்லவில்லை. "சிங்களவரிடையே இந்தத் தீண்டாமைப் பிரச்சனை ஒன்றும் இல்லை. நீங்கள் கொடுத்துவைத்தவர்கள்" என்றேன்.

"அப்படிச் சொல்லவேண்டாம். இருந்தது. இப்போது தீண்டா மையாக எதுவும் இல்லாவிட்டாலும் சாதிச்சிந்தனை பலரிடமும் இருக்கிறது. ஆனாலும் உலகம் மாறிவருகிறது. அதெல்லாம் மெல்லமெல்லப் போய்விடும்" என்றார். "எனக்கென்னவோ நம்பிக்கை இல்லை" என்றேன்.

கொஞ்சம் யோசித்துவிட்டு, "ஒரு கதை சொல்கிறேன்" என்றார். அது அவருடைய பாடசாலைநாட்களில் நடந்த கதை. 1950களில் அவர் முதலாம்வகுப்பிற் படித்தகாலத்தில் நடந்தது. மாத்தறை மாவட்டத்தில் இருந்த அவர்களுடைய ஊரில் அதுதான் நல்ல பாடசாலை.

குணசேகர பாடசாலையிற் சேர்ந்து ஒரு வாரத்திற்குள் குணசேகரவின் வகுப்பறையை நோக்கிக் கனவான் மாதிரித் தோற்றமுள்ள ஒருவர் வந்து அறைக்குள் எட்டிப் பார்த்தார். பிறகு பாடமெடுத்துக் கொண்டிருந்த ஆசிரியரிடம் "மன்னிக்க வேண்டும்" என்று சொல்லி அவரை வெளியே அழைத்தார். அவர்களிடையில் ஏதோ உரையாடல் நடந்தது. வந்தவர் விருட் டென்று திரும்பி நேராகப் பாடசாலை அதிபரிடம் போனார். பாடசாலையில் தன்னுடைய மகன் படிப்பதாகவும் மகன் அமர்ந்திருக்கும் வாங்கிலிருந்து இன்னொரு வாங்கிற்கு மாற்றி அமர்த்தமுடியுமா என்றும் அதிபரைக் கேட்டார். அப்படி மாற்று வதனால் வகுப்பாசிரியர் செய்யலாம் என்றார். வகுப்பாசிரியர் மறுத்துவிட்டாரென்று வந்தவர் சொன்னார்.

அப்போது தான் நினைவுவந்தவர் போல "கீழ் வகுப்புக் கட்டுப் பொறுப்பானவர் துணை அதிபர். அவரிடம் சொல்லாமல்



படிப்பகம்

www.padippakam.com



எதையுமே ஆசிரியர்கள் மாற்றமாட்டார்கள்'' என்று அதிபர் சொன்னார். வந்தவர் துணை அதிபரைத் தேடிப்போனார். துணை அதிபர் ஒரு வகுப்பிற் பாடமெடுத்துக் கொண்டிருந்தார். வந்தவர் அவரிடம் பேசமுயன்றபோது, "இன்று முழுவதும் எனக்கு வகுப்புக்கள் இருக்கின்றன பாடசாலை முடிந்தபிறகு பேசுவோம்'' என்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டார். வந்தவருக்கு அவ்வளவு நேரம் காத்திருக்க இயலாது என்பதால், துணை அதிபரை வீட்டிற்போய்ச் சந்திக்கலாமா என்று கேட்டார். துணை அதிபர் மறுக்கவில்லை.

துணை அதிபரின் பேர், முகவரி எல்லாம் விசாரித்து, அன்றுமாலை ஒரு கையில் வாழைப்பழம் வெற்றிலை எல்லாம் சுமந்துகொண்டு அவர் துணை அதிபரின் வீட்டுக்குப் போனார். வழமையான உபசாரங்கட்குப்பிறகு, "என்ன பிரச்சனை?'' என்று துணை அதிபர் அவரைக் கேட்டார்.

"என்னுடைய மகனை அமர்த்தியிருக்கிற இடம் சரியில்லை'' என்றார்.

"உங்களுடைய மகனுடைய பேர் என்ன?'' என்று துணை அதிபர் கேட்டார்.

"நான் குணதிலக ஆராய்ச்சிலாகே சோமரத்ன பாலித குணதிலக. மகன் குணதிலக ஆராய்ச்சிலாகே சோமரத்ன பியால் குணதிலக'' என்றார். துணை அதிபர், "அப்படியானால் உங்கள் மகன் அனேகமாக வகுப்பில் இரண்டாவது வரிசையில் தானே இருப்பான். அதிலென்ன பிரச்சனை?'' என்று கேட்டார்.

"வரிசையில் ஒன்றும் பிரச்சனை இல்லை. வாங்கில் தான் பிரச்சனை'' என்று பதில்வந்தது.

"குணதிலக அவர்களே, வாங்கு வசதியீனமாயிருந்தால் யாராவது எனக்குத் தகவல் தந்திருப்பார்கள். சரி. விசாரித்து விட்டு வாங்கை மாற்றிப் போடுகிறேன்'' என்றார்.

"வாங்கில் ஒன்றும் பழுதில்லை ஆசிரியர் ஐயா, என் பைய னுக்கு அருகில் அமர்த்தியிருக்கிறீர்களே அந்தப் பையனால் தான் பிரச்சனை''.



படிப்பகம்

www.padippakam.com



"அவனுடைய பேரென்ன?"

"குணபால" என்று அருவருப்போடு சொன்னார்.

"குணபால.... குணபால.... அவனைப் பற்றி ஒரு முறைப்பாடும் எனக்கு வரவில்லையே".

"அவனில்லை, அவனுடைய தகப்பன்...."

"குடும்பச் சண்டையா?"

"சீச்சீச்சீ.... இதென்ன கதை! அவனென்ன சாதி! நாங்களென்ன சாதி! குடும்பமென்று சொல்லி என்னைக் கேவலப் படுத்துகிறீர்கள்!"

"அவனென்ன சாதி?"

குணதிலக, சொல்லக்கூடாத சொல்லொன்றைச் சொல்லுவது போல "ரதா" என்றார்.

"ஓ! அந்த குணபாலவா? எங்களுடைய துணியெல்லாம் வெளுக்கிற ஆள். மகனையும் தெரியும். நல்ல பிள்ளை".

"இல்லை. என்னுடைய மகன் எளியசாதிப் பையன் ஒருவனுக்குப் பக்கத்தில் இருந்து படிப்பதில் எனக்கு விருப்பமில்லை, வேறு வாங்குக்கு மாற்ற முடியுமா?"

"அதெப்படி?"

"சரி. அந்த ரதாப் பெடியனை வேறு வாங்குக்கு மாற்ற முடியுமா?"

"எப்படி மாற்றுவது? சிங்கள எழுத்து முறைப்படி குணதிலக, குணபால, குணசேகர என்று தான் வரும்".

"உங்களுடைய மகனை இப்படி ஒருவனுக்கு அருகில் வாங்கில் அமரவிடுவீர்களா?" என்று பதைப்புடன் குணதிலக கேட்டார்.

"விடுவேன்".

"சொல்லுவீர்கள். ஆனால் எப்படியாவது இடம் மாற்றி அமர்த்திவிடுவீர்கள்".

"குணதிலக அவர்களே. இனிப் போதும். நீர் போகலாம்" என்று கண்டிப்புடன் சொன்னார் துணை அதிபர்.



படிப்பகம்

www.padippakam.com



குணதிலக அதிர்ந்து போனார். துணை அதிபர் தொடர்ந்தார். "உங்களுக்கு ஒரு தகவல். என்னுடைய மகன் குணபாலவுக்கு மற்றப்பக்கத்தில் அதே வாங்கிலிருந்துதான் படிக்கிறான்".

குணதிலக தலையைக் குனிந்தபடியே வாசலைநோக்கி நடந்தார்.

"இதை மறந்துவிட்டீர்கள்" என்று அவர் கொண்டு வந்த பழச்சீப்பையும் வெற்றிலையையும் துணை அதிபர் குணதிலகவின் கைகளில் திணித்தார்.

இதெல்லாம் குணசேகரவுக்கு எப்படித்தெரியும் என்று கேட்டேன். தன்னுடைய தகப்பனார் தான் அந்தத் துணை அதிபர் என்று என்னிடம் பெருமையுடன் சொன்னார்.

என்னுடைய பேரை அழைத்தார்கள். குணசேகர கையசைத்து விடை கூறினார்.


*(தாயகம்-77, ஜனவரி-மாச் 2010)*



படிப்பகம்

*சிவசேகரம்*

# டோன்ற் மென்ஷன்



*டெங்குவா மலேரியாவா சிக்கன்குனியாவா.... அது வைத்தியருக்கு மட்டுமே தெரியப் போதுமான விடயம். கணேசுக்குத் தெரிய வேண்டியதெல்லாம் மனைவிக்குக் கொஞ்சம் கடுமையான காய்ச்சல் என்பதுதான்.*

www.padippakam.com



கணேஸ் என்று அறியப்படுகிற சிவகணேசமூர்த்திக்குப் பெண்களைப் பற்றி எப்போதுமே ஒரு பயம் இருந்துவந்தது. கணேஸ் ஒன்றும் படிப்பறிவில்லாதவரோ பழமைவாதக் கிராமச்சூழலில் வளர்ந்தவரோ இல்லை. என்றாலும், 'கொஞ்சம் இடம்கொடுத்தாற் போதும், ஆண்களை மேவிவிடுவார்கள்' என்பது அவருடைய ஆணித்தரமான நம்பிக்கை. அவருடைய உளவியலை ஆராய்வதற்கு எனக்குப் போதிய நிபுணத்துவமில்லை. ஆனால் அவருடனான நீண்டகாலப் பழக்கத்தை வைத்து அவருடைய உலகநோக்கை என்னால் நிச்சயத்துடன் கூறமுடியும்.

அவரிடம் முற்போக்கான கருத்துக்கள் இல்லை என்று சொல்லமாட்டேன். ஆனால் எல்லாவற்றுக்கும் ஒரு அளவு கணக்கு இருக்க வேண்டும் என்பதில் அவருக்கு மிகுந்த கவனம் இருந்தது. சொல்லப்போனால், எதிலும் தீவிரவாதம் என்பதை அவர் ஏற்கமாட்டார். அவர் ஒரு சமூகவியல் ஆய்வாளரென்பதால் பலவேறு உலக அலுவல்களையும் அறிவார். அவருடைய நிதானப்போக்கும் நடுநிலையும் என்னை மட்டுமல்லப், பலரையும் வியக்கவைக்கும்.

ஒரு உதாரணத்துக்குச் சொல்லுகிறேன். அவரை ஒருமுறை சந்தித்த வேளை என்னுடைய கையில் ஒரு ஆங்கிலப் புத்தகம் இருந்தது. அதன் முன் பக்கத்தில் ஒரு பையன் கல்லெறிகிற படமொன்று இருந்தது. புத்தகம் பலஸ்தீனத்தைப் பற்றியது. "பலஸ்தீனத்திலை இஸ்ரேலியர் செய்கிறது பெரிய அநியாயம். அதை எதிர்க்கிறது தேவையான விஷயம். எண்டாலும் இப்பிடிக் கல்லெறிகிறதால் இஸ்ரேலியர்கள் இன்னும் மோசமாக நடந்து கொள்ளுவினமே ஒழிய இறங்கிவர மாட்டினம்" என்று அதைப் பார்த்தவுடனேயே என்னிடம் சொன்னார்.

"அப்பிடியெண்டால் குண்டு எறிகிறது தான் சரி என்கிறீர்களோ?" என்று கொஞ்சம் குறும்பாகக் கேட்டேன்.

"நீரென்ன பயங்கரவாதியோ? குண்டெறிகிற கதையெல்லாம் கதைக்கிறீர். நீர் இந்த மாதிரித் தீவிரவாதி எண்டு தெரிஞ்சிருந்தால் நான் உம்மோடை கதை வைச்சுக்கொண்டிருக்க மாட்டன்" என்று என்னை வன்மையாகக் கடிந்து கொண்டார்.



படிப்பகம்

அவருக்குப் பகிடிகள் பொதுவாகவே விளங்காது என்பதும் விளங்கினாலும் பெரும்பாலும் பிடியாது என்பதும் அப்போது தான் நினைவுக்கு வந்தது. எனவே கதையை மேலும் அந்தத் திசையில் வளர்க்காமல் நான் என்றுமே பயங்கரவாதியல்ல என்பதையும் என்றுமே பயங்கரவாதத்திற்கு ஆதரவாக எதை யுமே சொன்னதில்லை என்பதையும் இதுவரை மேசைக் கத்தி தவிர்ந்த கூரிய ஆயுதம் எதையுமோ சீனவெடி தவிர்ந்த எந்த வெடிப்பொருளையுமோ தொட்டதில்லை என்பதையும் தலையில் அடித்துச் சத்தியம்பண்ணாத குறையாக அவரிடம் சொன்ன பின்புதான் அவருக்கு என்மீது நம்பிக்கை மீண்டது.

பெண்ணுரிமை பற்றி அவருடைய நிலைப்பாடு அவருக்கு மிகத்தெளிவாக இருந்தது என்றே நான் நினைக்கிறேன். பெண் கள் எதையெதைச் செய்யலாம் என்பதில் அவருக்கு மிகத் தெளிவான கருத்துக்கள் இருந்தமாதிரி எதையெதையெல்லாஞ் செய்யலாகாது என்பதிலும் அவருக்கு மிகத்தெளிவான கருத் துக்கள் இருந்தன. எனவே ஒரு குடும்பத்தில் ஆண்களுக்கும் செய்யத்தக்கன செய்யத்தகாதன என்றும் எல்லா விடயங்களை யும் வகைப்படுத்தி வைத்திருந்தார்.

சொல்லப்போனால் அவர் ஒருவகையான இலட்சியவாதி. இலட்சியவாதிகள் எல்லாருக்கும் இலட்சிய மனைவிகள் அமைவ தில்லை. அவருக்கும் அவரது இலட்சியங்களுக்குப் பூரணமான உடன்பாடான மனைவி அமையவில்லை. ஆனாலும், திருமண மான நாளிலிருந்தே, தன் மனைவி தனது இலட்சிய வாழ்வுக்கு இடையூறாக அமையாத விதமாக அவர் கவனித்துக் கொண்டார்.

கணேஸ் திருமணஞ்செய்த பெண் அவரைப்போல ஒரு பட்டதாரி. அது அவரைக் கொஞ்சம் உறுத்திய விடயம். ஏனென்றால் மனைவிமார் தெருவில் கணவனுடன் போகும் போது எப்படி ஓரிரண்டு அடியாவது பின்னால் நடக்கவேண்டுமோ அப்படியே படிப்பிலும் பின்னால் இருக்கவேண்டும் என்பது அவருடைய கொள்கை. பாடுபட்டு ஒரு முதுமாணிப் பட்டம் (எம்.ஏ.) வாங்கியதன்மூலம் அப் பிரச்சனையைத் தீர்த்து விட்டார்.

www.padippakam.com


பெண்கள் உத்தியோகம் பார்க்கலாம் என்று சொல்லு மளவுக்கு அவர் முற்போக்குச் சிந்தனையாளர். ஆனாலும் ஆசிரியைத் தொழிலுக்கு மேல் எதையும் அவர் பரிந்துரைக்க மாட்டார். பெண்களுக்கு மருத்துவம் பார்க்கப் பெண் மருத்து விச்சியர் தேவை என்பதையும் பெண் வைத்தியர்கள் தேவை என்பதையும் ஏற்றாலும் ஆண்கள் எந்தப் பெண் வைத்திய ரிடமும் போவதை அவர் ஏற்பதில்லை. மிகுதியை நான் சொல்லாமலே நீங்களாக ஊகித்துக் கொள்ளுங்கள். இப்போதை க்கு நான் சொல்லவேண்டியதெல்லாம், அவருடைய மனைவிக்கு இருந்த பொருளியல் பட்டத் தகுதியின் அடிப்படையில் அவர் பெற்றிருக்கக்கூடிய உத்தியோகத்தைப் பெறாமல் அவர் தனியார் பாடசாலை ஒன்றில் ஆசிரியையாகப் பொறுப்பேற்றார் என்பது தான்.

அதன் மூலம், மங்கை என அறியப்படும் மங்கையற்கரசியாற் குடும்பச் செலவுகட்குப் போதியதாக மேலதிக வருமானத்தைப் பெறமுடிந்ததுடன் அந்த வருமானம் கணவருடையதை விடக் கூடுதலாக அமையாமலும் உறுதிப்படுத்த முடிந்தது. அதை விடவும், இடமாற்றம் போலப் பிரச்சனைகளும் ஏற்படவில்லை. பாடசாலை நேரங்கள், அவருக்கு வீட்டுப் பணிகளைச் செய்யப் போதிய பொழுதையும் வழங்கின.

கணேசின் இலட்சிய வாழ்க்கை நோக்கை நிறைவுசெய்கிற மாதிரி மங்கை இரண்டு ஆண்குழந்தைகளைப் பெற்றார். குழந் தைகள் வளரும்வரை, மங்கையின் தாயார் வந்து கூட இருந்து விட்டுப் பிறகு தன்னுடைய மற்றப் பிள்ளைகளின் தேவைகளைக் கவனிக்க வேண்டியதாலும் கணவருடைய உடல்நலக் குறைவா லும் விலகிச் சென்றுவிட்டார். எனவே கணேசின் வீட்டில் காலைச் சமையல்வேலைகளில் உதவ ஒரு பெண் வந்துபோவார். முழுநேர ஊழியரை அமர்த்த அவர்களது வருமானம் போதாது.

மங்கைக்குத் தலைவலி காய்ச்சல் என்று வருவது அருமை. வந்தாலும் இரண்டு நாட்களில் மாறிவிடும். நோயையும் பொருட் படுத்தாமல் ஏதாவது மாத்திரையை விழுங்கி விட்டுத் தனது ஏறத்தாழ இலட்சியக் குடும்பத்தின் ஏறத்தாழ இலட்சிய மனை



படிப்பகம்

www.padippakam.com



வியாக வாழ்ந்துவருகிற காலத்தில் ஒருநாள் கணேசைப் பார்க்க அவருடைய வீட்டுக்குப் போக நேர்ந்தது.

கணேஸ் வீட்டுக்கு நான் அருமையாகவே போவேன். மங்கை ஒரு 'இலட்சியக் குடும்பத்தரசி' போல என்னை நன்கு உபசரிப்பார். ஆனால் வாங்கோ, இருங்கோ, அவர் இப்ப வந்துவிடுவார் என்பவற்றுக்கு மேலாக அவர் எந்தச் சொற்களையும் பயன்படுத்தி நான் கேட்டதில்லை.

அன்றைக்கு மங்கை கதவடிக்கு வரவில்லை. கணேஸ் தான் வரவேற்றார், மங்கைக்குக் கடுமையான காய்ச்சல். கணேசுக்கு அது டெங்குவா மலேரியாவா சிக்கன்குனியாவா என்று ஒன்றுமேதெரியாது. அது அவர் அறிய வேண்டிய விடயமல்ல. அவருடைய மனைவியிடம் அவர் அதைப் பற்றி விசாரிக்கவுமில்லை. அது வைத்தியருக்கு மட்டுமே தெரியப் போதுமான விடயம். கணேசுக்குத் தெரிய வேண்டியதெல்லாம் மனைவிக்குக் கொஞ்சம் கடுமையான காய்ச்சல் என்பதுதான். பிள்ளைகளின் கதையும் கிட்டத்தட்ட அதே மாதிரித்தான். தேவையானாற் கோப்பியோ கொத்தமல்லியோ ஊற்றிக் குடிக்குமளவுக்கு மங்கைக்கு உடம்பில் திராணியிருந்தது என்று நினைக்கிறேன்.

கணேஸ் வழமைபோல உற்சாகத்துடன் "கோப்பியா? தேத்தண்ணியா?" என்று கேட்டபிறகுதான் அவருக்கு மனைவியின் சுகயீனம் நினைவுக்கு வந்தது. முன்வைத்தகாலைப் பின்வைக்க இயலாதே. எனவே, நான் மறுப்பதற்கும் வாய்ப்பளிக்காமல் வீட்டுக்குட் போனார்.

கணவன் மனைவி உரையாடலில் கணேஸ் பேசிய பகுதி தெளிவாகக் காதில் விழுந்தது. மங்கையின் சொற்களில் ஒரு சில மட்டுமே கேட்டன.

மங்கையால் கோப்பி ஊற்றித்தர முடியுமா என்று கணேஸ் கேட்டதும் மங்கைக்குக் கட்டிலால் எழும்பி நிற்கவே இயலாது என்றநிலையில் எப்படிக் கோப்பி ஊற்றுவது என்று கேட்டறிந்ததும் நன்றாக விளங்கியது. தண்ணீரைச் சுடவைத்து என்னுடன் சிறிது உரையாடிவிட்டு மறுபடி உள்ளேபோனபோது மங்கை அவரிடம் தனக்கும் பால் விடாமல் கோப்பி கொஞ்சம் ஊற்றித்



படிப்பகம்

www.padippakam.com



தருமாறு கேட்டது என் காதில் விழுந்தது.

கணேஸ் தனக்கும் எனக்குமான கோப்பியை வரவேற்பறை யிற் கொண்டுவந்து வைத்துவிட்டு, உள்ளேபோய் மனைவி யிடம் கோப்பியைக் கொடுக்க அவர் "தாங்க்ஸ்" என்றதும் மறுமொழியாக, "டோன்ட் மென்ஷன். ஆனால் இதை வழக்க மாக்கிக் கொள்ளாதையும்" என்று கணேஸ் அதிகாரத் தொனி யிற் சொன்னதும் கேட்டது.

***

சில மாதங்கள் கழித்து ஒருநாள் கணேஸ் வீட்டுக்குப் போனபோது மங்கை வீட்டில் இல்லை. கணேஸ் கோப்பி ஊற்றிக் கொண்டுவந்து தந்தார். புறப்படுமுன் அவரிடம் "உங்கள் மனைவி...." என்று இழுத்தேன். முகத்தை விறைப்பாக்கிக் கொண்டு "அவ இப்ப இங்க இல்லை எண்டு தெரியாதோ?" என்றார்.

நான் மேற்கொண்டு எதையுங் கேட்கவில்லை. மங்கை எப்போது திரும்பிவருவாரோ தெரியாது. ஆனால் அவர் திரும்பி வரும்போது இலட்சியக்குடும்பம் பற்றிய இருவரது பார்வை களும் மிகவும் மாறிப் போயிருக்கும் என்று தோன்றியது.

*(தாயகம்-80, ஜனவரி-மாச் 2011)*



படிப்பகம்

www.padippakam.com



## ஆசிரியரின் பிற நூல்கள்

கவிதை

*நதிக்கரை மூங்கில்* 1983, 1985
*செப்பனிட்ட படிமங்கள்* 1988
*தேவி எழுந்தாள்* 1991
*போரின் முகங்கள்* 1996
*ஏகலைவ பூமி* 1998
*வடலி* 1999
*இன்னொன்றைப்பற்றி* 2003
*about another matter* 2004
*கல்லெறி தூரம்* 2008
*முட்கம்பித் தீவு* 2010

கவிதை (தமிழாக்கம்)

*மாஓ சேதுங் கவிதைகள்* 1976
*பணிதல் மறந்தவர்* 1993
*பாலை* (அடோனிஸ் கவிதைகள்) 1999
*மறப்பதற்கு அழைப்பு* 2003

பா நாடகம்

*பாட்டும் கூத்தும்* (+பிரேமளா) 2000
*கிட்கிந்தை* 2002

நாடகம் (தமிழாக்கம்)

*அபராதி நானல்ல* 2001
*சமூக விரோதி* 2002

மொழி

*தமிழும் அயலும்* 1993
*தமிழிற் தரிப்புக்குறிகளின் பயன்பாடு* 1994

படிப்பகம்

www.padippakam.com



சமூகம்

*இலங்கையின் இன்றைய அரசியல் நிலைமையும் தேசிய சிறுபான்மை இனப் பிரச்சனையும்* 1976

*கனிவுமில்லை, கருணையுமில்லை* 1989

*மரபும் மார்க்சியவாதிகளும்* 1989

,, (*மரபும் மார்க்சியவாதியும*, விரிவாக்கியது) 1999

*தேசியவாதமும் தமிழர் விடுதலையும்* 1999

*பெண் விடுதலையும் சமூகவிடுதலையும்* (+ Barbara Epstein + பிறர்) 2002

***The Sri Lankan National Crisis and the Search for Solutions*** 2008

*இலங்கை: தேசிய இனப் பிரச்சினையும் தீர்வுக்கான தேடல்களும்* 2009

சமூகம் (தமிழாக்கம்)

*கார்ள் மார்க்ஸின் வாழ்வும் போதனைகளும்* (மூலம்: நா. சண்முகதாசன்) 2002

*சண்முகதாசன் கட்டுரைகள்* 2003

இலக்கியக் கொள்கை

*எதிர்ப்பிலக்கியமும் எசமானர்களும்* 2000

மெய்யியல்

*பின்நவீனத்துவம்: மாயைகளைக்கட்டுடைத்தல்* (+ கேசவன் + பிறர்) 2007

விமர்சனம்

*விமர்சனம் 1998*

*சிவசேகரத்தின் விமர்சனங்கள்-2* 2002

விஞ்ஞானக் கட்டுரையாக்கம்

***Technical Report Writing*** (+ CLV Jayatillake) 1979

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



இக் கதைகளில் வரும் பாத்திரங்களும் வலிந்து கற்பனை செய்யப் பட்டவையாக அன்றி வாழ்க்கையில் பார்த்தவையாக உள்ளன. மனிதர்களின் குணவியல்புகளையும் நடைக்கோலங்களையும் கூர்ந்து அவதானிப்பது சிவசேகரத்தின் சிறப்பு....
அதிக பிரயத்தனமின்றி வாசிக்கக்கூடியதும் வெளிப்படையாக மனங்கலந்து பேசுவது போன்றதுமான ஒரு நடையினை ஆசிரியர் கையாண்டுள்ளார்.... அவரது கிண்டலும் கேலியும், குறிப்பாகச் சில வேடிக்கை மாந்தரின் முட்டாள்தனமான நம்பிக்கைகள், வெகுளித்தனங்கள், நப்பாசைகள் போன்றவை எடுத்துரைக்கப்படும் சந்தர்ப்பங்களில் சிரிக்கமட்டுமன்றிச் சிந்திக்கவும் வைக்கின்றன.

பேராசிரியர் சி. தில்லைநாதன்

தேசிய கலை இலக்கியப் பேரவை

படிப்பகம்